# பொருள் உரைக் கொத்து

தி ஜுபிடர் பப்ளிஷிங் ஹவுஸ்,
சென்னை.

V. Arumugam
18-9-46.

# பொருள் உரைக் கொத்து

அன்பளிப்பு
... M.A., B.T., M.O.L. ... சென்னை-20.
THE MADURA TAMIL SANGAM

ஆசிரியர்:
யாழ்ப்பாணத்து நவாலியூர்
**திரு. ந. சி. கந்தையா பிள்ளை**
[தமிழகம், தமிழ் இந்தியா, தமிழர் சரித்திரம், சரித்திரகாலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர், நமதுநாடு, நமதுமொழி, சிவன், அறிவுரைக்கோவை, அறிவுரைமாலை, சங்கநூல் வசனங்கள், புறப்பொருள் வசனம்முதலியனவும் பிறவுமாகிய பல நூல்களின் ஆக்கியோன்]

THE JUPITER PUBLISHING HOUSE,
2/14, VENGU CHETTY STREET,
P. T. MADRAS.

**ஜுபிடர் பப்ளிஷிங் ஹௌஸ்,**
**சென்னை**

காப்பிரைட்] 1946 [விலை ரூ. 1.

முதற் பதிப்பு—1946.

THE MADURA

PRINTED AT THE B. N. K. PRESS, MADRAS. for Q. H. M. S. 44—1000

# முகவுரை

இந்நூலகத்தே மாணவர்க்கு உவகை அளிப்பனவும், சிந்தனையை எழுப்புவனவுமாகிய பல பொருளுரைகள் தரப்பட்டுள்ளன- மேற்புல அறிஞரின் சாத்திரீகமான பொருள்கள் தமிழ்மொழியில் வராதிருத்தல் அம்மொழிக்குப் பெருங்குறை என இக்காலத் தமிழுலகு உணர்கின்றது. இக்கருத்தினை உள்ளத்திற்கொண்டு சில நூல், உயிர்த்தோற்ற வளர்ச்சி வரலாறு போன்ற கட்டுரைகள் இதனகத்தே இடம் பெறலாயின. ஷை கொள்கைகளைப்பற்றிய கருத்துவேறுபாடுகள் இருப்பினும் அக்கொள்கைகளின் இயல்புகளை மாணவர் அறிதல் நன்றேயாகும். இந்நூல் மாணவர்க்கும் பிறர்க்கும் பெரும் பயன் அளிக்கும் எனக்கருதுகின்றோம்.

சென்னை,
10—2—'46.

ந. சி. க.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலக்கியக் கல்வி .... .... | 1 |
| 2. | நில நூல் .... .... | 5 |
| 3. | தென்னிந்திய மிளகு வாணிகம் .... | 13 |
| 4. | உயிர்களின் வாழ்க்கைப் போராட்டத்துக் கேற்ப இயற்கை அளித்துள்ள உதவிகள் | 16 |
| 5. | உயிர்த்தோற்ற வளர்ச்சி .... .... | 26 |
| 6. | டார்வினின் கொள்கைகள் சில .... | 31 |
| 7. | பண்டைநாள் கடற் போக்குவரத்து .... | 35 |
| 8. | சமூகவாழ்க்கையும் அதன் வளர்ச்சியும் .... | 46 |
| 9. | குளிர் தூங்கும் குற்றாலம் .... .... | 54 |
| 10. | சூளாமணிக் கதைச் சுருக்கம் .... | 59 |
| 11. | மக்கள் இன ஆராய்ச்சி .... .... | 73 |
| 12. | சேரநாடும் தமிழும் .... .... | 82 |
| 13. | மக்கட் குலங்கள் .... .... | 90 |
| 14. | மெசபெத்தேமியாவிற் குடியேறிய பழைய இந்தியர் .... .... | 95 |
| 15. | பெரும்பாணாற்றுப் படை .... .... | 106 |

# பொருள் உரைக் கொத்து

## இலக்கியக் கல்வி

THE MADURA TAMIL SANGAM

அறம், பொருள், இன்பம், வீடு என்று நால் வகைப் பொருள்களுள் ஒன்றனையேனும் பலவற்றையேனும் நானுவித வருணனைகளோடு சிறப்பித்துக்கூறும் நூல் இலக்கியம் எனப்படும். இலக்கியம் எனினும் * காவியம் எனினும் ஒக்கும். இலக்கியம் பெரும்பாலும் குறிப்புச் சொற்களும், குறிப்புப் பொருள்களும் மிகுந்து வருவது. பொருள் ஆழமின்றி வெளிப்படையான சொற்களால் ஆக்கப்படுவன சிறந்த இலக்கியமென மதிக்கப்படாவாம். குறிப்புச் சொற்களும் பொருள்களும் விரவிய இலக்கியங்களே தமிழறிஞர்களால் உவந்துகொண்டாடப்படுவன.

தமிழிலுள்ள பழைய காவியங்கள் எல்லாம் இவ்விதமாகிய பெருஞ் சிறப்புடையன. புலவனுடைய அறிவு உலக இயற்கையழகிற்படிந்து அதன் வண்ணமாய்த் திரிந்து தெளிவுற்று விளங்கும் போது, அப்புலவன் உள்ளத்திற் சுரந்து பொங்கும் அரிய பெரிய கருத்துக்களை அறிய நாம் அவாவுகின்றேம். அக்கருத்துக்களை அழகாகக் கோத்து இன்னோசை புணர்த்திச் சொல்லும் பாட்டே மக்கள் மனத்திற்கு மகிழ்ச்சி தருவதாகும். இங்ஙனம்

---

* காவியம் என்பது கவியாற் (பாட்டால்) செய்யப்படும் நூல் என்னும் பொருளில் வழங்கிற்று. மூற்காலத்தில் இலக்கியங்கள் செய்யுள் நடையிலேயே எழுதப்பட்ட காரணம்பற்றி இப் பெயர் வந்தது போலும்.

இயற்றப்படும் பாட்டுக்கள் இயற்கை யழகுடன் பொருந்திப் படிப்பவர்களுக்கு மிக்க சுவை விளைக்கும் என்பது நன்கறிந்தது.

தன் மனத்துதித்த உயரிய கருத்துக்களையும், தூய அறிவையும் சொற்கள் மூலமாக அழகுற வெளிப்படுத்திச் செய்யுள் செய்யும் நல்லிசைப் புலவனுக்கும், உலக வியற்கையினையும் உயரிய கருத்துக்களையும் பலவகை வண்ணங்களால் வரைந்து காட்டும் **ஓவியக்கலை வல்லானுக்கும்,** மனத்திற்கொண்ட கருத்துக்களைக் கல், சுண்ணம் முதலிய கொண்டு உருப்படுத்திக் காட்டும் **சிற்பம் வல்லோனுக்கும்** ஒற்றுமை மிக உண்டென்று அறிதல் வேண்டும். ஓவியம் வல்லான் வரைகின்ற சித்திரமும் சிற்பி இயற்றும் உருவமும் கட்புலனுடையார்க்கே பயன்றருவன. புலவன் இசைக்கின்ற பாட்டோ கண் முதலாகிய புலனகத்தே விளங்கும் உள்ளத்திலே தோன்றச் சுவை பயப்பதாகும் என்றறிக. புலவனுடைய பாட்டு அகக்கண்ணுக்கு விடயமாகின்றது. ஓவியக்காரன் பல நாட்களாக வருந்திச்செய்து காட்டும் ஒரு கருத்தை, ஒரு புலவன், எளிதிற் சில சொற்களால் திறம்படச் சொல்லிக் கேட்போர் உள்ளத்திற் பெரு வியப்பினை விளைப்பான். அதனால் ஓவியக்காரன் வண்ணங் கலந்து வரைந்து காட்டும் படம் போலப் புலவனும் சொற்களைக்கொண்டு செய்யுஞ் செய்யுளும் ஒரு படமாகு மென்பது கருத்து. சித்திரப்படத்தையும் கைபுனைபாவையையும் புறக்கண்ணாற் கண்டு அறிந்து மகிழ்கின்றோம்; புலவனுடைய பாட்டாகிய படத்தை அகக்கண்ணாற் கண்டு

களிக்கின்றோம். இவ்வாறு மனக்கண்ணாற் கண்டறிந்து இன்புறுதலே செய்யுள் படித்தலின் பயனெனக் கொள்ளல்வேண்டும். அவ்வாறே மாணக்கரும் செய்யுளிலமைந்துள்ள படத்தை அகக்கண்ணாற் கண்டு அறிந்து இன்புறச் செய்தலே செய்யுள் படிப்பித்தலின் நோக்கமும் முறையுமென அறிதல் வேண்டும்.

மேலும் இலக்கியம் படிப்பிக்கும் ஆசிரியர் தம்மை ஒரு நூதனசாலைப் பாதுகாவலனாக வைத்துத் தம் மாணக்கரை நூதனசாலை பார்க்கவந்தவராகக்கொண்டு, அச்சாலையின் கதவைத் திறந்து அவரை உள் அழைத்துச் சென்று அங்கிருக்கும் நூதனங்களைத் தேடிப் பார்த்து அறியும்படிவிட்டு, இடையிடை "இன்னது இன்னது பார்த்தீரோ? இது என்னவென்று எண்ணுகின்றீர்? இங்கே இருக்கும் இப்பொருள் உமக்கு ஆர்வம் விளைக்கக் கூடும்" என்று இவ்வாறு வழிகாட்டி நடத்தி அறியச் செய்தல் தக்க முறையாகுமென்ப. புலவன் சொல்லால் இயற்றிய படத்தை மாணக்கனும் தன் மனோபாவனையால் ஒரு படமாகத் தன் அகக்கண்ணாற் கண்டு இன்புறுதல் வேண்டும்.

எடுத்துக் காட்டாக,

"தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகள் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்

வண்டுக ளினிது பாட
மருதம் வீற்றிருக்கு மாதோ"

என்பது புலவன் சொல்லால் தீட்டிய ஒரு ஓவியம். இதனை அன்னதாக அகக் கண்ணுற் கண்டு இன்புறுதலே இதனைப் படித்தலின் பயனாகற்பாலது. இதனை வண்ணமும் எழுதுகோலுங்கொண்டு ஓவிய வடிவாய் வரைந்து காட்டுதலும், இதிற் குறிப்புப் பொருளாய் உருவகிக்கப்படும் ஓர் அரசி கொலு வீற்றிருக்குங் காட்சியைப் படம் வரைந்து காட்டுதலும் செய்யுட் கருத்தை வெளிப்படையாகப் புலப்படுத்துவனவென்பதறிக.

பெரும் புலவனாக்கிய செய்யுட்களைப் படித்து அவற்றிலுள்ளுறையாகிய படத்தை அகக்கண்ணுற் கண்டு இன்புறுதல் மாத்திரையோடமையாது, அவ்விதமான செய்யுட்களைத் தாமும் நவமாய் இயற்ற விரும்புதலும், அவ்வாறு இயற்றுதலும் செய்யுள் படித்தலின் பயனாகக்கொள்ளுதல் வேண்டும். நவமாகச் செய்யுளியற்றல் தமக்கு முற்றமுடியாத செயல் என்னும் கோழை எண்ணம் மாணாக்கர் மனதில் உதியாவண்ணஞ் செய்தலும் அவர் தம்மை அச்செயலில் ஊக்கப்படுத்துதலும் ஆசிரியர் கடனாகும். மாணாக்கரும் மற்றைய பாடங்களை அடுத்துச் செய்கை முறையிற், பூமிசாத்திரப்படம் எழுதியும், கட்டுரைகள் வரைந்தும், உருவங்கள் சித்திரித்தும், கதைகள் நடித்தும் பயின்று தேர்ச்சி பெறுவதுபோலப் புதிதாகப் பாட்டுகளிசைத்துப் பயின்று வருதலும் ஏற்புடைத்தென்க. *

* ஞாயிறு

# நில நூல்

## இவ்வுலகின் தொடக்கம்

இன்று இப்பூமியின் மேற்புறத்தே பலவகைப் பயிர் பச்சைகள் வளர்தலையும், பல்வேறு உயிர்கள் வாழ்தலையும் காண்கின்றோம். ஒருகாலத்து இது அனப்பிழம்பாக விருந்தது. அப்பொழுது உயிருள்ள எவையும் இங்கு தோன்றி வாழ்ந்திருக்க முடியாது. பூமி. ஞாயிற்றினின்றும் தெறித்து விழுந்த ஒரு துண்டு எனப்படுகின்றது. இது அனற்பிழம்பாக விருந்து சுழன்றுகொண்டிருக்கும்போது இதினின்றும் தெறிந்த துண்டே சந்திரன் எனப்படுகின்றது. ஞாயிற்றினின்றும் விழுந்த இப்பூமி நெருப்புமயமாக நீண்டகாலம் அந்தரத்தே சுழன்று கொண்டிருக்கும்போது அதன் மேற்புறத்தே உள்ள வெப்பம் சிறிது சிறிதாக ஆறத் தொடங்கிற்று. இற்றைக்கு அறுபதுகோடி ஆண்டுகளின் முன் இப்பூமியின் மேலோடு குளிர்ந்திருக்கலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## இயற்கைக் குழப்பங்கள்

பூமியின் மேலோடு குளிர்ந்தபின் பல இயற்கைக் குழப்பங்கள் நேர்ந்தன. ஞாயிற்றைச் சுற்றி வரும் பூமியின் பாதை மாறுபட்டது. நிமிர்ந்து நாராசத்திற் சுழன்றுகொண்டிருந்த பூமி சரிந்து சுழல ஆரம்பித்தது. பூமியின் உள்ளே கிடந்த நெருப்புக் குமிறி எழுந்து கிட்டங்களை வெளியே இறைத்தது. பல நூறுதடவை நிலம் கடலாகவும் கடல் நிலமாகவும் மாறின. வானை அளாவும் மலைகள் எழுந்தன.

மழைபொழிதலால் அவைகளினின்றும் வடியும் நீர் மணலைவாரிக்கொண்டு வந்து கீளேயுள்ள பள்ளங் களை நிரப்பின. மணல் என்பது நொறுங்கிய பாறைகளின் சிறு குறுணிகளே யாகும். அதிகம் சூடேறியபின் சடுதியிற் குளிர்வதாலும், தண்ணீர் பாறைவெடிப்புகளில் தங்கிப் பனிக்கட்டியாய்உறை வதலினலும் பாறைகள் உடைந்து நொறுங்கும். சகாராவனந்தரத்திலுள்ள மணல் மலைகள், அதிக சூடேறிக் குளிர்வதால் நொறுங்கிய பாறைகளின் குறுணிகளே என்று சொல்லப்படுகின்றன. தென் இந்தியாவிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் ஒருகாலத்தில் இமய மலையை ஒப்ப வானளாவி நின் றனவென்றும், அவை இமய மலையைவிட மிகமிக முதியனவாதலின் காலந்தோறும் நொறுங்கிச் சிறி யனவாய் விட்டன வென்றும், இமயமலையும் ஒரு காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகளை ஒத்ததாய் வருதல்கூடுமென்றும் விஞ்ஞானிகள் நுவல்கின்ற னர். பூமியில் நேர்ந்த இவ்வகைப் பல இயற்கைக் குழப்பங்களால் பூமியின் மேற்பரப்பில் இருபத் தொரு மைல் உயரத்திற்குக் கல்லும் மண்ணும் ஏறுண்டன.

### பாறை அடுக்குகள்

பூமியின்வெப்பம் ஆறுதலால் உண்டான அதன் மேலோட்டின் கனம் முப்பத்திரண்டுமைல். அதன் மேல் இருபத்தொருமைல் கனம் ஏறுண்ட மண் ணும் கல்லும், ஏறுண்ட முறைப்படி படிந்து நெரிந்து அமர்ந்து பாறை அடுக்குகளாயின. அப் பாறை அடுக்குகளிற் சில, பூமி அதிர்ச்சி, எரி

மலைக் குழப்பம் முதலிய ஏதுக்களால் வெளியே கொண்டுவரப்பட்டுள்ளன. அவை கடல் அலைகளால் அரிக்கப்பட்டுச் சிற்சில இடங்களில் நமக்குத் தெரியத்தக்கவையாகவிருக்கின்றன. விஞ்ஞானிகள் அப்பாறை அடுக்குகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து அவை தோன்றிய காலக்கிரமங்களைக் குறித்துள்ளார்கள்.

நில நூலார், அப்பாறை அடுக்குகளை ஐந்து பெரும் பிரிவுகளாகவும், அவ்வைந்தையும் பின்பு பதினைந்து சிறு பிரிவுகளாகவும் பிரித்து அவைகளுக்குத் தனித்தனி பெயரிட்டுள்ளார்கள். ஒன்றில் இருந்து மற்றொன்றைப் பிரித்து அறிவதற்காகவே பெயர்கள் இடப்பட்டன. அப்பாறை அடுக்குகள் ஒவ்வொன்றிலும் அவ்வக் காலங்களில் வாழ்ந்தனவும், முளைத்து வளர்ந்தனவுமாகிய, உயிர்கள், தாவரங்களின் கற்படி உருவங்கள் விடப்பட்டுள்ளன. கற்படி உருவங்கள் என்பன கல்லில் அல்லது பாறைகளில் பதிந்து கிடக்கும் வடிவங்கள். அவ்வப் பாறைகளிற் காணப்படும் உயிர்கள் சம்பந்தமாகவே அப் பாறைகளின் பெயர்கள் அமைந்துள்ளன. எல்லாவற்றிற்கும் அடியிலுள்ள முதலாவது பாறை அடுக்கு, உயிர்கள் தோன்ற ஆரம்பித்த பாறை எனவும், அதற்கு மேலுள்ள இரண்டாவது பாறைஅடுக்கு மிகப் பழைய உயிர்கள் தோன்றிய காலப்பாறை அடுக்கு எனவும், மூன்றாவது அடுக்கு பழைய உயிர்கள் தோன்றிய காலப் பாறை என்றும், நாலாவது அடுக்கு நடுக்கால உயிர்கள் தோன்றிய அடுக்கு என்றும், ஐந்தாவது

அடுக்கு அண்மைக் கால உயிர்கள் தோன்றிய அடுக்கு என்றும் பெயர் பெற்றுள்ளன.

### பாறை அடுக்குகளிற் காணப்படும் உயிர்களின் வகைகள்

நில நூலார் வகுத்துக் கூறும் பாறை அடுக்குகள் தோன்றிய காலப் பகுதிகளை நாம் தமிழில் ஊழி எனக் கூறுதல் பொருத்தமுடையதாகும். ஒவ்வொரு ஊழியிலும் படிப்படி வளர்ச்சியடைந்த பல்வேறு வகை உயிர்களும் தாவர இனங்களும் இப் பூமியில் தோன்றி யிருந்தன. ஒரு ஊழியிற் றோன்றியிருந்த உயிர்களும் தாவரங்களும் அவ்வூழியின் இறுதியில் முற்றாக மறைந்துபோக அடுத்த ஊழிகளில் முன்னவைகளிலும் வளர்ச்சியடைந்த உயிர்களும் தாவரங்களும் தோன்றி நிலைபெற்றன. இவ்வுலகில் ஒரு குறிக்கப்பட்ட கால எல்லையில் உலகிலுள்ள எல்லா உயிருள்ளனவும் அழிந்தொழியுமென்றும், மறுபடியும் புதிய ஊழியில் புதிய படைப்பு உண்டாகுமென்றும் இந்திய மக்கள் தொன்றுதொட்டு நம்பி வருகின்றனர். இப் பழைய கொள்கை இற்றை ஞான்றை நில நூலார் ஆராய்ச்சியால் வலியுறுதல் கண்டு மகிழத்தக்கது.

சொறி மீன் (Jelly fish) போன்ற ஒரு கண்ணறை (Cell) உள்ள உயிர்களே சிறிது சிறிதாக வளர்ச்சி யடைந்து உலகிற் காணப்படும் ஊர்வன, நடப்பன, பறப்பனவாக மாறியுள்ளனவென உயிர்த் தோற்ற வளர்ச்சி நூலர் கொள்வர். ஒரு அறை உயிர் முதல் மனிதன் வரையில் உள்ள உயிர்களில் ஒவ்வொரு கீழ்ப்படியிலுள்ள உயிரும்

அடுத்த மேற்படியிலுள்ள உயிரோடு உடல் அமைப்பிலும், மனம் வேலைசெய்யும் வகையிலும் ஒத்திருத்தலை அவர் எடுத்துக் காட்டுவர். உயிர்த் தோற்ற நூலார் கொள்கைகளுக்கு நில நூலும் சான்றளிக்கின்றது. ஆகவே உயிர்த் தோற்ற வளர்ச்சி நூலார் தமது ஆராய்ச்சிக்கு நில நூலை இன்றியமையாத ஆதாரமாகக் கொள்வர். ஆதியில் கண்ணுக்குப் புலப்படாத ஓரறை உடலமைப்புடைய உயிர்கள் கடலில் வாழ்ந்தன. இவை முறையே சொறிமீன், கடற்சிலந்தி, கடற்றேள், மீன், நீரிலும் நிலத்திலும் வாழ்வன, குட்டி யீனும் வௌவால் போன்ற பறவைகள், விலங்குகள் ஆகப் படிப் படியே மாறி இறுதியில் மனிதன் வரையில் வளர்ச்சி யடைந்தன என்று பாறைகளிற் படிந்து கிடக்கும் கற்படி உருவங்களை ஆராய்ந்து பார்த்து நில நூலார் கூறுகின்றனர். காலந்தோறும் வாழ்ந்த பல வியப்பைத் தரக்கூடிய உயிர்களின் படங்களையும் அவர்கள் வெளியிட்டிருக்கின்றனர். அவ்வுயிர்களிற் பெரும்பாலன இன்று காணப்படவில்லை. இறுதி ஊழியிற் காணப்பட்ட உயிர்களிற் பல தமது உருவத்தைச் சிறிது மாற்றிக்கொண்டன. முற்கால யானை, காண்டா மிருகங்களுக்குச் சடை வளர்ந்திருந்தது. யானையின் கொம்பு நீண்டு வளர்ந்து சுருண்டிருந்தது. குதிரைகளுக்கு மூன்று விரல்கள் இருந்தன.

கடலிலே மிதந்துகொண்டிருந்த ஓரறையுள்ள சில அணுக்கள் கடல் ஓரங்களில் தங்கிக் கடற் சாதாளைகளாக வளர்ந்தன. பின்பு அவை இலை

யில்லாத மரங்களாகவும், பின்பு ஓலை போன்ற இலையுடையனவாகவும் வளர்ந்து சிறிது சிறிதாக வளர்ச்சி யடைந்தன. ஆதிகாலத் தாவரங்கள் மட்டம் விட்டுப் பெருகின; நிலத்தில் விழுந்த கிளை களில் முளைகள் தோன்றியும் பெருகின. ஆதிகால மரங்கள் பூத்துக் காய்க்கவில்லை. பின்பு படிப் படியே பூக்கும் மரங்களும், பூத்துக் காய்க்கும் மரங் களும், விதைகளினின்றும் தம் போன்றவைகளைத் தோற்றுவிக்கும் மரங்களும் தோன்றி வளர்ச்சி யடைந்தன.

### மனிதத் தோற்றம்

ஐந்தாவது ஊழியாகிய அண்மைக் காலத்தில் குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் விலங்கு கள் தோன்றின. அக் காலத்திலேயே மனித னும் தோன்றினன். மனிதன் இவ்வுலகிற்றோன்றி இற்றைக்கு ஏறத்தாழப் பத்து இலட்சம் ஆண்டுக ளாகின்றன என்று விஞ்ஞானிகள் அறைகின் றனர். மனிதன் தோன்றிய பின் இவ்வுலகில் நாலு உறை பனிக்காலங்கள் தோன்றின. இறுதியில் நேர்ந்த உறை பனிக்காலம் இற்றைக்கு முப்பதி னயிரம் ஆண்டுகளுக்கு முன் என்று கணக்கிடப்படு கின்றது. ஒவ்வொரு உறை பனிக்காலத்துக்குப் பின்னும் ஒவ்வொரு வெப்ப காலம் நிலவிற்று.

### உறை பனிக்காலத்தில் நேர்ந்த மாற்றம்

உறை பனிக்காலத்தில் இன்று காண்பன போன்ற மரஞ்செடிகள் ஐரோப்பாவிற் காணப் பட்டன. அங்கு வாழ்ந்த விலங்குகள் கத்தூரிமான், லெமிங், துருவமான் முதலியன. இனம் அழிந்து

போனவைகளுள் சடையானையும் சடைக் காண்டா மிருகமும் அடங்கும். உறைபனி குறைத்த காலத்தில் வெப்பநாட்டு விலங்குகள் வடக்கு நோக்கிச் சென்று ஐரோப்பாக் கண்டத்தை அடைந்தன. இவ்வாறு சென்ற நீர்யானை இங்கிலாந்தின் ஆறுகளில் வாழ்ந்தது. வெப்ப தட்ப நிலை சீர்ப்பட்ட பின் மத்திய, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் துருவ தாவரங்கள் மறைந்தன. இன்றும் பனி உறைந்து கிடக்கும் மலைகளில் துருவநாடுகளுக்குரிய தாவரங்கள் காணப்படுகின்றன.

உறைபனிக்காலம் மனிதனின் காலத்தில் ஒரு வகை வேறுபாட்டையும் உண்டாக்கவில்லை. ஐரோப்பாவில் இன்றும் உறைபனிக்காலம் இருக்கின்றது. பிரான்ஸ், பிரித்தன் முதலிய நாடுகளை விட்டு உறைபனி அகன்று விட்டாலும் அல்ப்ஸ் மலையில் அது காணப்படுகின்றது.

உறைபனிக்காலத்தில் மனிதன் வாழ்ந்தானா? என்னும் கேள்வி கேட்கப்படுகின்றது. பின்மாக் அல்பைன் பள்ளத்தாக்குகளில் இன்றும் மனிதன் உறைபனிக்காலத்தில் வாழ்கின்றான். உறைபனிக் காலத்துக்கு முன்வாழ்ந்த விலங்குகளின் என்புகளோடு மனித என்புகளும் காணப்படுகின்றன. இது மனிதன் உறைபனிக்காலத்துக்கு முன் வாழ்ந்ததற்குச் சான்றாகும். மனித என்புகளோடு அவன் பயன்படுத்திய ஆயுதங்களும் காணப்படுகின்றன. இன்றும் கற்காலம் உலகில் மறைந்துவிடவில்லை. இரும்பின் பயனை அறியாத காட்டுச் சாதியினர் இன்றும் சிற்சில இடங்களிற் காணப்படுகின்றனர்.

THE MADURA TAMILSANGAM

குகைகளிற் காணப்படும் மண், ஆறுகள் கொண்டு வந்து குவித்த மணல், உலர்ந்தபாசி, வாவிகளின் அடிப்பாகம், மணற்குனறுகள் என்பவைகளின் இடையிடையே மனித எலும்புகளும் அவன் பயன் படுத்திய பழங்கல்லாயுதங்களும் காணப்படுகின் றன. இவைகள் வாயிலாக மனிதனின் பழைய வர லாறு ஆராயப்படுகின்றது.

சுண்ணும்புப் பூமியில் தண்ணீர் நிலத்தை அரித் துப் பல குகைகளை உண்டுபண்ணியிருக்கின்றது. இக்குகைகள் மனிதனுலும் விலங்குகளாலும் ஒதுக் கிடங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை களுள், மனிதனுடையவும் விலங்குகளுடையவும் என்புகள் காணப்படுகின்றன. இப்பொழுது ஆறு கள் பாயும் மட்டத்துக்குமேல் நூறு அடி உயர முடைய மண்மேடுகளும் காணப்படுகின்றன. ஆறு ஒரு காலத்தில் நீல மட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த போது அது வாரிக்கொண்டுவந்த மணலால் அம் மேடுகள் உண்டானவைகளாகும். ஆகவே அவை மிகவும் பழமையுடையன. அம்மேடுகளைக் கிளறிப் பார்த்தபோது இனம் அழிந்துபோன விலங்கு களின் என்புகளும் கல்லாயுதங்களும் கிடைத்தன.

உறைபனிக்காலத்தின் பிற்பகுதியோடு மனித னின் வரலாற்றைத் தொடர்புபடுத்திக் கூறுதற் கேற்ற ஆதாரங்கள் கிடைக்கின்றன. மனிதனின் வரலாற்றை ஆரம்ப முதல் சிறிது சிறிதாக அறிந்துகொள்வதற்கு நிலநூல் இவ்வாறு பய னளிக்கின்றது.

# தென்னிந்திய மிளகு வாணிகம்

பழங்காலம் முதல் தென்னிந்தியாவினின்றும் மிளகு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டது. கி. மு. 47 வரையில் இவ்வாணிகம் மும்முரமாக நடைபெற்றது. அக்காலத்து இந்தியாவுக்கும் அலக்சாந்திரியாவுக்கும் செங்கடல் வழியே போக்குவரத்து நடைபெற்றது. இந்திய, அராபிய வணிகர் பருவக்காற்றுக் காலங்களை நன்கு அறிந்து கப்பற்பயணஞ் செய்தனர். செங்கடல் முகத்துவாரத்திலுள்ள ஒசிலிஸ் (Ocelis) என்னும் பட்டினத்திலிருந்து பாயெடுத்த கப்பல்கள் துடுப்புக்களால் ஓட்டப்பட்டு முசிறிப் பட்டினத்தை நாற்பது நாட்களில் அடைந்தன. இவ்வாறு அலக்சாந்திரியா வழியாக இந்தியாவுக்கும் உரோமைக்கு மிடையில் கி. பி. 215 வரையும் வாணிகம் மூச்சாக நடைபெற்றது. கிழக்கில் நின்றும் உரோமைக்குச் சென்ற பொருள்களுள் முக்காற்பங்கு, மிளகு. அக்கால வாணிகத்திற்குத் தேவைப்பட்ட மிளகு முழுமையும் மலையாளக் கரையினின்றும் அனுப்பப்பட்டது. மிளகு ஐரோப்பிய நாடுகளில் இறைச்சியைப் பழுதுபடாது பாதுகாக்கவும் உணவுகளுக்குச் சேர்க்கவும் மிகப் பழங்காலந்தொட்டுப் பயன்படுத்தப்பட்டது. கிரேக்கர் மருந்து முறையில் இதனைப் பெரிதும் பயன்படுத்தினர். கிப்போகிறேற்சு (Hippocrates) என்பார் இதனை இந்திய மருந்து எனக் குறிப்பிட்டுள்ளார். ஆகஸ்தஸ் காலத்தில் மிளகு உரோமில் மதிப்புள்ள சரக்காகக் கருதப்பட்டது. அக்காலத்து ஒரு இராத்தல் மிளகின் விலை ஏழு

ரூபாய்; இந்தியாவில் அதன் விலை அதில் பாதி தானும் இல்லை. பருவக்காற்றையறிந்து கப்பல்கள் பெரிதும் இந்தியாவுக்கு ஓடத் தொடங்கிய காலத்தில் மிளகின் விலை குறைந்துவிட்டது. அது மாவாக இடித்துப் பொட்டணங்களாக விற்கப்பட்டது. அலாரிக் என்னும் கொதியன் உரோமையை முற்றுகை இட்டபோது, அதனை நீக்குவதற்கு அவன் மற்றைய பொருள்களோடு 3,000 இராத்தல் மிளகையும் கேட்டான்.

உரோமிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் மிகச் சில; ஆகவே உரோமிலிருந்து ஏராளமான செல்வம் இந்தியாவை அடைந்தது. உரோமிலிருந்து ஏராளமான தங்க வெள்ளி நாணயங்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன. இந்தியாவிற் கிடைத்த பல்லாயிரக்கணக்கான உரோமன் நாணயங்களுட் பெரும்பாலன மலையாளக் கரையிலும் அதனை அடுத்த கோயமுத்தூர், கோட்டயம் மதுரை என்னும் இடங்களிலும் காணப்பட்டன. இந் நாணயங்களிற் பெரும்பாலன *திபேரியன், கேயஸ், குளோடியஸ் காலத்தன.

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"

என அகநானூற்றிற் கூறப்பட்டுள்ளது.

முசிறி மலையாளத்திலே பேர் ஆற்று முகத் துவாரத்திலுள்ளது. தமிழ் நூல்கள் இதனைச் சிறந்த பெரிய துறைமுகப் பட்டினமாகக் கூறு

* Tiberius, Gaius, Claudius.

கின்றன. பினீசியரும் அராபியரும் இத் துறை முகத்தில் வாணிகம் நடத்தினர். உரோமிலிருந்து பாவை, விளக்கு அன்ன விளக்கு, நகைப் பேழை நறுமணமுடைய மது என்பன இறக்குமதி ஆயின. அரசரும் செல்வரும் இம்மதுவை உண்டனர். பெதுருங்கேரியரின் அட்டவணைப்படி (கி. பி. 222) முசிறியில் ஆகஸ்தசுக்குக் கோயில் ஒன்று இருந் தது. தமிழ் அரசரின் பண்டசாலைகளை யவனவீரர் காவல் புரிந்தனர். முசிறியில் யூதர், அராபியர் பாரசீகர் குடியேறி யிருந்தனர். அவர்கள் தனித் தனி வீதிகளில் வாழ்ந்தனர். தோமஸ் ஞானியார் (Apostle Thomas) முசிறிக்கு அயலிலுள்ள மல்லன் காராவில் கி. பி. 50-ல் வந்து இறங்கினரெனச் சீரிய திறத்தவர்கள் நம்பி வருகிறார்கள். கி. பி. 215-க்குப் பின் இவ்வாணிகம் ஓய்ந்துவிட்டது; பாரசீகக் குடாக்கடல் வழியாகவும் தரை மார்க்க மாகவும் ஓரளவு நடைபெற்றது. சீனர் தமது மரக்கலங்களில் சீன தேசத்துக்கு மிளகு கொண்டு சென்றனர்.

இடைக்காலத்திலே கோயில்களுக்கு மிளகு காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. அக்காலத் தில் ஒரு இராத்தல் மிளகின் விலை நாலு சிலின் அது தச்சுவேலை செய்பவன் ஒருவனின் நாலு நாட் கூலி. இவ் வாணிகம் வெனிஸ் செனோவா (Genoa) வியாபாரிகளின் கையில் இருந்தது. அவர்கள் பண் டங்களை அராபியரிடமிருந்து வாங்கினர். இவ்வணி கர் பணம் ஈட்டுவதைக் கண்டு மேற்கு ஐரோப்பிய மக்கள் கிளர்ச்சி கொண்டனர். அதனல் அவர்கள்

இந்தியாவுக்குச் செல்லும் கிட்டிய பாதையை அறிய முயன்றனர். இம் முயற்சியால் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தான். வாஸ்கோடி மகாமா என்னும் போர்த்துக்கேயன் கள்ளிக் கோட்டையை 1498-ம் ஆண்டு அடைந்தான். 16-ம் நூற்றூண்டளவில் டச்சுக்காரர் ஐரோப்பாவில் மிளகு வாணிகத்தைக் கைப்பற்றினர். அக் காலத்தில் ஒரு இராத்தல் மிளகின் விலை மூன்று 'சிலின்'; முன் இதன் விலை ஆறு 'சிலின்' இதனுல் இலண்டன் வணிகருக்குக் கிளர்ச்சி உண்டாயிற்று. அவர்களுட் சிலர் எலிசபெத் இராணியிடம் உத்தரவு பெற்றுக் கிழக்கு நாடுகளுடன் வாணிகஞ் செய்யப் புறப்பட்டனர். அவர்கள் கிழக்கே இராச்சியங்களைக் கோலி ஆங்கில ஆட்சியை விசாலப்படுத்தினர்.

---

## உயிர்களின் வாழ்க்கைப் போராட்டத்துக் கேற்ப இயற்கை அளித்துள்ள உதவிகள்

உயிர்களின் வாழ்க்கை இடைவிடாத போராட்டம் மலிந்ததாயிருக்கின்றது. போராட்டமென்பது ஈண்டு வருந்தி உழைத்தலை. உயிர்கள்போதிய உணவைப் பெறும் பொருட்டு இடைவிடாது முயல்தலோடு தம்மைப் பிற உயிர்கள் கொன்று தின்று விடாதபடியும் காப்பாற்றிக் கொள்ளவேண்டியுமிருக்கின்றது. அவை, தம்மை வாழுமிடங்களின் வெப்பதட்ப நிலைகளுக்கேற்பவும் சூழல்களுக்கேற்பவும் தகுதிப்படுத்திக்கொள்ளவும் வேண்டும். இவ்வகைப் போராட்டங்களுக்கு உதவும் பாதுகாப்புக்

களை இயற்கையாகிய அன்னை தனது குழந்தைக ளாகிய உயிர்களுக்கு அளித்திருக்கின்றது.

இயற்கை இடைவிடாது உயிர்களிடையே மாற் றங்களை உண்டாக்கிவருகின்றது. அம்மாற்றங்கள் மிகத் தாமதப்பட்டு நிகழ்வதால் அவைகளை அறிந்து கொள்வதற்கு மனிதனின் வாழ்நாள் போதாமல் இருக்கின்றது. இன்று வாழும் சில உயிர்களின் முற்சந்ததிகளை நோக்குவோமாயின் இக்காலத்தன எவ்வெவ் மாற்றங்களை அடைந்திருக் கின்றனவென்று நாம் எளிதில் அறிந்துகொள் வோம். முற்கால உயிர்கள் தமது வரலாறுகளைக் கற் பாறைகள்மீது விட்டுச் சென்றிருக்கின்றன. ஒவ் வொரு இன உயிர்களும் வாழ்க்கைக்குத் தகுதி யுடையனவா யிருக்கும்படி ஒவ்வொரு சந்ததியின் தந்தை தாய்களை எவ்வாறு இயற்கை தெரிவு செய் கின்றது? ஒவ்வொரு உயிரும் இவ்வுலகில் நிலைத் திருப்பதற்கு முயன்று வருதலினாலேயே இத்தெரிவு செய்யப்படுகின்றது. பெருந்தொகை உயிர்கள் பிறக்கின்றன; ஆனால் அவைகளுட் சந்ததியைப் பெருக்கக்கூடிய பருவம் எய்தும்வரை பிழைத்திருப் பன சிலவே. வலிமையும், கெட்டித்தனமும், சாக்கி ரதையும் உள்ள உயிர்கள் வாழ்தற்குத் தகுதியும், உணவைப் பெறுவதில் அனுகூலமும், அபாயத் தைத் தடுக்கும் வல்லமையும் உடையனவாகின்றன. ஆகவே இவ்வுயர்ந்த பண்புகளுடைய உயிர்கள் நீண்டகாலம் வாழ்ந்து தமது மேலான தன்மை களைத் தமது சந்ததிகளுக்கும் அளிக்கின்றன. அவைகளே தங்குழந்தைகளுக்கு நல்லுணவு

கொடுத்து வளர்க்கக்கூடியன. ஆகவே அக் குழந்தைகள் நல்வாழ்க்கையைத் தொடங்கும்.

இது எப்பொழுதும் உண்மையானதன்று. மிகப் பலமும், போர்க்குணமும் உடைய விலங்குகள் இன்னொரு இன விலங்குகளாற் கொல்லப்படலாம். சுற்றிடங்களிலே சடுதியில் உண்டான வெப்ப தட்பநிலை மாற்றம் தகுதியுடையவைகளையும் தகுதியற்றவைகளையும் ஒரு சேர அழித்தும் விடலாம். ஆனல் பெரும்பாலும் வாழ்க்கைக்குத் தகுதியுடையது எது? அதுவே நிலை பெறுகின்றது. ஒவ்வொரு இன உயிர்களும் நீண்டகாலம் ஊறு இன்றிவாழ்வதற்கேற்ற வழியில் முயன்று, வாழ்தற் பொருட்டு மேலும் மேலும் தகுதியுடையனவாய் வந்திருக்கின்றன.

வாழ்க்கைப் போராட்டமென்பது துன்பமின்றி இன்பமாய் வாழ்தற்குச் செய்யப்படும் எத்தனமாகும். விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இரையாகும் உயிர்கள் தமக்கு நேரவிருக்கும் ஆபத்தை உணர்வதில்லை. ஆபத்து அணுகும் வரையில் அவை பயம் அடைவதும் இல்லை. மரணம் அவைகளை விரைவாகவும், சடுதியாகவும், அணுகி நோவின்றிக் கொன்று விடுகின்றது.

பயப்படும் இயல்புடைய முயல்கள் ஆபத்துக்கள் பலவற்றின் இடையே மாலை நேரங்களில் கொல்லைப் புறங்களிலிருந்து விளையாடி மகிழ்வதை நாங்கள் பார்த்திருக்கின்ரேம். ஒருசோடி பறவைகள் அதிக நேரம் தேடிப் பூச்சி புழுக்களை எடுத்துக் கொண்டு தமது பசியுள்ள குஞ்சுகளிடம் வருதலைப்

பார்க்கின்றோம். அவை தமது கடிய உழைப்பி லும் பார்க்க மகிழ்ச்சியையே பெரிதாகக் கொள் கின்றன என்று தெரிகின்றது.

இன்னும் வாழ்க்கையில் பலபோராட்டங்கள் இருக்கின்றன. இவைகளை விளங்கிக் கொள் வதற்கு, இயற்கை, உயிர்களுக்கு அளித்திருக்கும் எதிர்புத், தற்காப்பு ஆயுதங்களைப்பற்றி நாம் சிறிது சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அவை ஊன் உண்ணும் உயிர்களின் பயங்கரமான பற் களும், நகங்களும், இரைகளைப் பிடிக்கும் பறவை களின் வளைந்த அலகும் கூரிய நகங்களும், பாம்பு களின் நச்சுப் பற்களும், சிலந்தியின் வாயும், பூச்சி களின் கொடுக்குகளும், இன்னும் இவைபோன்ற ஆயிரக்கணக்கானவைகளுமாகும்.

எதிர்ப்புக் குரிய பல ஆயுதங்கள் இருப்பன போலவே தற்காப்புக்குரிய பல ஆயுதங்களும் இருக் கின்றன. இயற்கை, பாரபட்சமின்றி எல்லா உயிர் களுக்கும் தாயாக விருக்கின்றது. அழுங்குக்கு எலும்புபோன்ற வயிரமான கவசமிருக்கின்றது. முட்பன்றிக்கு வயிரிய ஈட்டிபோன்ற முட்கள் இருக் கின்றன. வட அமெரிக்காவில் பூனையின் பருமையு டைய இஸ்கங்கு என்னும் ஒருவகை விலங்குஉண்டு. அதனை எதிரிகள் துரத்திச்சென்றால், அல்லது அணுகினால் அது எவரும் அணுகமுடியாத மிக்க கொடிய நாற்றமுடைய ஒருவகை நீரை வெளியே கொப்பளிக்கின்றது. இலாமா என்னும் இன்னொரு தென்னமெரிக்க விலங்கு தனக்குத் தொந்தரவு கொடுப்பவர்மீது அதிக எச்சிலை உமிழ்கின்றது.

தேரைபோன்றவைகளின் மாமிசம் கசப்பாயிருப்பதால் அவைகளை மற்றைய உயிர்கள் அதிகம் உண்பதில்லை. நண்டுகளின் குறடு போன்ற கால்கள் மற்ற உயிர்களுக்கு அச்சம் விளைக்கத்தக்கன. அவைகளை வயிரமான கவசம் மூடியிருக்கின்றது. அவைகளின் ஒடு வளரத்தக்கதன்று. நண்டு வளரும் போது ஓட்டை உடைத்துக்கொண்டு வெளியே வருகின்றது. அப்பொழுது அதன் மேற்புறம் மென்மையாகவும், பாதுகாப்பில்லாமலும் இருக்கின்றது. தபதிரண்டு (Hermit Crab) என ஒருவகை நண்டு உண்டு. அதன் பின்பாகம் வயிரமான ஓட்டினுல் மறைக்கப்பட்டிருக்கவில்லை. அது இன்னெரு கடலூரியின் ஓட்டுக்குள் நுழைந்து கொள்ளாவிடின் அது, மற்ற உயிர்களுக்கு எளிதில் இரையாகிவிடும். அது தான் நுழைந்து வாழும் ஓட்டையும் செல்லும் இடங்களுக்கெல்லாம் கொண்டு செல்கின்றது. ஆபத்துக் காலங்களில் தனது சொந்த ஓட்டுக்குள் நுழைவதுபோல் அது அவ்வோட்டினுள் புகுந்து மறைந்து கொள்கின்றது.

வாழ்க்கைப் போராட்டத்தில் வேட்டையாடுவனவும், வேட்டையாடப் படுவனவுமாகிய உயிர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பன சூழல்களின் நிறத்தை ஒப்ப உள்ள அவைகளின் நிறங்களேயாகும். இவ்வாறு அவற்றின் நிறம் அமைவதால் அவை இலகுவில் எதிரியாற் காணக்கூடாதனவாய் பல ஆபத்துக்களினின்றும் பிழைக்கின்றன.

எப்பொழுதும் பனிக்கட்டியுள்ள துருவ நாடுகளில் வாழும் உயிர்களின் நிறம் பெரும்பாலும்

வெண்மையாயிருக்கும் துருவக் கரடியின் நிறம் வெண்மை அல்லது மங்கிய வெண்மை. மற்றைய இடங்களில் வாழும் கரடிகள் கறுப்பு அல்லது கபில நிறமுடையன.

எல்லாக் காலங்களிலும் மழையில்லாதனவும், சிறிது தொலைவிலுள்ளனவுமாகிய இடங்களில், பருவ காலங்களுக்கு ஏற்றவாறு உயிர்களின் நிறங்கள் மாறுகின்றன. துருவநரி, மலை முயல் முதலியவைகளின் கோடை கால நிறம் நரை அல்லது கபிலம். இந்நிறங்கள் மாரிகாலத்தில் வெண்மை அடைகின்றன. அவ்விடங்களிற் காணப்படும் சில உயிர்களுக்கு ஆண்டு முழுமையும் கோடைகால நிறம் மாத்திரம் உண்டு: ஆனால் அவை வேறுவகையில் நன்ருகப் பாதுகாக்கப்படுகின்றன. 'சேபிள்' என்னும் ஒருவகை விலங்கு மரக்கொம்புகளில் இருந்து வாழ்கின்றது. அதன் கபில நிறமயிரிலும் பார்க்க வெண்ணிறம் எதிரிகளுக்குச் சடுதியில் தோன்றத் தக்கதாகவிருக்கும்.

வனந்தரங்களில் வாழும் உயிர்கள் மண் நிறமுடையன; மண் நிறம் மாத்திரமல்லாமல் இடையிடையே வேறு நிறங்களும் காணப்படும். சிறிது தொலைவில் நின்று அவ்வுயிர்களைப் பார்த்தல் முடியாது. பிறெம் (Brehm) என்பவர் புருவின் பருமையுள்ள ஒருவகைப் பறவைகள் வனந்தரங்களில் மனிதனின் வருகையைப் பொருட்படுத்தாது நின்று மேய்தலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அது பின் வருமாறு: "பறவைகள் மேய்ந்துகொண்டு நிற்பதைக்காணும் அனுபவம் இல்லாத பிரயாணி

துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அவைகளை நோக்கிச் செல்கின்றான். அவை அவனுடைய கண்ணெதிரில் மறைந்து விடுகின்றன. நிலம் அவைகளை விழுங்கிவிட்டதுபோற் றோன்றுகிறது. தங்களுடைய இறக்கைகளுக்கும் நிலத்துக்குமுள்ள நிற ஒற்றுமையை நம்பி அப்பறவைகள் பதுங்கி இருக்கின்றன. ஒரு கணத்தில் அவை கற்குவியல்களாகவும் கற்களாகவும் மாறிவிட்டன ''

மணல் நிறம் பொருந்திய மேற்பாகம் சில சமயங்களில் நரை நிறமாகவும், சில வேளை ஒளி பொருந்திய மஞ்சள் நிறமாகவும், வரிசையாகப் பிரிந்து ஒடுங்கிய வரைகளும் மெல்லிய கீறும் புள்ளியும் உடையதாகவும் இருக்கும். இவ்வகை நிறம் தொலைப் பார்வைக்குப் புலப்படக் கூடுமென்று ஒருவர் நினைக்கலாம். ஆனால் அந்நிறம் நிலத்தின் நிறமேயாகும். நிலம் பறவையைத் தனது பகுதியாக்கி அதனைப் பாதுகாத்தல் வியப்பன்று.

இவ்வகைப் பாதுகாப்பு நிறமுடைய பூச்சிகள் பலவுண்டு. பல புழுக்கள் தாம் உணவைப் பெறும் மரங்களின் நிறங்களைப் பெற்றிருக்கின்றன. சில பூச்சிகள் உலர்ந்த இலை அல்லது பாசித்துண்டு போல் இருத்தலும் ஆச்சரியப்படத்தக்கது.

ஒருவகை வண்ணாத்திப் பூச்சியின் இறக்கைகளின் மேற்புறம் பிரகாசமான நிறமுடையது. பறக்கும்போது அது நன்றாகக் கண்ணுக்குப்படும். இறக்கைகளை நிமிர்த்திக்கொண்டு மரப்பட்டையில் இருக்கும்போது அதன் கீழ்ப்புறம் வாடிய இலையின் நிறமுடையதாயிருக்கும்.

வண்ணாத்திப்பூச்சிகளிலும் பலவகைகளுண்டு. சில வண்ணாத்திப் பூச்சிகள் உண்பதற்கு விரும்பத் தகாத சுவை உடையனவாயிருத்தலின் அவைகளைப் பறவைகள் உண்பதில்லை. ஆகவே அவைகளுக்குப் பாதுகாப்பு நிறம் வேண்டியதில்லை. ஆகவே அவை கண்ணுக்குப் புலப்படக்கூடிய நிறமுடையனவாயிருக்கின்றன. அவை காணக்கூடியனவாயிருத்தலின், பறவைகள், அவை உண்ணத் தகாதன என்று விரைவில் அறிந்துகொள்கின்றன. பட்சிகளால் உண்ணப்படாத வண்ணாத்திப் பூச்சிகள் உள்ள இடங்களில் இன்னொரு இனம் காணப்படுகின்றது. சில சமயங்களில் பல இனங்களும் காணப்படுகின்றன. இவை முன்கூறப்பட்ட வண்ணாத்திப் பூச்சிகளின் நிறத்தைப் பெற்றிருக்கின்றன. ஆனால் இவை முன் இனத்தைச் சேர்ந்தவைகளல்ல. இவ்வகை வண்ணாத்திப் பூச்சிகள் பட்சிகள் உண்பதற்கு நல்லன; ஆனால் பட்சிகள் இவைகளை முன்னைய இனத்தினின்றும் பிரித்தறிய மாட்டாமையால் உண்ணுதுவிடுகின்றன.

ஒவ்வொரு உயிரும் உணவுக்காக ஆடும் போராட்டம் மிகக் கடுமையானது. சில வண்ணாத்திப் பூச்சிகளின் புழுக்கள் மரங்களில் நெருங்கியிருந்து இலைகளை உண்கின்றன. இலைகளைத் தின்று ஒழித்தபின் இன்னொரு மரத்தில் ஏறுதற்கு அவை பந்துபோலச் சுருண்டுகொண்டு நிலத்தில் விழுகின்றன. பல நெருங்கியிருந்து உண்கின்றமையின் மிகச் சுறுசுறுப்பும் வலிமையுமுள்ள புழுவே அதிக உணவைப் பெறுகின்றது. பல

புழுக்களுக்கு அற்ப உணவு மாத்திரம் கிடைக்கின்றது. அதனால் அவை வண்ணத்திப் பூச்சிகளாக வளர்மாட்டா.

இவ்வகைப் போட்டியைத் தடுப்பதற்கு இயற்கை பலவகை வழிகளை அறிந்திருக்கிறது. ஒன்றோடு ஒன்று இனமுடைய உயிர்கள் வெவ்வேறு வகை உணவை உண்பதால், அவை, ஒரேவகை உணவை உண்ணும் உயிர்களைவிடப் பெருங்கூட்டமாக ஒரே இடத்தில் வாழ்தல் கூடும். இவ்வகை வெவ்வேறு உணவு கொள்ளும் இனங்கள் எலிகளிலும் பறவைகளிலும் அதிகம் காணப்படுகின்றன.

பல உயிர்களுக்கு வாழ்க்கைப் போராட்டம் மிகவும் இலகுவாக்கப்பட்டிருக்கின்றது. குளிர்காலம் தொடங்குதலும் உணவு அருமை ஆகின்றது. அப்பொழுது பல உயிர்கள் உறக்கத்துக்குச் செல்கின்றன. இவைகளின் உறக்கம் பல அளவாக உண்டு. நித்திரைபோகாதவை சுறுசுறுப்பை இழந்து அடங்கிக்கிடக்கின்றன. அதனால் அவைகளுக்கு முன்னையிலும் குறைவான உணவு போதுமானதாயிருக்கும்.

நித்திரை கொள்ளும் பிராணிகள் வெப்பமான நாளொன்றில் விழித்தெழுந்து சிறிது உணவை உண்டபின் மறுபடியும் தூங்கும். சில பிராணிகள் மாரிகாலத்துக்கென்று உணவைச் சேமித்துவைக்கின்றன. அற்பநித்திரை கொள்ளும் உயிர்களுள் அணில் ஒன்று. அது, தான் சேமித்துவைத்த விதைகளை உண்பதற்கு இடையிடையே விழித்தெழுகின்றது. மர எலி மாரிகாலம் முழுவதும் பசி

யுடன் உறங்குகின்றது. எலிகள் தானியம் விளைந்திருக்கும் காலங்களில் தானியக் கதிர்களைச் சேகரித்துவைக்கின்றன

அதிக நித்திரை செய்யும் உயிர்கள் உணவைச் சேகரித்துவைப்பதில்லை. கோடைகால இறுதியில் அவை அதிக உணவை உண்கின்றன. அதனால் குளிர்காலம் வரும்போது அவை மிகக் கொழுப்படைகின்றன. பின்பு அவை உறங்குவதற்கு மறைவிடங்களைத் தேடிச்செல்லும். துருவக்கரடி பனிக்கட்டியில் குழிதோண்டி அதில் உறங்குகின்றது. முட்பன்றி இலைகளாற் செய்த கூடுகளுள் மறைந்து கிடந்து உறக்கம் கொள்ளும். வெளவால் இருண்ட குகைகளுக்குள் தலைகீழாகத் தொங்கும். தவளை சேற்றுள் மறைந்து வாயையும் மூக்கையும் மூடிக்கொண்டு தோல்வழியாக மூச்சுவிடும். அதிக நித்திரை கொள்ளும் இவ்வகை உயிர்களின் வாழ்க்கை இப்பொழுது அமைதி அடைகின்றது. அவை ஆறுதலாக மூச்சுவிடுகின்றன. இருதயம் மெல்லென அடிக்கின்றது. அம்மிருகங்களின் ஆற்றல் அற்பமாகச் செலவழிகின்றது. கழிவுப்பொருள்கள் உடம்பினுள் திரளுகின்றது. உறக்கத்தில் இருக்கும் மிருகங்கள், வெளிச்சமும் சூடும் கெடாதிருந்து, காற்றுப்பட்டதும் மூண்டெரியக்கூடிய சாம்பல்பூத்த நெருப்புப்போன்றன.

இலை துளிர்காலங் கிட்டுதலும் அவை முன் சேமித்துள்ள கொழுப்புச் செலவழிந்துபோகின்றது. நித்திரை கொள்ளும் உயிர்கள் இலைதுளிர் காலத்தில் விழித்துத் தங்கள் மறைவிடங்களினின்

றும் வெளியே வருகின்றன. தமக்கு விருப்பமான பழங்களும் கிழங்குகளும் அதிகம் இருக்கும்போதே அவை விழிக்கின்றன. பசியின் கொடுமையால் அவை எதிர்ப்படும் எதையும் எவரையும் எதிர்க்கும்.

உணவு அருமையான காலத்தில் வாழ்வதற்கேற்ற வழியைப் பறவைகள் கண்டுபிடித்துள்ளன. உணவு சுருங்கும்போது அவை கூட்டமாகத் திரளுகின்றன; வட்டமிட்டுப் பறந்து தமது பலத்தைச் சோதிக்கின்றன. இறுதியில் அவை எப்பொழுதும் வெயிலுள்ள தெற்குத் தேசங்களுக்குப் பறந்து செல்கின்றன. அங்கே உணவு பெரிதும் கிடைக்கின்றது. இளம்பறவைகள் முன்னே பறக்க முதிய பறவைகள் பின்னுற் பறந்து செல்லும். உணவின் பொருட்டு அவை வழியில் பல முறை தங்கும். பழக் காலம் முடிவதன்முன் அவை தமது இடங்களை மாற்றிக்கொள்ளும். இவ்வாறு உயிர்களின் வாழ்க்கைப் போராட்டம் நிகழ்ந்துவருகின்றது.

---

## உயிர்த் தோற்ற வளர்ச்சி

ஆதியில் இப்பூமியின் மேலோடு கடிய வெப்பமுடையதா யிருந்தது. ஆகவே அப்பொழுது அங்கு உயிர்கள் தோன்றி வாழ்ந்திருத்தல் முடியாது. கனல் மிகுதியினல் நிலமட்டத்தில் காற்றும் நீரும் இருக்கவும் முடியாது. இந்நிலைமைகள் கழிந்த பின், அறியப்படாத ஒரு காலத்தில் உயிர்கள் இம்மண்ணகத்தே தோன்றி வாழ ஆரம்பித்தன.

அத்தொல்லுயிர்கள் அணுவின் பருமையுடையன. "இல் நுழை வெயிலின் நுண்ணணு" என்பதனால் அணுவின் பருமையை அறிந்து கொள்க. ஒரு துளி நீரைப் பூமி அத்தனை பருப்பித்து நோக்கின் ஓர் அணு, துப்பாக்கிச் சன்னம் அளவினதாகத் தோன்றுமென விஞ்ஞானிகள் கூறுவர். இத்தொல்லுயிர்கள் எங்கிருந்து பூமிக்கு வந்தன என்று கூறுதல் இயலாது. இது பற்றிப் பலர் பல கருத்துடையர். பக்ரீரியா (Bacteria) என்னும் ஒரு வகை அணு உயிரின் அகலம் $\frac{1}{30,000}$ அங்குலம், நீளம் $\frac{1}{30,000}$ அங்குலம்.

ஆதிகால உயிர்கள் நீர், காற்று, கரைந்த உப்பு என்பவைகளில் வாழக்கூடியனவா யிருந்தன. தொல்லுயிர்கள் கடலிலேயே வாழ்க்கையைத் தொடங்கின. அவைகளில் தாவர உயிர்கள் ஞாயிற்றின் ஒளியிலிருந்து கரியமில வாயுவைப் பிரித்துத் தமது உணவாகிய சர்க்கரை மா என்பவைகளை உண்டாக்குதற்குப் பயன்படும் பச்சை நிறமுடையனவாயிருந்தன. உயிர்கள் தாம் ஈட்டும் உயிர்ச்சத்துக்களை தமது கண்ணறையுள் (Cells) அடக்கிவைத்தன. அச்சத்து முளைபோல வளர்வதாயிற்று. அதன் உதவியைக்கொண்டு அவை நீரில் சுறுசுறுப்போடு உலாவின.

மாரிகாலத்தில் நிலத்திலும் கற்களிலும் படிக்கட்டுகளிலும் பாசிபோற் பச்சை நிறமுடையனவாய்த் தோன்றுவன ஒரு கண்ணறை உடலமைப்புடைய தாவரங்களின் கூட்டமேயாகும். இவ்வகைச் சிறிய தாவரங்களிலிருந்தே இன்று உல

கிற் காணப்படும் எல்லாத் தாவர வகைகளும் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்தன.

காற்று, நீர், உப்பு என்பவைகளிலிருந்து சீவப் பொருள்களை (Organic matter) உண்டாக்கும் ஆற்றல் பெறாது தம்மைப்போன்ற உயிர்களை உண்டு வாழும் தாவரங்களல்லாத இன்னொருவகை உயிர்கள் வளர்வனவாயின. இவ்வகை உயிர்களினின்றே இன்று காணப்படும் எல்லாவகை உயிர்களும் தோன்றியுள்ளன.

தாவரம், காற்று, நீர், உப்பு என்பவைகளிலிருந்து உணவை வாங்கும் ஆற்றல் உடையது. அது வாங்கும் உயிர்ச்சத்து அடங்கிய பொருள்கள் சிறிய சிறிய கண்ணறைகளில் (Cells) அடைக்கப்பட்டுக்கிடக்கின்றன. அது தனது தேவைக்கு மேல் அதிகமான உணவைச் சேமிக்கின்றது; சிறு அளவினதாகிய உணவைச் செலவிடுகின்றது. தன்னிடத்திற் திரளும் கரியமிலம் சம்பந்தமுடைய கழிவுப் பொருள்களை வெளிப்படுத்தும் மார்க்கம் அதற்கு இல்லை. ஆகவே அது மந்தநிலைமையை அடைந்துள்ளது.

தாவரங்களல்லாத உயிர்களின் கண்ணறைகள் சுவர்களால் பிரிக்கப்படுவதில்லை. ஆகவே இவ்வுயிர்கள் அசைந்து உலாவக்கூடியனவாயிருக்கின்றன. இவை சேமிப்பின்றி வருவாய் அளவில் செலவுசெய்து வாழ்கின்றன. அவை உட்கொள்ளும் உணவு, சமிக்கும்போது கரியமிலவாயுவோடு சம்பந்தப்படுகின்றது. அதனாற் கழிவது உயிர்

உள்ள நெருப்பின் சாம்பராகும். இது, தாவரங்களில் வெளியே கழிந்துவிடாமல் உப்பாக அவையிடத்தே தங்கும். பிராணிகள் அதனை வெளியே மலமாகக் கழித்துவிடும்.

தாவரங்களைச் சூழ்ந்து பல உயிர்கள் வாழுகின்றன; ஆனால் பிராணிகளைச் சூழ்ந்து சில தாவரங்களே காணப்படுகின்றன. தாவரங்களும் பிராணிகளும் பிரிந்து வாழத் தொடங்கிய காலம் முக்கியமானது.

நாம் உள்ளே கொள்ளும் பிராணவாயு தாவரங்களின் இரசாயன சாலையாகிய இலைகளினின்றும் கிடைக்கின்றது. அவ்விலைகள் சூரிய ஒளியின் உதவியால் தமக்கு வேண்டிய உணவை ஆக்கிக் கொள்கின்றன.

பூமியில் மேடுகளும் பள்ளங்களும் தோன்றிக் கண்டங்களும் கடல்களும் உண்டாயின. அப்பொழுது நீரில் மிதந்துகொண்டு திரிந்த தாவரங்கள் கரையை அடைந்தன. அவை வெளிச்சத்தை விட்டு நீங்க விரும்பாது அவ்விடங்களிலேயே தங்கின. ஆதியிற் கடற்கரையில் உண்டான தாவரங்கள் கடற்சாதாளைகளாகும். அணு அளவினவாகிய பிராணிகள் கடற் பஞ்சாக வளர்ந்தன. நுண்ணிய உயிர்கள் இடத்தும் மனித உடலமைப்புக்குரிய தோற்றங்கள் காணப்படுகின்றன.

ஒரு கண் அறை உடலமைப்புள்ள உயிர்கள் இரண்டாகப் பிரிந்து வாழும் இயல்புடையன. சொறிமீன் போன்ற ஓர் அறை உடலமைப்புள்ள

உயிர்கள் பலவாகப் பிரிந்து தனித்தனியாக வாழ்கின்றன. நல்ல தண்ணீரில் வாழும் கைடிரா (Hydra) என்னும் பிராணி கிளைவிட்டுப் பெருகுகின்றது. உணவு கிடைப்பது அருமையாகும்போது கிளைகள் பிரிந்து தனித்தனியே வாழ்கின்றன. இது பிராணிகள் குட்டியீனுமலும் முட்டையிட்டுக் குஞ்சுபொரியாமலும் பெருகும்முறை. பிராணிகளுக்கும் தாவரங்களுக்கும் இவ்வாறு பெருகுதல் பொது இயல்பு. ஒரு மண் புழுவைத் துண்டுகளாக வெட்டி விட்டால் அதன் துண்டுகள் தனித்தனி புழுக்களாக வாழுகின்றன.

ஒரு பறவை அல்லது தேனீ இவ்வாறு கிளைவிட்டுப் பெருகமாட்டாது. பிராணிகள் கிளைவிட்டுப் பெருகுவதற்கு அடுத்தபடி ஆண் பெண் என்னும் வேறுபாடுகள். முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும். மேலினப் பிராணிகள் குஞ்சுகளில் பற்றுடையன. முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் பிராணிகளுக்கு அடுத்த படியில் உள்ளன குஞ்சுகளைக் கருப்பைக்குட் பொரித்துக் குட்டிகளை ஈனும் பிராணிகள். இவை குட்டிகள் தாமாக இரை தேடும் பருவம் அடையும் காலம் வரையில் அவைகளுக்குப் பால் கொடுத்துக் காப்பாற்றும். இவை முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் பிராணிகளிலும் பார்க்கக் குழந்தைகளிடத்திற் பற்றுடையன. அணு அளவினவாய் இருந்த தொல்லுயிர்கள் இவ்வாறு பலவாறு வளர்ச்சியடைந்துள்ளன.

## டார்வினின் கொள்கைகள் சில

டார்வின், உயிர்களையும் தாவரங்களையும்பற்றி எழுதியுள்ளார். அதற்குமுன் நாம் முற்கால உயிர்களைப்பற்றி யாதும் அறியாதவர்களா யிருந்தோம். இன்று காணப்படும் பலவகை உயிர்த்தோற்றங்கள் எல்லாம் முற்கால உயிர்த்தோற்றங்களின் வளர்ச்சி யென்றும், அவ்வளர்ச்சிகளுக்கு இடைப்பட்ட தோற்ற வடிவங்கள் காணப்படுதல் கூடும் என்றும் டார்வின் கூறியுள்ளார். அவ்விடைப்பட்ட தோற்றங்கள் காணப்படாவிடின் டார்வினுடைய கொள்கைகள் பாறிவிடும். ஆனால் அவ்வகைத் தோற்றங்கள் காணப்படுகின்றன. குரங்குக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட ஆறுவகை உயிர்களின் என்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ் வுயிர்களிற் சில நெருப்பைப் பயன்படுத்தின. ஆகவே அவை மக்கள் இனத்தைச் சேர்ந்தன என்று கருதப்படலாயின. மற்றைய உயிர்கள் ஒருவகைக் கைத்தொழிலும் புரியவில்லை. ஆகவே அவை 'கொறிலா' என்னும் மனிதக் குரங்கிலும் உயர்ந்த வாலில்லாக் குரங்குகள் என்று கொள்ளப்படலாயின.

இவ்வாறே வேறு உயிர் இனங்களுக்கிடையிலுள்ள தொடர்புகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குட்டியீனும் விலங்குகள் போன்றனவும், பற்களுடைய பல்லிகளும், பற்களுடையனவும் என்புத் தன்மையான வாலுடையனவுமாகிய நீண்ட பறவைகளும் முற்காலத்தில் வாழ்ந்தன; இவைகளே

யன்றி மீன்களுக்கும், தரையிலும் நீரிலும் வாழும் உயிர்களுக்கு இடைப்பட்டனவும் குற்றி போன்ற கால் உடையனவும் மீன்களுக்கிருப்பது போன்ற மூக்குத் துவாரமுடையனவுமாகிய உயிர்களும் காணப்பட்டன.

இவ்வுயிர்களின் வடிவங்கள் ஆழத்தேயுள்ள பாறை அடுக்குகளிற் படிந்து கிடக்கின்றன. நீரிலும் நிலத்திலும் வாழும் உயிர்களும் பல்லிகளும் காணப்படவேண்டிய நிலக்கரிப் படையில் மனிதன் அல்லது குதிரைகளின் உருவங்கள் படிந்து கிடப்பின் டார்வினுடைய கொள்கை உடனே சாய்ந்து விடும்.

உயிர்த்தோற்ற வளர்ச்சியைப் பற்றிய கொள்கை யூகமாயினும் அது நடை முறையிலும் உள்ளது. பாறைகளின் வயது அவைமீது படிந்து கிடக்கும் உயிர்களின் வடிவங்களைக்கொண்டு (Fossil Remains) கொண்டு அறியப்படும். பாறைகளிற் காணப்படும் உலோகப் பொருள்களைக் கொண்டு காலக் கணக்குகள் குறிக்கப்படும்.

டார்வின் உயிர்களின் தோற்ற வளர்ச்சி (Evolution) எவ்வாறு உண்டாகின்றதென்பதைக் கூறியுள்ளார். இதற்கு முக்கிய காரணம் உயிர்கள் தமது வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஏற்ப வளர்தல். இக்காரணத்தினல் உயிர்களும் தாவரங்களும் மாறுதல் எய்தின. இம்மாறுதல்கள் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்துவந்தன. பின்பு, மாறுபாடுகள் எய்திய சந்ததிகள் பல சந்ததிகளைத்

தோற்றுவித்தன. அச்சந்ததிகள் பெருகியதால் தோற்றத்தில் மாற்றம் உண்டாகிப் புதிய இனங்கள் தோன்றின. சில உயிர் இனங்களுக்குத் தடித்த மயிருண்டு. இவ்வேறுபாடு பின்பு தலைமுறை தலைமுறையாக வளர்ந்துவந்தது. இவ்வேறுபாடு களை நாய்க்கிளையினங்கள் சிலவற்றை ஒப்புநோக்கி அறிதல் கூடும். மயிர் அதிகமுடைய உயிர்கள் குளிர்ந்த நாடுகளிலும், ஐதமயிருடையன வெப்ப நாடுகளிலும் வாழும் தகுதியுடையன. இவ்வாறு ஒரு இனமே இரண்டு வகையாகப் பிரிந்து வளர்ச்சி எய்தும்.

வாழ்க்கைக் காலத்தேயுள்ள பழக்கங்கள் சந்ததி முறையாக வரும் என்று சிலர் கருதுகின்றனர். இதை அனுபவத்திற் காட்டி அத்தாட்சிப்படுத்த எவராலும் முடியவில்லை. உயிர்களின் வாழ்க்கையில் இதற்கு எதிரான பல நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. வேலைக்காரத் தேனீக்களைப்போலச் சிக்கலான இயற்கை உணர்ச்சி (Instinct) உடைய உயிர்கள் வேறெவையுமில்லை. இவை சந்ததியைப் பெருக்குவதில்லை. இவை வேலைக்கார ஈக்களினின்று தோன்றுவனவல்ல. இவை இராணி ஈயிடத்தினின்றும் பிறக்கின்றன. பழக்கங்கள் தலைமுறையாக வருவனவாயின் மிகப் பழைய காலத்திலேயே அவை தமது கூட்டத்திற்குரிய இயற்கை உணர்ச்சியை மறந்து தாமும் இராணி ஈயைப் போல் வந்திருத்தல்வேண்டும்.

மனித நீதியை ஆராய்வதற்குத் தகுதியுடையது நிலைபெறுதல் என்னும் கொள்கையும் கையாளப்

படுகின்றது. உலகம் முழுமையிலும் ஆளும் வகுப்பினர் மறைந்து போயினர். இன்று செல்வர்களிலும் வறியவர்களே பல குழந்தைகளைப் பெறுகின்றனர். டார்வின் கொள்கைப்படி செவ்வரிலும் வறியவர்களே வாழ்கைக்குத் தகுதியுடையவர்களாதல் வேண்டும். முதல் இடும் செல்வர் பணப் போராட்டத்தை வெல்லலாம். ஆனால் வேலையாட்களே வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியடைந்து வருகின்றனர்.

ஊன் உணவு கொள்ளும் விலங்குகளைவிடத் தாவர உணவு கொள்ளும் விலங்குகள் பெருகின்றன. நரிகளிலும் முயல்கள் அதிகம் உள்ளன. முற்காலக் கவசமுடைய பெரிய ஊரும் பிராணிகளின் இடத்தை விவேகமுள்ளனவும் குட்டியீனுவனவுமாகிய விலங்குகள் ஏற்றன.

டார்வினின் கொள்கையை எதிர்ப்போர் இனங்களும் கிளை இனங்களும் வெவ்வேறு எனக் கூறுவர். 'கிறே ஹவுண்ட்' 'புல்டோக்' முதலிய நாய்கள் வெவ்வேறு தோற்றமுடையனவாயினும் அவை கலந்து சந்ததியை உண்டாக்கும். குதிரை கழுதை போன்றவை கலத்தல் முடியாது. கலந்தால் சந்ததி உண்டாவதில்லை; உண்டாயினும் அவை பெருகுவதில்லை. டார்வினின் கொள்கையில் உயிர்கள் வேறுபடும் கொள்கையும், இயற்கை உணர்ச்சி (Instinct) கொள்கையும் தணிவுபடுத்தப்படல்வேண்டும். இன்றைய உயிர் வரலாற்று நூல் டார்வின் இட்டதளத்தின்மீது கட்டப்பட்டுள்ளது.

---

## பண்டைநாள் கடற் போக்குவரத்து.

இப் பூமியின் ஒவ்வொரு சதுரமைல் அளவு நிலப்பரப்புக்கும் இரண்டேகால் சதுரமைல் அளவு நீர்ப்பரப்பு இருக்கின்றதென்று பூமி சாத்திரத்திற் படிக்கின்றோம். நாம் தரை வழியாக மாத்திரம் பயணம் செய்தலை நம்பியிருந்தால் மற்றத் தேசங்களுடன் எங்கள் போக்குவரத்துத் தடையுறும். ஆனால் முற்காலந்தொட்டுக் கடல் வழியும் தரை வழியும் தொடர்பு படுத்தப்பட்டிருந்தன.

தொடக்கத்தில் அத்லாந்திய, இந்திய, அல்லது பசுபிக்கிய கடற்கரைகளில் வாழ்ந்த மக்களே முதற் கப்பலைக் கட்டியிருத்தல் கூடும். மத்திய தரை சம்பந்தப்பட்ட வரையில் நைல் நதிப் பள்ளத் தாக்கே கப்பல் கட்டப்பட்ட ஆதி இடம் எனத் தெரிகின்றது. எகிப்தியர் இற்றைக்கு 7000 ஆண்டுகள் வரையில் நாகரிகத்தின் உச்சத்தை எய்தியிருந்தனர். கட்டிடங்களை அமைக்கும் திறமையில் இன்றுவரையில் அவர்களை வேறொருவரும் தாண்டவில்லை. கூர்நுதிச் சமாதிகளையும் பிரமாண்டமான ஆலயங்களையும் அரண்மனைகளையும் அமைக்கும் ஆற்றல், அவர்களுக்குக் கப்பல் கட்டும் திறமையையும் நல்கியிருத்தல் வேண்டும்.

அவர்களின் தேச சுவாத்தியம் வெப்பமாயிருந்தமையின், சமாதிச் சுவர்களிலும் ஆலயங்களிலும் எழுதிய ஓவியங்கள் மங்காது புத்தப் புதியனபோற் காணப்படுகின்றன. இவைகளின் உதவிகொண்டு

அம் மக்களின் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகத்தைப்பற்றி நாம் அறிந்து கொள்ள இயலுகின்றது. சில சமாதிச் சுவர்களில் மரக்கலங்களின் ஓவியங்களும், அவைகளின் கீழ் அவை பயன்படுத்தப்பட்ட வரலாறுகளும் வரையப் பட்டுள்ளன. அவை பல நூறு ஆண்டுகளின் முன் மறைந்துபோன எகிப்திய மக்களின் பழக்க வழக் கங்களை அறிவிக்கும் ஓவியப் புதினங்களாக விருக் கின்றன.

நாம் அறியக்கூடியனவாய் இருக்கும் கப்பல் கள் கிறித்துவுக்கு முன் ஐயாயிரம் அல்லது ஆறு யிரம் ஆண்டுகள் வரையில் எகிப்திய மக்களாற் கட்டப்பட்டனவாகும். அவை "பிரமிட்" என்னும் கூர்நுதிச் சமாதிகளைக் கட்டியவர்களுக்கு முற்காலத் தன. அவ்வோவியங்கள் 7,000 ஆண்டுகளுக்கு முன் ஆற்றுப் பயணத்துக்கு மாத்திரமல்லாமல் கடற் பயணத்துக்கும் மரக்கலங்கள் பயன்படுத்தப் பட்டனவென்று அறிவிக்கின்றன. கடற்பயணம் செய்யும் நாவாய்கள் மிகவும் நீளமுடையனவாயிருந் தன.

இவ்வாறு நாவாய்களைச் செய்தவர்களுக்குப் பின் வந்தவர்கள் அவர்களிலும் பார்க்கக் கப்பல் கட்டுவதில் கெட்டித்தனம் உடையவர்களாயிருந் தார்களென அனுமானிப்பது பிழையாகாது.

எகிப்தியரது மிகமுற்பட்ட மரக்கலம் இற் றைக்கு 6,300 ஆண்டுவரையிற் கட்டப்பட்டது. இது நோவாவின்பேழைக்கு 2,000 ஆண்டுகளுக்கு அப் பாற்பட்டது. அது துடுப்புக்களின் உதவியால்

ஓடும் பெரிய மரக்கலம். துடுப்புக்களை வலிப்போர் குந்தியிருந்து அவைகளை வலிக்குமாறு கப்பலின் கீழ்ப்பாகத்தின் பகுதிக்கு அல்லது அதன் முழுமைக்கும் ஈட்டு இடப்பட்டிருந்தது, முன்புறத்தில் ஒருவன் நின்று கம்பைவிட்டு ஆழமறிந்து முன்னால் திடர் அல்லது பாறை இருப்பதை அறிவிப்பான். பிற்பக்கத்திலிருந்து மூவர் கப்பலை ஓட்டுவர். அவர்கள் துடுப்பு வலிப்பவர்கள் வைத்திருப்பவைகளைப் பார்க்கப் பெரிய துடுப்புக்களை வைத்திருப்பர். கப்பல் வேகமாகச் செல்லவேண்டுமென விரும்பினால் அவர்களும் தமது துடுப்புக்களைப் பயன் படுத்துவர்.

இவ்வகைக் கப்பல் ஐம்பது அல்லது அறுபது அடி நீளமுள்ளது. அது குடையப்பட்டது மாத்திரமல்லாமல் காத்திரமுடையதாகவும் இருந்தது. அதற்குப் பாய்மரம் உண்டு. பாயின் உதவியைக்கொண்டு கப்பலை ஓட்ட அவர்கள் அக்காலத்தில் அறிந்திருந்தார்கள். பாய்மரம் முக்கோண (ஏ A என்னும் ஆங்கில எழுத்து) வடிவாக இருந்தது. நடுவில் குறுக்கே கழி வைத்துக் கட்டப்பட்டிருந்தது. பாய் சதுரமானது. அது சட்டங்களில் இழுத்துக் கட்டப்பட்டது. கெரதோதசு (Heradotus) என்பவர் தன் காலத்தில் (கி. மு. 450) நைல் ஆற்றில் செல்லும் மரக்கலங்களின் பாய்கள் பைபிரஸ் என்னும் நாணலினாற் செய்யப்பட்டனவென்று கூறியிருக்கின்றார். எகிப்தியர் சணல் ஆடைகளை நெய்துபயன்படுத்தியதல்லாமல் அவைகளை மத்தியதரை நாடுகளுக்குக் கப்பற் பாயாகப் பயன்படுத்தும் பொருட்டும் அனுப்

பிவந்தார்கள். இதனை நோக்குமிடத்துக் கெரதோதசு கூறுவது மிகவும் ஆச்சரியமா யிருக்கின்றது. இவ்வாசிரியரே, பின்னல் இழுபடும்படி கற்கள் கட்டப்பட்ட தோணிகள் நைல் ஆறு ஓடும் திசையோடு செல்வதைப் பற்றிக் கூறியிருக்கின்றார். ஆற்றோட்டத்தோடு செல்லும் தோணிகளைத் திருப்புதல் முடியாது, ஆகவே கற்கள் கட்டப்பட்டிருந்தன.

தொகையான பெருங் கருங்கற் பாளங்கள் 'அசோவன்' (Assouan) மலையிலிருந்து சமாதிகளும் ஆலயங்களும் கட்டுவதற்குக் கடல்வழியாகக் கொண்டு வரப்பட்டன. தேர் எல் பஃறி ஆலயத்திற் காணப்படும் இரண்டு தூண்கள் எவ்வாறு கொண்டு வரப்பட்டன என்பது அவ்வாலயச் சுவர்களில் ஓவியங்களால் விளக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு தூண்களின் நிறையும் எழுநூறு 'தொன்' (Ton) வரையில் உள்ளது. நோவாவின்பேழை கட்டப்படுகின்ற காலத்திற் செய்யப்பட்ட கடற் பயணத்தைப் பற்றி உலக வரலாறு கூறுவதாவது: இப்பயணம் எகிப்திலிருந்து பண்டு (Punt)* என்னும் நாட்டுக்குச் செய்யப்பட்டதாகும். பண்டு எனப்பட்டது சோமாலிலந்து அல்லது அரேபியாக்கரையிலுள்ள ஒரு இடமெனப் பழைய வரலாற்றாசிரியர்களாற் கருதப்பட்டது. இது இந்தியாவிலே மலையாளக் கரையை அடுத்த நாடு என இக்காலச் சரித்திரகாரர் கூறு

---

* பண்டு நாட்டினின்றும் எகிப்து மேற்கு ஆசிய நாடுகளுக்குச் சென்ற பொருள்களிற் பல இந்திய நாட்டில் மாத்திரம் கிடைப்பனவாயிருக்கின்றன. அப்பொருள்களின் இந்தியப் பெயர்களே மேற்குத் தேசங்களிலும் வழங்கின.

கின்றனர். எகிப்திய அரசருக்கு வாசனைப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காகவே இக்கடற் பயணம் செய்யப்பட்டது. இவ்விபரம் ஓவிய எழுத்துக்களினின்றும் மொழிபெயர்த்துக் கென்றி புறாக்ச் (Dr. Hentry Brugsch) என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. கப்பலின் மாலுமியாகிய கன்னு என்பவன் கூறியிருப்பது, “ நான் சேபா என்னும் துறைமுகத்தை அடைந்தேன். நான் கொண்டுவர வேண்டிய பண்டங்கள் அடங்கிய மூடைகள் கப்பலில் ஏற்றப்பட்டன. நான் எருதுகளையும், பசுக்களையும், ஆடுகளையும் பலி கொடுத்தேன். யான், பண்டு என்னும் புனிதநாட்டினின்றும் அரசனுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் கொண்டுவந்தேன் ” என்பதாகும். கி. மு. 1600-ல் பண்டு நாட்டுக்குச் செய்யப்பட்ட கடற் பயணத்தைப்பற்றிய இன்னொரு வரலாற்றைப்பற்றிய முழுவிபரமும் கிடைத்துள்ளது. அப்பொழுது இஸ்ரவேலர் எகிப்தில் மறியற்படுத்தப்பட்டிருந்தார்கள். பதினொரு கப்பல்களில் பண்டுதேசத்தின் வியப்பு மிக்க பொருள்கள் ஏற்றப்பட்டன. அவை விலையுயர்ந்த மரங்கள், குங்கிலியம்போன்ற வாசனைத் திரவியங்கள், வாசனை மரங்கள், கருங்காலி மரத்தினாற் செய்யப்பட்ட பொருள்கள், அமு என்னும் தேசத்திற் கிடைக்கும் பொன் அழுத்திய யானைத் தந்தம், கண்ணுக்குத் தீட்டும் மை, நாய்த்தலைக்குரங்கு, நீண்டவாற் குரங்கு, வேட்டை நாய், புலித்தோல் முதலியவும் அத்தேசமக்களும் குழந்தைகளும் என எழுதப்பட்டிருக்கின்றது. அச்சரித்திர ஆசிரியர் இது போன்ற பயணம் முன் ஒருபோதும் செய்யப்பட

வில்லை எனக் கூறியிருக்கின்றார். இதற்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கன்னு என்பவனும் இவ்வாறே கூறியிருக்கின்றான். எகிப்தியர் தமது தீரச் செயல்களை அலங்காரப்படுத்திக் கூறும் முறை ஒன்று சிறப்பாக இருந்ததென இதனால் விளங்குகின்றது.

பண்டுப்பயணத்திற் பயன்படுத்தப்பட்ட கப்பல்கள் முன் கூறப்பட்ட துடுப்பு வலித்தோட்டப்படும் மரக்கலங்களிலும் பார்க்கப் பருமையுடையன. அவை காற்று இல்லாதபோதும், எதிர்க் காற்றடிக்கும்போதும் பதினைந்துசோடி துடுப்புக்களை இயக்கி ஓட்டப்பட்டன. கீழ், மேற் சட்டங்களில் வலிய படங்குகள் கட்டப்பட்டிருந்தன.

இரண்டாவது பண்டுப் பயணத்தின் பின் சில நூறுவருடங்கள் கழிந்து ஹோமர் என்னும் கிரேக்க கவி, கிரேக்கர் நூறு கப்பல்களிற் சென்று இல்லம் (திராய்) நகரை எரிமூட்டியதாகக் கூறியிருக்கின்றார். இம்மரக்கலங்கள் 120 வீரரைக்கொண்டு செல்லக் கூடியனவாயும், கரையியல் இழுத்துவிடத் தக்கனவாய் பாரமில்லாதனவாயும் இருந்தன. அவை பலகைகளில் நிரையாக விருக்கும் ஆட்களால் தண்டுவலித்துச் செலுத்தப்பட்டன. அவைக்குச் சதுரமான படங்கும், பாய்மரமும் உண்டு.

அக்காலத்தில் உலகவாணிகம் பினீசியர் வசம் இருந்தது. அவர்கள் பலஸ்தீனத்துக்கு மேலேயுள்ள கடற்கரையிற் குடியேறினர்கள். அவர்கள் பாரசீக வளைகுடாக்கரையிலிருந்து மத்தியதரைக்கு வந்தவர்களாகலாம். அவர்களின் உற்பத்தி எது

வாயிருந்தபோதும் அவர்கள் வாணிகத்திலும் கடற் பயணத்திலும் அளவு கடந்த திறமையைக் காட்டினர். அவர்களின் முக்கிய துறைமுகப் பட்டினங்கள் தையர், சிடோன் என்பன. இப்பட்டினங்களில் கிழக்குத் தேசங்களிலிருந்து தரைவழியாகவும் மேற்குத் தேசங்களிலிருந்து கடல்வழியாகவும் வந்த பண்டங்களும் குவிந்தன.

பினீசியர் கடல்வழியாகத் தொலைவிடங்களுக்குப் பயணஞ் செய்தார்கள். அவர்கள் சைபிரசு, ரோட்சு, கிரீசு, இத்தாலி அபிரிக்காவின் வடகரை நாடுகள் முதலியவற்றோடு வாணிகஞ் செய்தார்கள். ஆபிரிக்காவிலே கதேசு, ஸ்பேயினில் கடிசு (Cadez) முதலிய இடங்களைக் குடியேற்ற நாடாகத் தாபித்தார்கள். அவர்கள் ஏறக்குறைய உலகின் எல்லாத் தேசங்களோடும் வாணிகஞ் செய்தார்கள். அவர்களின் துணிகரமான மாலுமிகள் * கெக்குவிசின் தூண்களுக்கு(சிபிரல்டர்)அப்பாற் சென்று விலையுயர்ந்த தகரங்கிடைக்கும் பிரிட்டனைக் கண்டுபிடித்தார்கள்; அவ்விடத்தை மற்றவர்கள் அறிந்துகொள்ளாதபடி அவர்கள் பாதுகாத்து வந்தார்கள். தங்கள் பொருட்டு மாத்திரம் வாணிகஞ்செய்ததல்லாமல் அவர்கள் தங்கள் கப்பல்களையும் மாலுமிகளையும் வேறு சாதியாருக்கும் கூலிக்கு அளித்தனர். சலமன் அரசனின் (கி. மு. 960) கப்பல்களைப் பினீசிய மாலுமிகள்

* பினீசியர் தாம் வழிபட்ட ஞாயிற்றுத் தூண்களை (ஹெக்குவிஸ் கடவுளின் அடையாளம்) சிபிரல்டரில் நிறுத்தியிருந்தார்கள். அதனால் அவ்விடம் முற்காலத்தில் ஹெக்குவிசின் தூண்கள் என வழங்கிற்று.

இந்தியாவிலுள்ள ஒபிர் என்னும் துறைமுகத்துக்குச் செலுத்திச் சென்றார்கள். அவர்கள் கி. மு. 600 வரையில் அபிரிக்காக் கண்டத்தைச் சுற்றிவந்தார்கள் எனக் கெரதோதசு ஆசிரியர் கூறியுள்ளார். அக்காலத்தில் எகிப்தை ஆண்ட நெகோ (Naco) அரசன் சுயஸ்பூசந்திக்கூடாக ஒரு வாய்க்காலை வெட்ட ஆரம்பித்தானென்றும், மிக வருத்தம் தருவதாயிருந்தமையின் அவ்வேலை கைவிடப்பட்டதென்றும் அவர் கூறியுள்ளார்.

பினீசியர் காலத்தில் போர்க் கப்பல்களுககும வியாபாரக் கப்பல்களுக்கும் வேறுபாடு இருந்தது. பதினாறும் நூற்றாண்டுவரையில் மத்தியதரைக் கடலில் கப்பல்கள் துடுப்பு வலித்துச் செலுத்தப்பட்டன. வியாபாரக்கப்பல்கள் அகலமும் ஆழமும் உடையனவாகவும் பாய்களின் உதவியால் செலுத்தக்கூடியனவாயும் இருந்தன. பினீசியருக்குப்பின் கடலரசு செலுத்திய கதேசியர் இவ்வகையான கப்பல்களில் பிரான்ஸ், பிரிட்டன் கனாரி, கினியா முதலிய தேசங்களோடு வாணிகம் நடத்தினர்.

கி. மு. 500-ல் கோனா என்னும் கர்தசியன அபிரிக்காவின் மேற்குக் கரையில் குடியேற்றுதற்கு அறுபது கப்பல்களில் மக்களை ஏற்றிச் சென்றான்.

உரோமர் கதேசியரிடமிருந்தே கப்பல் கட்டுதல், கடற் பயணஞ் செய்தல் முதலிய பல தொழில்களைக் கற்றனர். கதேசின் அழிவுக்குப்பின் மத்

தியதரைக் கப்பல்களில் யாதுவேறுபாடும் இருக்கவில்லை.

கிறித்துவுக்குப் பல ஆயிரம் ஆண்டுகள் முன் தொடங்கிய கப்பல்கட்டும் தொழிலும் கடற் பிரயாணமும் கிறித்துவுக்குப் பிற்பட்ட காலத்தில் மிகவும் திருத்தமடைந்தன. மால்டாவிலேபோல் ஞானியாரின் கப்பல் உடைவதற்கு எட்டு ஆண்டுகளின்முன் யூலியர்சீசர் கோலுக்கும் (பிரான்ஸ்) பிரிட்டனுக்கும் கடல் கடந்து சென்றார். அவர், நாகரிகமடைந்த உரோமருக்கு இவ்வளவு காலமும் அறியப்படாது வாழ்ந்த அத்தேசமக்களின் பழக்க வழக்கங்களைத் தெரியப்படுத்தினர். பிரிட்டன் தீவாரின் தோணிகள் தடிகளால் பின்னித் தோலால் மறைக்கப்பட் டிருந்தனவென்று அவர் கூறியிருக்கின்றார். பிரிட்டன் தீவார் சிலமணி நேரத்துக்கு அதிகம் கடற் பயணஞ் செய்தலை அறியாதிருந்தார்கள்.

உரோமரின் படையெடுப்புக்கு முன் பிரித்தானியரின் வாணிகம் அறியப்படாத தொன்றாகவிருந்தது. உரோமர் பிரிட்டனின் கரையோரங்களை அழகிய வீதிகளால் இணைத்தார்கள்; துறைமுகங்களையும் வெளிச்ச வீடுகளையும் அமைத்தார்கள். அடுத்த 300 ஆண்டுகளாக உரோமரின் கப்பல்கள் டோவரை அடைந்து பின் தேம்ஸ் ஆறு வழியாக லண்டனை அடைந்தன. அவை கோல், பிரிட்டன் முதலிய தேசங்களுக்குப் பண்டங்களைக் கொண்டுவந்தன; பிரிட்டனினின்றும் பண்டங்களை ஏற்றிச்சென்றன.

உரோமருக்கு வேறு இடங்களில் நெருக்குதல் இருந்தமையின் அவர்கள் நமது படையைப் பிரிட்டனினின்றும் திருப்பி அழைத்துக் கொண்டனர். இதன்பின் சாக்சானியர் வெற்றியாளராய் இங்கிலாந்தை ஆண்டனர். டானியரும் (Danes) வடவரும் யாதும் எதிர்ப்பின்றி நாட்டைச் சூறையாடினர். வடவர் "வைகிங்" எனப்பட்டனர். இவர்கள் நோர்வே டென்மார்க் முதலிய தேசங்களினின்றும் வந்தவர்களாவர். இவர்கள் மிகவும் கொடுமையும் துணிவும் உடையோர். இவர்கள் கடலில் எவ்வளவு காலம் வாழ்ந்தார்களோ அவ்வளவு காலம் தரையிலும் வாழ்ந்தார்கள்.

வைக்கிங் பிரதானி ஒருவன் இறந்தால் அவனது தோணியும் அவனுடன் புதைக்கப் பட்டது. இவ்வகைத் தோணிகள் சில, சமாதிக்குழிகளிலிருந்து கிளறி எடுத்து நூதன பொருட்காட்சிச் சாலைகளில் வைக்கப்பட்டுள்ளன. அவைபெரும்பாலும் துடுப்புக்களால் ஓட்டப்பட்டன. அவைகளுக்குப் பாய் மரங்களும் சதுரமான பாய்களும் உண்டு. அவர்கள் மத்திய தரைக்கடலுக்கு ஊடாகச் சென்று ஐஸ்லாந்திற் குடியேறினர்கள். கொலம்பஸ் என்பாருக்கு 500 ஆண்டுகளின் முன் அவர்கள் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்கள் என்று நம்புவதற் குரிய ஆதாரங்கள் உண்டு.

வெற்றியாளனாகிய வில்லியம் காலத்தில் வெனிசு நகரம் மிகவும் பெருமைபெற்று விளங்கிற்று. நோர்மானியர் இங்கிலாந்தை வெற்றிகொண்டபின் கொட்பிறே என்பவன் முதற் சிலுவைப் போருக்

குத் தலைமை தாங்கிப் படையை எருசலேமுக்கு நடத்திச்சென்றான். இப்படை எடுப்பும் இது போன்ற படை எடுப்புக்களும் வெனிசைக் கடற் பயணத்தில் உச்சநிலைக்குக் கொண்டுவந்தது. வெனிசிலும் அதன் அயலே உள்ள ஐரோப்பியநாடுகளிலும் மாத்திரம் சிலுவைப் போருக்குக் குதிரைகளையும், படைகளையும் ஏற்றிச்செல்லக் கூடிய கப்பல்கள் இருந்தன.

அக்காலத்தில் இங்கிலாந்திலே கப்பல்கள், ஒரு பாய மரமுள்ள திறந்த கப்பல்களிலும் பார்க்கச் சிறந்தனவாயிருக்கவில்லை. மூன்றாம் றிச்சாட்காலத்தில் இங்கிலாந்தும் மத்தியதரை வாணிகத்தில் திறமை அடைந்தது. அப்பொழுதே இங்கிலாந்தின் கப்பல்கள், கப்பல்கள் என்று அழைக்கக் கூடிய உருவத்தை அடைந்தன.

சீனரும் இந்தியரும் பழமைதொட்டே கடற்பயணத்திற் பழகியிருந்தனர். இந்தியமாலுமிகள், சீனா, மலாயா, கம்போதியா (கொச்சின்சீனா), மேற்கே பாரசீகக்குடாக்கடலை அடுத்த நாடுகள், உரோம் முதலிய நாடுகளோடு வாணிகம் செய்தனர். இந்திய கப்பல்கள், கிரேக்கர்கப்பல்கள் போன்றன. அவைகளின் முன் புறத்தே குதிரைமுகம் யானைமுகம் போன்றவடிவங்கள் வெட்டப்பட்டிருந்தன. இந்துச் சீனத்திலே கம்போதியாவில் தமிழர் குடியேறியிருந்தார்கள். அங்குள்ள அழிபாடுகள் ஒன்றில் கப்பற் பயணத்தைக் காட்டும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அக்கப்பல்கள் கிரேக்க கப்பல்கள் போல்வன. கட்டுமரங்கள்முதல் பண்டங்களை ஏற்

றிச்செல்லக்கூடிய கப்பல்களை இந்தியமக்கள் கட்ட அறிந்திருந்தார்கள். கி. பி. முதல் நூற்றாண்டுவரையில் தென்னிந்தியாவினின்று யாவாத் தீவுக்குச் சென்ற மரக்கலத்தின் வடிவு அங்குள்ள கோயிற் சிற்பம் ஒன்றில் காணப் படுகின்றது.

---

## சமூக வாழ்க்கையும் அதன் வளர்ச்சியும்

மக்கட் கூட்டங்களிடையே நியாயப்பிரமாணங்களும் பிற கட்டுப்பாடுகளும் எவ்வாறு தோன்றி வளர்ச்சியடைந்தனவென்பதை இப்பொருளுரை ஆராய்ந்து கூறுகின்றது.

குடும்பங்கள் நட்பு முறையில் இணைந்து விவாகக்கிரியைகளாலும் பிதாப் புதல்வர் கடமைகளாலும் கட்டுப்படும்போது சமூகம் உண்டாகின்றது. சமூகங்களுள் சட்டங்களும் கட்டுப்பாடுகளும் பலவாறிருந்தன. ஆதி மக்களின் குடும்ப சமூகக் கட்டுப்பாடுகளை அறிந்துகொள்வது மிகக் கடினம். மக்கள் கீழ்நிலையில், வாழ்ந்த காலத்திற் பிள்ளைகள் தாய் வழியால் அறியப்பட்டார்கள். ஆஸ்திரேலிய மக்கட் கூட்டத்தினரின் பிள்ளைகள் இவ்வகையினர். ஆகவே உள்நாட்டுக் கலகங்களில் தந்தையும் மகனும் எதிர்த்துப் போராட நேர்ந்தது. பழைய நாகரிக மக்களிடையே தாய் வழியால் பிள்ளைகள் அறியப்படும் வழக்கு மறக்கப்பட்டிருந்தது. ஹெரதோதசு (Heradotus) என்னும் வரலாற்று ஆசிரியர் இலிசியர் தங்கள் மரபைத் தாய் வழியினின்றும் கூறினர்களென்றும், அவ்வாறு கூறுதல் அயலே

வாழ்ந்த மக்களுக்கு வியப்பு விளைப்பதாயிருந்த தென்றும் கூறியுள்ளார்.

பழைய மக்கட் கூட்டத்தினர் தமது கூட்டத்தில் பெண் கொள்ளவில்லை; இன்னொரு கூட்டத்தினின்றுங் கொண்டனர். பிற்போக்குள்ள மக்களிடையே இன்றும் இவ் வழக்கு நிலவுகின்றது. வட அமெரிக்காவில் பிள்ளைகள் தாய் வழியால் அறியப்படுவார்கள். தாய் கரடிக் குலத்தவளாயின் பிள்ளைகளும் அக் குலத்தைச் சேர்ந்தவர்களாவர். கரடிக் குலத்தவன் மான் அல்லது கழுகுக் குலத்திற் பெண் கொண்டான். தமது கோத்திரத்துள் மணத்தல் கூடாதென்னும் வழக்கு இந்தியப் பிராமணர்களுக்கிடையில் உண்டு. சீனரும் தமது சொந்தக் கூட்டத்துள் பெண் கொள்வதில்லை.

*நிகரகுவாதேச வேட்டையாடும் குல இளைஞன் ஒருவன் ஒருத்தியை மணக்க விரும்பினால் அவன் ஒரு மானைக் கொன்று அதனையும் சில விறகு கட்டைகளையும் அவள் பெற்றோரின் வீட்டு வாயிலிற் போடுவான். அவைகளை அவள் தந்தை ஏற்றுக்கொண்டால் வேறு கிரியைகளின்றி உடனே மணம் நிகழ்கின்றது. திருந்திய மக்களிடையே மணங்கள் கிரியைகளுடனும் உண்டாட்டு முதலிய கொண்டாட்டுக்களுடனும் நடைபெறுகின்றன. கிரியைகளில் மதகுரு ஆசீர்வதிக்கும்படி அழைக்கப்படுகிறார். இது பெண்களை வலிமையாற் பிடித்து மனைவியராக்கும் அநாகரிக முறையிலும் வேறுபட்டது. பிறேசிற் காடுகளில் வாழும் மக்கள் இன்றும்

* Nicaraga.

அயற்கிராமப் பெண்களை வலிதிற் கவர்ந்து மனைவியராக வீட்டிற்குக் கொண்டு வருகின்றனர். இவ்வழக்கு உரோமிலும் ஒருகால் நிலவிற்று. கிரீசு தேசத்தில் மணம் சமாதானமாக நடைபெற்ற போதும் மணமகன் மணமகளை வலிதிற் கவர்ந்து போதல் போன்ற கிரியை நடத்தப்பட்டது. வேல்சில் இவ்வழக்குச் சில தலைமுறைகளுக்கு முன்பும் நடைபெற்றது. அயர்லாந்திலே மணமகனின் கட்சியார் தூரத்தே நின்று பெண்வீட்டார்மீது ஈட்டிகளை எறிவது வழக்கமாயிருந்து வந்தது.

மக்கள் சொத்துடையவர்களானபோது பெண்கள் விலைக்குவாங்கப்பட்டனர். ஒரு சூலு மகன் (Zelu) ஐந்து அல்லது பத்து எருதுகளைக் கொடுத்து மனைவி ஒருத்தியை வாங்கினான். இங்கிலாந்திலே மேற்குச் சாக்சனியிலும் இவ்வழக்கு நிலவிற்று.

பல குடும்பங்கள் கூட்டங்களாகச் சேர்ந்து வாழ்ந்தன. இக்கூட்டங்களை எல்லாம் ஒன்றுபடுத்துவதற்கு அவர்கள் எல்லோருக்கும் முதல்வராயிருந்த ஒருவரின் பெயர் கண்டு பிடிக்கப்பட்டது. ஒவ்வொரு கூட்டத்தினரும் தாம் அம்முதல்வரினின்று தோன்றியவர்களாக நம்பி வந்தார்கள்.

திருந்தாத மக்கள் அமைதியுடன் வாழமாட்டார்கள். ஆகவே அவர்களிடையே சிலர் அமைதியை நிலைநிறுத்தினர். சமாதானமும், உணவும் இருந்தபோது அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். கொலம்பஸ் மேற்குத் தீவுகளில் இறங்கியபோது அங்குள்ள மக்கள் அமைதியுடன் வாழ்ந்தார்கள். நியுகினியில் நீரில் வீடுகள் கட்டி

வாழும் திருந்தாத மக்கள் நியாயத்துக்கு அடங்கி நடக்கும் மனப்பான்மையுடையவர்களாயிருக்கின்றனர்.

திருந்தாத மக்களிடையும் நன்மை தீமைகளை யறிந்து கட்டுப்பாடு செய்யும் சட்டங்கள் உண்டு. அவ்வகைச் சட்டங்கள் எல்லாக் கூட்டத்தினரிடையும் ஒரேவகையாக இருக்கவில்லை. சிலர் முதியவர்களுக்கு மரியாதை காட்டி அவர்களை வழிபடுகின்றனர். சில காட்டுச்சாதியாரின் பெற்றோர் மீதுள்ள பற்று, அவர்கள் முதுமை அடையும்போது அகன்றுவிடுகிறது. ஆபிரிக்க மக்கள் சிலர் முதியபெற்றோர்களைத் தண்டாயுதங்களாலடித்துக் கொன்றுவிடுகின்றனர். சேர்மனியிலே வென்ட்ஸ் (Wends) என்னுமிடத்தில் முதியவர்களைக் கொன்று அவர்களின் மாமிசத்தைச் சமைத்து உண்ணும் வழக்கம் இருந்தது. சுவீடின் தேசத்தில் ஆலயங்களில் குடும்பத் தண்டாயுதங்கள் எனப்பட்ட ஒருவகை மரத் தண்டாயுதங்கள் இருந்தன. அவைகள் சிலவற்றை இன்றும் நாம் காணலாம். அக்காலத்தில் வயது முதிர்ந்தவர்களையும் நோயினாற் பிழைக்கமாட்டாதவர்களையும் அவர்களின் சுற்றத்தார் ஆலயத்திற் கொண்டுசென்று தண்டாயுதங்களால் அடித்துக் கொன்றனர். மனித உயிர் பரிசுத்தமுடையதெனை எவ்வளவுக்குக் கருதப்பட்டதோ அவ்வளவுக்கு நாகரிகத்தின் வளர்ச்சியும் இருந்தது. தற்காப்பு, யுத்தம், பழிவாங்குதல், தண்டனை, பலி, என்பவைகளிலல்லாமல் மனிதனைக்கொல்வது ஏற்றதெனக் கொள்ளும் சட்டம் எங்காவது இருக்க

வில்லை. ஒருவன் தனது வீரத்தைக் காண்பிக்கும் பொருட்டு மற்ருெருவனைக் கொல்லுதல் சட்டத்துக்கு ஏற்றதாகச் சில கூட்டத்தாராற் கருதப்பட்டது. போணியோவிலுள்ள இடைக்க (Dyke) குலத்தானெருவன் ஒரு மனிதத் தலையை வெட்டிக் கொண்டு வராத அளவில் அவனது திருமணம் நிறுத்திவைக்கப்பட்டது.

குற்றங்களுக்கேற்ற தண்டனைகளை விதிப்பதே நாகரிகத்தின் அடையாளம் என்று இன்று கருதப்படுகின்றது. இவ்வழக்கம் உலகிற் படிப்படியே வளர்ச்சியடைந்தது. சட்டமென்பது பதிலுக்குப் பதில் செய்வது ஆகும். ஒருவன் கொல்லப்பட்டால் பழிவாங்கும் உணர்ச்சி உண்டாகின்றது. ஆஸ்திரேலியன் ஒருவன் கொல்லப்பட்டால், கொல்லப்பட்டவனது கிட்டிய உறவினின் கடமைகொன்றவனைக்கொன்று பழிவாங்குவது. கொலை செய்தவன் ஓடிமறைந்துவிட்டால் அவன் குடும்பத்தினர் கொல்லப்படுவார்கள். மக்கள் செல்வத்தைச் சேர்த்துவைத்திருந்த காலத்தில் பழிவாழ்குதலுக்குப் பதில் பணம் நட்ட ஈடாகக் கேட்கப்பட்டது.

வேட்டையாடும் சட்டங்களிலிருந்து நிலத்தைப் பற்றிய சட்டங்கள் உண்டாயின. பிறேசில் தேசத்தில் ஒவ்வொரு கூட்டத்தினருடையவும் வேட்டையாடும் நிலங்களின் எல்லைகள் குறிக்கப்பட்டிருந்தன. ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவன், வேட்டை மிருகத்தைத் துரத்திக்கொண்டு இன்னெரு கூட்டத்துக் குரிய நிலத்துட்செல்வானேல் அது பெரிய குற்றமாகக் கருதப்பட்டது. சில சமயங்களில்

அவன் அவ்விடத்திலேயே கொலையுண்டான். கொல்லப்பட்ட மிருகம் கொன்றவனுக்குச் சொந்தமாயிற்று. இதனல் ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் பொது நிலம் உண்டு என்னும் சட்டம் உண்டாயிருந்ததெனத் தெரிகின்றது. குடிசை, ஒரு குடும்பத்துக்கு அல்லது அதில் வாழும் பல குடும்பங்களுக்குச் சொந்தமானது. அயலேயுள்ள நிலம் வேலியடைத்துப் பயிரிடப்படுமாயின் அது பொதுத் தன்மையை இழந்து குடும்பத்துக்கு உடையதாயிற்று. குடிசையிலுள்ள அம்மி உரல் உலக்கை பானை சட்டி முதலியன குடும்பத்துக்குச் சொந்தமானவை. குடும்பத்துக்குச் சொந்தமாயினும் ஒரு குடும்பத்தலைவன், அல்லது பிதாமூலம் அவை சொந்தமாயிருந்தன. இவ்வாறு நாகரிகமற்ற மக்கள் பொதுநிலம், குடும்ப நிலம், குடும்ப அல்லது சொந்த உடைமை முதலியவைகளைப் பெற்றிருந்தார்கள்.

யுத்தப் போக்குள்ள மக்கள் நிலம் வைதிருக்கும் முறையிற் புரட்சி செய்தனர். படை எடுப்புக் காலங்களில் வெல்லப்பட்ட நாட்டின் நிலங்களைப் படைத்தலைவன் அல்லது அரசன் வீரர்களுக் கிடையில் பகுத்தளித்தான். இங்கிலாந்திலே நோர்மானியரின் வெற்றிக்கு முன்பு மக்களின் பொதுநிலங்கள் அரசனல் இவ்வாறு பிரித்துக் கொடுக்கப்பட்டது. யுத்த நாடுகளில் அரசனே நிலம் எல்லாவற்றுக்கும் சொந்தமுடையவனனன். ஆண்டில் ஒரு தொகைபணம் கொடுத்து நிலங்களை வைத்திருக்கும்படி அவன் மக்களுக்குக் கட்டளையிட்டான். இம்முறை இந்தியாவிலும் எகிப்திலும் நடைமுறையில் உள்ளன.

உரோமில் பெரிய நிலங்களையுடையோர் விளைவில் ஒரு பகுதியைக் கொடுப்போருக்கு நிலங்களைச் செய்கை பண்ணும்படி கொடுத்தார்கள். யுத்தத்தில் அடிமைகளாக்கப்பட்டோர் நிலங்களை யுழுது பயிரிடப் பயன்படுத்தப்பட்டனர். உழும்பொருட்டு மாடுகள் வளர்க்கப்பட்டன. விலையுயர்ந்த பொருள்கள், வியாபாரம், செல்வம், நாணயப் புழக்கம் என்பன இவைகளுடன் சேர்ந்தன.

ஒவ்வொரு கூட்டத்திலும் சுயஆட்சி நடைபெற்றது. பிரேசிற்காட்டுச்சாதிக்கு குடும்பத் தலைவன் ஒருவனுக்குத் தனது மனைவியையோ பிள்ளைகளையோ அடிமைகளையோ விற்கும் உரிமையுண்டு. ஒவ்வொரு கூட்டத்தினரும் தமக்குள் தலைவன் ஒருவனைத் தெரிவது வழக்கம். அவனது இடத்தை அவன் சந்ததியினர் தலைமுறை தலைமுறையாக எற்கும் விருப்பு எழுந்தது.

யுத்த காலங்களில், திருந்தாத மக்கள், சமாதானகாலத் தலைவனை ஒதுக்கிவிட்டு யுத்தத்திறமையுடைய இன்னொருவனைத் தெரிவது இயல்பு. அக்காலத்தில் வீரனுக்கு உயர்வு உண்டாகின்றது. இவ்வுயர்வு சர்வ அதிகாரம் வரையிற் சென்றது. யுத்தம், தலைவனுக்கு மேலான அதிகாரத்தைக் கொடுத்ததல்லாமல், தேசத்தின் ஒழுங்கைப் பாதுகாக்கும் அவன் படையினருக்கும் அவ்வகை வலிமையை அளித்தது. அதனால் இராணுவக் கட்டுப்பாடுகளினாலேயே மக்கள் அதிகாரத்துக்குட்பட்டு நடக்கும் ஒழுங்கைப் பெறுகிறார்கள்.

ஒவ்வொரு கூட்டத்தினரிடையும் பல தரங்கள் உண்டாயின. ஆதியில் அடிமைகள் அடிமைக ளல்லாதோரென இரு பிரிவுகள் உண்டாயிருந்தன. எருது கழுதை என்னும் செல்வங்கள் தோன்றுவ தன் முன் ஆண், பெண்வேலையாளர் செல்வமாக மதிக்கப்பட்டனர். அடிமைகள் வேலை செய்தலி னாலேயே பயிர்த்தொழில் கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்தன. செல்வம் திரண்டதும் குரு மார் எழுதுவோர் புலவர் தத்துவ நூலார் முதலாயி னோர் மக்களின் மனநிலையை உயர்த்துவதற்கு ஒழிவு கண்டனர். அடிமை வழக்கிலிருந்து கூலி பெற்று வேலை செய்யும் வழக்கு உண்டாயிற்று. அடிமை வைத்திருந்தோர் ஊதியம் கருதி கூலிக்கு வேலை செய்யும்படி அடிமைகளை விட்டனர். பின்பு அடிமைகளல்லாதோரும் இலாபம் ஈட்டக் கருதிக் கூலி வேலை புரிந்தனர். இதனால் வேலை புரியும் வகுப்பு ஒன்று உண்டாயிற்று. அடிமைகளல்லா தார் பல வகுப்புகளாகப் பிரிந்து வாழ ஆரம்பித்த னர். பழைய நோர்மானியர்களிடையே பிரபுக்கள், அடிமைகள், அடிமைகளல்லாதாரென மூன்று பிரி வினர் காணப்பட்டனர். பிரபுக்களில், அரச குடும்பத்தைச் சேர்ந்தார், சேராதார் என இரு வகையினர் இருந்தனர். முன்னவர் பின்னவரைக் கீழாக மதித்தனர்.

மக்கள் பெருகிச் செல்வமும் விவேகமும் உடை யவர்களானார்கள். ஆகவே ஆட்சி முறையில் மாற் றம் வேண்டியிருந்தது. ஒரு அதிகாரியின் பழைய கடமை வழக்குத் தீர்ப்புச்செய்வது. கவீர் (Kafir)

பிரதானி ஒருவன் வழக்குகளை விளங்கித் தீர்ப் பளித்தான். இருகட்சியினரும் அவனுக்குச் சன் மானமாக எருதுகளைக் கொடுத்தனர். கிழக்குத் தேசங்களில் அரசர்களே நியாயத் தீர்ப்பு அளித் தார்கள். ஆனால் அவ்வேலை நியாதிபதிகளின் கைக்கு மாறிவிட்டது. எகிப்திலும் பபிலோனிலும் பொதுக் கருமங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி அதிகாரிகளால் மேற்பார்க்கப்பட்டன. இன்றைய ஆட்சி முறையும் இதுவே. அரசனது ஆணை, அரசன் முதல் காவற்காரன் வரையிற் சென்றது. இவ்வாறு மக்கட்கூட்டங்களின் சட்டங்களும் கட் டுப்பாடுகளும் கீழ்நிலையினின்றும் படிப்படியே வளர்ச்சி யடையலாயின.

---

## * குளிர் தூங்கும் குற்றாலம்

அருந்தவ முனிவரும் அறிவரும் அமைந்து அறம் வளர்க்கும் மலை, அழகிய குற்றால மலையாம். வானுற ஓங்கி மலைமுடியில் மஞ்சுதவழும் அழகும், வளமார்ந்த பழமரங்களின் செழுமையும் சவியுறத் தெளிந்த நெடுஞ்சுனையின் நீர்மையும், தெள்ளிய சுனைக்களின் வழியே செல்லும் தீம்புனலாறு வெள் ளிய அருவியாய் வீழும் அழகும், மெல்லிய தென் றல் நல்மணங் கமழ்ந்து உலாவும் இனிமையும் மக்கள் மனத்தை மகிழ்விப்பனவாகும். இத்தகைய மலையில் கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்;

* R. P. சேதுப் பிள்ளை அவர்கள் B.A., B.L., விரிவுரை யாளர், பல்கலைக்கழகம், சென்னை.

குரவமும் குருந்தமும் நறுமணங்கமழும். ஓங்கி வளர்ந்த வேங்கையின் மலர்களில் மதுவுண்டு திளைத்த வண்டுகள் இன்னிசை பாடி மகிழும் மாண்பினை

"வம்பார் குன்றம் நீடுயர சாரல
வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோல வண்டு
யாழ்செய் குற்றாலம்"

என்று திருஞான சம்பந்தப் பெருமான் எழிலொழுக எழுதிப்போந்தார்.

இங்ஙனம் அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்க அழகிய மரங்களில், மெல்லிய முல்லை ஏறிப் படர்ந்து அரும்பீன்று இலங்கும் அழகினை,

"செல்வம் மல்கு செண்பகம் வேங்கை
சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்ல ரும்பீனும்
குற்றாலம்"

என நற்றமிழ்வல்ல திருஞான சம்பந்த நாயனார் அருளிப் போந்தார். இத்தகைய பொழில்களில் சோலை மயில்கள் தோகை விரித்தாடும் அழகும், மரக்கிளைகளில் மந்திகள் தாவி விளையாடும் மாண்பும் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்வனவாம். மலைச்சாரலில் மகவொடுதிரியும் மடமந்தி குலைவாழைக் கனிகளிற் பாய்ந்து அவற்றை மாந்தும் இயல்பினை

"மலையார் சாரல் மகவுடன் வந்த
மடமந்தி

குலையார் வாழைத் தீங்கனி மாந்தும்
குற்றாலம் ''

என்று பிள்ளைப் பெருமான் அருளிப் போந்தார். பெண்ணின் பெருமை அறிந்த கடுவன் அருங்கனிகளைக் கொய்து மந்திக்கு அளித்து மனங்களிக்கக் காணலாம்.

"வானரங்கள் கனி கொடுத்து
மந்தியொடு களிக்கும்
மந்தி சிந்து கனிகளுக்கு
வான் கவிகள் கொஞ்சும்''

என்று கொஞ்சும் கவிகளைக் கண்டு நெஞ்சம் தழைத்த ஒருவர் செஞ்சொற்களால் எழுதிப் போந்தார். இன்னும் குற்றால மலையில் தேனருவித் திரையெழும்பி வானின்றிழிந்து வட்டச்சுனையில் வீழ்ந்து ஒலிக்கும்வண்ணம் அருவிநீர்த் துமிகள் பொங்கி எழுந்து பாலாடை போற்பரந்து மஞ்சொடு கலந்து கொஞ்சிக்குலாவு வனவாகும்.

இன்னும் வேரிலே பழம் பழுத்துத் தூரிலே சுளை வெடித்துத் தீந்தேன் சொரியும் குறும்பலாவில் குற்றால நாதனைக்கண்டு பழந்தமிழ் மக்கள் வணங்கினர்கள். குறும்பலாவில் முளைத்தெழுந்த "சிவக்கொழுந்தை''க் குரங்குகளும் களிறுகளும் குழைந்து வாழ்த்தி வணங்கினவென்றால் அம்மலையின் செம்மைக்கு வேறுசான்றும் வேண்டுமோ?

மும்மதவேழம் கொத்து மலர்கொய்து, மத்தகத்தேந்திப் பிடியொடுபோந்து நறுமலர் தூவிக் குறும்பலா வடியிலுறையும் குற்றாலப் பெருமானை வணங்கிய பெருமையை,

"பூந்தண் நறுவேங்கைக்
கொத்துதிர்த்து மத்தகத்தில்
பொலிய ஏந்தி
கூந்தற் பிடியும்
களிறும் உடன் வணங்கும்
குறும்பலா வே"

என்று பெரியார் போற்றிப் புகழ்ந்தார்.

குன்றக் குறவரின் தினைப்புனங்களில் ஆரமும் அகிலும் நறுமணங்கமழும். தினைப்புனங்காக்கும் கன்னியர் கல்லெறிந்து கிளியோட்டும் காட்சி சால இனிதாகும்.

காதலரும்பிய கன்னியரது கமலபாதம் தோயுந்தோறும் துவண்டு குவியும் மென்மை வாய்ந்த கொடிகளிடையே பூங்கொம்புபோன்ற மங்கையர் ஆடிப்பாடி அகங்களித்திருப்பர். இக்கன்னியர் செழுங்கிழங்கை அகழ்ந்தெடுத்துக் கொழுந் தேனைக் கவர்ந்தெடுத்துக் குன்றின் வளம்பாடிக் களிப்பர்.

இத்தகைய செம்மைசான்ற மலையின் தேனருவிச் சாரலில், செண்பக மரங்கள் செறிந்து மணங் கமழும் சீரிய துறையில் சிந்தையை ஒடுக்கிய சித்தரும் முனிவரும் தங்கித் தவம் புரிவர்.

இத்தகைய மாதவரடியிலும் மந்தமாருதத்திலும் தோய்ந்த மக்கள், புன்னெறியினீங்கிப் புனித மெய்துவரென்று பெரியோர் கூறுவர். கவலை என்னும் கருநோயை வேரறுத்து, வாட்டமும் வருத்தமு மகற்றி, வானவரும் கானவரும் களித்து வாழ்ந்த அம்மலை நாட்டில்,

“ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகிய ருள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற்றாலர் தென்னாரிய நாடே”

என்று குறவஞ்சிக் கவிஞர் நயம்படப் புனைந்துரைத்தார். வளங்கள் நிறைந்த அம்மலையில் ஓடுவது பூம்புனல் வெள்ளமேயாம்; சுருங்குவது, மங்கையர் மருங்குலேயாம்; வருந்துவது சூல் உளை சங்கேயாம்; புதைப்பது புனிதவித்தேயாம்; புலம்புவது மங்கையர் சிலம்பேயாம் என்று நயம்பட உரைத்த கவிநலம் நல்லின்பம் பயப்பதாகும். இவ்வாறு மக்கள் இன்புற்று வாழ்ந்த இனிய மலையில் பறவைகள் குதித்து விளையாடும் அழகும், பறந்து செல்லும் பான்மையும் காண்போர் கருத்தைக் கவர்வனவாகும். மாம்புறாவும் மணிமயிலும் வக்காவும் கொக்கும் காக்கையும் காடையும் மலைச்சாரலில் மகிழ்ந்து விளையாடுவனவாம்.

அருஞ்சிறகடித்து அடுக்கடுக்காய்ப் பறந்து செல்லும் கொக்குகள், அசையும் முத்துப்பந்தர் போல ஆகாயத்தில் இலங்கிய அழகும், பலவகை நிறங்களோடு விண்ணிலே பறந்துவரும் பறவைகளின் கோலமும், அருள் வடிவாய அம்மையாரது பஞ்சவர்ணப் பட்டாடை பறந்து வருவதுபோல்

சைவவேடனது கண்ணில் விளங்கித் தோன்று கின்றன.

இத்தகைய அழகிய பொழிலிடை அமர்ந்த குற்றால நாதரை அழகின் கொழுந்தாகவே கண்டு ஆன்றோர் வழிபட்டார்கள்.*

---

## † சூளாமணிக் கதைச் சுருக்கம்

உலகிற் சிறப்புற்றோங்கிய சுரமை என்னும் நாட்டிற்குத் தலைநகராகிய போதனமாகர் என்னும் ஒரு பட்டினம் உளது. அந்நகரத்துக்குப் **பிரசாபதி** என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு மனைவியர் பலர். அவர்களுள் பட்டத்துத் தேவியராய் **மிருகாபதி, சசி** என்னும் இருபெண்கள் இருந்தார்கள். அவர்களோடு கூடி அரசன் இன்புற்றுவாழு நாளில் முன்செய்த புண்ணிய பலத்தால் பலபத்திர அவதாரமாக வெண்ணிறமுடைய **விசயன்** என்றொரு புதல்வனை மிருகாதிபதி பெற்றாள். சசி என்பாள் கிருட்டிணாவதாரமாகக் காயாம்பூ வண்ணனாகிய **திவிட்டன்** என்றொரு குமரனை ஈன்றாள். இப்புதல்வரிருவரும் இளமைப்பருவத்திலே எல்லா வித்தைகளையும் கற்று அழகுள்ளவர்களாய் வளர்ந்தார்கள்.

ஒருநாள் நிமித்திகன் ஒருவன் பிரசாபதி அரசன் கொலுவிருக்கும் அத்தாணி மண்டபத்தில்

---

* அறிவுரைக் கோவையிலிருந்து எடுக்கப்பட்டது.

† இது தோலா மொழித்தேவர் என்னும் சைனரால் எழுதப் பட்ட கற்பனைக் கதை. இதன் காலம் கி. பி. 900 வரையில்.

வந்து அவனோடு சில வார்த்தைகள் பேசிக்கொண் டிருந்தான். அப்பொழுது அவன் அரசனை நோக்கி, " அரசே! விஞ்சையருலகத்தில் நின்றும் ஒரு யானைவந்து நுமது இளையமகன் திவிட்டனை வெண் மாலைசூட்டி அழைத்துக்கொண்டு செல்ல ஒரு கனக் கண்டேன். அதின் பலன் விஞ்சயர் அரசனொரு வன் இங்கேவந்து தன் மகளை நின் இளையகுமாரன் திவிட்டனுக்கு மணஞ் செய்துகொடுத்துச் செல் வான் என்பதேயாம். அதற்கு அடையாளம் இன்று முதல் ஏழுநாளுள் விஞ்சையனொருவன் நின் புட்ப மாகாண்டம் என்னும் சோலையில் ஒரு திருமுகங் கொண்டிறங்குவான். அதையும் காணுதி ", என நவின்றான். அது கேட்ட அரசன் தருமகாந்தன் என்று பெயர் பெற்ற வீரன் ஒருவனை அழைத்து முற்கூறிய காவிலே விஞ்சையனுடைய வரவைக் காணும்பொருட்டுக் காவல் வைத்தான்.

இஃதிவ்வாறாக, விஞ்சையருலகில் தென்திசைக் கண்ணுள்ள இரத நூபுரச் சக்கரவாளமென்னும் நகரைச் **சுவணசடி** என்னும் அரசன் அரசாண்டான். அவனுக்கு மனைவியர் பலர். அவருள் பட்டத்துத் தேவியாகிய **வாயுவேகை** என்பாள் வயிற்றிலே **அருக்க கீர்த்தி** என்றொரு திருக்குமாரனும், அவனுக்கிளைய ளாய்ச் **சுயம்பிரபை** என்னும் புதல்வியும் உதித்தனர். சுயம்பிரபைக்கு மணஞ்செய்யும் பருவம் வந்தது. தந்தையாகிய சுவனசடி அமைச்சரோடு ஆலோ சித்தான். அவர்கள் ஒருவர் கூறியபடி மற்றவர் கூறாது மாறுபட்டனர். ஆகவே அரசன் அவ் வாலோசனையை ஒழிந்துச் **சதவிந்து** என்னும் நிமித்

திகனது இடத்தை அடைந்தான். அந்நிமித்திகனும் அரசன் வரவை நிமித்தத்தாலுணர்ந்து, "நின் புதல்விக்கு மணவாளன் நிலவுலகத்திறைவன் பிரசாபதியின் இளையகுமாரனவான். அவன் ஒரு திங்களுக்குள் ஒரு சிங்கத்தை வதைப்பான் காண்பாயாக" என்று நவின்றான். அது கேட்ட சுவனசடி ஒரு திருமுகம் வரைந்து **மருசி** என்னும் வித்தியாதரன் கையிற் கொடுத்து "இதனைப் போதனநகர் இறைவற்குக் கொடுத்து நன்முகம் பெற்று வருதி" எனப் புகன்று அனுப்பினான். அவ்விஞ்சையன் அவ்வாறே புறப்பட்டுப் போதனமா நகரிலுள்ள புட்பமாகாண்டம் என்னும் பொழில் இடை இறங்கினான். அப்பொழுது இவன் வரவைக் காணும்படி காத்திருந்த **துருமகாந்தன்** கண்டு உபசரித்து முகமன் மொழிந்து அவ்விடத்திலுள்ளதோர் பாறைமீது அவனை இருக்கச்செய்து அவன் வரவை அரசற்குணர்த்தினான். பிரசாபதி பல வரிசைகளோடு தன் புதல்வரையும் யானைமேல் ஏற்றி அவனை எதிர்கொள்ளுமாறனுப்பினான். அவர்கள் வரவைக் கண்ட மருசி எழுந்து கைகுவித்து மரியாதை செய்தான். இராசகுமாரரும் அவனுக்கு உபசாரஞ் செய்து அவனை ஊர்திமேலேற்றிக்கொண்டு தந்தையிடம் வந்தார்கள். பிரசாபதி கண்டு உபசரித்து அவனுக்கு ஆசனங்கொடுத்து அமரவைத்தான்.

சில நாழிகை கழிந்தபின் மருசி எழுந்து நின்று சுவனசடியரசன் கொடுத்த திருமுகத்தை அரசன் முன் நீட்டினான். அரசன் உத்தரவினால் ஒருவன் அதை வாங்கி விரித்து, "இரதநூபுரத்திறைவன்

போதனநகர் இறைவற்கு எழுதிக்கொள்வது, எனது புதல்வி சுயம்பிரபைக்கு நின் இளையகுமாரன் திவிட்டனே மணவாளன் என நிமித்திகர் கூறுதலினால் நீர் இதற்கு உடன்பாடு சொல்லியனுப்புக'' என்று வாசித்தான்.

அது கேட்ட அரசன் அதிக வியப்படைந்து பிரமித்துச் சற்றுநேரம் ஒன்றும் புகலாதிருந்தான். இவன் வாளாவிருத்தலைக் கண்ட விஞ்சையன், தன் அரசனேலையை மதியாதிருந்தானென்று நினைத்துக் கோபமடைந்தான். அது கண்ட பிரசாபதி அவனை நோக்கி, நான் மனிதன், நீங்கள் விஞ்சையர் ஆதலால் இம்மணம் பொருத்தமுடையதா? என்று ஐயுற்று, உங்கள் புதல்வியை என் புதல்வன் மணஞ்செய்ய இருந்த புண்ணியம் என்னையோ என்று வியப்புற்றும் இருந்ததன்றி உமதரசனின் திருமுகத்தை மதியாதிருந்தேனலேன்,'' என உண்மையைக் கூறினன். மருசி, மகிழ்ந்து விஞ்சையருக்கும் மனிதருக்கும் தொன்று தொட்டுத் தொடர்புண்டென்று பல காரணங் காட்டி உரைத்தான். பிரசாபதி மனமகிழ்ந்து உடன்பட்டுப் பல முகமன் வார்த்தைகள் சொல்லி அனுப்பினன். மருசியும் விஞ்சையருலகடைந்து அரசனைக் கண்டு திருமணத்துக்குப் பிரசாபதி அரசன் உடன்பட்டமையைக் கூறினன். அதனைக் கேட்ட சுவனசடி மகிழ்ந்து "நிமித்திகனுரைத்த வார்த்தை முழுதுமுண்மை; இன்னும் அந்நிமித்திகன் அவ்விராச குமாரன் ஒரு திங்களுள் ஒருசீய வதை செய்வானென்று கூறினன். அதனையும்

அறிவோம்" என எண்ணினன்; எண்ணி விஞ்சையன் ஒருவனை அழைத்து, "நீ போதனமா நகரிற் சென்று ஒரு திங்கள் வரையும் இருந்து அங்கே நிகழும் நிகழ்ச்சிகளை யெல்லாம் அறிந்து வருதி" எனக் கூறி அனுப்பினன்.

விஞ்சையருலகம் முழுவதையுமரசாண்டு, **சுவலனசடி** அரசனிடத்திலும் திறைவாங்கும் ஏகசக்கிராதிபதியாகிய **அச்சுவகண்டன்** என்னும் ஓர் அரசன் இருந்தான். ஒருநாள் சதவிந்து என்னும் நிமித்திகன், அச்சுவகண்டனை யடைந்து அளவளாவிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் அரசனை நோக்கி, "உலகங்கள் எல்லாவற்றையும் பொது நீக்கி அரசாளுகின்ற உமக்குப் பூமியிலுறைகின்ற மனிதன் ஒருவன் பகைவனாக இருக்கின்றான். அவன் போதன நகரத்து இறைவனது புதல்வன் திவிட்டனென்று எனக்கு ஒரு நிமித்த பலன் உண்டு" என்று உரைத்தான். அது கேட்ட அச்சுவகண்டன், "என்னை வெல்பவன் எளியனான மனிதன் ஒருவன்தானா?" என்று கூறி நகைத்துச் சீறி, "யான் இதனை ஒரு சிறிதும் பொருளாகக் கருதேன். ஆயினும் நிமித்திகராகிய நீர் இப்படிச் சொல்லுதலால் சிறிது ஆலோசித்தலும் வேண்டும்" எனக் கூறி மந்திரிமாரை அழைத்து வினவினன்.

மந்திரி மாருள் ஒருவனாகிய அரிமஞ்சு என்பவன் வணங்கி "அரசரே! நிமித்திகன் கூறினும் யாம் அதனை நேரே பகையெனக் கண்டல்லது அதற்கேற்ற முயற்சியொன்றும் செய்யலாகாது.

ஆதலால் பிரசாபதி அரசனிடம் திறை தரும்படி சிலரை அனுப்புவோம். தராதொழிந்தால் அவன் சத்துரு என்று அறியலாம்" என்று உரைத்தான். அரசன் அவ்வாறே திறை வாங்கும்படி சிலரை அனுப்பினன். அவர்களும் போதன நகரத்து இறைவனைக் கண்டு, **அச்சுவகண்டன்** கொடுத்த ஓலையைக் காட்டினர். அதனை வாங்கி ஒருவன் வாசித்த போது செவிக்கொண்டிருந்த பிரசாபதி அரசன் அச்சமுற்றுன்; அச்சுவகண்டன் கேட்டபடி ஆயிரம் பொன்னும், ஆயிரம் மகளிரும், முத்தும், பவளங்களும், யானைத் தந்தமுமாகியவற்றைத் திறையாகக் கொடுத்தான். விஞ்சையர்கள் அவற்றை விமானத்தில் ஏற்றிக்கொண்டு செல்ல முயன்றனர். அப்போது திவிட்டன் கண்டு, இஃது என்ன கா்ரியமென்று வினவியறிந்து சீறித் திறைப்பொருளைத் தடுத்து அவர்களை ஓட்டித் துரத்தினன். பயந்து சென்ற விஞ்சையர், மந்திரியாகிய **அரிமஞ்சுவைக்** கண்டு நடந்தவைகளைக் கூறினர். அதனைக்கேட்ட அமைச்சன் இதனை அரசன் அறிந்தானுகில் அதிக சினங் கொள்ளுவானுதலின் அவற்குரையாதிருங்களென்று சொன்னன். அவன், இனி இத்திவிட்ட குமாரனை மாயத்தாற் கொல்லுவோமென்று கருதி அரிகேது என்னும் வித்தியாதரனை அழைத்து, "நீ ஒரு மாய்ச்சீயமாய்ச் சென்று திவிட்டனைக் கொன்று வருதி" என அனுப்பினன்; முன்னே திறைக்குச் சென்ற விஞ்சையர்களை அழைத்து, எங்கள் அரசன், நீ திறை தடுத்தமையை அறிந்து, 'தன் நாட்டை அழிக்கும் ஒரு சிங்கத்தைக் கொல்லும் வலியற்றவன் தானு என்னை அவமதித்தான்.

இஃது அவன் பிள்ளை மதி' என்று சிரித்தான்,'' என்று திவிட்டனிடம் புகலுமின் எனக் கூறிவிடுத்தான். அவர்களும் அவ்வாறே வந்தறிவித்தனர்.

அதனைக் கேட்ட திவிட்ட குமாரன் கோபங் கொண்டு தமையனுடன் பாதசாரியாகச் சிங்கத்தைத் தேடிச் சென்றான். அப்பொழுது மாயச் சீயவடிவுகொண்ட வித்தியாதரன் இவர்கள் கண் காணும்படி ஓடி வேறொரு உண்மைச் சிங்கம் இருக்கும் குகையுட் சென்று மறைந்தான்; துரத்திச் சென்ற திவிட்ட குமாரன் அம்முழைஞ்சின் வாயிலிலே நின்றுரப்பினன். அங்கிருந்த உண்மைச் சீயம் அரச குமாரனைக் கொல்லும்படி கர்ச்சித்துக் கொண்டு புறப்பட்டது. திவிட்டன் அதன் பிடரி யிற்றாவி அதன் வாயைக் கிழித்து இரண்டு பிளவாயெறிந்து தமையனோடுங் கூடித் தன்னகரடைந்தான்.

இந்நிகழ்ச்சிகளை முன்னனுப்பிய ஒற்றனாலுணர்ந்த விஞ்சையரரசன் களிகூர்ந்தான். தன் மகளைத் திவிட்ட குமாரனுக்கு உடனே மணஞ் செய்யக் கருதித் தன் நகருக்குக் காவல் வைத்து, விமானம் ஒன்று அமைப்பித்துத் தன் மகளை ஏற்றிக்கொண்டு மகன் **அருக்ககீர்த்தி**, தம்பி **சுவணரதன்** முதலானவர்களோடு போதன நகரையடைந்து அங்குள்ள திருநிலையம் என்னும் பூங்காவிற்றங்கினன். அப்பொழுது **மருசி**, பிரசாபதி அரசனிடம் சுவணசடி தன் மகளிர் திருமணம் பொருட்டாக வந்தமையை அறிவித்தான். அது கேட்ட அரசனும் களிகூர்ந்து நகரத்தை அலங்கரித்துத் தன்

புதல்வரோடும் தம்பி சீபாதனோடும் யானைமேலேறிச் சென்று விஞ்சையரரசனைக் கண்டு வணங்கினான். அவன் இவனைத் தழுவ ஒருவருக்கொருவர் முகமன் வார்த்தை பேசிக்கொண்டாடினர். பிரசாபதி அவர்களை அழைத்துக்கொண்டு தன் அரண்மனை யடைந்து அவர்களுக்கு வேண்டுஞ் சிறப்பளித்துச் சுயம்பிரபை முதலிய விஞ்சைய மகளிரைத் தன் தேவியிடத்தனுப்பி உபசரித்தான். மற்றைநாள் மணமுரசறைவித்து மைந்தற்கும் மகளுக்கும் மணக்கோலஞ் செய்து மங்கல வாத்தியம் முழங்கச் சுபமுகூர்த்தத்தில் திருமங்கலியம் தரித்தல் முதலிய கிரியைகளுடன் திருமணம் நடத்தி, **அருக்க கீர்த்திக்கும் சோதிமாலையை** மணஞ் செய்துகொடுத்தான்.

அப்பொழுது விஞ்சையருலகினின்றும் ஒருவன் வந்து சுவனசடி அரசனை வணங்கி "ஐயனே! தேவரீர் இங்கு வந்து புதல்வியருக்குத் திருமணம் முடித்ததும், திவிட்ட குமாரன் சீயவதை செய்ததுமாகிய எல்லாவற்றையும் அரிகேது முதலியோரா லறிந்த அச்சுவகண்ட ராசன் அதிக சினங்கொண்டு தங்களோடு சமரியற்றக் கருதி, யுத்தசன்னத்தனாய்ச் சேனைகளோடு வருகின்றான்" என்று சொன்னான். அது கேட்ட இரதநூபுரத்தரசன் மைந்தராகிய அருக்க கீர்த்தி, பிரசாபதி, விசயன், திவிட்டன் முதலியோரை அழைத்து இக் காரியங்களைக் கூறினான். அவர்களும் கோபாதீதராய்ச் சமர்க்கோலங்கொண்டார்கள். மாமனாகிய சுவனசடி திவிட்ட குமாரனை அழைத்து ஒரு மாயா **மந்திரம் உபதேசித்தான். அப்போது விஞ்சை**

யருலகினின்று தூதர் இருவர் இவர் சமுகத்தை அடைந்து, "யாம் அச்சுவ கண்டனுடைய தூதர்; அவர்கூறிய சிலவார்த்தைகளைச் சொல்லவந்தோம். நீவிர் உயிர் வாழவிரும்பினல் சுயம்பிரபையைத் தாருங்கள்; அல்லது யுத்தத்தில் ஆவிவிடுங்கள்; இவ்விரண்டில் யாதுசெய்யக் கருதுகின்றீர்கள்," என்று வினவி நின்றனர். அது கேட்ட அரசர் கோபங்கொண்டு "உமதரசன் இங்கேவந்து இவ னடிகளை வணங்கினல் உயிர்பிழைப்பன். தனக்கு உயிர்வேண்டுமோ மானம்வேண்டுமோ எனக் கேட்டுவருதிர்" எனக் கூறி விடுத்தனர். தூதர் அதை அச்சுவனுக் குரைத்தனர். அது செவி மடுத்த விஞ்சையர்வேந்தன் கோபங்கொண்டு சீறிச் சேனைகளோடு வந்தான். பிரசாபதியும் தன் சேனைகளோடு எதிர்த்தான்.

இருதிறப்படைகளும் எதிர்த்துப் போர் செய் யும்போது, அச்சுவகண்டனது படை தோற்றது. அதனைத் தூதர் விரைந்து சென்று அச்சுவ கண்ட னுக்குரைத்தனர். அவன் அதிக கோபங்கொண்டு உலகங்களையும் உயிர்களையும் வாரிக்கடலுள்மிழ்த்த வல்ல சண்டவேகை என்னும் மாயாதேவதையை ஏவிவிட்டான். அது கண்டவர் அஞ்சத்தக்க உக்கிர வடிவோடு பேய்கள் புடைசூழவந்தது. அதுகண்ட பிரசாபதியின் படைகளெல்லாம் புறந்தந்தோடின.

அப்பொழுது திவிட்ட குமாரன் தன் மைத் துனனுகிய அருக்க கீர்த்தியை நோக்கி இங்கே வரு கின்ற இவ்வடிவம் யாதென்று வினவ, அவன், "மாற்றலனல் விடுக்கப்பட்ட சண்டவேகை

என்னும் மாயா தேவதை, பகைவருயிருண்டா லன்றித் திரும்பாது'' என்று கூறினன். அது கேட்ட திவிட்ட குமாரன் சினங்கொண்டு ஆகாய மளவும்உயர்ந்த தோர்பெரிய வடிவங்கொண்டான். அப்பொழுது பாஞ்சசன்னிய மென்னும் சங்கும் சாரங்கவில்லும் கையில் வந்துசேர்ந்தன. திவிட் டன் சங்கை வாயில் வைத்தூதி ஒரு தரம் உரப்பி னன். உரப்பவே மாயா தேவதை அச்ச முற்றுத் தன் சுய வடிவடைந்து அவ்விடம் விட்டோடியது. அது கண்ட அச்சுவகண்டன் ஒரு யானை மேலே றிச் சமர் செய்யவந்தான். திவிட்ட குமாரனுக்கு வாகனமாகக் கருடனும் வந்து சேர்ந்தான். அக் கருடனை வலங்கொண்டு அதன் மேலேறி வில் வளைத்துத் திவிட்ட குமாரன் போர்செய்ய வருதல் கண்டு அச்சுவகண்டனும் எதிர்த்துப் பலவகை ஆயுதப்போர் இயற்றினன்.

முடிவில் தனது ஆஞ்ஞா சக்கரத்தை ஏவி னன். அது திவிட்டகுமாரனிடத்துவந்து வணங்கி அவனேவலால் திரும்பிச்சென்று அச்சுவகண்ட னது சிரத்தைத் துணித்தது. அப்போது இறவா தொழிந்த அவன் சேனைகள் எல்லாம் புறங்காட்டி ஓடின. அச்சுவகண்டன் உயிர் துறந்தமையை ஒற்றராலறிந்த அவன் தேவிமார் பலரும் போர்க் களத்தில்வந்து அவன்மேல் வீழ்ந்து பலவாறு புலம் பித் திரும்பித் தம் விஞ்சையருலக கடைந்து திருமங் கலியங்களைக் களைந்து கற்புநெறியிற்றவறாது விதவை விரதமனுட்டித் திருந்தார்கள். பிரசாபதி யரசன் தன் புதல்வருடைய போர்வலி கண்டு பல

வாறு புகழ்ந்து ஆனந்த பரவசத்தனாய் மந்திரி மாரை அழைத்துச் சுபமுகூர்த்தத்தில் முடிசூட்டி அரசுரிமையை அவர்களிடம் ஒப்பித்தான்.

இராசகுமாரர்களிருவரும் பிதாவின் எண்ணப்படி முடிதரித்தபோது, பகைவரை வென்று அரசாளும் வீரர்கள் ஒரு மலையையும் தனியே பிடுங்கல் வேண்டும் என்று சாத்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றதெனப் புலவர்கள் கூறினர். இவ்வார்த்தையைக் கேட்ட திவிட்டகுமாரன் போய்க் **கோடிக்குன்றம்** என்னும் ஓர் மலையை வேரோடு பறித்து ஏந்தினான். அதுகண்டு யாவரும் அதிசயித்துத் துதித்தனர். பின் திவிட்டகுமாரன் தன் மாமனாகிய சுவனசடியை விஞ்சையருலகம் முழுவதையும் அரசாளும்படி ஏவிச் சுயம்பிரபையோடு இனிது வாழ்ந்துவந்தான். பட்டத்துத்தேவியாகிய சுயம்பிரபை கருப்பவதியாகிச் சுப முகூர்த்தத்தில் அமிர்தசேனனென்னுமோர் புத்திரனைப் பெற்றாள். அந்நாளிலே அருக்க கீர்த்திக்கும் சோதிமாலை என்பவளிடம் சுதாரை என்னும் ஒரு புதல்வி பிறந்தாள். பின்னும் அருக்க கீர்த்தி ஒரு புதல்வனைப்பெற்று விஞ்சையருலகை அரசாண்டிருந்தான்.

இப்படி இருக்கும் நாளில் திவிட்டகுமாரனுக்கும் மின் சோதிமாலை என்னும் ஒரு புத்திரி பிறந்தாள். மகள் வளர்ந்து மணப்பருவம் அடைந்தமை கண்ட அரசன் எங்கும் சுயம்வர ஓலைபோக்கினான். அவன் சுயம்வரத்துக்கு வந்த அரசர் பலரையும் காட்டி, விஞ்சைய வரசன் புதல்வனையும் காட்ட அவள் அருக்க கீர்த்தியின் மகனுக்கு மாலைசூட்டி

ளுள். பின் அருக்க கீர்த்தியும் சுயம்வரம் நாட்டி னன். விஞ்சையகுமாரியும் மைத்துனனை அமுத சேனனுக்கு மாலைசூட்டினுள். அருக்க கீர்த்தி, மக ளுக்குச் சுப முகூர்த்தத்தில் தீவேட்டுத் திருமங் கலிய தாரணஞ் செய்வித்துப் பின்பு தன் மகனை யும் அழைத்துக்கொண்டு விஞ்சையருலகடைந்து அரசாண்டு வாழ்ந்தான். திவிட்டகுமாரன் அமுத சேனனையும் மருமகளையும் தன் நகரத்திலிருத்திச் சகல சிறப்போடு மரசாண்டிருந்தான்.

இப்படி வாழ்ந்திருக்கும் நாளில் பிரசாபதி யர சன் தன் பௌத்திரர்களுடைய சீராட்டைப் பார்த்து மனமகிழ்ந்து "நமக்கு இச்சிறப்புக்கள் முன்னமே நல்வினை தந்ததன்றோ! இன்னும் யாம் நல்வினை செய்தால் இந்தக் குலம் நன்றாக வளர்ந் தோங்கும்" எனக்கருதி அமைச்சரோடாராய்ந் தான். அவர்கள் துறவறமே எல்லா அறங்களி லும் சிறந்ததென்று கூற, அரசன் துறவு செய்யத் துணிந்து அருகக் கடவுளுக்குத் திருவிழாச் சிறப் பெடுக்கக் கட்டளையிட்டு மந்திரிமாரோடும், புத்திர ரோடும் விழாவுக்கேற்ற பொருளோடும் அருகன் கோவிலை அடைந்தனன். அப்போது அருகக் கட வுள் காட்சி கொடுத்தருளத் தரிசனஞ்செய்து அறப்பள்ளியை வலம்வந்து துதித்து வேறொரு மண்டபம் அடைந்து அவ்விடத்தொரு தபோதன ரைக் கண்டு அவரருகே அமர்ந்தான். அப் பொழுது பிரசாபதியுடைய மந்திரிமார் அரசற்கு நல்லறிவுரைக்கவேண்டுமென வேண்டுகோள் செய் தனர். அவர், அரசனை நோக்கித் தேவகதி, நரக

கதி, மனிதகதி, விலங்குகதி என்னும் நாற்கதிகளையும் அவற்றிற் பிறந்தனுபவிக்கும் துன்பக் கூறுபாட்டையும் நன்கு அறிவுறுத்தினர்.

"பிறந்தனர் பிறந்து சாலப்
பெருகினர் பெருகிப் பின்னை
யிறந்தன ரென்ப தல்லா
லியாவரு மின்று காறு
மறைந்துயிர் வாழா நின்ரு
ரில்லையால் வாழி நெஞ்சே
சிறந்தது தவத்தின் மிக்க
தின்மையே சிந்தி கண்டாய்"

இன்னும்,

ஆனை துரப்ப யரவுறை யாழ்குழி
நாநவிர் பற்றுபு நாலு மொருவனோர்
தேனி னழிதுளி நக்கும் திறத்தது
மானி டரின்ப மதித்தனை கொண்ணீ."

உலகில் இன்பமென யாம் மகிழ்வனவெல்லாம் ஆனையாற்றுரத்தப்பட்டுப் பாம்புறையும் ஆழ்ந்த பாழ்ங்கிணற்றுட் குதித்த ஒருவன் அங்கு நீண்டு வளர்ந்த புல்லைப்பற்றித் தொங்கும்போது மேலே மரக்கிளையிற்றெங்கும் தேன் கூட்டி னின்றும் ஒழுகி நாக்கில் விழுந்த ஒரு துளிதேனை நக்கி மகிழ்ந்த தன்மையையுடையன, என இன்பம் நிலையாமையைப்பற்றி விளக்கினர். அதனைக் கேட்டு வைராக்கியம் பிறந்த அரசன் உலக ஆசைகள் எல்லாம் துன்பத்துக்கு ஏது; இன்பத்துக்குரியது முத்தி ஒன்றுமே எனச் சொல்லித் துறவு பூண

டான். அது கண்ட மந்திரிமாரும் அரசனைப் பிரிய லாற்ருது துறவு பூண்டனர்.

" தொகைமல ரலங்கல் சூடித்
தூநறுஞ் சுண்ண மப்பிப்
புகைநனி கமழ வூட்டிப்
புறஞ் செயப்பட்ட மேனி
சிகையினேர் முட் டெண்டிச்
சிதைத் தழுக்கொழுகு மாயி
னகைபெரி துடைத்து நாணேடு
மிதனை நாமகிழ்த நெஞ்சே"

" ஒழுகிய நடையு நீரு முதலன கையிகப்பவூறு
மழுகலிவ் வள்ளல் யாக்கை யகம்புற மாயிற்ருயிற்
கழுகொடு கவருங் காக்கை தடிகொண்டு காத்து
மழகுள சுழலுமன்ஞே வாயிரச்சாதி மாதோ"

" ஆயினக் காலன் பாணி
யாம்பிற வரச செல்வ
மேயினங் களித்தி யாங்கள்
விழைந்து யிர்வாழும் வாழ்க்கை
பாயிய வெழுந்த வேங்கை
பாரிக்கு மளவிற் பைம்புன்
மாயிருஞ் சுருளை மேயு
மான்மறி போலு மன்ரே"

என்று முனிவர் யாக்கை நிலையாமையையும் உலக இன்பங்களின் இயல்புகளையும் எடுத்து விளக்கினர். பிரசாபதி யரசனுடைய புதல்வரும் பிதா தம்மைவிட்டுப் பிரிந்ததற்காக மனமிரங்கி, முத்தி வழி தேடினதற்காக மகிழ்ந்து, தங்கள் நகரடைந்து

அரசாண்டிருந்தார்கள். அரசனும் அநேக நாள் கடவுள் வழிபாடுசெய்து முத்தியடைந்தான்.

---

## மக்கள் இன ஆராய்ச்சி

பல்வேறு மக்கட்பிரிவினரும் காட்டு வாழ்க்கையினின்றும் படிப்படியே மிதந்து திருத்தமுற்ற முறைகளை ஆராய்ந்து கூறும் வரலாற்றுப்பகுதி மக்கள் இன ஆராய்ச்சி எனப்படும்.

மக்கள் இன ஆராய்ச்சியாளர் உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழும் காட்டுமிராண்டி மக்கட் கூட்டத்தினரின் வியப்புக்குரிய பழக்கவழக்கங்களையும், கொள்கைகளையும் ஆராய்ந்து கூறுவர். அவர்களின் ஆராய்ச்சிகளில், உலக மக்கள் எல்லாரிடையும் பரந்து காணப்படும் கொள்கைகளுக்கு ஒரு பொது அடிப்படை இருப்பதைக் காணலாம். மனிதவரலாறு, மொழிவரலாறு, நியாயநூல், புராதன கலைகள், பூமிசாத்திரம், வரலாற்றின் பல பகுதிகள் என்பன மக்கள் இன ஆராய்ச்சியுடன் பின்னிக்கிடக்கின்றன.

மக்கள் இன ஆராய்ச்சிக்கலை 19-ம் நூற்றாண்டில் ஆரம்பித்தது. இதனை இருவகைப்படுத்தலாம். இன்றுவரையில் நாகரிகமற்றவர்களாகக் காணப்படும் மக்களின் தொடக்கம், பழக்கவழக்கங்கள், கொள்கைகள், ஆதியவற்றை ஆதாரங்களுடன் ஆராய்தல் ஒன்று. மற்றது, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மக்களின் நிலைமையை ஆராய்தல்.

மனிதக்கூட்டத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதன வழிபாடு, ஒழுக்கம், கலை, வாணிகம் என்பன.

மனிதனின் விவேகத்தைக் குறிக்கும் சான்றுகள் இன்றுபோலவே என்றும் உள்ளன. மக்கள் இன ஆராய்ச்சியாளர் இவைகளைத் தமது ஆராய்ச்சிக்கு அடிப்படையாகக் கொள்வர். தனிப்பட்ட அறிவிலிருந்து பலவும் கலந்த அறிவை மனிதன் வளர்க்கிறான். இவ்வுலகின் பல பாகங்களிற் காணப்படும் மக்கட் கூட்டத்தினர் ஒரு உற்பத்தியையோ பல உற்பத்தியையோ உடையராயினும் அவர்கள் ஒரே போக்கில் முன்னேறியுள்ளார்கள் என்று கூறமுடியாது. சில கூட்டத்தினரின் முன்னேற்றம் தடைப்பட்டிருக்கலாம். சில கூட்டத்தினர் முன்னேறுவதற்குப் பதில் பின்னோக்கிச் சென்றுமிருக்கலாம்.

மனித உற்பத்தி எவ்வாறிருந்தபோதும், மக்கட் பிரிவினரிடையேயுள்ள வேற்றுமைகளிலும் ஒற்றுமையே நெருங்கிக் காணப்படுகின்றது. மக்களின் நாகரிகமும் அநாகரிகமும் அறிவுவளர்ச்சி நிலையைப் பொறுத்துள்ளன. அநாகரிக நிலையிலுள்ள பல கூட்டத்தினரைப் பார்க்கும் ஒருவனுக்கு எல்லோரும் ஒரு வகையினராகவே தோன்றுவர். நாகரிக மக்களோடு அநாகரிக மக்களை ஒப்பிட்டுப் பார்க்கும் ஒருவனுக்கு அவ்விருகூட்டத்தினருக்கிடையிலுள்ள வேற்றுமை எளிதிற்றோன்றும். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நிகழ்ச்சிகளை அறிதற்கு மக்கள் அநாகரிகநிலையில் வாழும் தேசங்கள்

உதவிபுரிகின்றன. மறைந்துபோயின என்று கருதியிருக்கும் பொருள்களை அறிவதற்குப் பொருட் காட்சிச் சாலைகள் உதவிபுரிகின்றன.

மக்கட்கூட்டத்தினரின் பழமையை ஆராய் வோர் வரலாற்றுத் தொடர்புள்ள இடங்களை அகழ்ந்து மனித என்புகளையும் அவர்கள் பயன் படுத்திய, பொருள்களையும் எடுத்துப் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். இவை ஆராய்ச்சியாளர்க் குப் பயன்படும் செய்திகளை அறிவிக்கின்றன. பாதி நாகரிகம் அடைந்த நகரங்களுக்கூடாகப் பயணஞ் செய்யும்போது அவர்கள் சேகரிக்கக்கூடியனவும் அறிந்துகொள்ளக்கூடியனவும் பல.

மனிதனின் முன்னேற்ற வழிகளில் தலைமை யுடையன உணவு, உணவின் தன்மை, சமைக்கும் முறை, ஆயுதங்கள், வீடு, உடை, நெருப்பை உண் டாக்குதல், கைத்தொழில், வியாபாரம் என்பன.

**உணவு** :—மனிதன், பசியையும் தாகத்தையும் தீர்ப்பதற்கு உணவும் நீரும் பெறுவிடில் மிருகங்களைப்போலவே அவற்றைத் தேடி அலை கின்றான்; பசிக்கும் தாகத்துக்கும் வேண்டியன கிடைப்பின் மகிழ்ந்து ஓரிடத்தில் தங்குகின்றான். உணவு தேடும் முறையில் ஒவ்வொரு மக்கட்கூட்டத் தினரும் கடந்த அல்லது கடக்கவேண்டிய படிகள் நான்கு.

**அவை** :—வேட்டையாடல் மீன் பிடித்தல், ஆடுமாடு வளர்த்தல், பயிரிடுதல், கைத்தொழில் புரி தல், என்பன. இவை உணவு தேடும் பொருட்டு

மக்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கையாண்ட முறைகளன்றி வேறல்ல. இத்தொழில்கள் எல்லாவற்றின் நோக்கமும் ஒருவருக்கு அல்லது பலருக்கு நல்ல உணவைத் தேடுதல்.

**ஆயுதங்கள்:**—மக்கட்கூட்டத்தினரின் பழமையை ஆராய்வோர் உலகின் பல மூலைகளுக்குஞ்சென்று பண்டைக்கால மட்பாண்ட உடைவுகளையும், பழைய என்பு, பற்கள், தீத்தட்டிக்கல் முதலியவற்றையும் எடுக்கின்றனர். ஆயுதங்களின் திறமைக்கேற்பவே வேலைகளும் இருக்கும். ஆயுதங்களையும் வேலைகளையும் கொண்டு மனிதனின் திறமையை அறிதல் இயலும். மனிதன், ஆயுதங்களைச் செய்யும் அல்லது அவைகளைப் பயன்படுத்தும் விலங்கு எனலாம். உணவின் பொருட்டு விலங்குகளையும் பறவைகளையும் கொல்ல ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆயுதம் நன்றாயிருப்பின் உணவு குறைவின்றிக் கிடைக்கும். உணவு மாறுபடின் ஆயுதங்களும் மாறுபடும். தொடக்கத்தில் மரம் எலும்பு முரடான கல் என்பன ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன. பின்பு அழுத்தமான கல்லாயுதங்களும் வெண்கலம் இரும்பு என்பவைகளாற் செய்யப்பட்ட அவ்வகைப் பொருள்களும் பயன்படுத்தப்பட்டன. ஒரு காலத்திலிருந்து இன்னொரு காலத்துக்குச் செல்ல எவ்வளவு காலம் ஆயிற்று என்று துணிந்து கூறமுடியாது.

**வீடும் ஒதுக்கிடமும்:**—நாட்டு மக்களின் சிறிய வீட்டு அமைப்பைப் பின்பற்றியே பெரிய ஆலயங்களும் அரண்மனைகளும் மாளிகைகளும் எடுக்கப்பட்டன.

அரண்மனை, விலையுயர்ந்த கட்டிடவேலைக்குரிய பொருள்களைப்பயன்படுத்திக் கட்டப்பட்டதாயினும் அது பெரிதா யமைக்கப்பட்ட ஒரு நாட்டு வீடே யாகும். ஒரு கூட்டத்தாரின் முன்னோர் குகைகளில், அல்லது குகைபோலக் கட்டப்பட்ட வீடுகளில், அல்லது கூடாரங்களில் வாழ்ந்திருந்தால் அவர்கள் பிற்சந்ததியினர் பெரும் செலவிற் கட்டி வாழும் வீடுகளையும் வீட்டுப் பொருள்களையும் பார்த்து அவர் முன்னோரின் வீடுகளைப்பற்றி அறிந்துகொள்ளலாம். எகிப்திலே கோயிற் கட்டிடங்களின் தூண்கள் நீல ஆற்றில் வளரும் நாணற்றண்டைப் பிடியாகக்கட்டி நிறுத்தியது போன்றவடிவுடையனவாயும், சுவர்கள், இழைக்கப்பட்ட பாய்களைப் போலவும் காணப்படுகின்றன. மரத்தினலும் கல்லினலும் செங்கல்லினலும் கட்டப்பட்ட கட்டிடங்களை நோக்கி அவர் முன்னோரின் கட்டிடங்களைப்பற்றி அறிந்துக்கொள்ளும் முறை இதுவாகும்.

**நெருப்பு** :—உலகில் எந்தச் சாதியாராவது வரலாற்றுக்காலத்தில் நெருப்பை உண்டாக்க அறியாமல் இருக்கவில்லை. நாகரிக, அநாகரிக மக்களுக்கிடையில் பெரிய வேறுபாடு இருந்தபோதும் எல்லோரும் நெருப்பு உண்டாக்க அறிந்திருந்தனர்.

**வாணிகமும் கைத்தொழிலும்** :—உழவு தொழில் புரிவோர் முதன் முதல் விலைக்கு வாங்கிய பொருள்கள், போர்ப்பிரியமுள்ள வேட்டையாடும் சாதியினர் கொண்டுவந்த அடிமைகளாவர். பண்டமாற்றே ஆதிகால வாணிக மாகும். நாகரிகம் வளர்ந்த காலத்தில் வெள்ளியிலும் தகரம் உயர்வுடையதாக

மதிக்கப்பட்டது. தகரம் இன்றி வெண்கலம் செய்தல் இயலாது. வாணிகம் நடை பெற்றமையில் சில கைத் தொழில்களும் இருந்தன என்று ஊகிக்கலாம்.

**குடும்ப வளர்ச்சி**:—தொடக்கத்தில் பலதார மணங்களே வழக்கிலிருந்தன. வேட்டையாடியும் மீன் பிடித்தும் அலைந்துதிரியும் கூட்டத்தினர் உண்மையான திருமணம் இன்னதென்று அறியமாட்டாதவர்களாயிருந்தனர். உழு தொழில் தலை எடுத்த பின்பே உண்மை யான திருமணங்கள் நிகழ்ந்தன. அதன் முன் குழந்தைகள் குடும்பத்துக்குச் சொந்தமாயிருந்தன. அந்நிலைமையில் பிதாவுக்குப் பிள்ளை யிடத்தில் உரிமை உண்டாகவில்லை. குழந்தைகள் தாய்வழியால் அறியப்பட்டன. ஆண் வழியால் சந்ததியை அறியும்முறை பிற்காலத்தது. தாய் எல்லாச் சுதந்தரமும் தலைமையும் அதிகாரமும் பெற்றிருந்த காலத்திலேயே தாய்க்கடவுள் வணக்கம் உண்டாயிற்று. பழைய மக்கட்கூட்டத்தினர் இன்னொரு கூட்டத்திலிருந்து களவாகவோ வலிமையாகவோ பெண்களைப் பெற்று மணந்தனர். தமது சொந்தக்கூட்டத்துள் மணஞ்செய்தல் கூடாதென்னும் கொள்கை இன்றும் பல கூட்டத்தாரிடையே உண்டு. இன்றும் இங்கிலாந்தில் மணமகன் மணமகளைக்கவர்ந்து வரச்செல்வதும் பெண் வீட்டார் திரண்டு தாக்குவதும் போன்ற போலிச்சண்டை திருமணக்காலத்தில் நடத்தப்படுகின்றது.

**சமூக முன்னேற்றம்**:—குடும்பங்கள் சேர்ந்து கூட்டமாக வாழத்தொடங்கிய காலத்தில் அரசாட்சி

உண்டாயிற்று. மக்கள் ஆட்சிச் செயல்களில் எப்படி ஒத்து உழைத்தார்கள்; அதிகாரத்தையும் சொத்தையும் எப்படிக் கட்டுப்படுத்தினர்கள்; சாதி வேற்றுமைகளை எப்படி உண்டாக்கினர்கள் என்னும் கேள்விகளுக்குப் பெறும் விடைகள் போல் வன சாதி முன்னேற்றத்தை விளக்குவனவாகும்.

**மக்கள், கூட்டங்களாகவும் சாதிகளாகவும் பிரிந்துவாழ்தல்:—** மக்கள் கூட்டமாக வாழும் இயல்பினர். கூட்டங்களாக வாழ்தலினல் மக்களிடையே விவேகம், ஆறுதல், நியாயஉணர்வு, நல்லெண்ணம், மகிழ்ச்சி, சகோதர இயல்பு முதலியன உண்டாகின்றன. மனிதக் கூட்டம் மிருகக் கூட்டத்திலும் பார்க்க மேலானது. தாயைச் சூழ்ந்து குழந்தைகள் இருந்ததால் குடும்பம் உண்டாயிற்று. தாய் எல்லாக் குழந்தைகளையும் ஒப்பநோக்கும் இயல்பினளாதலின் அவை ஒன்றுக்கொன்று சகோதரங்களாக இருந்தன. இப்படியே குடும்பங்களும் குழந்தைகளும் வளர்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு தாய் அடியினின்றும் பல கூட்டங்கள் உண்டாகின்றன. இவ்வாறு வாழும் பல கூட்டத்தினர் சேர்ந்து ஒரு சாதியினராவர்.

**அதிகாரம்:—**போர்கள் போன்ற அவசிய காலங்களில் வலிமையுடைய ஒருவன் ஒரு கூட்டத்தினருக்குத் தலைவனுகின்ருன். அவனுடைய கட்டளைக்கு எல்லோரும் கீழ்ப்படிந்தார்கள். இம்முறையில் ஆட்சியும் அதிகாரமும் உண்டாயின. இக்காலச் **'சர்வாதிகார' முறையும் இதுவேயாகும்.**

**சொத்து** :—மக்கள் வேட்டையாடுகின்றவும் மீன் பிடிக்கின்றவும் காலம் முதல் சொத்துப் படிப் படியே அதிகப்பட்டது. செல்வம் விவேகத்தினாலும் வேலை செய்யும் திறமையினாலும் அதிகரித்தது. செல்வம் மிகுந்ததும் பேராசை உண்டானதோடு செல்வத்தினால் உண்டாகும் தேவைகளும் பலவாயின. அதிகாரமுள்ளவன் அல்லது பலவான் தனது பங்கிலும் பார்க்க அதிகம் எடுத்தான் பலமில்லாதவன் இன்னும் பலவீனமடைந்தான். அதனால் வறியவர்கள் அடிமைகளாயினர். உழவினால் செல்வம் மிகுந்தது. உழவுதொழில் தலையெடுத்தபோது பிள்ளைகளிடத்துத் தந்தைக்கு உரிமை உண்டாயிற்று. ஆகவே ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஆடவனுக்கும் சொத்துரிமை உண்டாயிற்று. வெகுகாலம் ஆட்சிமுறை குடும்ப ஆட்சியாகவே இருந்து வந்தது.

**விவேகம், மொழி, இலக்கியம், கலை** :—மக்களின் பழமையை ஆராய்வதற்கு மொழி ஆராய்ச்சி இன்றியமையாதது. ஆதியில் மொழி சாதி என்னும் சொற்கள் ஒரே பொருள் உடையனவாயிருந்தன. மக்களின் ஒன்று சேர்ந்த எண்ணத்தினால் மொழி உண்டாயிற்று. மக்கள் எண்ணங்கள் முழுமையும் மொழியும் சமயமுமாயிருக்கின்றன. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள மக்களை ஒன்றாகப் பிணித்திருப்பது ஆங்கில மொழியாகும். மொழி ஆராய்ச்சி, கால இருளை ஊடுருவிப் பழைய மக்களைப் பார்க்கும் தொலைவு நோக்கி ஆடி போல விருக்கின்றது. மொழியின் சொல் மூலங்களை ஆராய்வதால் ஒரு

சாதியின் பழைய சமூக நிலை நாகரிகம் முதலியவைகளை அறியலாம். பழந்தமிழ்ச்சொற்களை ஆராய்வதால் தமிழர் நிலத்தை உழுதார்கள், ஆடுமாடுகளை வளர்த்தார்கள், சில்லுள்ள வண்டிகளைப் பயன்படுத்தினர்கள், கடற்பயணஞ் செய்தார்கள் என்பன போன்றவைகளை அறியலாம். ஆபிரிக்க மக்களின் ஆயுதங்கள் பலவற்றின் பெயர்கள் கல்லைக் குறிப்பனவாயிருக்கின்றன.

விலங்குகளின் கொம்புகளில் தீத்தட்டிக்கல் முனையினல் ஓவியங்கள் பொறித்த கற்காலச் சின்னங்கள் காணப்படுகின்றன. மட்பாண்டங்களில் அரைகுறையான சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இவ்வேலைகள் பிற்காலங்களில் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்தன. உடம்பை நிறம்பூசி அல்லது பச்சை குத்தி அலங்கரிக்கும் பழக்கத்திலிருந்தே ஓவியக் கலைவளர்ச்சியடைந்தது. காட்டுச் சாதியினர் தமது உடலை நிறமைகளால் சித்திரிக்கும் விருப்புடையர். அவர்கள், காலணி, கையணி, மாலைகள் போலப் பச்சை குத்திக்கொள்வர்.

**நியாயப் பிரமாணங்கள்:**—நியாயத்துக்கு முந்தியது சட்டம். திருத்தமுறாத மக்கட் கூட்டத்தினர் சட்டங்களை அறிந்திருந்தபோதும் நியாயம் சரியாயிருக்கின்றதா என்று அறியமாட்டாதவர்களாயிருக்கின்றனர். தேசச் சட்டங்கள் மக்கள் வழக்கங்களை நோக்கிச் செய்யப்படுகின்றன. உண்மையான சட்டங்கள் மக்களின் கருத்துக்களே யாகும். பழைய சமூகங்களில், நியாயத்தார், வழக்குகளை ஆராய்ந்து தீர்ப்பளித்தனர். இன்றும் தேசவழமை

என்னும் சட்டம் இருந்துவருகின்றது. இதில் காணப் படும் தீர்ப்புக்கள் பலருக்கு நியாயம் அல்லாதன போலக்காணப்படலாம். ஆனால் மக்கள் அவைகளை ஏற்றுக்கொள்கின்றனர்.

**முற்போக்கு** :—மக்களின் பழமைஆராய்ச்சி; மேற்கூறிய பல பொருள்களையும் ஒன்று திரட்டி ஆராய்ந்து பார்த்து ஒன்றன்பின் ஒன்ருக உண் டான மக்களின் அறிவு உள்ளவளர்ச்சி முதலிய வற்றைக் கூறுகின்றது. மனித முன்னேற்றத்து றையில் நியாயமும் ஒழுக்கமும் சிறப்பாக ஆராயத் தக்கன. நாகரிகமடைந்தவர்களுக்குள் எல்லாம் நன் மையாகவும், நாகரிகமடையாதவர்களுக்குள் எல் லாம் தீமையாகவும் இருக்கவில்லை. உலகப்போக் கில் நாம் அநாகரிக மக்களிலும் மேலானவர்களாகத் தோன்றலாம். ஆனல் ஒழுக்கமுறையில் நாம்அவர் களிலும் தாழ்ந்தவர்கள் ஆகலாம். இவ்வாறு மக் கட் கூட்டத்தினரின் வாழ்க்கை வரலாறுகளை முறைப்படுத்தி ஆராய்ச்சி செய்வது மக்கள் இன ஆராய்ச்சி எனப்படுகின்றது.

---

## சேரநாடும் தமிழும்

பழைய தமிழ் மூவேந்தர் நாடுகளுள் சேரநாடு ஒன்ருகும். இப்போதைய மலையாளம். * திருவிதாங் கூர் முதலிய நாடுகள் இதில் அடங்கும். பிற்காலத்

* திருவிது + ஆம் + கோடு = திருவாங்கூர்.

தில் கோயமுத்தூர் மாகாணமும் சேலத்தின் ஒரு பகுதியும் இதில் சேர்ந்திருந்தன * காலத்துக்குக் காலம் சேரநாட்டெல்லை மாறுபட்டது. சேரநாட்டைப்பற்றி மேற்கு உலகத்தவர்கள் மிக முற்காலத்திலேயே அறிந்திருந்தார்கள். பினீசியர், சாலடியர், அராபியர், கிரேக்கர், உரோமர் முதலியோர் மலையாளக்கரைக்குத் தமதுகப்பல்களுடன் வந்துவாணிகம் நடத்தினர். அசோகப் பேரரசனின் கல்வெட்டுக்களில் சேரநாடு **கேரளபுத்திரா** எனக்குறிக்கப்பட்டுள்ளது. மெகஸ்தீனஸ் என்பார் அதனைச் சேரபோதுரோஸ் † எனத் தமது நூலிற் கூறியுள்ளார்.

வடமொழி நூல்களில் சேரநாடு **கேரள** எனக் குறிக்கப்பட்டுள்ளது. தைத்திரிய ஆரணியகத்தில் சேரபட என்னும் பெயர் காணப்படுகின்றது. சேர என்பதற்குச் சாயணர், பாம்பு ‡ என்னும் பொருள் கூறியுள்ளார். கார்த்தியாயனரும் (கி. மு. 150) பதஞ்சலியும் (கி. மு. 150) சேர நாட்டைக் குறிப்பிட்டுள்ளார்கள். வாயு, மச்ச, மார்க்கண்டேய புராணங்கள் கேரளத்தையும் கோகர்ணத்தையும்

---

* "வடக்குத்திசை பழனி வான் கீழ்தென் காசி — குடக்குத் திசை கோழிக் கோடாம் — கடற்கரையின் — ஓரமே தெற்காம் உள்ளெண் பதின்காதம் — சேரநாட் டெல்லையெனச் செப்பு"

இதன் பொருள்: சேரநாட்டின் வடக்கெல்லை பழனி, தெற்கு கடல், கிழக்கு தென்காசி, மேற்குக் கோழிக்கோடு (கள்ளிக்கோட்டை).

† Cherabothros.

‡ பாம்பு, ஞாயிற்று வணக்கம் (Sun and serpent worship) என்னும் நூல் எழுதிய Oldham என்னும் ஆசிரியர், சேரநாடு நாகநாடென்றும், சாரை என்பதிலிருந்தே சேர என்பது வந்தென்றும் கூறுவர்.

குறிப்பிடுகின்றன. மேற்குக் கரைப்பாகம் மலை நாடாதலின் சேரன், மலையன் எனவும் பட்டான். செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம் என இலக்கண நூல்களிற் குறிக்கப்படுவன பொங்கர், ஒளி, தென்பாண்டி, குட்டம், குடம், பன்றி, கர்க்கா, சீதம், பூழி, மலையமான், அருவா, அருவாவடதலை முதலிய நாடுகள். இவைகளுள் பூழி நாடு, குடநாடு, வேணாடு முதலியன முறையே வடக்கினின்றும் தென்புறமாக நீண்டுள்ளன. பூழி நாடு அல்லது மணல் நாடு இக்கால அகலப் புழை (Agalapula) முதல் பொன்னானிவரையும் நீண்டிருந்தது. குடநாடு பொன்னானிமுதல் பேராற்றுக் கழிமுகம் வரையில் விரிந்து கிடந்தது. கோட்டயம் கொல்லம் முதலிய இடங்களைச் சூழ்ந்த நாடு குட்ட நாடு எனப்பட்டது. இந்நாட்டுக்கு ஊடாகப்பாயும் பாலை ஆறு, கழிமுகத்தே பல வாவிகளை உண்டு பண்ணிற்று. அதற்குத் தெற்கேஉள்ளது*வேணாடு. இது திருவிதாங்கூரின் பெரும்பகுதியைக் கொண்டது. இன்றும் திருவிதாங்கூர் அரசர் **வேணாட்டடிகள் திருவடிகள்** எனப்படுகின்றனர்: இவ்வைந்து நாடுகளும் சேர நாட்டைச் சேர்ந்தன. சேரநாட்டின் தலை நகரம் வஞ்சி அல்லது காரூர். அது பேராற்றின் கரையில் உள்ளது. அடியார்க்கு நல்லார் காரூரைத் திருவஞ்சைக்களம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பழைய பூமிசாத்திரம் எழுதிய பிளினி கேரளத்தை கலபோத்தர (Calabotra) எனக் குறிப்பிட்

*வேணாடு என்பதை வேண் நாடு எனப்பிரித்து மூங்கில் நாடு என ஒரு சாரார் பொருள் கூறுவர். இன்னொரு சாரார் வேள் நாடு எனப் பிரித்துச் சிற்றரசர் நாடு எனக் கூறுவர்.

டுள்ளார். முசிறியும் அவராற் குறிப்பிடப்பட்டுள்ளது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பெரிபுளூஸ் என்னும் நூல் கேரளத்தைக் கெரொபோதிராஸ் (Kerobotras) எனக் குறிப்பிடுகின்றது. தாலமி 'கெரொபோதிரர்' கரோரா (காரூர்) என்னும் தலைநகரில் வாழ்ந்தார்கள் எனத்தமது நூலிற் கூறியுள்ளார். கேரள என்னும் சொல்லை ஆராயின் அது சேர என்னும் சொல்லின் திரிபு என விளங்குகின்றது. தமிழில் வழங்கும் செய், செவி முதலிய சொற்கள் கன்னடத்தில் கெய், கெவி என வழங்குகின்றன. இம்முறையில் சேரலம் கேரலமாகிப் பின் வடமொழி உச்சரிப்பில் கேரளமாயிற்று எனத் துணிதல் கூடும். வடமொழியாளர் அதனைத் தமிழ்நாட்டின் வடக்கே பேசப்பட்ட கன்னட மொழியினின்று பெற்றார்கள் ஆகலாம்.

சேரநாடு மலையாளம் எனப்படும். மலை-ஆள்-அம் என்பதில் ஆள் ஆழத்தைக்குறியாது ஆட்சியைக் குறிக்கும். ஆகவே மலையாளம் என்பதற்கு மலை இராச்சியம் என்பது பொருள். அம் என்பது இறுதிநிலை.

ஐரோப்பியர் நீண்டகாலம் தமிழை மலையாளம் எனக்குறிப்பிட்டு வந்தார்கள். 18-ம்* நூற்றாண்டில் வாபிரிசியஸ் என்பார் செய்த தமிழ் இங்கிலிஷ் அகராதிக்கு மலபார் இங்கிலிஷ் அகராதி எனப் பெயரிடப்பட்டது. தமிழை மலையாளம் என வழங்கும் தவறு 19-ம் நூற்றாண்டிலேயே கண்டுபிடித்துத் திருத்தப்பட்டது.

* Fabricius.

கி. பி. 2-ம் நூற்றாண்டில் சேரநாடு முழுவதையும் சேர அரசன் ஆண்டமையைப் பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. பழைய சேர அரசருள் செங்குட்டுவன் பெரும் புகழ் பெற்று விளங்கினான். பதிற்றுப்பத்திற் பத்தாம்பத்து பரணரால் அவன்மேற் பாடப்பட்டது. சேரன் செங்குட்டுவன் கொடுங்கோளூரில் கண்ணகிக்குக் கோயிலைக் கட்டுவித்தான். சிலப்பதிகாரத்தில் மதுரையை நெருப்பு உண்டதாகச் சொல்லப்பட்ட காலம்† கி. பி. 171 எனக் கருதப்படுகின்றது.

பதிற்றுப்பத்துப் பதிகங்களில் பதினேழு சேர அரசர்களின் பெயர்கள் அறியப்படுகின்றன. சேர நாட்டில் அக்காலம் வழங்கிய மொழி தமிழ். அந்நாட்டிற் கொடுந்தமிழ் வழங்கிற்று என்னும் கொள்கை தவறுடைத்து. கொடுந்தமிழ் என்பது கொச்சையாகப் பேசப்படும் தமிழ். கொடுமை-வளைவு.

புறப்பொருள் வெண்பாமாலை ‡ குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழி (கி. பி. 600-800) சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக்களத் திறைவன் மீது பாடின தேவாரம் (9-ம் நூற்றாண்டு) சேரமான் பெருமாணாயனாரின் பொன் வண்ணத்தந்தாதி. (9-ம் நூற்றாண்டு) முதலியன சேர நாட்டிற் செய்யப்பட்டன. தமிழில் கிழக்கு மேற்கு என்பன மேலையும் கீழையும் குறிப்பன. மேற்கே மலை உயர்ந்திருப்பதால் மலையிலிருந்து செல்லும் திசை கிழக்கு என்

† "ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்
அழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண"

‡ 7-ம் அல்லது 8-ம் நூற்றாண்டு

றும், கீழிருந்து மேலே ஏறிச்செல்லும் திசை மேற்கு எனவும் கூறப்பட்டன. இவ்வழக்கு மேற்குத்தொடர்ச்சிமலையின் கிழக்கிலேயே உண்டாயிருத்தல் வேண்டும். மலையாளத்தில் மேற்கில் கடலும் கிழக்கில் மலையும் உள்ளன. அவ்வாறிருந்தும் கிழக்கு மேற்கு என்னும் பெயர்கள் கீழ்த்திசை மேற்றிசைகளைக் குறிக்க வழங்குகின்றன. இதனால் அங்குத் தமிழர்களே ஒருகாற்சென்று குடியேறினர்கள் என்பது தெளிவாகின்றது. மலையாளத்தில் மேற்கைக் குறிக்கப் பதின்ஞாறு என்னும் சொல்லும் வழங்கும். அது பதிஞாயிறு என்பதன் திரிபு. அங்குச்சில பழைய பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் சாக்கையர் கூத்து ஒன்று. இது சேரன் செங்குட்டுவனுக்கு முன்னல் ஆடப்பட்டதெனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. *

ஆரிய அரசர் தமிழை இகழ்ந்த காரணத்தால் சேரன் செங்குட்டுவன் வெகுண்டெழுந்து அவர்

* இன்றும் மலையாளத்தில் கூத்து ஆடும் வகுப்பினர் சாக்கையர் குலத்தினர். அவர்கள் ஆடும்போது நம்பியார் குடமுழவு கொட்டுவர். நம்பியார்ப் பெண் சல்லரிகளால் தாளம்போடுவாள். குடமுழவு மண்குடத்தில் தோலைக்கட்டிச் செய்யப்பட்ட ஒருவகைமேளம். நம்பியார் அம்பலவாசிக் குலத்தைச் சேர்ந்தவர். சாக்கையர் ஆடும் கூத்து நால்வகை. (1) கதாப்பிரசங்கம் (2) கூத்தியாட்டம் (3) மந்திராங்கம் (4) மதவிலாசம். கதை சொல்வதாகிய ஆட்டமே இக்காலம் பெரிது நடைபெறுகின்றது. அப்பொழுது சாக்கையன் விநோதமான உடை அணிந்து புராண இதிகாசங்கள் தொடர்பான சமக்கிருத சுலோகங்களைப் பாடி அபிநயங்களோடு கதையை விளக்குவான். இவ்வகைக் கூத்துக்கள் ஆடுதற்கென மலையாளத்திலுள்ள ஆலயங்களில் அமைக்கப்பட்ட இடம் கூத்து அம்பலம் எனப்படும்.

களைப் போர் முகத்து அகப்படுத்தி அவர்முடிமீது பத்தினிக்கல்லைச் சுமந்துவரச்செய்தான். இவ்வாறு சிலப்பதிகாரத்திற் காணப்படுகின்றது. வில்லவன் கோதை என்னும் மந்திரி சேர அரசனின் படையைப்பற்றிக் குறிப்பிடுமிடத்து தமிழப்படை எனக் குறிப்பிடுகின்றான்.

சேர நாட்டிற் செய்யப்பட்ட பழந்தமிழ் நூல்களிற் காணப்படும் வடசொற்கள் மிகச் சில. சேரமான் பெருமாள், குலசேகர ஆழ்வார் முதலியோர் பாடிய பிற்காலப்பாடல்களில் காணப்படும் வடசொற்கள் பல. கி. பி. 7-ம் நூற்றாண்டு வரையில் செய்யப்பட்ட வடமொழி நூல்கள், தென்னாட்டு மொழிகள் தமிழும் தெலுங்கும் என்றே குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் மலையாளம் தோன்றாதிருக்கலாம். மலையாளத்திற் குடியேறிய யூதமக்களுக்கு மலையாள அரசனால் அளிக்கப்பட்ட பட்டயம் (கி. பி. 861) தமிழ்வட்டெழுத்துக்களிற் பொறிக்கப்பட்டுள்ளன. அப்பட்டயத்திற் சொல்லப்பட்ட உரிமைகள் சில இன்றும் அந்நாட்டில் வழங்குகின்றன. கி. பி. 6-ம் நூற்றாண்டில் எருசலேமிலுள்ள பெரிய கோவில் அழிக்கப்பட்டபோது யூதமக்கள் மலையாளத்தில் வந்து குடியேறினார்கள் என்னும் பரம்பரை வரலாறு உண்டு. 13-ம் நூற்றாண்டு வரையில் செய்யப்பட்ட இராமசரித்திரம் சில மலையாளச் சொற்கள் கலந்த தமிழ் போலத் தோன்றுகின்றது. சேரநாட்டில் வழங்கிய தமிழ் சிறிது சிறிதாக மாறுதல் அடைந்து சில நூற்றாண்டுகளில் மலையாளம் என்னும் மொழியாக மாறிற்று.

இன்று திருவிதாங்கூர் அரசுரிமை அரசனின் சகோதரியின் மகளுக்கே உண்டு. அவளே இராணி எனப்படுவாள். அவளின் உடன் பிறந்தவனே அவளுக்குப்பதில் ஆட்சியை நடத்துகின்றான். இவ்வாறு சொத்துரிமை மருமகளைச் சேரும் வழக்கு மருமக்கள் தாயம் எனப்படும். பழைய சேர அரசர்களின் அரசுரிமை மக்கள் தாயம். மக்கள் தாய மென்பது தந்தையின் சொத்துப் பிள்ளைகளை அடைதல். சேர சோழ பாண்டிய அரச குடுப்பங்களுக்கிடையில் நீண்டகாலம் திருமணத்தொடர்புகள் இருந்து வந்தன. சேர அரச பரம்பரை மறைந்துபோன காலத்தில் கள்ளிக்கோட்டை அரசமரபினர் நாட்டை ஆளும் பொருட்டுத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் பெருமாள் என்னும் பட்டப் பெயர் பெற்றிருந்தனர். பெருமாள்களுக்குப்பின் வந்த அரசர் வன்மன் என்னும் பட்டப் பெயர் பெறுவர்.

தமிழ் மொழியில் வழக்கொழிந்து போன அரிய தமிழ்ச்சொற்களை மலையாள மொழியிற்காணலாகும். அவைகளுட் சில பின்வருவன. வேட்டக் கோமகன்-வேட்டைக் கடவுள்; வெளுத்தெடான்-வண்ணான்; கொட்டில்-சிறுவீடு; இரும்புக்கொல்லன்; தோற்கொல்லன்; நாந்தகம்-வாள்; மண்ணான்-வண்ணான்; கடவு-கிராமம் (வட இலங்கையில்-கிராமங்களுக்குக் கடவை என்னும் பெயருண்டு.) கலசம் ஒழுகுக-அபிஷேகம்; வெளிச்சப்பாடு-தெய்வமேறிச்சொல்லும் மொழிகள் (Oracle); உள்ளடாத-சாதியால் விலக்கப்பட்ட; மதுரம் (இனிப்பு) தீற்றல்; நடுமுற்

றம்; சோறூண்; புளிகுடி; மனை; ஓட்டம் துள்ளல்; திருமுகம் பிடிக்குக; பணப்பிள்ளை; உன்னிதன்; சாவார் (அரசனுக்காக உயிரை விட ஆயத்தமாயிருப்போர்); வாற்கண்ணடி; அகம்படி (மெய்காப்பாளர்); வைக்கான் குடை; எச்சில்; காரணவன்; கணி (சோதிடன்); அம்புலிக்குறி; அடிகள்; காவு (சோலை); நயினுக்கள்; இளையது; அரையன்; மூர்த்தி (தேவன்) என்பனவும் இவைபோன்ற பலவுமாகும்.

---

## மக்கட்குலங்கள்

ஆதிகால மனிதன் இக்கால மனிதனைவிடச் சிறிது உடலமைப்பில் வேறுபட்டவனாகவிருந்தான். நீண்டகால வாழ்க்கையின் பின் மனிதனின் உடலமைப்புச் சிறிது சிறிதாகத் திருத்தமடைந்தது. உலகிலே மிகப்பழைய மனிதஎலும்பு சாவகத்தீவிற் கிடைத்தது. அவ்வெலும்புகளை வைத்துக்கொண்டு அவ்வெலும்புக்குரிய மனிதனின் உருவம் எவ்வாறிருந்தது என ஊகித்து உருவமமைக்கப்பட்டுள்ளது. மனித நூலார் அம்மனிதனுக்கு நிமிர்ந்து நிற்கும் வாலில்லாக் குரங்குமனிதன் எனப் பெயரிட்டுள்ளார்கள். அம்மனிதனின் தோற்றம் குரங்கின் சாயலை ஒத்திருக்கின்றது. "சாவகத்தீவு மனிதனி"ன் காலம் ஐந்துலட்சம் ஆண்டுகள் வரையில் என்று கருதப்படுகின்றது.

சீன தேசத்திலே பீக்கின் என்னும் இடம் ஒன்று உண்டு. அங்குள்ள மலைக்குகை ஒன்றில் முற்கால மனிதனின் மண்டையோடு ஒன்று கண்டு

எடுக்கப்பட்டது. அம்மண்டை ஓட்டுக்குரிய மனிதன் **பீக்கின் மனிதன்** எனப்படுவான். அவன் சாவகத்தீவு மனிதன் காலத்துக்குச் சிறிது பிற்பட்டவனுகலாம். பீக்கின் மனிதனின் மண்டை ஓடு கண்டு எடுக்கப்பட்ட குகையுள், கல்லாயுதங்களும் அடுப்பும் கருகிய எலும்புகளும் காணப்பட்டன. ஆயுதங்கள் செய்தற்குப் பயன்படுத்தப்பட்ட கற்கள் அவ்விடங்களிற் கிடைக்கக்கூடாதவை. ஆகவே அவை பிறவிடங்களினின்றும் கொண்டு வரப்பட்டன வாதல்வேண்டும். பீக்கின் மனிதன் நெருப்பின் பயனை நன்கு அறிந்திருந்தான்.

இங்கிலாந்திலே பிட்டௌன் (Pitdown) என்னும் இடம் ஒன்று உண்டு. இங்கு முற்கால மனிதனின் மண்டை ஓடு கண்டு எடுக்கப்பட்டது. இம்மனிதனுக்கு **பிட்டௌன் மனிதன்** என்று பெயர் இடப்பட்டுள்ளது. இம்மனிதன் பீக்கின் மனிதனுக்குக் காலத்தாற் பிற்பட்டவனுவன்.

செர்மனியிலுள்ள ஹெய்டில்பெர்க் (Heidelberg) என்னும் இடத்தில் இன்னொரு முற்கால மனிதனின் மண்டை ஓடு கண்டு எடுக்கப்பட்டது. இம்மண்டையோட்டுக்குரியவன் **ஹெய்டில் பெர்க் மனிதன்** எனப்படுவான். இவன் பிட்டௌன் மனிதனுக்குப் பிற்காலத்தவனுவன். இவன் காலம் ஒரு இலட்சத்து ஐம்பதினுயிரம் ஆண்டுகள் அல்லது அதனினும் இருமடி ஆகலாம்.

இம்மனிதனுக்குப் பிற்பட்டவன் நின்டேர்தல் மனிதன். இவனின் மண்டையோடு செர்மனியிலுள்ள **நின்டேர்தல்** என்னுமிடத்திற் கண்டுபிடிக்கப்

பட்டது. இவ்வகை மனித எலும்புகள் பெல்சியம், பிரான்ஸ், ஸ்பெயின், சிபிரால்டர், இங்கிலீஸ் கால்வாயிலுள்ள தீவுகள், இத்தாலி முதலிய இடங்களிலும்பால்கனின் பல பகுதிகளிலும் காணப்பட்டன. எலும்புகளோடு அம்மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்களும் கண்டெடுக்கப்பட்டன. நின்டேர்தல் மனிதனின் காலம் 70,000 ஆண்டுகள் வரையில்.

நின்டேர்தல் மனிதனுக்குப் பிற்பட்டவன் **குரோமங்கன்** (Cro-mangon) மனிதன். இவன் இனத்தைச் சேர்ந்த மக்கள் ஆசியாவிலோ ஆபிரிக்காவிலோ தோன்றி 25,000 ஆண்டுகள் வரையில் ஐரோப்பாவிற் பரவியிருத்தல் கூடும். இவ்வகை மனித எலும்புகள் பிரான்சிலுள்ள குரோமங்கன் என்னும் குகையில் முதன் முதற் கண்டுபிடிக்கப்பட்டன.

இவ்வாறு படிப்படியே காலத்தால் மாறுபட்ட மனித என்புகளை வைத்துக்கொண்டு அமைக்கப்பட்ட மனித உருவங்களை நோக்கும்போது மக்களின் உடலமைப்புகள், காலந்தோறும் சிறிதுசிறிதாகச் செப்பமுற்று வந்திருக்கின்றன வென்பது தெற்றெனப்புலப்படும்.

இன்று இவ்வுலகில் ஒரு இனத்தைச் சேர்ந்தோரும் ஆனல், வெள்ளை, கறுப்பு, மஞ்சள் என நிறத்தால் மாறுபட்டோருமாகிய மக்கள் காணப்படுகின்றனர்.

மக்கட்குலங்களை வேறுபடுத்தி அறிதற்குத் தோல், கண்களின் நிறம், மயிரின் தன்மை, உடம்பில் காணப்படும் மயிரின் வளர்ச்சி, எலும்புகளின்

பருமை, உடம்புக்கட்டு, தலையின் வடிவம் முதலியன ஆராயப்படுகின்றன. உலகில் ஒரு குலத்தினர் இன்னொரு குலத்தினரோடு கலந்து வாழ்கின்றார்கள். ஆகவே உலகில் கலப்பில்லாத குலங்களை இன்று காணுதல் அரிது.

மக்கள் பழைய கற்காலத்தின் தொடக்கத்திலேயே உலகின் பலபாகங்களிற் சென்று வாழத் தொடங்கினர். உலகின் பலபாகங்களிற் காணப்பட்ட பழங்கற்காலமக்களின் மண்டை ஓடுகளும் பிற சின்னங்களும் ஒரேவகையாகக் காணப்படுகின்றன. இதனால் நிறம் மண்டையோடு முதலியவைகளால் வேறுபடுத்தி அறியப்படும் மக்கட் குலங்கள் அக்காலத்திற்றோன்றவில்லை எனத் தெரிகின்றது. புதிய கற்காலமக்களின் மண்டையோடுகள் வெவ்வேறு வகையாகக் காணப்படுகின்றன. ஆகவே அக்காலத்தில் நிறம் முதலியவைகளால் வேறுபட்ட மக்கட் கூட்டத்தினர் தோன்றி வாழ்ந்தார்கள் எனத் தெரிகிறது.

**மக்கட் குலங்கள் எழுதற்குரிய காரணங்கள் :—** இப்பூமியின் பாகங்கள் வெவ்வேறு வெப்பநிலையுடையன. வெப்பதட்ட நிலைகளால் மக்களுடைய மேனியின் நிறம் மாறுபடுகின்றது. மேனியின் நிறம்போலவே கண், மயிர் ஆதியவற்றின் நிறமும் மாறுதல் எய்துகின்றது. உண்ணும் உணவு, புரியும் தொழில்களுக்கேற்ப உடம்பின் பருமை உறுப்புக்களின் வளர்ச்சி ஆதியன வேறுபடுகின்றன. இம்மாறுபாடுகள் தலைமுறை தலைமுறையாக வருதலால், ஒரு மகக்ட் கூட்டம் இன்னொரு மக்கட்கூட்டத்தினின்றும் நிறம்,

உயரம், மண்டை, தோற்றம் முதலியவற்றால் பிரித்தறியக் கூடியது ஆகின்றது.

**மேல்நாட்டு ஆசிரியரின் பழைய சாதிப்பிரிப்புக்கள்:—** கிறித்துவ வேதத்தின் பழைய ஏற்பாடு, நோவாவுக்கு சாம், காம், யபெத்து என்னும் மூன்று புதல்வர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் முறையே ஆசியா, அபிரிக்கா, ஐரோப்பா என்னும் நாடுகளிற் குடியேறி மக்கட்சந்ததியைப் பெருக்கினார்கள் என்றும் கூறுகின்றது. இக்கூற்றினைக் கடைப்பிடித்த மேல்நாட்டாசிரியர்கள், பழைய ஆபிரிக்க மக்களைச் கம்த்தியரென்றும், ஆசியமக்களைச் செமத்தியரென்றும், ஐரோப்பிய மக்களை ஆரியரென்றும் குறிப்பிடுவாராயினர். இற்றை ஞான்றை மக்கட்குல ஆராய்ச்சியாளர் நிறம், உடற்கூறு முதலியவைகளை நோக்கிக் கறுப்பு மக்களை நிகிரோவர் என்றும், வெண்மக்களை ஆரியரென்றும் மஞ்சள் நிறமக்களை மங்கோலியரென்றும் பிரிப்பர். ஆரியமக்கள் காக்கேசியர் எனவும்படுவர். காக்கேசியர் வடகாக்கேசியர் தென்காக்கேசியர் என இரண்டாகப் பிரிக்கப்படுவர். மத்திய தரைச்சாதியினர், திராவிடர், பொலினீசியர் ஆதியோர் தென்காக்கேசிய இனத்தில் அடங்குவர்.

மேல்நாட்டுக் குலநூலார் நோடிக், அல்பைன், மத்தியதரைக் குலங்கள் என மக்களை மூன்று பெரும்பிரிவுகளாகவும் குறிப்பிடுவர். நோடிக் மக்கள் என்போர் வடக்கில் உள்ளோர். அல்பைன் மக்கள் வடக்குக்கும் மத்தியதரைக்கும் நடுப்பட்ட இடங்களில் வாழ்வோர். மத்திய தரைமக்கள் மத்

தியதரை நாடுகளில் வாழ்வோர். இப்பிரிப்பு நிறைவுடையதன்று.

## மெசபெத்தேமியாவில் குடியேறிய பழைய இந்தியர்

மேற்கு ஆசியாவிலே யூபிராத்து தைகிரஸ் என்னும் ஆறுகள் நீர்ப்பாய்ச்சுகின்ற செழிப்பான நாடு மெசத்பெதேமியா எனப்படும். பண்டைக் காலத்தே இந்தியாவினின்றும் மக்கள் சென்று மெசபெத்தேமியாவிற் குடியேறினர்கள் என்பது பழஞ்சரித்திர ஆராய்ச்சி வாயிலாகத் தெரியவருகின்றது.

பழஞ்சரித்திர ஆராய்ச்சியில் தேர்ந்த அறிஞர் ஒருவர், "பழைய பபிலோனியர் அசீரியர்களிடத்திற் காணப்பட்ட வியப்புமிக்க நாகரிகம், கல்வித்திறன் என்பன சுமேரிய சாதியாரிடம் இருந்து அம்மக்களாற் கற்றுக்கொள்ளப்பட்டனவாகும்" எனக் கூறியுள்ளார். இது மிக வியப்பைத் தரத்தக்கதாயிருக்கின்றது. இதனல் ஆதி மெசபெத்தேமியாவின் குடிகள் எவ்வளவு தூரம் இத்தகை நாகரிகத்துக்கு ஆதிகாரணராயிருந்தார்களென்று நாம் ஊகிக்கலாம். நாகரிகம் தொடங்கிய காலம் முதல் இந்தியாவினின்று பாரசீக வளைகுடாவிற்போய்க் குடியேறிய திராவிடக் கூட்டத்தினர் இச்சுமேரியர் அன்றி வேறொருவருமல்லர். *

" The development of Mohenjo-Daro Script, the religion of these two countries and that of Egypt, the titles of kings, the number of zodiacal constellations among the proto Indian people and the relative

பிரிட்டிஷ் நூதன பொருட்காட்சிச் சாலையைச் சேர்ந்த எச். ஆர். ஹால் (H. R. Hall) என்பார் யூபி

position of these constellations, the changing of the proto Indian constellation of the harp (Yal) for Turus (the bull) which might have taken place in Sumar, the tradition of the ancient people of Mesopotamia recorded by Berosus, the parallel by Biblical account in Gen ii.1.5 all point to the same conclusion, that the migration of the *Mediterranean race Commenced from Indian and extended through South Mesopotamia and North Africa; spread through Crete Cyprus, Greece, Italy and Spain and across the Prynees reached central Europe and the British Isles.* The route starting from Ceylon to Ireland is marked by uninterrupted chain of Dolmens and other megaliths that seem to be the relics of the enterprising and highly civilized race which is termed the Mediterranean by the anthropologists and which in India has been quite unreasonably despised under the name Dravidian"—Journal of Iadian History Vol XVI Part I Fr. Heras.

"சிந்துப் பிரதேசத்திலிருந்து நமது நாகரிகம் பாபிலோனியா எகிப்து முதலிய தேசங்களுக்குப் பரவியது. அவ்விடங்களிலிருந்து இந்தியாவிற்குப் பரவியது என்ற ஐரோப்பிய ஆராய்ச்சியாளரின் எண்ணம் தவறென்றே கருதவேண்டும். பாபிலோனியாவில் கி. மு. 700-ல் ஒரு தமிழ்க்குடித்தனம் இருந்தது.

தென்னாட்டிலிருந்து தமிழ் நாகரிகம் உரோமாபுரிக்கும் கிரேக்க நாட்டிற்கும் பரவியது. இன்னும் தக்கிண பீடபூமியைச் சேர்ந்த வேட்டுவர் என்ற குறிஞ்சிநில மக்கள் யவன தேசத்திற்குச் சென்று தங்கள் அரசை நிலைநிறுத்தித் தங்கள் பெயரையும் அந்நாட்டிற்குக் கொடுத்தார்கள். இதுவே Crete தேசம். இதன் நாகரிகத்திற்கும் தமிழர் நாகரிகத்திற்கும் ஒப்புமை மிகுதியாயுள்ளது."- மணிமலர்த்திரட்டு திரு. வி. ஆர். இராமச்சந்திரதீட்சிதர் M.A. வரலாற்றுஆராய்ச்சியாளர் பல்கலைக்கழகம் சென்னை.

பவேரு ஆங்கிலத்தில் (பாபிலோனியா) நகரத்தில் மு. ர. சு. என்ற விலாசமுள்ள தமிழர்கடை கி. மு. ஆறும் நூற்றாண்டில் இருந்தது. அந்தக் கடைக்கணக்குகள் அவ்வூர் வழக்கப்பிரகாரம் களிமண்ணிலெழுதி வெய்யிலில் உலர்த்தப்பட்டன. அவ்வகையான கணக்குகள் இப்பொழுது அகப்பட்டிருக்கின்றன—இந்தியர் சரித்திரம் பக். 41 பி. தி. சீனிவாச ஐயங்கார் எம் ஏ. எல் டி.

ராத்து ஆற்றை அடுத்த நாடுகளில் ஆதியில் நாகரிகத் தொடக்கத்திற்குக் காரணராயிருந்த சுமேரிய சாதியாரைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

சுமேரியருடைய நாகரிகம் எல்லாவகையிலும் நிறைவுடையதுபோலச் சடுதியிற் கண்களுக்குத் தோன்றுகின்றது. ஆனால் அது வெளித்தேசத்திலிருந்து மெசபெத்தேமியாவிற்குக் கொண்டுவரப்பட்டதென்று மற்றக் காரணங்களால் நாம் அறிதலால் அது அப்படியே இருந்ததாதல் வேண்டும். அவர்களுடைய நாகரிகத்தின் ஆதி வளர்ச்சி பபிலோன் நாட்டிலன்று, பாரசீகமலைகளுக்குக் கிழக்கேயுள்ள வேறொரு தேசத்தில் உண்டாயிருக்கலாம்.

சுமேரிய சாதியாரின் உடற்கூறு அவர்களைச் சுற்றியிருந்த மற்றச்சாதியாருடையஉடற்கூற்றுக்கு வித்தியாசமாக இருந்ததென்பது அவர்களுடைய உருவச்சிலைகள் முதலியவைகளால் தெரியவருகின்றது. அவர்களின் மொழியும் செமித்தியர் ஆரியர் முதலியவர்களுடைய மொழிகளுக்கு வேறுபட்டதாயிருந்தது. அவர்களின் உருவம் மொழி ஆதியன இந்தியமக்களின் உருவம் மொழிகளை ஒத்திருந்தன.

இக்காலத்துள்ள சாதாரண இந்தியன் ஒருவனின் முக இரேகை பல்லாயிரம் ஆண்டுகளின்முன் வாழ்ந்த அவன் முன்னோருடையதுபோலவே யிருக்கின்றது என்பதில் ஐயம் இல்லை. சுமேரியர் என்னும் மக்கள் தரைவழியாக அல்லது கடல் வழியாக இந்தியாவிலிருந்து யூபிராத்து தைகிரஸ் என்னும் இரு ஆறுகள் நீர்பாய்ச்சுகின்ற நாட்டுக்குச் சென்ற சாதியார் என்று சந்தேகமின்றித் கூற

லாம். அவர்களின் நாகரிகம் வளர்ச்சி யடைந்த இடம் இந்தியாவே. அது சிந்து நதியை அடுத்த நாடாகவிருக்கவேண்டும். அவர்களுடைய எழுத்துக்கள் இங்கு முதன் முதலில் பட வடிவாகத் தொடங்கிப் பிறகு வளர்ச்சி யடைந்து சுருங்கிய சிறு எழுத்துக்களாகி யிருக்கவேண்டும். பிற்பாடு அவை பபிலோன் தேசத்துக்குக் கொண்டு போகப் பட்டு அங்குக் களிமண்ணில் சதுரவடிவுள்ள எழுத்தாணியால் எழுதப்பட்டபடியால் கூரிய முனையின் வடிவத்தைப் பெற்றிருக்கவேண்டும். இந்தியா, ஆதியில் மனித நாகரிகம் தொடங்கிய நாடுகளில் ஒன்று என்பதிற் சந்தேகமில்லை. சுமேரியர் இந்தியரை ஒத்திருந்தார்கள் என்பதை நாம் கருத்திற் கொள்ளும்போது கிழக்கிலிருந்து மேற்குத் தேசத்துக்கு நாகரிகத்தைக் கொண்டுவந்த செமித்தியரல்லாதவரும், ஆரியரல்லாதவருமாகிய சாதியார் இந்தியராயிருந்தார்கள் எனச் சொல்வது இயல்பாகும்.''

இந்தியாவிலுள்ள ஆதிக்குடிகள் எல்லோருரிலும் பார்க்கப் பழைய சாதியினராயிருந்த திராவிட சாதியாரின் ஆதி உற்பத்தி இன்னதென்று சொல்வது கூடிய தன்று. இந்தியாவிலோ மற்றெந்தத் தேசத்திலோ இருந்து அவர்கள் குடியேறினார்கள் என்று ஒருவராலும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. அவர்கள் ஆஸ்திரேலியாவின் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களா யிருத்தல்வேண்டுமென்று ஹக்ச்லி (Huxley) என்பார் கூறியதை ஸ்கிலாற்றர் (Sclater) கூற்றுக்கள் வலியுறுத்துகின்

றன. அவர் ஆபிரிக்கா இந்தியா ஆஸ்திரேலியா என்ற நிலங்களை அடக்கிக்கொண்டிருந்த கண்ட மொன்று இந்து சமுத்திரத்தில் அமிழ்ந்திப் போயிற்று என்று கூறியுள்ளார்.

இந்தியநாடு இயற்கையிற் செழிப்புடைய தான மையின் ஆரியருக்கு முற்பட்ட திராவிட நாகரிகம் அவ்விடத்திலேயே வளர்ச்சி எய்தியிருந்ததென்று எண்ணக் காரணம் உண்டு. ஆனால் இந்தியாவி னின்று மெசபெத்தேமியாவிற்போய்க் குடியேறிய திராவிடர் யாது காரணம்பற்றித் தங்கள் நாட்டை விட்டு வேறிடம் போக நேர்ந்ததென்பது கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒருவேளை பஞ்சத்தின் கொடுமையினலோ, அல்லது வாணிகத்தின் பொருட்டோ அல்லது பல தேசம் பார்க்கவேண்டுமென்னும் அவாவினலோ அவர்கள் இடம் பெயர்ந்திருக்கலாம். மேலும் எந்த வழியாய் அங்குச் சென்ருர்கள் என்று சொல்வது கடினமாயிருக்கின்றது. அவர்கள் பலுச்சிஸ் தானம் பாரசீகம் முதலிய தேசங்களின் வழியாய்க் கடுமையான பயணம் செய்திருக்கலாம். அல்லது கடற்கரை வழியாகக் கப்பல்களிற் போயிருக்கலாம்.

திராவிடமொழிக்கு இனமான ஒருமொழியைப் பலுச்சிஸ்தானத்தில் வாழும் பிராகூய் என்னும் சாதியார் பேசுதலால் திராவிடர் பலுச்சிஸ்தானத் தின் வழியாய் வடக்கே சென்ருர்கள் என்று எண்ண இடமிருக்கிறது. அவர்களுக்கு அடுத்த நாடாகிய பாரசீகத்தின் ஆதிக்குடிகள் திராவிட சாதியைச் சேர்ந்தவர்கள் என்று எண்ண இட

மிருப்பதாலும், நாம் முன் சொன்ன பொருள் அதிக நிச்சயமாக உறுதிப்படுகின்றது.

பாரசீகத்தில் வாழ்ந்த இவ்வாதிக்குடிகள் கிரேக்கரால் 'அனரிக்காய்' என்று அழைக்கப்பட்டார்கள். அநாரியா என்னும் சொல் 'அநாரிக்கா' என வழங்கிற்று. முதல் முதல் இந்தியாவில் வந்து குடியேறிய ஆரியர் திராவிடரை அநாரியர் என்றே அழைத்தார்கள்.

பல ஆண்டுகளின் முன் ஹெவிட் (Hewitt) என்னும் ஆராய்ச்சியாளர் இந்து வானசாத்திரம் பிறந்து வளர்ச்சியடைந்த இடம் யூபிராத்து ஆற்றை அடுத்த நாடு என்றும் இச்சாத்திரம் இந்தியாவுக்கு கி. மு. 4800 வரையில் கொண்டுவரப்பட்டதென்றும் பழைய காலத்தில் இந்தியாவிற்கும் மெசபெத்தேமியாவிற்கும் வாணிகத் தொடர்பு இருந்ததென்றும் பல ஆதாரங்கள் காட்டிக் கூறியிருக்கின்றனர்.

அவுரி நீலம் மசிரின் ஆடை முதலியன எகிப்தியருடைய கல்லறைகளிற் காணப்பட்டமை, குறைந்தது கி. மு. 1700 ஆண்டுகளின் முன்னேயே இந்திய சரக்குகள் எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டன என்பதை ஐயமற விளக்குவதாகும். இச்சரக்குகள் இந்தியாவுக்கே உரியவை. ஹெவிட் என்பார் மேற்கு இந்தியாவுக்கும் சுமர் என்னும் நாட்டுக்கும் கி. மு. 6000 ஆண்டுகளுக்கு முன்னேயே வாணிகத் தொடர்பு இருந்தது என்றும், பழைய கூர்ச்சரத்தில் சுமேரியர் குடியேறி யிருந்தார்களென்றும்

காட்டியிருக்கின்றூர். பிந்திய ஆராய்ச்சிகளால் ஹெஃவிட் அறிஞர் கூறியவை உண்மை யென வெளிப்படுவதுமல்லாமல் பழைய வரலாற்று ஆர்ராச்சியில் முதன்மையானவரான ஹால் என்பவரின் (Hall) கருத்திஞல் முடிவுகட்டவும் படுகின்றது.

இந்தியாவுக்குத் தொலைவிலுள்ள பலுச்சிஸ்தானத்தின் மலை நாடுகளில் வாழும் பிராகூய் என்னும் சாதியார் திராவிடமொழியைப் பேசினார்கள் என்னும் நிகழ்ச்சி, சுமேரிய சாதியினர்யார் என்று கண்டு பிடிப்பதற்கு ஒரு பெரிய சான்ருக விருக்கின்றது. எல்லாத் திராவிட சாதியாரிலும், பிராகூய் சாதியார் மாத்திரம் மற்றத் தேசத்தாரோடு கலவாததால் ஆதிச்சாதி இலட்சணம் மாருமல் இருக்கிருர்கள் என்று டாக்டர் கிரீர்சன் (Dr. Grierson) என்பார் சொல்வதை நாம் ஒப்புக்கொள்வோமாஞல், சுமேரியர் திராவிடசாதி இலட்சணம் உடையவர்களாயிருந்தமையின் அவர்கள் தென்னிந்தியாவினின்று வந்து குடியேறினவர்கள் என்று சொல்வது உண்மையா யிருக்கவேண்டும்.

பபிலோன் ஊர் முதலிய பழைய நகரங்கள் இருந்த இடங்களில் தரையிற் புதைந்துகிடந்து இப்பொழுது வெட்டியெடுக்கப்படுகின்ற பழம் பொருளுகளை ஆராய்ந்ததால் தென் பபிலோன் அல்லது சுமர் நாட்டிற் குடியேறிய சுமேரியரே, பபிலோனியரின் நாகரிகம் புத்திக்கூர்மை முதலியவைகளுக்கு ஆதிகாரணர்களாய் இருந்தார்களெனத் தெரியவருகின்றது. பபிலோன் இராச்சியத்தின் ஆதிவரலாற்றைப் படித்தால் அந்நாட்டை

ஆண்டவர்களும், அந்நாடு வளர்ச்சியடைவதற்குக் காரணரா யிருந்தவர்களும் சுமேரியர் எனத் தெரிய வரும்.

பட்டினங்களின் மேடுகளை வெட்டிப் பார்க்கையில் அடியிற் காணப்பட்ட பித்தளைப் பொருள்கள், நகர் எய்தியிருந்த நாகரிகத்துக்கு அடையாளமாக விருக்கின்றன. பபிலோன் நாட்டிலே உள்ள தெல்லோ (Tello) என்னும் நகரிற் காணப்பட்ட சுமேரியரின் பித்தளை ஆயுதங்கள் கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டன. சுமேரிய அரசர் எல்லாரிலும் பேர்போன குடியா (Gudiah) என்பவனின் கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வெண்கலச் சிலை பித்தளையின் ஆதிவரவாற்றைக் காலவரிசையாகக் காட்டும் குறிகளில் ஒன்றாகும்.

பேர்போன பழையவரலாற்று ஆசிரியர்கள் முதல் முதல் வெண்கலவேலை செய்யப்பட்ட இடம் இந்தியாதான் என்று கருதுகிறார்கள். வரலாற்று ஆசிரியர்களுள் பழமையே சிறப்புடையது என்னும் கருத்துடையவரான வின்சன் சிமித் (Vincent Smith) என்பாரும் பித்தளை இந்தியாவில் வெகு பழமை தொட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று ஒப்புக்கொள்கின்றார்.

1870-ம் ஆண்டில் மத்திய மகாணங்களைச் சார்ந்த குன்கேரியா (Gungeria) என்னும் இடத்தில் வெட்டியெடுக்கப்பட்ட வியப்புக்கேற்ற பழம் பொருள்களுள் சில பித்தளை ஆயுதங்களைப், பபிலோனிற் காணப்பட்ட அவ்வகைப் பொருள்கள் ஒத்திருக்கின்றன.

சுமேரியர் பட்டினங்கள் கட்டுவதிலும், நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சும் வேலை செய்யும் வகையிலும் பேர்போனவர்களாயிருந்தார்கள். சிற்ப நூல் முறைப்படி கட்டிடங்களைக் கட்டவேண்டுமென்று முதல் முதல் அறிந்தவர்கள் அவர்களே. அவர்களின் ஒவ்வொரு முக்கிய நகரமும் ஒவ்வொரு இராச்சியமாக அமைக்கப்பட்டது. ஒவ்வொரு நகரத்துக்கும் ஒவ்வொரு கோயிலும் தெய்வமும் இருந்தன. நகரைச் சேர்ந்த நிலமெல்லாம் இந்தத் தெய்வத்துக்கே சொந்தம். ஒவ்வொரு நகரமும் வம்ச பரம்பரையாய் அதிகாரியால் ஆளப்பட்டது. தெய்வத்துக்கு அந்த அதிகாரியே பூசாரியாயிருந்து 'பற்றேசி' அல்லது தெய்வத்தானத்தில் உள்ளவன் என்ற பெயரையும் பெற்றான்.

ஆதி பபிலோனியாவில் முக்கிய நகரமாகிய நிப்பூரில் '**என்னில்**' என்னும் கடவுளின் ஆலயம் ஒன்று இருந்தது. இவ் என்னில் என்பது திங்களைக் குறிக்க வழங்கும் தமிழ்ச் சொல்லாகிய நிலா என்பதன் திரிபு. நிப்பூரிலுள்ள இந்த ஆலயத்தில் சுமேரிய அரசர் தங்கள் தெய்வத்துக்குச் செலுத்தும் காணிக்கைகளெல்லாம் ஒன்று சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆராயுமிடத்துப் பண்டை வரலாற்றுக்கு உதவியான பலவற்றை நாம் அங்கே காணலாம். அவைகளால் யாம் அறியக் கிடப்பன: கி. மு. 6000 ஆண்டுகளின் முன் சுமேரியர் மக்கள் நெருக்கமுள்ள பெரிய நகரங்களில் வாழ்ந்தார்கள். நாட்டுக் கருமங்களுக்கும் சமயக் கருமங்களுக்குமான ஆட்சிப் பிரிவுகள் பல இருந்தன என்பவைகளாகும்.

அவர்கள் உலோகங்களைப் பயன்படுத்தியதையும், தங்களுக்கென எழுந்து உண்டாக்கி யிருந்ததையும் நோக்கின் அவர்கள் வெகுகாலத்தின் முன் நாகரிகம் அடைந்திருந்தார்கள் என்று தெரிகிறது. அவர்கள் தலைகளைப் பார்த்தால் அவர்கள் தலை மயிரை வளர்த்தார்கள் என்றும், நீண்ட அங்கியை ஆடையாகப் பயன்படுத்தினார்கள் என்றும் தெரிகிறது. அவர்களின் முக இரேகையும் உடையும் திராவிடரின் வடிவையும் உடையையும் ஒத்திருத்தலால் அவர்கள் திராவிட சாதியினரே எனச் சந்தேகமறக் கூறலாம். இவ்வளவு தூரம் அநேக வகைகளில் இருவரும் ஒத்திருத்தல் தற்செயலாய் உண்டானது என்று சொல்லமுடியாது.

இந்தியாவிலுள்ள பல மொழிகளின் எழுத்துக்களுக்குத் தாயாகிய பிராகூய் எழுத்து மெசபெத்தேமியாவில் பிறந்ததென்றும் அது இந்தியாவிற்குக் கி. மு. 800 வரையில் கொண்டுவரப்பட்டதென்றும் டாக்டர் பூலர் (Buhler) கூறியுள்ளார்.

[இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட ஹரப்பா மொகஞ்சொதரோ எழுத்துக்களை நோக்குமிடத்து இந்திய நாட்டினின்றுமே எழுத்துக்கள் மேற்கு உலகத்துக்குச் சென்றதென்பது உறுதிப்படுகின்றது.]

சம்போலியன் (Champollion) என்பவரை ஒத்த பிறிதோர் அறிஞர் தோன்றிப் பழந்திராவிட மக்களின் நாகரிகம் இன்னதென்று நிறைவாக வெளியிடும் காலத்தில், பழைய மெசபெத்தேமியாவில் வளர்ச்சி எய்திய நாகரிகம் இந்தியாவினின்றும்

அங்குச் சென்று குடியேறிய சுமேரியரால் உண்டான தென்று யாவரும் இன்று ஒப்புக்கொள்வது போலவே வானசாத்திரமும் ஆதிமொழியின் எழுத்துக்களும் இவை போன்ற பிறநாகரிகக் குறிகளும் இந்தியாவில் முதல் முதல் ஆரம்பமாயின வென்று ஒப்புக் கொள்ளப்படும்.

தற்கால வரலாற்று ஆராய்ச்சியைக் கவனிக்கும் போது ஆதி உலகம், திராவிடக் கூட்டத்தினருக்கு இவ்வளவு தூரம் கடமைப் பட்டிருந்தது உண்மையென நன்கு புலப்படுவதாகும். *

---

* இக்கட்டுரை ஆங்கிலத்தில் A. கோஷ் என்பவர், மொகஞ்சொதரோ ஹரப்பா முதலிய சிந்துநதி பள்ளத்தாக்கிற் புதையுண்டு கிடந்த தமிழரின் பண்டைய நகரங்கள் கண்டுபிடிக்கப்படுவதன் முன் எழுதியதாகும். சிந்துநதிப் பள்ளத்தாக்கில் நடத்திய புதைபொருள் ஆராய்ச்சிக்குப்பின் சேர்யோன் மார்சல், டாக்டர் லாங்கடன் ஜி. ஹன்டர், ஹெரஸ் பாதிரியார், டாக்கர் பனேஜி முதலிய வரலாற்றுப் பேராசிரியர்கள் கூறுவன இவ்வாசிரியர் கருத்துகளோடு ஒத்து நிற்கின்றன. ஒரு முறையன்று பல முறைகளில் வட இந்தியாவிலிருந்து தரைவழியாகவும், தென்னிந்தியாவிலிருந்து கடல்வழியாகவும் திராவிட மக்கள் மேற்கு ஆசிய நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். இதனை ஒப்பவே மேற்கு ஆசிய மக்கள் பலவேறு காலங்களில் இந்திய நாட்டை அடைந்து குடியேறியுள்ளார்கள். கொச்சி மலையாளம் முதலிய இடங்களில் வாழும் பலஸ்தீனினின்றும் வந்த யூதமக்களும், சீரியாவினின்றும் வந்த சீரிய கிறித்துவர்களுமே இதற்குச் சிறந்த எதுத்துக்காட்டாவர்.

# பெரும்பாணாற்றுப் படை

பெரும்பாணாற்றுப் படை, சங்கத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பத்துப் பாட்டில் நான்காவதாக உள்ளது. அது, இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளின் முன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய பாடலாகும்.

பண்டைநாட் புலவர், அரசரையோ பெருமக்களையோ பாடுமிடத்து, ஒருவன் இன்னொருவனுக்கு அவ்வரசர், பெருமக்கள் புகழைக் கூறுவதுபோலப் பாடும் ஒருவகை வழக்கையும் மேற்கொண்டனர். பாணாற்றுப்படை என்பது கொடைச்சிறப்பு வாய்ந்த அரசன் ஒருவனைப் பாடி அவனிடம் மட்டில்லாச் செல்வத்தைப்பெற்று மீளும் பாணன்ஒருவன், கொடுப்பாரைக் காணாது சுற்றத்தோடு அலைந்து திரியும் மற்றொரு பாணனை வழியிடத்தே எதிர்பட்டுத், தான் பாடிப்பெற்ற பரிசில்களையும் அவைகளை அளித்த அரசனது கொடைத்திறனையும் எடுத்துக் கூறி அவன்பால் இவனையும் செல்லுமாறு போக்குவதாகச் செய்யப்பட்ட நூலாகும்.

பாணர் என்போர் குலத்தில் தாழ்ந்தவர்களாகக் கொள்ளப்பட்டபோதும் அவர்கள் பெருமக்களாலும் அரசர்களாலும் நன்கு வரவேற்கப்பட்டனர். திருநீலகண்டயாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார் முதலாயினோர் பாணர் மரபினரே. தேவாரங்க

ளுக்குப் பண்ணடைவு செய்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில்வந்த ஒரு பெண்மணியாராவர். இதனால் பாணர் குலத்தினர் இசைபாடுவதில் எத்துணை திறம் பெற்றிருந்தார்கள் என நாம் உய்த்துணர்தல் சாலும்.

### * பெரும்பாணன் வறுமையால் அலைந்துதிரியும் பாணனை எதிப்படல்

முதுவேனிற்காலத்தே கொடிய வெய்யில் காய்கின்றது. பாணன், ஒருவன் இடப் புறத்தே யாழை அணைத்துக்கொண்டு தனது சுற்றத்துடன் வள்ளல்களைத் தேடி அலைந்து திரிகின்றான். தொண்டைமான் இளந்திரையனைப்பாடி அவன்பால் பல செல்வங்களைப் பரிசிலாகப் பெற்று மீளும் பெரும்பாணன், அலைந்துதிரியும் பாணனை எதிர்ப்படுகின்றான்; வறுமையால் நொந்து தனது கல்வியை வெறுத்துக் கூறுகின்ற அவனை நோக்கிப் பெரும்பாணன் கூறுகின்றான்.

இதோ பார், யான் கொடைவள்ளலாகிய இளந்திரையனின் தலைநகராகிய காஞ்சிபுரத்தினின்றும் பிறர்க்குக் கொடுக்கினும் குறைவுபடாத இப்பெருஞ் செல்வத்தைப்பெற்று வருகின்றேன். பாண்டியனிலும் பார்க்கச் சிறந்தவனும் சோழர் குடியிற் பிறந்தவனுமாகிய இளந்திரையனை நினைப்பாயாயின் உடனே உனது வறுமை ஒழியும். அவ

* இது பெரும்பாணாற்றுப்படை என்னும் செய்யுள்நூலின் வசன நடை. இந்நூல் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின் தினவாழ்க்கை எவ்வகையினது என ஓவியம்போற் காட்டுகின்றது.

னுடைய தலைநகருக்குச் செல்லும் வழியைக் கூறு கின்றேன் கேள்.

அவனது நகருக்குச் செல்லும் வழியில் வழிப் போக்கரை வெட்டிக் கொள்ளையிடும் தீயோரில்லை. அவனுடைய காட்டில் இடியேறும் இடியாது; பாம்புகளும் தீண்டா; புலி முதலிய விலங்குகளும் தீங்கிழையா; அக்காட்டு வழியில் நீ இளைப்பாறிச் செல்லுதி.

### உமணர் வண்டிகள்

காட்டிடத்தே செல்லும் பெரும்பாதையினின்றும் பல கிளைவழிகள் பிரிந்து செல்லும். அவ்வழிகளால் உப்பு வாணிகர் வண்டிகளில் உப்பை ஏற்றிச் செல்வர். வண்டிக் கூடாரத்தின் முன்புறத்தே கட்டப்பட்ட உறியில் காடிப்பானை தொங்கும்; கீழே கோழிக்கூடுகள் கிடக்கும். உமணப் பெண் வண்டியின் முன்புறத்தே இருந்து எருதுகளை அடித்தோட்டுவாள். அவள் கையிடத்துள்ள பிள்ளைக்குத் காவலாகப் பூவோடுகூடிய வேப்பிலையை வைத்திருப்பாள். வலிய உடலினராகிய உமணர் இளைத்த எருதுக்குப் பதில் பூட்டுதற்குப் பல எருதுகளை அடித்து ஓட்டிக்கொண்டு பக்கத்தே செல்லாநிற்பர்.

### வணிகர்

மாணிக்கம் முத்து சந்தனம் என்பவற்றை எவ்விடங்களிலும் கொண்டு சென்று விற்கும் வணிகர் ஒத்த கனமுடைய மிளகு மூடைகளைச் சுமந்து செல்லும் கழுதைகளின் பக்கத்தே காவல் காத்துச் செல்வர். அவர்களின் மார்பிலே அம்புபட்டு ஆறிய

புண்கள் காணப்படும்; அவர்கள் யானைத் தந்தத்தால் செய்த உறையில் இட்டவாளை ஆடையினாற் கட்டித் தொங்கவிட்ட தோளினர். சட்டையிட்ட உடலினர்; செருப்புத்தொட்ட காலினர்; அரையிலே உடைவாள் செருகிய உடையினர்.

### சுங்கங்கொள்வார்

இவ்வாறு உமணரும் கழுதைகளும் செல்கின்ற வழிகள் எல்லாம் ஓரிடத்தே சென்று கூடும். அவ்விடத்தில் அரசனுடைய காவலர் சுங்கங்கொள்ளும் பொருட்டு விற்கள் தாங்கிய வீரர்களுடன் நிற்பர்.

### எயினர் குடியிருப்பு

அவ்விடத்தின் அயலே எயினரின் சிறிய வீடுகள் அங்கும் இங்கும் காணப்படும். அவை அணிலும் எலியும் உள்ளே நுழையாதபடி ஈந்தின் ஓலைகளால் வேயப்பட்டு முட்பன்றியின் முதுகுபோற் றோன்றும். பிள்ளைகளைப் பெற்ற எயிற்றியர் குடிசைகளின் ஒரு புறத்தே மான்றோலில் முடங்கிக் கிடப்பர். மற்றைய பெண்கள் பாரையினால் எறும்புப் புற்றுக்களைக் கிண்டி எறும்புகள் சேர்த்து வைத்திருக்கும் புல்லரிசியைச் சேர்த்துவருவார்கள். வீட்டுமுற்றத்தே விளமரம் நிற்கும். அதன் அரையில் *பார்வைமான் கட்டப்பட்டு நிற்கும். விளமரம்

* வேட்டையாடுவோர் மிருகங்களையும் பட்சிகளையும் தங்கள் தொழிலுக்கு இசைந்து நடக்குமாறு பழக்கி வலை முதலியன கட்டுமிடத்தில் விடுவர். இவற்றால் நம்பிக்கைகொண்டு இவற்றின் இனங்கள் வந்து கண்ணியில் பட்டுக்கொள்ளும். இவற்றுள் பறவையைப் பார்வைப்பட்சி என்றும், மிருகத்தைப் பார்வைமிருக்கமென்றும் கூறுதல் மரபு.

நிழல்செய்யும் இடத்தே தோண்டப்பட்ட நில உரல் உண்டு. அவர்கள் உரலிலே புல்லரிசியை இட்டு வயிர உலக்கையினல் தீட்டுவார்கள்; ஆழ்ந்த கிணற்றில் உவர் நீரை மொண்டுவந்து பழைய ஒறுவாய் போன பானையிலே உலைவார்த்து, முரிந்த அடுப்பிலே வைத்துப் புல்லரிசியை இட்டுச் சோறடுவார்கள். நீயும் உனதுசுற்றத்தினரும் அவர்கள் குடிசைகளை அடைவீராயின் சோற்றைத் தேக்கிலையிலே இட்டுஉப்புக்கண்டத்துடன் உண்ணும்படி தருகுவர்.

### கானவர்

வறட்சியுடைய காட்டிடங்களில் நீர் நிற்கும்படி தோண்டிய குழிகள் பல உண்டு. இராக்காலத்தே கானவர் அவைகளுள் பதுங்கியிருப்பார்கள். அகத்திப்பூப்போன்ற கொம்புடைய பன்றிகள் நீருண்ணும் பொருட்டு அக்குழிகளிடத்தே வரும். அப்பன்றிகளை அக்கானவர் வேட்டையாடுவர். அவர்கள் பகற்காலத்தே வளைந்த வேலியிடத்தே வலைகளை மாட்டுவர்; அங்காந்தவாயுடைய நாய்களுடன் சென்று பற்றைகளை அடித்துப் பூவின் புறவிதழ்போன்ற செவியுடைய முயல்களை ஓட்டி அவைகளை வேட்டையாடுவர்.

### எயினர் அரண்

நீவிர் அவ்விடத்தைவிட்டு அப்பாற் சென்றால் எயினர்களின் அரண் தோன்றும். அதன் உயர்ந்த மதில் ஊகம் என்னும் ஒருவகைப் புல்லினல் வேயப்பட்டிருக்கும். வீடுகளைச் சுற்றி முள்வேலி இடப்பட்டிருக்கும்; வாயிலிடத்தே சங்கிலியிற் கட்டிய நாய் நிற்கும்; வீட்டின் உட்கதவுகள் திரண்ட மரங்

களால் தாழிடப்பட்டிருக்கும். வாயிலில் கழுமரங்கள் நிரையாக நடப்பட்டிருக்கும். வீடுகளின் உட்புறத்தே பகைவரைக் குத்துதலால் கூர்மழுங்கிய வேல்களும், மணிகட்டிய கேடகங்களும், விற்களும் அம்புகளும் சார்த்திக் கிடக்கும். தலைவாயிலிடத்து தேன் கூட்டைப்போன்ற அடியினையுடைய அம்புக் கட்டுக்களும், மேளமும் தொங்கும். இவ்வியல் பினதாகிய எயினர் அரணை அடைவீராயின் ஈந்தின் விதைபோன்ற சோற்றோடு நாய் வேட்டையாடிக் கொண்டுவந்த சங்குமணிபோன்ற முட்டைகளையுடைய உடும்பின் பொரியலையும் வீடுகள் தோறும் பெறுகுவிர்.

### மலைநாட்டுத் தலைவன்

அப்பாற் செல்வீர்களாயின் மலை நிலத்தை அடைவீர்கள். அந்நிலத்து ஆடவர் வாட்போர் செய்யும் திறமையும் கொள்ளையடித்துண்ணும் தொழிலுமுடையர். அக்குடியிலுள்ள கருக்கொண்ட பெண்கள் யானை எதிர்ப்படினும், பாம்பு தம்மீது செல்லினும் மேகம் இடிப்பினும் சிறிதும் அஞ்ச மாட்டார். இவ்வியல்பினதாகிய மறக்குடியிற் பிறந்த தலைவன் தன் சொற்கேளாத பகைவரின் நாட்டகத்தே தனது துணைவருடன் செல்வான். சென்று அவர்களின் பசுநிரைகளைக் கவர்ந்துவந்து அவைகளைக் கள்ளுக்கு விலையாகக் கொடுப்பான்; இனியகள்ளோடு ஆட்டு மாமிசத்தையும் உண்டு மத்தளங்கொட்ட மரத்தின் கீழ் நின்று இடத்தோளை வலப்புறத்தே வளைத்து மகிழ்ச்சி பொங்க ஆடுவான்.

## இடையர் வாழிடங்கள்

இவ்வகைக் குடியிருப்பைக் கடந்துசென்ருல் முல்லை நிலத்து ஊர்களை அடைவீர்கள். அங்கு வீடுகள் குறுகிய கால்கள்மீது கட்டப்பட்டுள்ளன. ஆட்டுமந்தைகள் நின்று தின்னும்படி அக்குறுகிய கால்களில் தழைகள் கட்டப்பட்டிருக்கும். வீட்டு வாயில்களில் சிறு தூறுகள் கிடக்கும். வீட்டின் கதவுகள் கயிற்ருல் வரிந்து செய்யப்பட்டவை. கயிற்ருல் வரிந்து வரகுவைக்கோல் பரப்பிய படுக்கையின்மீது ஆட்டுத்தோலை விரித்து முதிய இடையன் காவலாகப்படுத்திருப்பான். முற்றத்தே இறுக்கப்பட்ட முளைகளில் பசுக்களைக் கட்டும் கயிறு கிடக்கும். ஊரைச்சுற்றி இடப்பட்டுள்ள முள்வேலியின் பக்கங்களில் வெள்ளாடும் செம்மறி ஆடும் கிடக்கும். இவ்வியல்பின தாகிய ஊரிடத்தே புட்கள் ஒலிக்கின்ற விடியற்காலையில் இடைப்பெண்கள் மத்தினுல் தயிரைக்கடைந்து வெண்ணெயை எடுப்பார்கள்; புள்ளியாகத் தயிர் தெறித்த பானையிடத்துள்ள மோரைப் பூவாற் செய்த சும்மாட்டின் மேல் வைத்துக் குறிஞ்சி நிலத்தே சென்று விற்பார்கள். விற்றதாற் பெற்ற நெல் முதலியவற்றைக் கொண்டு வந்து தமது சுற்றத்தார் உண்ணும்படி செய்வார்கள். குறிய கரிய மயிரையுடைய ஆய்மகள் தான் நெய்யை விற்ற விலைக்குக் கட்டியாகிய பசும்பொன்னை வாங்காள்; பாலெருமையையும், நல்ல பசுவினையும் எருமை நாகினையும் கொள்வாள். வாயை மடித்துச் சீழ்க்கை அடிக்கின்ற இடையரின் குடியிருப்பில் தங்குவீராயின் அவர் தினையரிசிச் சோற்றைப் பாலுடன் தருகுவர்.

இடையர் கன்றுகளுடைய பசுக்கூட்டங்களைக் காட்டில் மேய்ப்பார்கள்; நெருப்புக் கொள்ளியால் துளையிட்ட குழல்களில் பாலைப்பண்ணை வாசிப்பார்கள். குழல் ஊதி இளைப்படைந்தாராயின் மரக் கொம்பை வளைத்துக் கட்டிய அரலைத் தும்பாகிய நரம்பைக் கையினால் தெறித்து வண்டின் ஓசை போன்ற குறிஞ்சிப் பண்ணை வாசிப்பார்கள். இவ்வகைப் புல்லடர்ந்த இடத்தைக் கடந்து செல்வீராயின் விடத்தர்மரங்கள் சூழ்ந்த இடத்தே மாடுகள் தங்கி நிற்கும் ஊரைக் காண்பீர்கள். வீடுகளின் முற்றத்தே யானைக் கூட்டம் நின்றாற்போல, வரகு முதலிய தானியங்கள் நிறைக்கப்பட்ட குதிர்கள் தோன்றும். தலைவாயில்களில் யானைக் கால்கள் போன்ற வரகு திரிகைகள் நடப்பட்டிருக்கும். புகையினாற் கறையேறிய கொட்டில்களின் சுவர்களில் வண்டிச் சக்கரங்களும் கலப்பைகளும் சார்த்தி வைக்கப்பட்டிருக்கும். வீடுகளின் கூரை வரகு வைக்கோலினால் வேயப்பட்டு மாரிகால மேகம் போலத் தோன்றும். இவ்வகை வீடுகளை அடைவீர்களாயின் அவரை விதையை வரகுடன் கலந்து சமைத்த உணவைப் பெறுகுவிர்.

### வயல் சார்ந்த குடியிருப்பு

அக் குடியிருப்புக்களைக் கடந்துசெல்லுவீர்களாயின் வீடு நிறைந்த உணவுப்பொருள்களுடைய உழவர்களின் வீடுகள் தோன்றும். அவ்விடத்தில், உழவர் எருதுகளை நுகத்திற் பூட்டிப் பெண் யானையின்வளைந்த வாய்போன்ற கலப்பையின் உடும்பின் முகம்போன்ற கொழுக்கள் மறையும்படி அமுக்கி

உழுது விதைத்த பயிர்கள் தோட்டங்களில் விளைந்து தோன்றும். அறுப்புக் காலத்தே வயல் வேலை செய்வோரின் ஆரவாரத்துக்கஞ்சிப் பயிர்களிடையே தங்கியிருந்த காடை பறக்கலாற்றாத, கடம்பின் பூவைப்போன்று வெள்ளிய குஞ்சுகளைக் கூட்டிக்கொண்டு முல்லைநிலத்தே தங்கும். வயல்களிலே, உலையிற் றுருத்தியை அமுக்கி ஊதித் தொழில் செய்கின்ற கொல்லனது முறிந்த குறட்டைப்போன்ற கால்களுடைய நண்டுகள் புற்றுகளில் இருக்கும். நண்டின் புற்றுகள் அழியும்படி கோரைப்புற்களை மண்ணோடு கொம்பாற் குத்தி எடுக்கும் எருதுகள் அவ்விடத்தே நின்று ஒன்றோடு ஒன்று போர் புரியும். இவ்வாறு எருதுகள் உழக்கிப் போர்செய்த வயல் நிலத்தை உழவர் மட்டஞ் செய்து நாற்றுமுடிகளை நடுவர். வயலிடத்தே வேலை செய்வோரின் பிள்ளைகள், களை பறிப்பார் பறித்தெறிந்த நெய்தற்பூவை மாலையாகக் கட்டி ஈருடைய தமது தலையிற் சூடுவர். அவர்கள் குவளைப் பூவை வெறுத்தார்களாயின் கோரைப்புல்லைக் கிழித்து முடிந்த நாரால் முள்ளிப் பூக்களை மாலையாகக் கட்டி அணிவர். அவர்கள் பழஞ்சோற்றை உண்ண விரும்பாது வரம்பிலே கட்டப்பட்டுள்ள சிறிய குடிலின் முற்றத்தில் அவலிடிப்பர். அவ்வோசையைக் கேட்ட கிளிகள் அஞ்சிப் பறக்கும். நெல்லறுப்போர் கதிர்களுடைய நெல்லின் தாள்களை அறுத்து மருதமர நிழலில் போரடுக்குவர். அப்போர்களின் பக்கத்தே சிலந்தி கட்டிய வலை துணங்கைக் கூத்தாடும் பூதங்களின் வெள்ளாடைபோலத் தோன்றும். வேலையாளர் போர்களின் அடியைப் பிடித்து

உதறிக் கடாக்களால் மிதித்து வைக்கோலையும் கூளத்தையும் மணியினின்றும் பிரித்து ஈரம்புலரும் படி மேல் காற்றில் கையினால் தூவித் தூற்றுவர். அவ்வாறு தூற்றியநெற்கு வியல் மலைபோல் உயர்ந்திருக்கும்.

இவ்வகைச் சிறப்பு மிகுந்த வயல்கள் சூழ்ந்த குடியிருப்புகளில், வீடுகளின் பக்கத்தே முளைகளின் ஆன் கன்றுகளைக் கட்டும் கயிறுகள் கிடக்கும்; தலையைத் திறந்து தானியங்கள் உள்ளே கொட்டப் பட்ட குதிர்கள் தோன்றும். தச்சச் சிறார் செய்த சிறு தேர்களைப் பிள்ளைகள் உருட்டிச் செல்லாநிற் பர்; அதனாற் களைப்புற்ற அவர்கள் செவிலித்தாய ரின் பாலை நிறைய உண்டு படுக்கையில் நித்திரை கொள்வர். இவ்வாறு வறுமை தெரியாத ஊரிடத்தே தங்குவீராயின் நெற்சோற்றினைக் கோழிப்பேட் டின் பொரியலோடு பெறுகுவிர்.

வயல்களின் இடையிடையே புகைசூழ்ந்த கொட்டில்கள் தோன்றும். அவ்விடத்தே வேலை யாளர், சிங்கம்பாய்தலால் யானை பயந்து சத்த மிட்டாற்போன்று ஓசை செய்யும் ஆலைகளில் கருப் பஞ்சாற்றைப் பிழிந்து கட்டியாகக் காய்ச்சுவார்கள். அக்கொட்டில்களிற் செல்வீராயின் கருப்பஞ்சாற் றையும் கற்கண்டையும் உண்ணும்படி பெறுகுவிர்.

**குளங்களில் மீன் பிடிக்கும் வலைஞர் குடியிருப்பு**

அப்பாற் சென்றால் வலைஞர் குடியிருப்பை அடைவீர்கள். அவர்களின் காஞ்சி முதலிய மரக் கொம்புகளாற் கட்டிய வீட்டின் கூரை தருப்பைப் புல்லால் வேயப்பட்டிருக்கும். வீட்டின் தலைவாயில்

புன்னைக்கொம்புகளாற் கட்டப்பட்டுள்ளன. அவைகளின் கூரைமீது படரவிடப்பட்ட சுரைக்கொடிகளில் காய்கள் தொங்கும். தலைவாயில் முற்றத்திலே மீன்களை வாரி எடுக்கும் பறிகள் கிடக்கும். இளையவர்களும் முதியவர்களும் தலைவாயிலிடத்தே கூடியிருப்பார்கள். பின்பு இருளும் கயலும் பிறவும் ஆழ்ந்த நீர் நிலைகளில் மீன் பிடிப்பார்கள். அவர்களின் குடியிருப்பில் தங்குவீராயின் நெல் முளையை இடித்து அரித்துச் செய்து சாடியிற் கிடந்து விளைந்த கள்ளை மீன் சூட்டோடு பெறுகுவிர்.

நீர் நிலையிலே, தூண்டிலிற்கோக்கும் இரையை இட்டுவைக்கும் தோற்பையுடைய பாணன், மூங்கிற்றடியிலே கயிற்றிற்கட்டிய தூண்டிலில் இரையைக் குத்தி நீருள் விடுவான். அவ்விரையைக் கவர்ந்து அகப்படாமற்சென்ற வாளைமீன் நீர் நிலையின் பக்கத்தே நிற்கும் பிரம்பின் நிழலைக்கண்டு அஞ்சும். அங்கு மலர்ந்திருக்கும், கடவுள் சூடுதற்குரிய தாமரைப்பூவைப் பறித்துச்சூட்டிக்கொள்ளாதே. பொய்கைகளிலே இந்திரவிற்போன்று மலர்ந்து கிடக்கும், குவளையையும் நீலத்தையும், பிறபூக்களையும் பறிந்துச் சூடிக்கொள்வாயாக.

### பார்ப்பார் இல்லம்

அப்பாற் சென்றால் பார்ப்பனர் இல்லங்களைக் காண்பீர்கள். வீட்டின்முன்னே உள்ள பந்தற் கால்களில் கொழுவிய ஆன் கன்றுகள் கட்டப்பட்டு நிற்கும். அவைகளின் தாய்கள் மேய்ச்சல் நிலத்தே சென்று மேயும். பார்ப்பனர் இல்லங்களுள் கோழி நாய் முதலியன நுழையமாட்டா.

வீடுகள் சாணியால் மெழுக்கப்பட்டிருக்கும். அவை களின் உள்ளே வழிபடு தெய்வங்களின் வடிவங்கள் காணப்படும்; கிளிகள் வேதம்பாடும். வளையணிந்த கையும் நல்லொழுக்கமுமுள்ள பார்ப்பன மகளிர் சுவைமிக்க உணவுகளைச் சமைப்பர். அவ்வில்லங்களை அடைவீர்களாயின் இராசான்னம் என்னும் சோற்றினையும், மாதுளங்காய்களைப் பில்லைகளாக அரிந்து மிளகுதூள் பெய்து கருவேப்பிலை கூட்டி நெருப்பில் வெதுப்பிய பொரியல்களையும், மாங்காய் ஊறுகாய் முதலியவற்றையும் உண்ணும்படிபெறுகுவிர். நீர்த்துறைகளிலே மகளிர் விளையாடிப் போக விட்டுப்போன குழைகளை நீலநிறமுடைய சிச்சிலிப் பறவை தனக்கு இரையென எடுத்துக்கொண்டு பட்சிகள் நிறைந்திருக்கும் பனையிற் போகாது அந்தணர் யாகசாலையில் நட்ட யூபத்தின் மேலிருக்கும். அது சோனகர் பாய்மரத்தின் மேலேற்றிய அன்ன விளக்கைப்போலவும் விடிவெள்ளி போலவும் ஒளிவிட்டுத் தோன்றும்.

### கடற்கரை

கடற்கரையிடத்தே மேற்றிசைக் கண்ணுள்ள குதிரைகளையும் வடதிசைக் கண்ணுள்ள பொருள்களையும் கொண்டுவந்து தரும் மரக்கலங்கள் சூழ்ந்து நிற்கும். மணல் மிகுந்த தெருவின் பக்கங்களில் பண்டசாலைகளும், பரதவர் வாழும் வானளாவிய மாளிகைகளும் உண்டு. வீடுகளில் விளைபொருள்கள் தேக்கிக் கிடக்கும். உயர்ந்த மாடங்களில் பேரணிகலன்களை அணிந்த பெண்கள் மலையில் ஆரவாரிக்கின்ற மயில்கள்போல் உலாவுவர்; காலி

டத்தே பொற்சிலம்புகள் ஒலிக்க நாலினால் வரிந்து கட்டப்பட்ட பந்தை அடித்து விளையாடுவர்; முத்தை ஒத்த வார்ந்த கடற்கரை மணலிலே கையிற் றரித்த வளைகள் அசையும்படி பொற்கழங்கு கொண்டு விளையாடுவர். கள்ளுவிற்பார் கடைகளின் வாயில்களில் கொடிகள் அசையும்; முற்றத்தே தெய்வத்துக்குத் தூவிய பூவாடல் கிடக்கும். அவ்விடத்தே வட்டில் கழுவிய நீர் வடிதலின் நிலம் சேறுடியிருக்கும். இவ்வகைக் கடற்கரைப்பட்டினத்தே தங்குவீராயின் பன்றியின் தசையோடு கள்ளையும் உண்ணும்படி பெறுகுவிர்.

துறைமுகத்தே ஆகாயத்தை முட்டும்படி உயர்ந்ததும், கற்றை முதலியவற்றால் வேயப்படாததுமாகிய கலங்கரை விளக்கம் உண்டு. அது மரக் கலங்கள் தாம் சேரும் இடத்தை அறிந்து செல்லும்படி அமைக்கப்பட்டது. அதனைக் கடந்து செல்வீராயின் தென்னங்கீற்றினால் வேய்ந்த கூரையையும், மஞ்சட்செடி வளரும் முற்றத்தையுமுடைய வீடுகளைக் காண்பீர்கள். அம்மனைகளிற் றங்குவீராயின் இளநீரையும், வாழைப்பழத்தையும், பனையின் நுங்கையும், வேறு பண்டங்களையும், முற்றிய வள்ளி முதலிய கிழங்குகளையும் உண்ணும்படி பெறுகுவிர்.

### திருவெஃகா

அப்பால் செல்வீராயின் காந்தட்கொடிகள் படர்கின்ற மலையிலே பாம்பு அணைமீது திருமால் பள்ளி கொள்ளும் திருவெஃகாவைக் காண்பீர்கள். அங்கு வெயில் நுழையமுடியாத இலைநெருக்கமுடைய இளமரச்சோலை உண்டு. அவ்விடத்தே

குருக்கத்தி மலர்கள் வெள்ளிய மணல்மீது விழுந்திருக்கும் தோற்றம் அப்பவாணிகர் சுட்ட அப்பம் பாலிலே விழுந்ததுபோன்றிருக்கும். அவ்விடத்தே இளைப்பாறியிருந்து இனிய யாழை வாசித்துத் திருவெஃகாவிலிருக்கும் கடவுளைப்பாடிப் போவீராக.

காஞ்சிபுரம்

அப்பாற் செல்லின் காஞ்சிபுரமாகிய மூதூரை அடைவீர்கள். அங்கே சோலைகளில் பரிக்கோலைக் கையிலேயுடைய யானைப்பாகர் அயர்ந்திருக்கும் போது, யானைக்கு நெய்யுடன் கலந்துவைக்கப்பட்ட அரிசியைச் சூலுடைய மந்தி திருடிக்கொண்டு சென்று உண்ணும். தேர் ஓடுதலால் வீதிகள் குழிந்திருக்கும். மூதூரிடத்திலுள்ள மக்கள் கடைவீதியில் விற்றலும் வாங்குதலும் செய்வர். அம்மூதூர் பரிசிலர்க்கு அடையாத வாயிலுடையது; நகரைச் சூழ்ந்து காவற்காடு இருக்கும். கோட்டையின் மதில்கள் செங்கற்களால் எடுக்கப்பட்டவை. அந்நகர் பூவாமற் காய்க்கும் மரங்களுள் சிறந்த பலாப் போன்றது. அந்நகரில் பல சமயத்தவர்கள் தத்தம் கடவுளருக்கு விழாவெடுப்பர். இவ்வகைச் சிறப்புடைய காஞ்சிநகரில், துரியோதனனாதியோரை வென்ற தருமனாதியரைப்போலப் பகைவரை வென்று பாடிவருவோர்க்குப் பரிசில் வழங்கி இளந்திரையன் வீற்றிருப்பான்.

தன்னோடுமாறுபட்ட அரசரின் நகரில் மக்கள் இன்றும்படி அழித்தலும், தன்னை அடைந்தோரின் நாட்டில் திருவந்தடைந்து வீற்றிருக்கும்படி அளித்தலும் அவனுக்கு எளிது. மலையிடத்து நின்றும்

அருவி அம்மலையிலுள்ள பண்டங்களை வாங்கிக் கொண்டு வந்து கடலுக்குக் கொடுத்தாற்போல் திறைகளுடன்வந்த பலநாட்டு அரசர் அவன் தலை வாயிலிற் காத்து நிற்பர். அவ்வேந்தர் கங்கைக் கரையைக் கடக்க விரும்பினோர் தோணியைக் காத்து இருப்பதுபோல யானை முதலிய செல்வங்களோடே நெருங்கி நின்று காலம்பார்த்திருப்பர்.

யானைக்கு வளைந்த பூண்செய்கின்ற கொல்லனது கூட்டத்தில் எழும் ஓசைக்கு மாடத்திருக்கும் புறச்சேவல் துயில் எழுகின்ற பழைய நகரில் இருக்கும் வேந்தன், அறிவாற் சிறந்த புலவர்க்கும், வறுமையுற்றிரப்போர்க்கும் விரும்பியவற்றைக் கொடுப்பான்; புலவர்க்கு அணிகலன்களை அளிப்பான்.

நீவிர் அவனை நோக்கி, "யானையைக் கண்ட சிங்கக்குட்டி அதன் மத்தகத்தைக் கொள்ளவிரும்பினாற்போலப் பகைவருடைய மதில்களை அழித்து அரசருடைய முடிக்கலங்களைக் கொள்ளும் வேந்தே! வீரர்க்கு வீரத்தைக் கொடுப்பவனே! கொடியோர்க்குக் கொடியனே! நின்குறையாத புகழ்களிற் சிலவற்றைக் கூறிப் புகழ்ந்து வந்தேன். நெடுங்காலம் வாழுதி! என்று சொல்லி யாழை வாசிக்கும் முறைமையில் வாசிப்பீராக. அப்பொழுது, பெரிய நாட்டுக்கு அரசனாகிய அரசன் யாக்கையும் செல்வமும் நிலையில்லாத உலகில், புகழைப் பெறுதல் நன்றென்று உணர்ந்து உன்னை விரும்பி அழைப்பான்; உனது அரையிற் கிடக்கும், கொட்டைப் பாசியின் வேர்போன்ற கிழிந்த

உடையைப்போக்கிப் பாலாவியை ஒத்து விளங்கு கின்ற நூலாற்செய்த உடைகளை நீ உனது சுற்றத்துடன் உடுக்கும்படி தருவான். வளைந்த அரிவாளைப் பிடித்தலால் கைகாய்ப்பேறின மடையன் ஆக்கிய இறைச்சியையும் சோற்றையும் இனிய சுவையுடைய ஊன்களையும் வெள்ளிக் கலங்களி லிட்டு உன்பிள்ளைகளுக்கிடையே வைத்து ஆசையுடன் உண்ணும்படி செய்வான். உனது மனைவியாகிய விறலி கார்காலத்து மின்னல்போல மயிரிற் சூடும்படிபடி பொன்னாற்செய்த மாலையையும் பொற்றாமரைப் பூவையும் அளிப்பான். சங்கின் நிறமுடைய வெள்ளிய நான்கு குதிரைகள் பூட்டிய பொற்றேரினைத் தருவான். அதனோடு அமையாது பகை அரசரிடமிருந்து கவர்ந்த குதிரைகளையும் சேணத்துடன் கொடுப்பான். இன்னும் பல பரிசில்களையும் தருவான். நீ விரைந்து அவன்பால் செல்வாயாக.

THE MADURA TAMILSANGAM

# Ananta Vigneya Bhagirathi

## A Book of Essays in Tamil on various Topics.

### PART I

TRICH[illegible]:
St. Joseph's Ind[illegible]

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

# அநந்த விஞ்ஞேய பாகீரதீ

## (பல விஷயங்களைப்பற்றிய ஓர் வியாச புஸ்தகம்)

## (முதற்பாகம்.)

இஃது

திரிசிரபுரம்

எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் மலையாளம் பண்டிதர்

**P. A.** நாணுசாஸ்திரியார் அவர்களால்

மலையாள பாஷையிலியற்றப்பட்டு,

மேற்படி ஹைஸ்கூல் அஸிஸ்டண்டு மாஸ்டர்

ஜெ. வெங்கடாசலபதி, B.A.,

அவர்களால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

PRINTED BY REV. BR, JOSEPH, S. J., SUPERINTENDENT
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS.
TRICHINOPOLY.

1917.

விலை] [அணா 10.

*All Rights Reserved.*

TO

HIS MOST BELOVED AND HIGHLY ESTEEMED PARENTS

ANANTHA AND BHAGIRATHI

THIS BOOK OF ESSAYS

IS,

AS A TOKEN OF

HIS FILIAL AFFECTION AND DEVOTION.

MOST RESPECTFULLY

Dedicated by

THE AUTHOR.

# FOREWORD.

These are days when vernacular composition is apt to be neglected in spite of a demand for making the vernaculars the media of instruction in schools and colleges, and examples are not wanting of men with high academic honours that cannot write an essay or give a short address in their mother-tongue. This book of essays on various subjects, though written not with a view to meet the requirements of any particular University Examination, contains much matter for thought and reflection and models of style for imitation, and therefore may be profitably placed in the hands of University students of all grades.

I have gone through some of the essays and am convinced that the author has exhibited his deep insight into human nature and remarkable powers of employing figures of speech aptly and forcibly. The subjects are dealt with in a masterly manner and in a style chaste and dignified.

I am sure a perusal of these essays will make a man wise and thoughtful besides equipping him with much useful knowledge and information. I can therefore heartily commend the book to the attention of the Tamil public.

8-5-1917.

S. K. DEVASIKHAMANI,
*Headmaster, S. P. G. High School,*
**TRICHINOPOLY.**

# TRANSLATOR'S PREFACE.

Just a year ago, when the Author of these Essays read out to me a few of them, his originality and critical acumen in the treatment of them convinced me that he is destined to strike out a new path altogether in the writing of Essays in Vernaculars. His object, as is discernible from his work, is to make the reader think and weigh the different aspects of the subject he has to deal with. Having a Socratic mind, the Author is imbued with a strong desire to hunt after and discover, with the aid of Nature, the hidden truth wherever it may be found. His method of verification from Nature—the source of all wisdom—wherever distorted human actions cannot show the truth, is truly Baconian.

I am quite sure that even a superficial reader of the Author's work will soon be well-armed to successfully meet any contested point as regards man's principles of life and conduct in this world.

It is only these merits in the Author and his work that made me think for a while of the usefulness to the Tamils of a translation of such a masterly and original work. And I have therefore ventured to undertake it for the benefit of my

Tamil brethren even though I am the least qualified for it.

As a lay reader of Tamil without any pretensions to be called a Pandit, I can lay small claim to classic style and pure diction. But every attempt has been made to render the Translation as faithful, simple and intelligible as possible, even at the sacrifice of purity of diction and terseness of style.

If this humble attempt of mine is half as useful to the Tamils as the Author's Malayalam original is to the Malayalam Public, the time and trouble I spent over it will not be in vain.

I am much indebted to Mr. S. K. Devasikhamani, the Headmaster of the S. P. G. High School, Trichinopoly, and a staunch patron of Tamil learning and Vernaculars in general, for his kind, suggestive and instructive remarks and encouragement.

That there may be slips in this Translation is likely enough. All corrections and suggestions will be thankfully received.

J. VENKATACHALAPATHI, B. A.,

1st March 1917.

# முகவுரை.

---

தங்குணங்களையும், தம்மைச் சார்ந்தவைகளின் குணங்களையும் ஒருவர்தாமே பெருமையாய் வெளியிடுதல் தற்புகழ்ச்சியென்னும் பெருங் குற்றமாகையால், இந்நூலில் சொற்ப குணங்களேதேனுமுளதேல் அவையெடுத்துரையாதுவிட, இதனாரம்பத்திலுத்தேசிக்கலாயிற்று.

ஆனால் '**அநந்த விஞ்ஞேய பாகீரதீ**' யென்னுமிந்நூலின் முகத்து ஒருரையில்லாக்காலஃதைப் பற்றித் தவறானவெண்ணம் வர இடமுளதாதலால், அதைப் போக்குவான் விளக்கலவசியம். ஒன்றை விளக்கவேண்டிவரும்போழ்து அதன் குணங்களை யெடுத்துரைத்தலின்றியமையாதாதலால், அஃது தற்புகழ்ச்சியென்னுங் குற்றத்தின் பாற்படாதென்கிற ஆன்றோர் சம்மதத்தை யொட்டியே இந்நூலைப் பற்றியோர் சிறிது இங்கு இயம்புவேன்.

மனிதர் அறியவேண்டிய விஷயங்கள் எண்ணிறந்ததாயிருக்க, சொற்ப விஷயங்களைமட்டும் விரிவின்றிச் சுருக்கமாய் இந்நூலின்கண்ணெழுதி, '**மனி**தரறியத்தக்க பல விஷயங்களின் வெள்ளப் பெருக்கு' என்று பொருள்படும், "அநந்த விஞ்ஞேய பாகீரதீ" என்றபெயரை யதற்குக் கொடுத்ததெள்ளளவுந்தகாதென நண்பர் பலருக்குந்தோன்றக் கூடியதே.

ஆனால் உலகத்திலுள்ளவெல்லா விஷயங்களும், அளவிறந்த சக்திகளின் இருப்பிடமாகிய பிரகிருதி (இயற்கை) யின் ஒவ்வோர் சக்தியைச் சார்ந்தே நிலைபெறுகின்றன. இந்நூலிலெடுத்துரைக்கப்பட்ட விஷயங்களெல்லாம் அவ்வவ்விஷயங்களுக்கு மூலாதாரமான பிரகிருதிசக்திகளைத் தெளியச் செய்து காரிய காரணங்களோடு கூடியவையாயும், உதாரணம் வேண்டியவிடங்களில் பிரகிருதி யுதாரணங்களோடு விவரிக்கப்பட்டுமுளதால், பொதுவாய் இயற்கைச் சக்திகளையும், அவைகளைச் சார்ந்துள்ள பல விஷயங்களையும் இந்நூலைப் படிப்பவர், பிறருதவியின்றித்தாமே அறியக் கூடுமாதலினிப் பெயரிடலாயிற்று.

மேலும், கணிதநூலின் சில முறைகளையும், வழிகளையும் அறிந்த மாணவர், பலவேறு கணக்குகளைத் தாமே செய்யச் சக்தியடைவதுபோல், இந்நூலின் விஷயப் போக்குகளையும், அவைகளை விளக்கக் காட்டப்பட்டுள்ள ஆதாரங்களையும், உதாரணங்களையும் உய்த்துணரும் வித்தியார்த்திகளுக்குப் பலவேறு விஷயங்களின் ஞானம் தானே ஏற்படுமாதலால், அநேக விஷயங்களின் ஞான வெள்ளப் பெருக்கென்று பொருள்படும், "அநந்த விஞ்ஞேய பாகீரதீ" என்னுமிப்பெயரிந்நூலுக்குப் பொருத்தமாயிற்று.

மாணாக்கர்செவியென்னும் வயல்வாய், இந்நூலினுட்பொருளென்னும் நீர் ஆசிரியர் வாக்கென்

னும் ஏற்றத்தால் பாய்ச்சப் பெறின், அறிவென்னும் பைங்கூழ் செழித்தோங்குமாதலால், மாணவர் தாமே ஆராய்ந்து விஷயங்களைப்பற்றி யெழுதுஞ் சக்தியடைவரென்பதற்குப் பொருத்தமான இந்நூலின் பெயரே தக்க சான்ருகும்.

கடல் நீரை உவர் நீக்கி, உண்ணீராக்கிக், கைம்மாறு கருதாது உலகிற்குதவும் உயர்குணத்தெழிலியை உவமை கொண்டுற்றவர், உத்தம வித்துவச் சிரோமணிகளாதலால், சிற்றறிஞனை என்னுலியற்றப்பட்ட விந்நூலென்னு முவர் நீரில் மலிந்து கிடக்கும் குற்றங்களனைத்தையுங் களைந்து உண்ணீராக்க, அன்போடு திருத்தங்களை அடியேனுக்கு நல்குமாறு அன்னேரைப் பரிவுடன் வேண்டுகின்றனன்.

கிளிகளின் வாயினின்றும் கற்பாறைகளினிடையில் வீழ்ந்த ஓர் விதை, சூரிய வெப்பத்தால் தீந்து அழிவதுபோல், பூர்வீக மகான்களின் நாக்கினின்றும் துர்ப்பாக்கியத்தால் கல்லென்னுமென் ஹிருதயத்தில் வீழ்ந்த இந்நூலின் விஷயங்களாகிய வித்து, முளைத்து வளர வழியின்றி வறுமையின் கொடுமையாலழியுங்காலத்து, திருச்சி, எஸ். பி. ஜி. உயர்தர வித்தியாசாலையின் சமஸ்கிருத பண்டிதர் மகா-௱-௱-ஸ்ரீ K. இராமசாமி ஐயர் அவர்கள் என்னும் பெருங்காற்ருல், அவ்வித்தியாசாலையின் தலைமை உபாத்தியாயரான மகா-௱-௱-ஸ்ரீ S. K. தேவசிகாமணி அவர்கள் பி. எ. எல். டி. என்னும்

செழிப்பும் நீர்சுரப்புமுள்ள நற்புலத்திற் சேர்க்கப் பட்டு, அதே வித்தியாசாலையினுசிரியருளொருவராகிய மகா-ள-ள-ஸ்ரீ J. வெங்கடாசலபதி அவர்கள் பி. எ. என்பவர் விவசாயத்தால் பயிராக்கப் பட்டு பலன் கொடுத்துள்ளது. ஆதலின், பிரதியுபகாரம் எதிர்பாராமல், பிறருக்கு நன்மை செய்யும் சுபாவமியற்கையாயமையப்பெற்ற இக்குணக் குன்றுகளின் நன்றியை யெப்பிறப்பிலும் மறவாதிருக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இனி இவ்வித்துக்கு, காற்று, புலம், விவசாயமென்னுந் துணைக்கருவிகள் செவ்வனே வமைந்துளதேனும், இன்றியமையாத மேகத்தினுதவியின்றியே, இஃது இவ்விதம் முளைந்து பயிரானது, புலத்தின் அருமையான வளப்பத்தைத் தெரிவிக்கின்றதன்றோ?

மேலும், இவ்வித்து தானெதிர்பார்த்திருந்த கார்மேகம், அதனியல்பாகிய நிலைத்தோரிடம்நில்லாமையைக் காட்டித் தன்னை வஞ்சித்தாலும், பூசாரத்தினுதவியால் வளர்ந்து இவ்விதம் பயனை யீந்து விளங்குகின்றது.

பி. எ. நாணுசாஸ்திரி.

# பொருளடக்கம்.


| நே. | | பக்கம். |
|---|---|---|
| 1. | சுவாதந்திரியம் (சுதந்திரம்.)—Independence ... | 1 |
| 2. | சாபல்யம்.—Fickleness ... | 4 |
| 3. | பிரமசரியம்.—Celibacy ... | 10 |
| 4. | கர்வம்.—Pride ... | 15 |
| 5. | மடி (சோம்பல்.)—Laziness ... | 19 |
| 6. | புத்திரன்.—The Son ... | 24 |
| 7. | விவாகம்.—Marriage ... | 29 |
| 8. | ஞானம்.—Knowledge ... | 34 |
| 9. | கல்வி.—Learning ... | 39 |
| 10. | செய்யுள் வசன ஆராய்ச்சி—Poetry and Prose ... | 45 |
| 11. | வறுமை.—Poverty ... | 55 |
| 12. | இந்தியாவின் சாதி வேற்றுமை Caste System in India ... | 58 |
| 13. | தருமம் (கடமை.)—Duty ... | 68 |
| 14. | வாய்மை (சத்தியம்.)—Truthfulness ... | 73 |
| 15. | தயவு.—Universal Love ... | 77 |
| 16. | ஒற்றுமை.—Union ... | 80 |
| 17. | நம்பிக்கை—Faith ... | 86 |
| 18. | இலாகிரி வஸ்துக்கள்.—Intoxicants ... | 95 |
| 19. | நட்பு.—Friendship ... | 101 |
| 20. | விவாகமுறை.—How to Marry... | 107 |

# பொருள் வணக்கம்.

---

### அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

1. குலவுபெரு மாழியோ களைசாரு,
    மரமுதல் கொண்ட வெப்பம்,
சுலவுபெரு திரைக்கரத்தா லோட்டியுயி
    ரளித்தருளுந், தோன்று மின்பம்,
நிலவுபெரு கருணைநிறை பரப்பிரம்ம
    மாங்கடலே, நேர்ந்து கேட்கும்,
குலவுபெரு வளமருளி, வெப்பகற்றிக்,
    காத்தருள்வாய், குணத்தி னோர்ந்தே.

2. சடமான உடல்புவியில் கேளாமல்
    நின்றதரு தழைக்கு மாறு,
தடமாரு மலைக்கையால் வெப்பகற்றி
    யுயிரளிக்குந் தன்மை யுண்டே,
இடமான சித்தான கருணைநிறை
    கடலாய இறைவ வுன்னைத்
திடமாக வேண்டுமென் றிறையகலு
    நிறைவுவரும், தேர்ந்தேன் நானே.

---

THE MADURA TAMILSANGAM

THE MADURA TAMIL SANGAM

# அநந்த விஞ்ஞேய ப்ராகீர்ணகீ.

## 1. சுவாதந்திரியம் (சுதந்திரம்.) Independence.

நிச்சயமான விஷயஞானத்திலிருந்து மனது வேறுகாரணங்களால் சலியாமலிருத்தல் **சுவாதந்திரியமாகும்.**

விவேகம் பூரணமாகும் பருவமான யௌவனத்திற்குமுன் கல்விப்பயிற்சி, மதபோதம், அரசாட்சி நியமம், உலகப்பழக்கம் முதலியவைகளால் தம்மனநுட்பத்திற்குத்தக்கபடி ஒவ்வொருவரும் இன்னவை குணமென்றும், இன்னவை குற்றமென்றும், ஒருவாறு நிச்சயங்கொண்டிருப்பது சகஜம். இம்மனோ நிச்சயத்திற்கு ஒத்து, காரிய சந்தர்ப்பங்களில், அவைகளைச் செய்பவர் சுவாதந்திரியமுள்ளவரென்றும், அங்ஙனமன்றி மனங்குழைந்து தம் நிச்சயத்திற்கு விரோதமான மார்க்கத்தில் சென்று காரியத்தைச் செய்பவர் சுவாதந்திரியமில்லாதவரென்றும் சொல்லப்படுவர்.

மனிதருக்கு சுகத்திற்குக் காரணமான விஷயங்களில் இச்சையுண்டாகிறது இயற்கை. இத்தன்மையான விஷயங்களில் சிலவற்றைத்தேடி அடையுங்காலத்து, தம்மனோநிச்சயத்திற்கு ஒத்தவிதிகளை

விலக்கவாவது, விலக்குகளை விதியெனக் கொள்ள வாவது, அடைய விரும்பிய சுகத்தைவிடவாவது நேரிடும். சுவாதந்திரியம் குறைந்தவன் இந்நிலைமையில், சுகத்திலாசைமீறி, விஷயங்களுக்கு அடிமையாய், மனவுறுதியிழந்து, முரணான மார்க்கத்தில் செல்லத் தலைப்படுகிறான். சுவாதந்திரியம் நிறைந்தவனோ, தன் நிச்சயங்களுக்கு விரோதமாயுள்ளதென்று அவ்விஷயங்களை அசட்டைசெய்து, துக்கம் சிறிதுங்கொள்ளாது, மனது சமாதானமுற்றிருக்கிறான். இதுவுமன்றி, சுவதந்திரன் மனவுறுதியுள்ளவனும் சுகபூரணனுமாகிறான். புருஷத்தன்மை நிறைவதற்குக் காரணங்களாயுள்ள சந்தோஷம், திருப்தி, சத்தியம், உதாரகுணம் முதலிய பெருங்குணங்கள் நாளடைவில் விருத்தியாகி அவனிடத்தில் நிலைநிற்கும்.

அஸ்வதந்திரனோ, தன் துர்நடத்தையினின்றும் இயற்கையால் உண்டாகத்தக்க துன்பங்களையும், ராஜ தண்டனையையும், ஜனங்கள் அவன் கண் கொள்ளும் அறுவெறுப்பின் காரணமாயுண்டாகும் துக்கங்களையும் அனுபவிக்கநேரிடும். இஃதோடு, தன் மனோ நிர்ணயத்தை யிழந்தும், துர்நடத்தையைக் கைக்கொண்டும், அடைய விரும்பிய சுகமும் பெரும்பான்மையடைவதுமில்லை. மேலும் அதோகதிக்குட்செலுத்தும், அதிருப்தி, அசத்தியம், தீனத்தன்மை, சந்தேகம், பயம் முதலிய நீக்கவேண்டிய தீக்குணங்கள் அவனிடமிருந்து ஓர் கணமும் ஒழிவதில்லை.

இது நிற்க, உலகத்தில் இப்பொழுது பலர் ஙியாயக்கோட்டமான மார்க்கத்திலிருந்துகொண்டு, கிடைத்த சுகம் எவ்வளவு அற்பமாயினும் எள்ளளவு மொழிக்கத் திறமற்றவராயிருக்கின்றனர். இங்ஙன மிருந்தும், மனத்திட்பம் பூரித்தவர் அடையக்கூடிய சுவாதந்திரியத்தில் பேராசையுள்ளவராய், புத்தி யில்லாமல்தான் தோன்றித்தன்மையாகிய மிருக சுபாவத்தை தவறுதலாய் சுவாதந்திரியமென்று கைப்பற்றுகிறார்கள்.

இனி, தான்தோன்றித்தன்மையின் சொரூ பம் யாதெனில், காரிய சந்தர்ப்பங்களில் தமக்குத் தோன்றிய காரியங்களை தகுதியோ அல்லவோ வென்றும், பிற்காலத்தில் அவைகளினின்றும் விளை யத்தக்க நன்மை தீமைகளைக் கவனியாதும், தமக்குத் தோன்றியவாறே காரியங்களைச் செய்து அவைக ளின் பயனைய் துக்கமனுபவிப்பதேயாம்.

மேலும் இந்த சுபாவம் மிருக சுபாவமேயாகும். ஏனெனில் மிருகங்கள், நன்மை தீமைகளையும், மேல் சம்பவிக்கும் சுகதுக்கங்களையுங் கவனியாது, பகுத் தறிவில்லாக் காரணத்தால் கஷ்டத்திற்குள்ளாகும்.

இதுகாறு மியம்பியதினின்றும் சுவாதந்திரியத் தின் எதிர்ப்பதமாயுள்ளது, தான்தோன்றித்தன் மையென நாம் அறியலாம். அஸ்வாதந்திரியமோ, சுவாதந்திரியத்தின் சூனியமேயொழிய தான் தோன்றித் தன்மைபோல் மிருக சுபாவமாகாது.

ஆகையால், தன்னை மனிதனெனப் பிறர் சொல்ல விரும்புபவன், சுவாதந்திரியமின்னதென்

றுத் தெளிவாய் அறிந்து, தான்தோன்றித்தன்மை யினின்றும் வேறு பிரித்து, பௌருஷத்திற்குக் காரணமாகிய அதை அதிக நுட்பமாய்க் கவனித்து ஆசரிக்கவேண்டும்.

---

## 2. சாபல்யம்—Fickleness.

மனிதன் சுகமடைவதற்கும் துக்கம் நீக்குவதற்கும் சிற்சில சாதனங்களிலும் காரியங்களிலும் விருப்பமுள்ளவனுயிருத்தல் இயற்கை.

இவ்விதமான இச்சை யாதொரு தோஷத்திற்குங் காரணமாயில்லாமல், மனதிற்கு உள்ளடங்கி யிருக்கும் நிலைமையில் ஆக்கிரகம் எனப்படும். ஆனல் ஒரு சாதனத்தில் அல்லது காரியத்தில் இச்சையுண்டாகும்பொழுது, அது தனக்கு தகுதியோ தகாததோவென்றும், சிறந்ததோ தாழ்ந்ததோ வென்றும், இலேசில் பெறக்கூடியதோ கஷ்டத்தால் சாதிக்கக்கூடியதோ அல்லது எவ்வகையிலும் கைப்பற்ற முடியாததோவென்றும், ஒருவேளை கிடைக்கக்கூடியதாஞலும் பிரயோஜனத்திற்குத் தக்க தேகசிரமத்தாலோ, அல்லது அதிக சிரமத்தாலோ வென்றும், அவ்விஷயத்திலிருந்தும் பிற்காலத்தில் துன்பங்கள் விளையுமோவென்றும், கருதத்தக்க மனதின் விவேக சக்திகளை வேரோடறுத்து, விரும்பிய விஷயத்தில் தள்ளிவிடு மோங்கியவாக்கிரகத்திற்கு, **சாபல்யம்** என்று பெயர். மனதிற்கு உள்ளடங்கி யிருக்கும் ஆக்கிரகமோ இன்றியமையாத காரணங்க

ளால் நியாயமான வழியிலுண்டாவதால் மனதின் பகுத்தறிவை மாள்விக்கிறதில்லை. மேலும், சாபல்யம், நாமடைய அருகரல்லாத விஷயங்களை நாடச் செய்து அவைகட்குட்படுத்தி நாமவையெய்துமாறு நம்மை வாதித்துத் தூண்டுதலால், அம்மனோநிலைமையில் எடுத்த காரியம் தொலைவதுடன் தீராத் துக்கமும் விளையும்.

ஆக்கிரகத்திற்கும் சாபல்யத்திற்குமுள்ள வித்தியாசம் செவ்வனே வறிவான், இனியோர் திருஷ்டாந்தம் எடுத்தாளுவோம் :—

நிலத்தில் வாழும் ஜந்துக்களில் மிகப்பெரியதும் அதிகவாகாரமுட்கொள்ளத்தக்கதுமானது யானையல்லவா? இவ்வானைகளில் பசியுள்ள இரண்டையோரிடத்திற் கொணர்ந்து நிறுத்தியவைகட்குப் போதுமான உணவை யவைகளின் நடுவணிருத்துவோம். அங்ஙனம் நிகழ்வது உற்று நோக்கின் அதிசயிக்கத்தக்கதாயிருக்கும். அப்பெருங்கரிகள் ஒன்றோடொன்று ஆகாரத்தின் விஷயமாய் போராடாததோடு கோபக்குறிகளும் காண்பியாது அவ்வுணவை யிச்சையுடனும் நோக்குவதில்லை. பாகன் அவ்வாகாரத்தை யுருட்டி யேந்தி வாயினுட் செலுத்துமுன் அவன் கை யுதட்டில் படத்தான் வாயைத் திறக்கும். அங்ஙனம் செய்வது பார்ப்போர்க்கு ஆகாரத்தில் அவைகட்கு அவசியமில்லையோ எனவும், பாகன் கட்டாயத்திற்காக எடுத்துக்கொள்வது போலவும் தோன்றும். மேலுமிவை இரண்டில்

ஒன்றிற்கு மட்டும் உணவளித்து மற்றொன்றிற்கு அளிக்காது விட்டாலும் உணவு பெற்றதின்னதென் றும், பெருதது இன்னதென்றும், அவைகளின் முகக்குறிகளால் அறிந்துகொள்வதுமசாத்தியம்.

இவ்விதம் தான், மனிதர் புத்தியில் ஆக்கிரக மொதுங்கி நிற்கும்.

இது நிற்க, பத்து யானைகளுக்குப் போது மான சோற்றை யோரிடத்திற் சேமித்து, இரண்டு நாய்களை அதன் பக்கம் விடுவோம். அச்சோறு இருநூறு நாய்களுக்குங்கண்டு மிஞ்சுமானாலும், இவ்விரண்டு நாய்களின் சேட்டைகளைச் சற்று கவ னித்துப் பார்ப்போம். தூரத்திற் கண்ட வளவிலே இவையிரண்டிற்கும் வழியிலேயே கடும் போர் தொடங்கிவிடும். யுத்தத்திற்குக் காரணமான சோறு குறைந்த வளவாயிருந்தால் அவைகளின் யுத்த கோஷத்தைக் கேட்டு மற்றொரு நாய், யுத்த மத்தியிலேயே அச்சோற்றைக் கவர்ந்தும் போய்விடும். உணவிழத்தலுடனும் அங்கபங்கத் துடனும், இரத்தப்பெருக்கோடும் அந்த யுத்தம் முடியும். ஆதலால் சாபல்யங் காரணமாய் உண் டாகும் அவிவேகத்தால் காரியநாசமும் அங்கபங் காதி துக்கமும் நேருமன்றோ? மேலும் சாபல்யத் தால் உண்டாகும் தோஷமிவ்வளவுதானோ? இல்லை, இல்லை. வேறொரு நாயுமில்லாத விடத்தும் எஜ மானன் கொடுக்குமுணவை, ஒரு நாயாவது சுகத் துடன் அனுபவிப்பதுமில்லை. ஏகாந்தமாய் உண

வளிக்கப்பட்ட நாயும் சாபல்யத்தின் மிகுதியால் சத்துருசங்கையடைந்து யாதொரு சுகானுபவமுமில்லாமல் அவதியவதியாய் கொடுத்தவுணவை ஒரு கணப்பொழுதில் விழுங்கிவிடும். சாபல்யத்தின் நிமித்தம் தன்வசமுள்ள வாகாரத்தையும் சுகத்தோடனுபவிக்கவும் நேரிடுவதில்லை. இந்த அற்பப்பிராணிக்கு துக்கமதிகரிக்கக் காரணம், இதற்கு, சிறந்த உணவுமுதல் சகலப் பிராணிகளும் வெறுக்கத்தக்க பொருளிறுதியாகவுள்ள எல்லாப் பதார்த்தங்களிலுமுள்ள சாபல்யந்தான்.

இனி சபலரிடத்திற் பிறர்கொள்ளும் அருவெறுப்பைக் கவனிப்பது அவசியம். எல்லாவுயிர்களிடத்தும் சமதிருஷ்டியாயுள்ள தெய்வமும் இந்நாயின் சாபல்யத்தின்கண் வெறுப்புற்றதோவென்று தோன்றும்படி சகல ஜீவ ஜாலங்களுக்குமத்தியாவசியமும், இலகுவில் கிடைக்கக் கூடியதுமான பொருள்களில்கூட இப்பிராணி, கஷ்டத்தின்பால் படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில், நதிபெருகி, வெள்ளப்பெருக்கெடுத்தாலும் நாய் குடிப்பது நக்கித்தானே என்று சொல்லும்படி அதன் சாபல்யமென்னும் தீக்குணத்திற்கேற்ற தண்டனையோவென்று தோன்றும்படியும நீரருந்தவுமுதவாத வாயைத் தெய்வமிதற்களித்திருக்கிறது. விருப்பு வெறுப்பற்ற தெய்வத்திற்கே சாபல்யத்தின்கண் இவ்வளவு வெறுப்புண்டானல், இலேசில் வெறுப்புக் கொள்ளத்தக்க மனிதர், சபலரை எங்ஙனம் வெறுக்காதிருப்பர்.

ஆகார விஷயத்தில் மட்டும் சாபல்யமுள்ள, சுணங்கன்கதி இவ்வாறிருக்க, பஞ்சேந்திரியங்களின் மூலமாய் அநேக விஷயங்களிலாவசியம் கொள்ளத்தக்க மனிதன் சபலனானால் எவ்வளவு கஷ்டத்தில் சிக்குவான் என்பது சொல்லவும் வேண்டுமோ? ஒருவிதமான நரகத்திலும் சபலனனுபவிக்கும் துக்கத்தில் நூற்றிலொரு கூறுவது இருக்குமென்பது துணியத்தக்கதல்ல.

இனி சபலனுக்கு தன்வசத்திற் கிடைத்திருக்கும் சுகசாதனங்களிலுள்ள பற்றுக்குத்தான், லோபம் என்று பெயர். பொருளை யீட்டுவதிலும் ஈட்டினதேட்டைப் பாதுகாப்பதிலும், நாசம் வந்த காலத்து காயக்கிலேசமுறுவதற்கும், பிரதிபலம் அப்பொருளிருக்கும் வரை யதையனுபவிப்பதன்றோ? உலோபியோ, பொருள் சுருங்குமென்ற காரணத்தாலப்பொருளை அனுபவிப்பதுமில்லை. சபலமான நாயாவது கிடைத்த பொருளை சுகத்தோடு நுகராவிட்டாலும் நுகர்ச்சியென்ற ரீதியையாவது அடைந்துள்ளது. அந்தோ! உலோபிக்கு அதுவுமில்லை. மேலும் உலகத்தில் மற்று எவரும் அனுபவிக்காத அதிகோரமான துக்கத்தை எப்பொழுதுமனுபவிக்கிறான். அது யாதெனில், அவன் பிறர் சுகத்திற் கொள்ளும் அசூயையே.

அசூயையென்றால் பிறர் சுகத்தால் தன் சுகம் நசிப்பதுபோல் வியசனிப்பது. உலகத்தில் தன் சுகத்தை எதிலான் அபகரித்து அனுபவிக்கும்

பக்ஷத்தில், அவன் சுகத்தில் துக்கமுண்டாவது சாதாரண மனிதற்கு இயற்கை. இவரினும் சற்று அதிகமான சாபல்யமுடையவர், தாம் சிரமித்து அடைய விரும்பிய பொருளைப் பிறர் சிரமித்து அடைந்தால் வியசனங்கொள்ளுவர். இவர், இவ் விதம் வியசனங்கொள்ளுவதற்குக் காரணமுண்டு. யாதெனில், தாம் சிரமஞ் செய்திருப்பதால் அது தம்முடையதென்கிற அபிமானமவர்க்குண்டாகலாம்.

சபலனோ, உலகத்தில் யாருக்காவது எவ்வித சுகம் வந்தாலும் அது தன்னுடைய சுகம் நசித்தது போல் நினைத்து எப்பொழுதும் துக்கிப்பான். ஏனெனில் சபலனுக்கு நாயைப்போல் தனக்கு சாத் தியமும் அசாத்தியமுமானவற்றிலும், சாரமும் அசா ரமுமானவற்றிலும், ஒரேவிதமான அதியாக்கிரக முண்டு. ஆகையால்தான், உலகத்திலுள்ள ஏதேனு மொரு சுகம் எவருக்காவது நேர்ந்தால் அது தன் சுகம் நசித்ததுபோல் அசூயையின் நிமித்தம் துக் கிக்கிறான்.

சாபல்யமில்லாதவிடத்து வேறு எந்த அநர்த் தத்தையும் நிவர்த்திக்கலாம். அச்சாபல்யம் எல் லாவித துக்கங்களின் தொடருக்குக் காரணமாயுள்ள தென்பதை எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

## 3. பிரமசரியம்.—Celibacy.

மானிடருள் தொன்று தொட்டு, பிரமசாரி, கிருகஸ்தன் என்ற இரண்டு வகுப்புகள் வழங்கிவருகின்றன. அவர்களுக்கு விதிக்கப்பட்ட நியமத்துடன், தற்காலத்தில் ஒரு பிரமசாரியாவது, கிருகஸ்தனாவது, இருப்பதாகக் காணப்படவில்லை. விவாகமில்லாதவன் விவாகமானவன் என்கிற அருத்தத்தில் மாத்திரமே அப்பதங்கள் தற்காலத்தில் உபயோகிக்கப்பட்டு வருவதுபோல், நாமும் அவைகளை அப்பொருள்களிலேயே இங்கு வழங்குகிறோம்.

உலகத்திற் பாரதந்திரியம் துக்கத்திற்குக் காரணமாயும், சுவாதந்திரியம் சுகத்திற்குக் காரணமாயுமிருக்கிறதால், எல்லோரும் முன்னதை நீக்கி பின்னதை யடைய ஓர்வித வாக்கிரகங்கொள்வதியற்கை. இவ்வாக்கிரகத்தின் காரணமாய், தாமெண்ணியவற்றை யடைய தேகப்பிரயாசையிற்றலைப்படுகிறார்கள்.

மனிதனுக்கு அநேகவிஷயங்களி லாவசியமிருப்பதே அவன் சுவாதந்தரியத்தினின்றும் நீங்கி, பாரதந்திரியத்திற் படுவதற்குத் தக்க காரணமாகும்.

விஷயங்களில் ஆவசியம் சுருங்கச்சுருங்க சுவாதந்திரியம் தலையெடுக்கும். விஷய ஆவசியம் சுருங்கவேண்டி, பின்வருங் காரணங்களாற் கீழ் கூறும் மார்க்கங்களை மனிதர் சிலர் தழுவுகின்றனர்.

விவாகம் தொடங்கி மரணம்வரை மனைவி மக்களுடைய உயிர் பாதுகாப்பு நம்மைச் சாருகின்றது. அதினால் விஷயங்களினவசியமும் அதிக பாரதந்திரியமுமுண்டாகிறது. நாம் விவாகமில்லாமலிருந்தால் நம் தேக சம்ரட்சணைக்கு வேண்டிய விஷயங்கள்தான் அவசியம். ஆதலால் பாரதந்திரியம் சுருங்கவும், சுவாதந்திரியம் பெருகவும், நாம் விவாகமற்று பிரமசரியத்திலிருக்கவேண்டுமென்று சிலர் எண்ணுகின்றனர். இதுதான் சுவாதந்திரியத்திற்கு இவர்கள் கண்டுபிடித்த வழி. இஃது யுக்திக்குப் பொருத்தமாயிருக்கிறது. ஆனால் இது சாத்தியமோவென்றும், சாத்தியமானால் வேறு தீமைகள் வருவதற்குக் காரணமாயிருக்குமோவெனவும் நாம் யோசிக்கவேண்டும்.

நாமொரு விஷயத்தை அனுபவியாதமாத்திரத்தில் அவ்விஷயவிச்சை நம்மைவிட்டுப் போவதில்லை. ஓர் ஸ்திரீயை நம்மெதிரில் காண்போமானால் இந்திரியங்கள் மனதைக் கவர்ந்து விஷயத்திற்குட்படுத்திவிடும். மாதர் நம்மெதிரில் படாவண்ணம் ஜனசூன்யமானவிடத்தில் வாசம் செய்வோமென்றாலும், விஷயத்திலீடுபடாமலிருக்கமுடியாது. ஏனெனில், மனதிற்கு இந்திரியங்களின் சமீபத்திலுள்ள விஷயங்களில்மட்டும் செல்லும்படியான சுபாவம் ஒன்றேயல்ல. அதற்கு மற்றொரு சுபாவமுமுண்டு. யாதெனில், அது ஒவ்வோர் விஷயங்களிலும் ஆக்கிரகமடைந்து, தூரத்திலிருந்தாலும் அவ்விஷயங்களைத்தேடி இந்திரியங்களுடன்

போய்ச் சேருவதுமுண்டு. இங்ஙனம் மனது தூரத்திலுள்ள விஷயங்களிலும் சிந்தித்துருகிப் பிரவர்த்திப்பதால் விவாகமில்லாததினுலோ, மாதர் வாடையகற்றுவதாலோ, பெண்ணின்பவாவசியம் நம்மை விட்டொழிவதில்லை. ஏகாங்கியாயிருந்தும், அடைய விரும்பிய சுவாதந்திரியமும் பெறுவதில்லை. எந்த விஷயத்தையும் உண்மையில் ஜெயித்தாலொழிய அவ்விஷயங்களில் மனதிற்கு சுவாதந்திரியம் வருவதேயில்லை. சத்துருவைக் கண்டொளிந்தவன் அவனை ஜயித்தவனுவானு? தற்காலத்தில் மறைந்து தப்பினுனேயொழிய பிற்காலத்தில் அவன்கண்ணுள்ள பயமவனைவிட்டகலவில்லை. மேலும், சத்துருவைக்கொன்றுலும் ஜெயித்தவனுகான். ஏனெனில் வேறு சத்துருக்கள் அவனுக்கு விரோதமாகக் கிளம்பலாம்.

இனி உண்மையான ஜெயம் யாதெனில், ஒரு விஷயம் முழுபலத்துடன் எவ்விதமாக வருத்தினுலும், சற்றேனும் அதனுற்றீமை யடையாவண்ணம் நாமிருந்தால்தான் அதையுண்மையில் ஜெயித்தவராவோம். அவ்விதமின்றி, மனதிற்கு ஆவசியமான விஷயத்தையனுபவியாது, தூரத்தில் விலக்கி வைத்தால் அதன் ஆவசியம் நாளடைவில் படிப்படியாய் விருத்தியடைந்து, தடுக்கும்படியான சக்தி குன்றி, தைரியமிழந்து பித்துப்பிடித்தவன்போல் அவ்விஷயத்தில் விழ நேரிடும். அவ்விதம் விழும் மனது, மரணம்வரை அவ்விஷயத்திற்கடிமையாய் அதினின்று முய்யவோர் வழிகாணப் பெறுவதில்லை.

விஷய ஜெயத்திற்கு ஆரம்பித்து இவ்விதம் விஷயத்திற்கடிமையாவது வாசியோ? இதுவும் தவிர, மணம்புரிதல் கேவலம் மிருகதுல்யமாகாது. ஜீவன் உற்பத்திக்காக பிரகிருதியால் பாரியாபந்தமேற்படுத்தப்பட்டுள்ளதால் அதைத் தடுக்கவுமுடியாது. மற்ற எவ்வகையின்ப வாஞ்சையை ஜயித்தவனுக்கும் இப்பெண்ணாசையை ஜெயிப்பது அரிதாகும். ஏனெனில், பஞ்சேந்திரியங்களில் ஓர் இந்திரியம், தான் திருப்தியடையுங்காலத்தில் மற்றோர் இந்திரியம் தனக்குப் பிரீதியான விஷயத்தில் மனதைக் கவர்ந்து செல்வது இயற்கை. ஆனால் கலவியின்பத்தில் அப்படியில்லை. ஆதலால் பாரியை சர்வேந்திரியங்களின் திருப்திக்குக் காரணமாகும்.

இதுநிற்க, தனித்தனியே ஒவ்வொரு பொறிகளுக்கும் அடிமையாகக் கூடிய மனிதன், எங்ஙனே, பஞ்சேந்திரியங்களுக்கும் திருப்தியுண்டாக்கத்தக்க பாரியையை நிவர்த்திக்க முடியும். சுவாதந்திரியத்தினிமித்தம் தள்ளிவைக்கவேண்டியதவசியமானாலும் அது முடியக்கூடியதாயில்லையே!

இனி ஒன்றையழிக்காமலும், தள்ளாமலும், ஜெயிப்பது, ஜலபயத்தை யொழிப்பதை யொத்திருக்கின்றது. எங்ஙனேயெனின், வெள்ளத்திற்குப் பயந்து கரையிலேயே நிற்கின்றவன், தற்சமயம் வெள்ளத்தின் பயம் நீங்கியவனானாலும், பிற்காலத்தில் வெள்ளத்தின் காரணமாய் இறப்பதற்கிடமிருப்பதால் ஜலபயம் நீங்கினவனாகான். ஆனால்

வெகு ஜாக்கிரதையாய், பிறர் சகாயத்துடன் முதலில் சொற்ப ஜலத்திலிறங்கி நீந்தப் பழகினவனுக்கு அகாதமான நீரிலிறங்கினாலும் ஜலபயமில்லை. ஏனெனில், வெள்ளத்தினடுவிலும் அதன் சக்தியால் யாதொரு குறைவுமவனடைவதில்லை.

இதுபோலவே சாத்தியமற்றதும் உண்மையில் பயத்துக்குக் காரணமாயிருப்பதும், தவறுதலாய் ஜெயமென வெண்ணப்படுவதுமான விவாகவிலக்கினால் சுவாதந்திரியமடைய முடியாது.

மனதிற்கவசியமான விஷயத்தைத் தடுத்து வறுத்துவதாலுண்டாகும் தீமை யொருபொழுதும் நசிக்கத்தக்கதல்ல. அங்ஙனம் தடுத்து நிறுத்த முயல்வது, மலைச் சிகரத்தினின்று மிறங்குமொருவன், படிப்படியாய்த் தாழச்செல்லாது, உச்சியினின்றுங் கீழ் குதிக்குஞ் செயலையொத்தது.

என்னே, இவ்வளவு யோசனை இவ்விஷயத்தின் கண்?

இயற்கையிலுள்ள ஆண்டன்மை சற்றேனுங் குறையாதிருக்குமானால் அநேக பாரியைகளையும் இராச்சியங்களையும் இரட்சிப்பது இலேசாகவிருக்கும். அவ்வாண்டன்மையில்லாதவிடத்து உலகத்தில் எல்லாப் பதார்த்தங்களுக்கும் கீழ்ப்பட்டவரோயாவோம். இந்நிலைமையில் சுவாதந்திரியத்தில் மோகங்கொள்ளுவது, காட்டிலெரித்த நிலவுபோலவும் சாம்பரிற் பெய்த நீர்போலவும் நிஷ்பிரயோஜனமாகும்.

கோஷிக்கும்மாறு வீறுபேசி, காரியங்களின் சாத்தியாசாத்தியங்களும், பிற்காலத்திய குணதோஷங்களும் சிந்தியாமலவைகளை யாரம்பிப்பான். இம்மாதிரியே பைத்தியக்காரனும் குணதோஷங்களைக் கவனியாது, காரியங்களைச் செய்வானுதலால் கர்வியை, பைத்தியக்காரனுக்கொவ்வானெனெ எங்ஙனே சொல்லமுடியும். உற்றுநோக்கில், அவனினுமதிக கஷ்டத்திற்கு உட்பட்டவனே.

ஏனெனில், பித்தனுடைய காரியங்களினின்றுமுண்டாகுந் தீங்குகளை, ஜனங்கள் அவனது அறிவின்மையெனப் பொறுத்து மன்னிப்பார்கள். கர்வியின் காரியங்களோ, அங்ஙனமல்லாது அகம்பாவத்தின் காரணமாயுண்டானதென்று ஜனங்கள் எண்ணுவதால், ஒவ்வொருநாளும் அவனுக்குச் சத்துருக்களதிகமாகிக் கொண்டிருப்பார்கள். கஷ்டங்களும் பெருகும். இதுதான் கர்விக்கும், பித்தனுக்குமுள்ள வேற்றுமை. இங்ஙனே கர்வம் வளருந்தோறும் அவனுக்கெல்லோரும் விரோதிகளாய் முடிவர்.

இனி, கர்வி தோத்திரப் பிரியன்; அதாவது, தான் பிறரைத் துதிப்பவன் என்ற பொருளில்லல. ஏனெனில், பிறரோடு பேசினுலே தன் கௌரவம் குறையுமென்று நினைப்பவன் எங்ஙனம் துதிப்பான். ஆதலால் பிறர் தன்னைத் துதிப்பதிற் பிரியமுள்ளவனென்று பொருள்படுமெனக் கூறவும் வேண்டுமோ?

மேலும் கர்வி புத்தியீனனுதலா லிவனிடத்தில்லாத பல நற்குணங்களுமிருப்பதாக நயவஞ்ச

கர் சொல்லித் தோத்திரம் பண்ணினால் இலேசி லவர்களை நம்பிவிடுவான். பரம வஞ்சகரோ தங்க ளிஷ்டத்தைச் சாதிப்பதற்கு இவனது கர்வ துர்க் குணத்தைப் பொறுத்து மித்திரர்போல் நடிப்பர். சற்சனங்களாகிய புத்திமான்கள் இவனிடத்திலிஷ்ட முள்ளவர்களாயிருக்க விரும்புவார்களா? இவனது கர்வ துர்க்குணத்தை எவ்வாறு அவர் சகிப்பார். ஒருவேளை யவரிடும்பை கூர்ந்து இவனிடம் வர நேரிட்டால், தன் கௌரவம் காட்ட அவர் வருகை யறியாதவன்போல் நடிப்பான். வந்தவருக்கு முன் னினும் பன்மடங்கு அவன் கண் வெறுப்புண்டாகி, அவனை விட்டகன்ருற் போதுமெனத் தோன்றி விடும்.

ஆதலாலன்னியருக்கு இதத்தைச் செய்யும்படி யான குணக்குன்றுகளென விளங்கும் சாதுக்களி லொருவரோனும் இவனுக்கு மித்திரராக சந்தர்ப்ப மில்லை.

கர்விக்கு அறிவுண்டாகு மார்க்கங்களுஞ் சொற் பம். ஏனெனில் அன்னியருபதேசத்தினின்று மிவ னறிவைத் தேடிக்கொள்வது மிகவுமசாத்தியமா கும். தனக்கொரு விஷயத்திலறிவில்லையென்றும், தன்னைவிட அறிவிற்றேர்ந்த மற்ருெருவன் உப தேசத்தால் அறியவேண்டியிருக்கிறதென்ற வெண் ணம் அவன் கௌரவத்திற்கு முற்றும் முரணனதன் ருே? இனியன்னியருபதேசமிவ்வாறு நீங்க, அவன் ஞானமடைதற்குள்ள மற்ருேர் வழி, சுயபுத்தியால் யோசித்து காரியத்தின் தத்துவத்தை அறிந்து

கொள்ளலல்லவா? அந்தோ! இவ்வழியும் அசாத்தியமாகவே முடிகின்றது. ஏனெனில், ஒவ்வொரு காரியங்கள் செய்யும்பொழுதெல்லாம், காரியத்தில் எவ்விதம் பிரவர்த்தித்தால் தன் பெருமை பெருகுமென்றெண்ணி, தன் கர்வத்திற்கேற்றவாறு யோசிப்பதேயல்லாமல், விஷயங்களின் உண்மையான குண தோஷவாராய்ச்சியை அவன் செய்வதேயில்லை.

ஞான சூன்யனும், நாடோறும் சத்துருக்களைத் தேடிக்கொள்ளுகிறவனும், சுயநயக்காரரை நம்பினவனுமான மனிதன் சதா துக்கக்கடலில் அமிழ்ந்தவனாவானேயல்லது சுகம் பெறுவதேது?

மேற்சொன்னவையினின்றும் நாமறியற்பாலது யாதெனின்: கர்வி பித்தனுடைய மனத்தன்மையுடையவனென்றும், உலகத்திற் பலர் அவன் விரோதிகளெனவும், சாதுக்கள் அவன் பந்துக்களாகாரெனவும், சுயநயக்காரரே அவன் மித்திரராவரெனவும், பிறருபதேசத்தைப் பின்பற்றும் சுபாவமற்றவனெனவும், இறுமாப்பின் காரணமாய் சொந்த யோசனை யவனுக்கில்லையெனவும், பொருள்நிலை யாராய்ச்சிக்கும் அவன் மனதிற்கும் வெகுதூரமெனவுமிவையேயாம்.

ஆதலால் இப்பேர்ப்பட்டவனுக்கு உலகத்தில் சுகம் எங்ஙனே கிடைக்கும்.

---

## 5. மடி (சோம்பல்.)—Laziness.

ஒருவன் சுகானுபவசந்தர்ப்பங்களை எவ்வளவு பரிபூரணமாயடைந்திருந்தாலும் மனத்தின் க்ஷய ரோகமாகிய மடி, அவன் மனதில் குடிபுகுந்தால் அவன் சற்றேனும் சுகமடைவதேயில்லை. மேலும் அவன் நீங்காத துக்கத்தையும் அடைவான்.

மடியின் விஷயத்தில் ஒவ்வொருவரும் அதி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஏனெனில் ஸ்தூல தேகத்திலுண்டாகும் க்ஷயரோகத்தை சிகிச்சை தெரிந்த எல்லா வைத்தியரும் நீக்குவதரிதெனப் பின் வாங்கா நிற்க, சூக்ஷுமதேகமான மனதைப் பாதிக்கும் மனோராஜயக்ஷ்மாவை (க்ஷயரோகத்தை) எவ்விதம் தடுக்கமுடியும். ஆதலாலதனின்று உய்யும் மார்க்கம், அதை வாராது தடுப்பதுதான்.

மடியின் சொருபம் யாதெனின் மனிதருக்குச் சிற்சில விஷயங்களில் நியாயமான இச்சையுண்டாகும்பொழுது, அதை சாதிப்பான்வேண்டி நமது தேகமும், ஐம்புலன்களும், மனதும் அநேக விதத்தில் சிரமஞ்செய்யவேண்டியவவசியம் வருமன்றோ? காரியசித்திக்கு வேண்டிய சிரமத்தைச் சகிக்க சக்தியில்லாததால் சிரமத்தை விலக்கும்பொருட்டு, காரியத்தினின்றும் பின்வாங்கும் சுபாவம்தான் **மடி** யெனப்படும்.

மெய்வருத்தம், பசி, தூக்கம், செவ்வியின் அருமையாகிய இவைகளின்கண் படீமாகிற மடி பீடித்த மனிதனுக்கு யாதானுமோர் காரிய ஆவசியம் நேரும்

பொழுது அவன் மனதில், மடிக்கும் அக்காரியத்தி லிருக்கு மிச்சைக்கும் யுத்தமுண்டாகும். இதில் வாதமென்னவென்றால்,—மடிக்கு மெய் வருத்தம் கூடாதென்றும், அக்காரியவிச்சைக்கு எடுத்த காரி யம் சித்திக்கவேண்டுமென்றும் நிற்கும். ஆலஸ்யம், தொடக்கத்தில் இச்சையைத்தடுக்க அவ்வளவு பல மில்லாமையால், மெய்வருத்தத்தைக் குறைத்து காரி யத்தைச் சாதிக்க முயலும். எவ்வாறெனின், காரியத் தைச் சாதிக்க நியாயமாய் அடையக்கூடிய மெய் வருத்தங்களைச் சுருக்கும்படி, தந்திரம், களவு, சதி முதலியவற்றை மடியுபயோகிக்கத் தொடங்கும். ஆரம்பத்திலேயே மடி இத்துர்வழக்கங்களை மனதி லுண்டாக்குகின்றது. இவ்விதம் மடி வளர, வளர, தன் பலத்தால் மெய்வருத்தத்தை முழுதுந்தள்ளி, முன் கூறிய துர்க்குணங்களையும் விருத்திசெய்து, மனதினிச்சையைக் கெடுத்து, அதை யெடுத்த காரி யத்தினின்றுந் திருப்பிவிடுகிறது.

மனது மடிக்கடங்காத பலமான இச்சையைக் கொண்டால், தன் பலத்தால் மனதைத் திருப்ப இயலாதென்று கண்டு தந்திரமாய் அம்மனதை அத னிச்சையினின்றுந் திருப்பிவிடுகின்றது.

மடியின் தந்திரமாவது யாதெனின், அவ்வம் மனத்தின் சுபாவத்திற்குத் தக்கபடி ஒவ்வோர் குழப்பத்தை யுண்டாக்கி இச்சை எவ்வளவு பலமா யிருந்தாலும், மனதை அதனின்றும் திருப்பி மெய் வருத்தத்தை நீக்கும்.

உதாரணமாக இச்சைகொண்ட மனது, தருமத்தில் நிலையுள்ளதெனக்கொள்வோம். அப்பொழுது எடுத்த காரியம் அதர்மமாயில்லாமலிருந்தாலும், அதர்மமோவென்று சந்தேகத்தையுண்டாக்கி (மடி) மனதை அவ்விச்சையினின்றும் திருப்பிவிடும். அஃது கர்வ சுபாவமுள்ளதானல், அவ்வற்ப விஷயத்திற்காக அவ்வளவு கஷ்டம் தாம் கொள்ளுவது தம் அந்தஸ்திற்குத் தகாதென்றும், வேறு சமயத்தில் இவ்விஷயத்தை வெகு இலேசாய்ச் சாதிக்கலாமெனவுந் தோற்றுவிக்கும். பய சுபாவமுள்ளதானலோ, எடுத்த காரியத்தினின்றும் பிற்காலத்தில் பெருங்கேடு உண்டாகுமென்று வெருட்டும். சந்தேக சுபாவமுள்ளதானல், கஷ்டப்பட்டுங் காரியம் சித்திக்குமென்ற நிச்சயமில்லையெனவும் கஷ்ட நஷ்டங்கள் மாத்திரமே யனுபவிக்க நேரிடுமெனவும் தோற்றுவித்து, மனதைப் பின்னடைவிக்கும்.

இங்ஙனம் மனத்தின் வேகத்தைத் தேக்கும் யக்ஷ்மா (க்ஷயரோகம்) வால் பீடிக்கப்பட்டவன் சுபாவத்திற்கேற்றபடி மடி, தந்திர சக்தியால் குழப்பத்தை யுண்டாக்கி, மனதை அவசியமாய்ச் செய்ய வேண்டிய காரியத்தினின்றும் நீக்கி, தீராத்துயரக் கடலிலமிழ்த்திவிடும்.

மடியினல் காரியம் கெடினும் மெய்வருத்தமாகிலு மில்லையாமோ வென்றால், அதுவுமசாத்தியம். ஏனெனில், அநேகதடவைகளில் ஆலஸ்யம் அடைந்த மனது, முதலில் காரியத்தைவிட்டு, அச்சமயந் தவறினல் காரியம் தவறுமென்கிற சம

யத்தில் அக்காரிய பலனை யிழக்க வாற்றுமையால் அதிக சிரமத்துடன் அக்காரியத்தைத் தொடங்கும். இவ்வாறு செய்தும் தகுந்தவேளை தவறினதால் பட்ட கஷ்ட மெஞ்சுமேயொழிய காரியம் கைகூடாது.

ஸ்தூலதேகத்தை வாதிக்கக் கூடிய யக்ஷ்மா (க்ஷயரோகம்) வானது எல்லா அவயவ சக்திகளையும் நிர்மூலமாக்கி தேகத்தைச் சொற்பகாலத்தில் சவமாக்கும். மனோ ராஜயக்ஷ்மாவாகிய ஆலஸ்யமோ, புத்தியையு மிந்திரியங்களையும் நாளடைவில் பலமற்றதாக்கி ஜீவனைமாத்திரம் அழிக்காமல் உயிரோடுற்ற பிணமாக்கிவிடும்.

மேலும் தூலதேக யக்ஷ்மாவானது சீக்கிரத்திலுயிர் துறக்கச்செய்வதாற் பிறருக்கு அவனால் மாணத்திற்குப்பின் யாதொரு உபாதியுமில்லை. மனோ ராஜயக்ஷ்மாவானது மனிதனை மூச்சோடு கூடிய பிணமாக்கி விடுவதால் அவன் பந்துக்களுக்கு அவன் சரீரபோஷணை விஷயமாய்ப் பல கஷ்டங்களும் வந்து சேரும். அவனிருந்துமிறந்தவனுக்கொப்பானதால் அவனையுள்வனை அவனுலுலகத்திற்குப் பிரோதபாதையே யொழிய வேறொன்றில்லை

இனி சோம்பலென்கிற இப்பாழுங் கிணற்றில் விழாதிருக்கச் சூழ்ச்சி யாதெனில், அதனாரம்பகாலத்தில் அதற்கும் ஆக்கிரகத்திற்கும் போராட்டம் தொடங்குமென்றேமல்லவா; அப்பொழுது உற்சாக சக்தியை வெகு பலப்படுத்தி யுத்தத்தில் மனதைத்

தோற்கச் செய்யாமல் காரியத்தில் முயற்சிகொள்ள வேண்டும். உற்சாகம்தான் இவ்வியாதிக்கு ஏற்ற மருந்து. பொதுவாய், இம்மனோவியாதி, யௌவனத்திலாவது விருத்தாப்பியத்திலாவதுண்டாவதில்லை. அந்தோ! இளம்பிராயத்திலேயே இது உற்பத்தியாகிவிடுகிறது.

இம்மனோவியாதி சாதாரணமாய், செல்வத்திலுழலுபவரும், புத்திரரிடம் அளவிறந்தவார்வங் கொண்டுள்ளவருமான தனவான்களது சந்ததிகளையதிகமாய்ப்பாதிக்கிறது. சிறு வயதில் தந்தையினதிக செல்வத்தால் சிறிதுஞ் சிரமமின்றிச் சுகமனுபவிக்க நேரிடுவதால், பிற்காலத்தில் சுயப்பிரயாசை செய்யவேண்டிய சமயங்களில், பழக்கமில்லாத காயக்லேசங்களை (மெய்வருத்தங்களைச்) சகிக்கச் சக்தியற்று ஆலஸ்யத்தின்பாற் படுகின்றனர். அதனால்தான் ஐசுவரியவான்களும் தம் மக்கட்பால் அதிக வாற்சல்யமுடையவரும், இத் தீப்பழக்கம் தங்கள் கான்முளைகளிடத்து வந்து சேராது அதிக சாக்கிரதையாய்ப் பாதுகாக்கவேண்டும்.

இனி, சபலரிடம் ஆலஸ்யம் காணப்படுவதில்லையாதலால், சாபல்யமும், உற்சாகமும் இம்மனோவியாதிக்கு ஔஷதங்களெனக்கொள்ளுதல் கூடாது.

ஏனெனில், ஆலஸ்யத்தைச் சாபல்யம் போக்குமாறுலும், அதைவிடப் பன்மடங்கு வலியதான மற்றோர் வியாதியன்றோ? ஆதலின் சோம்பலைப் போக்க சாபல்யத்தைக் கைக்கொள்ளல், அக்னிமந்த

வியாதியை, அதியக்கினி என்கிற ரோகத்தால் நிவர்த்திப்பதுபோலவும், தலைவலி போக்கித் திருவலியடைவதுபோலவும், முள்ளையெடுத்து முளையடித்துக்கொண்டாற்போலவுமாகும்.

ஆகையால் இம்மடியென்னுமாலஸ்யத்தை நிர்மூலமாக்க உற்சாக சக்தியொன்றே, நன்மை செய்வதுடன், தீமைசெய்யாத திருமருந்துமாம்.

---

## 6 புத்திரன்.—The son.

குற்றமற்ற தேகேந்திரியங்களையுடைய யௌவன புருஷருக்கும் சுகசாதனங்களைச் சம்பாதித்து நுகரப் பிறருதவி யவசியமாகவிருக்கின்றது. அந்நியருதவியடைந்தும், எண்ணின சுகமும், துக்க நிவிர்த்தியும், எண்ணினவாறே சாதிப்பதில்லை.

குழந்தைப் பருவத்தில், நம்மவயவங்களும் ஐம்புலன்களும், அவைகளின் சக்தியும், முதிர்ந்து விகசியாமலிருக்குங் காலத்து, அவ்வவயவங்கள் முதலியவை இலேசில் நாசமடையத் தக்கவையன்ரோ? அவ்வாறுள்ள குன்றிய தேகேந்திரியங்களையுடைய குழந்தையின்கண் கைம்மாறு சற்றேனுங் கருதாது, தங்கள் சொந்த சுகசாதனங்களையும் நினையாது, வெகு காயக்லேசங்களை யனுபவித்துக்கொண்டு, பெற்றோர் அக்குழந்தையை, தேகேந்திரிய சுகபூர்த்தியுடன் யௌவனப் பிராயத்தில் சேர்ப்பிக்கின்றனரல்லவா?

"பிரதியுபகாரம் எதிர்பாராது பெற்றோர் குழந்தைகளை இரட்சித்தாரென்பது மனதிற்கு திருப்தியைத் தரத்தக்கதல்ல. ஏனெனில் புத்திரனிடத்திலிருந்து பிற்காலத்தில் பெற்றோர் பிரதிபலமடையவிச்சை வைத்திருக்கின்றனரன்றோ?" என்று இவ்விதம் சிலர் ஊகிக்கலாம். ஆனால் இந்த வூகம் முழுவதும் தவறு. ஏனெனில், பிற்காலதில் தமக்கு யாதொரு பிரதியுபகாரமும் செய்யத்திறமற்ற பிறவிக்குருடும், அங்கஹீனமுமான குழந்தைகளிடத்திலும், அவைகளால் ஆயுள்பரியந்தம் துக்கத்திற்கே காரணமானாலும், பெற்றோர் பிரீதிசற்றேனும் குறையாது அச்சிசுக்களைப் பாதுகாக்கின்றனர். பிரகிருதியில் இன்னும் யாதானுமாதாரமுண்டோவெனப் பார்ப்போம். மிருகங்களுக்கு நிகழ்காலவறிவேயொழிய எதிர்காலத்தைப்பற்றிய யோசனையில்லையல்லவா? அவ்வாறுள்ள ஜீவன்களுக்கும் தம் சிசுக்களிடத்தில், மனிதனைவிட வதிக வாற்சல்யம் இருப்பதை நாம் பார்ப்பதில்லையா? கைம்மாறு கருதியோ தம் குட்டிகளைப் பாதுகாக்கின்றன? பிரதிபல இச்சையில்லாமலே, மிருகங்களில் சிசு வாற்சல்யமியற்கையாய்ப் புலப்பட, அதற்கு விரோதமாய் மனிதனில் மட்டும் கைம்மாறு காரணம்பற்றி சிசு பரிபாலனம் நிகழ்வதெனக் கூறுவது யுக்திக்குப் பொருந்தவில்லை.

இனி பிரதிபலனுக்கேற்றவாறு செய்கின்ற மனிதனிடத்திலும், அஃதற்ற மிருகங்களிலும் ஒரேவிதமாய் பிரதியுபகாரவுத்தேசமில்லாமல் புத்திர

சிநேகமுண்டாவதற்குக் காரணமென்னவென்று யோசிக்கவேண்டியிருக்கிறது.

நாம் தத்துவ விஞ்ஞான சாஸ்திரத்தினுதவியால் எந்தெந்த சாதனங்களின் தத்துவங்களை யறிந்திருக்கிறோமோ வவையெல்லாம் அநேக சுகங்களுக்கும் துக்க நிவர்த்திக்கும் காரணமாயிருக்கின்றன. உலகத்தில் எல்லா வஸ்துக்களின் தத்துவங்களை யறியும் பக்ஷத்தில் அவையெல்லாம் நமது சுகத்திற்குக் காரணமாயிருக்கும். ஆதலின் பிரகிருதியால் ஜகத்தின்கண்ணுண்டாக்கப்பட்ட சர்வசிருஷ்டியும் ஜீவர்களது சுகத்திற்காகவென்று புலப்படுகின்றது. மேலும் சிசு க்ஷேமத்திற்காக பிரகிருதி மக்கட்பாலனைப் பெற்றோரிடமுண்டாக்கியுள்ளதென, இதனின்றும் தெளியத்தக்கது. இன்னும் மிருகங்களில் ஆண்களுக்குக் குட்டியினிடத்தில் வாற்சல்யமில்லை. ஏனெனில் குட்டியின் க்ஷேமத்திற்கு ஆணின் வாற்சல்யம் அவசியமேயில்லை. ஆனால் மனிதனிலோ, தந்தையினுதவி யத்தியாவசியமாக விருக்கின்றது. ஆதலின் மனித வர்க்கத்தில் மாத்திரம் தந்தைதாய் இருவரிடத்தும் சிசுவாற்சல்யம் அமைக்கப்பட்டுள்ளதெனத் தெளிவாகின்றது.

இனி "சிசுக்ஷேமத்திற்காக புத்திர சிநேகத்தை தாய்தந்தையரிடத்தி லமைத்த பிரகிருதி, சர்வ ஜீவர்களிடத்தும் தயையென்கிற சுபாவத்தை ஸ்தாபித்திருந்தால் சிசுக்ஷேமத்திற்கு இன்னுமதிக செளகரியமாயிருக்குமல்லவா? ஏனெனில், தயை சர்வ

ஜீவர்களுடைய க்ஷேமத்தையும் ஓரே விதமாய் சாதிக்கத்தக்கதோர் மனோபாவனையாதலால், அதை சர்வஜீவன்களிடத்தும் ஸ்தாபிக்கும் விஷயத்தில் அன்னை தந்தையரினின்றும் வரத்தக்க சிசுக்ஷேமம், எல்லாமனிதரிடத்தினின்றுங் கிடைக்கும். அதனால் புத்திராபிமானத்தினின்றும் வரத்தக்க காயக்லேச துக்கங்கள் தாய்தந்தையர்களினின்றும் குறைந்து போகும்" என்கிற சந்தேகமும் இதைப்போன்ற பிறவும் உண்டாகலாம். ஆனால் இந்த மார்க்கத்தி லுள்ள குற்றம் யாதெனில், தயாளுவினுடையவுப காரச்செயல் எல்லாப் பிராணிகளிலும் ஓரேவிதமாய் பரவிநிற்பதும் ஓரே பிராணியைத் தழுவி எப்பொழு தும் நிற்காத சுபாவமுள்ளதாதலாலும் ஒருயிர்ப் பற்று அவசியமான குழவி க்ஷேமத்திற்குத்தக்கவுப காரஞ் செய்வது, தயையினின்றும் நிறைவேறாது.

இன்னும் சிசுக்ஷேமத்திற்கு அதிக சௌகரி யத்தையுண்டாக்கத்தக்க மற்றோர் மார்க்கமாக எண் ணப்படுவது யாதெனில், குழந்தைகள் பிறந்தவுடன் வேண்டியவளவு பலமுள்ளதாகச்செய்யப்படவேண் டியதுதான். ஆனால் இம்மார்க்கத்தில் கீழ்வருங் குற்றமுண்டு. அதாவது, ஓர் பொருள் எவ்வளவுக் கெவ்வளவு விரைவாக புஷ்டியடைகின்றதோ அவ் வளவுக்கவ்வளவு சீக்கிரமழிகின்றது. உதாரண மாக, ஈசல், மழை பெய்தவுடன் உற்பத்தியாகின் றது. ஒரு மணி நேரத்துக்குள் சிறகு முதலியன முளைத்து யௌவனமடைகின்றது. அடுத்தவோர் மணிநேரத்தில் சிறகொழிந்து உடல் தளர்ந்து மரண

முமடைகின்றது. இவ்விதம் சுமார் நான்கு மணி நேரத்திற்குள் உற்பத்தி, ஸ்திதி, நாசம் இவைகளை யடைகின்றது. இதனின்றும் நாம் ஊகிக்கக்கூடியது யாதெனில், வெகுகாலமிருக்கவேண்டிய இம் மனிதவுடல் தகுந்தபலம் பூரணமாயடைய கால தாமதம் முக்கியமாய் வேண்டுமென்பதே. இத்தியாதி காரணங்களால், மனித சிசுக்கள் க்ஷேமத்திற்கு நெடுங்காலமவைகளையே தழுவி அன்போடு இருக்கக்கூடிய பிறசகாயமாவசியமானதால், அன்னை தந்தைகளிடத்தில் புத்திரவாற்சல்யம் பிரகிருதியால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதலால், நாம் ஆயுள்பரியந்தம் பூரண சுகமனுபவிக்கக் காரணமான வித்தேகம், நம் பெற்றோர்களது சுகங்களைத் தடுத்து அவைகளை நாமனுபவித்ததினால்தான் சரியான நிலைமையிலமைந்துள்ளது. இப்படிப்பட்ட புத்திராபிமானத்தைப் பிரகிருதி யேற்படுத்தாவிட்டால் நமது தேகம் பிறந்த வக்கணமே அழியவேண்டுமல்லவா?

மனிதன் பூரண நிலைமையடையும்பொழுது பல மனோவிருத்திகளவனிடமிருந்தும் விலகி, பரிபூரணத்திற்கு முக்கிய காரணமான தயைதான் கடைசியில் உறுதியாய் நிலைக்கின்றது. இக்குணம் நிறைந்துள்ளவனுடைய சுபாவம் யாதெனில், தனக்கு தீமையே விழைக்கக்கூடிய தன் சத்துருவின் சொற்ப சுகத்திற்காக தன் சுகத்தையுமுபேக்ஷித்து அச்சத்துருவின் சுகம் நிறைவேறச் செய்வதுதான்.

நாமெல்லோரும் முடிவில் இந்நிலைமையை யடைய வேண்டியவர்களல்லவா? நாமோ தாய் தந்தைகளது சர்வ சுகங்களையுமபகரித்தோம். பால்யத்திலவர்களுக்குப் பல துன்பங்களையும் கொடுத்தோம். ஆதலின் அவர்களின் க்ஷேமத்திற்காக நம்முடலுள்ளவரை நம்முயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கவேண்டியவர்களன்றோ? அப்படியிருக்க அங்ஙனம் செய்யாது நம் கடமைகளையுபேக்ஷிப்போமானல் நாம் சிம்மாசனுதிபதியாயிருந்தாலும், மனிதனென நடிக்கவுங்கூட தகுதியற்றவனெனத்தான் சொல்லக்கூடும்.

பெற்றோர்களுடைய ஹிதகிருத்தியத்தில் உதாசீனனுன மனிதனை மனிதவர்க்கத்திற் பிறப்பித்தது, ஒருகாலத்திலும் ஒன்றையுந் தவறுதலாய்ச் செய்யாத பிரகிருதிமாதாவின் தற்செயலான தப்பிதமெனக்கொள்ளத் தக்கதேயன்றி வேறன்று.

---

## 7. விவாகம்.—Marriage.

சுவாதந்திரிய சுகத்திற்கு உலகவின்ப விலக்கு காரணமல்லவென்றும், விஷய ஜெயமேவதற்குக் காரணமாகுமென்பதும், விஷய ஜெயமென்பது, விஷயங்கள் நம்மிடத்திற் சேர்ந்திருக்கும்பொழுதும் அவை நமக்குக் கீழ்ப்படிந்தும், மனது அவைகளுக்கு வசப்படாமலும், நம் நிச்சயத்தினின்றுஞ் சற்றேனு மிழுகாமலுமிருப்பதுதான் என்பதும் பிரமசரியத்தின் கீழ் கூறியுள்ளோம். இதுவுமன்றி,

THE MADURA TAMIL SANGAM

மேற்கூறப்பட்ட மனோபலம் பிரமசாரிக்கு வராததோடு, பலவித அநர்த்தங்களுமவனுக்கு வந்துசேருமென்றும் உரைத்தோம்.

இவ்வித அநர்த்தங்களை நீக்குவதற்கு விவாகம் செய்துகொள்ளுவோமென்று துணிந்தால் வேறு தீமைகள் சம்பவிக்குமோவென்றும், அத்தீமைகளுக்கு ஏதேனும் பரிகாரமுளதோவெனவும் இப்பொழுது நாம் யோசிக்கற்பாலது.

விவாகஞ் செய்வது விஷயஜெயத்திற்கு ஓர் காரணமாயிருந்தாலும், யாதொரு குற்றமுமற்ற ஓர் மார்க்கமென எல்லோரும் ஒப்புக்கொள்வது வருத்தமாயிருக்கும். ஏனெனில் விவாகஞ் செய்த தீரபுருஷருங்கூட, ஓர் பெண்ணை மணப்பது, மரணபரியந்தம் சிறையிலடைக்கப்படுவதை யொத்தது எனக் கூறுகின்றனரேயொழிய, அதில் சொற்ப குணமாவது இருப்பதாக நாம் அவர் சொல்லக் கேட்டதில்லை. மேலும் விவாகஞ் செய்துகொண்டவர்களின் பராதீனம் முதலிய பல துன்பங்களைக் கண்டு சிலர் பிரமசரியமே போதுமென நினைத்து விவாகத்தின்கண் பயமடைகின்றனர். இங்ஙன மனுபவமில்லாது பிறருடைய கஷ்டங்களைக் கண்டமாத்திரத்திலேயே பயப்படத்தக்க விவாகத்தை மனிதர் எங்ஙனமேற்றுக்கொள்ளுவார்.

இனி, இச்சந்தேகங்களுக்குச் சரியான விடை யாதெனில், மேற்சொன்ன கஷ்டங்கள் விவாகஞ் செய்துகொண்டவருக்கு வருவதுண்மையானாலும்,

அவை விவாக காரணத்தால் மாத்திரம் வந்தவை யல்ல. நாமொரு பெண்ணைக் கை பிடித்தல் எதற்காகவெனில், எல்லா இந்திரிய விஷயங்களை யும், ஜலபயத்தை வெல்லுவதுபோல், அதன் நடுவே நின்று வெல்லவும், நம் தேகபோஷணை முதலிய காரியங்கள் சிறிதும் வருத்தமின்றி நடைபெறவும், தர்மத்திற்கு முக்கிய காரணமாகிய, பரோபகாரம் என்கிற வித்து, முதலில் ஆத்மதுல்யப் (தன்னிடத் திற்போல்) பிரியமுள்ள ஓரிடத்தில் முளைத்துத்தழை க்குமாதலாலும், அவ்வித ஆத்மதுல்யஸ்தானம் மனைவியே யாதலாலுந்தான்.

மனைவி எவ்விதம் ஆத்துமதுல்யஸ்தான மென்று பார்ப்போம். ஆத்மாவிற்கு முதலில் பிரியம் தன்னிடத்திலும், பிற்பாடு அதன் பிரியத் திற்கு காரணங்களான வின்பங்களின் தாரதம்மி யங்களை யனுசரித்து விஷயங்களிலுமிருக்கக்காண் கிறோம். பாரியையானவள் எல்லா இந்திரியங்க ளின் பிரிய காரணமாயிருப்பதால், ஆத்மாவிற்குப் பாரியையிடம் விஷயங்களின்கண்ணுள்ள பிரியத் தைக்காட்டிலும் மேலான ஆத்மதுல்யப் பிரியமிருக் கிறது.

இது நிற்க, தர்மத்தினங்கமான பரோபகார மென்கிற வித்து (விதை) ஆத்மதுல்ய ஸ்தானத்தி லுண்டாவதென்பதை விவரமாய் "தயை" யில் சொல்லுவோம்.

இனி "விவாகம் காவலில் வாசம்" என்று சொல்லுபவர்கூட, பாரியை இறந்தால் சிறையி

னின்று விடுபட்டவர்போல் களிப்படையாததோடு, தீராத்துயரத்தையுமடைந்து தன் தேகநாசத்தையும் விரும்புகின்றனர்; இத்துயரத்தையொழிக்க மறு தாரமும் உடனே மணம் புரிகின்றனர். இதனின்றும் பாரியை ஆத்மதுல்யப் பிரியையென்று வெளிவாகின்றது.

இதுகாறுஞ் சொன்ன விஷயங்களினின்றும், மனையாளால் அநேக துக்கங்களுண்டாவதானாலும், அவ்வித துக்கங்களையெல்லாம் அலட்சியமாக்கத் தக்க சுகமும் பாரியையினிடந்தானிருக்கிறதென்று விளங்குகின்றது.

ஆனால் இவ்வளவு சுகத்திற்கும் பிரியத்திற்கும் காரணமான விவாகத்தின்கண் முன்சொல்லியபடி வெறுக்கத்தக்க துக்கம் உண்டாவது யாது காரணம் பற்றியோவென்றால்,புருஷன் குணங்களையும் குற்றங்களையு மாராய்ந்தறியத் திறமையற்றவனாய் மனையாளிடத்தில் தவறுதலான பிரியத்தை வைப்பதால்தான். ஏனெனில், ஆண்பாலாரிடத்தில் பிறரை நடுங்கச் செய்யும் பௌருஷமும், பெண்பாலாரிடத்தில் அபாயமுண்டாகுமோவென்று பின்னடையச் செய்கிற வச்சமும், இயற்கையிலுண்டு. ஆனால் புருஷன், பெண்ணினிடத்தில் தவறுதலான பிரியத்தை வைப்பதனால், அநாயாசமாய் ராஜ்யமுமாளக்கூடிய பௌருஷத்தையும் பாரியையின்கண் இழந்து விடுகிறான்.

புருஷன் ஆண்டன்மையை யிழப்பதால், புருஷனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்யும் அச்சத்தை

பெண்களிழந்துவிடுகிறார்கள். ஆகவே, மனைவி புருஷனுக்கடங்காததாலும் புருஷன் இல்லாளை யடக்கியாள திராணியில்லாமற் போவதாலுந்தான், விவாகத்தினால் வெறுக்கத்தக்க துக்கமுண்டாகின்றது. புருஷனது பௌருஷம் நசித்தால் இடுக்கண் வாராதிருக்கவுங்கூடுமோ ?

விஷப்பல்போன பாம்பை, பாம்பாட்டிப்பயலும் அதன்கண் சிறிது மச்சமின்றி இருப்பதுமல்லாமல் அதற்குச் சிரமம் வருமாறு எப்பொழுதும் தன்னிஷ்டம்போல் ஆடவும் செய்கிறானன்றோ ? ஆனால் விஷப்பல்லோடு கூடிய சர்ப்பத்தின்கண் பயமட்டுமல்ல ; அச்சர்ப்பமிருப்பதாகச் சந்தேகப்பட்ட திசையிலும் செல்ல, எவ்வித தீரரும் அஞ்சுவார். புருஷன் மேன்மைதங்கிய தனது ஆண்டன்மையைச் சிற்றின்பவவாவினாலிழந்து, அடிமைத் தொழிலைப் பிரியத்துடன் செய்கிற ஓர் பெண்ணின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவானானால், துக்கம் எவ்வாறு நேராமலிருக்கும்?

அடிமைக்கும் அடிமையாயிருக்கும் எஜமானனுக்கு உயிர்போமளவும் சிறையிலிருத்தலையொத்த துன்பம் நேரிடுமென்று சொல்லவும் வேண்டுமோ ? பௌருஷம் நிறைந்த புருஷனுக்கும், விவாகம் பூரணப் பிரயோஜனத்தையுண்டுபண்ணும் மற்றுமுள்ள வழிகள், "விவாகமுறை" என்னும் வியாசத்தின் கீழ் கூறப்படும்.

---

## 8. ஞானம்.—Knowledge.

நாம் மனிதராய்ப் பிறந்து என்னென்ன சுகங்களை அனுபவிக்கிறோமோ அவைகளுக்கெல்லாம் காரணம் ஞானமேதான். சுகானுபவங்களுக்கு வேறு காரணங்களிருக்குமானாலும் அவைகளெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து, ஞானமில்லாமற்போனால் பிரயோஜனமற்றவையாகும்.

மேலும், வேறு காரணங்களினுதவியில்லாமல் ஞானம் மாத்திரம், சுகானுபவத்திற்குக் காரணமாகவுமிருக்கிறது. எல்லா ஜீவன்களைக் காட்டிலும் மனிதனில் இவ்வளவு மேன்மை நிறையச் செய்ததும் ஞானமேதான். மனிதரில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று சொல்லப்படுகின்ற இந்த இரண்டு பதவிகளுக்கும் காரணமாயிருப்பது முறையே, ஞானபூரணமும், ஞானசூன்யமுமே.

இவ்விதம் எல்லாச் சிறப்புகளுக்கும் காரணமாயிருக்கக்கூடிய ஞானமென்பதென்னவென்று பார்ப்போம்.

ஒவ்வொரு விஷயத்தின் குணதோஷங்களைத் தெளிவாயறிந்து குற்றங்களை நீக்கி குணங்களைக் கைப்பற்றி சந்தோஷத்தை எது அடைகிறதோவது ஜீவன் அல்லது ஆத்மாவென்றும், விஷயகுணதோஷங்களை அறிந்தபின்னர், தோஷங்களை நீக்கி, குணங்களைத் தேடி ஆத்மாவில் சேர்க்கிற கரணம் (கருவி) புத்தியென்றும், புத்தியின் இவ்வித சக்திக்கு ஞானமென்றும் பெயர்.

இதில், ஜனனமுதல் மரணம் வரையிலுள்ள சுக துக்ககாரணங்களையறியக்கூடிய ஞானத்திற்கு உலக ஞானமென்றும், பிறப்புக்குமுன்னும் இறப்புக்குப் பின்னும் உள்ள சுகதுக்ககாரணங்களையறிந்து, அநேக ஜன்மங்களில் நெடும்பிரயாணம் செய்கிற ஆத்மாவிற்கு சாசுவதசுகத்தைக் கொடுக்கும்படியான ஞானத்திற்கு ஆத்மஞானமென்றும் சொல்லத்தகும்.

மனிதனைவிட பன்மடங்கு பலத்திலும், அதையுபயோகிக்கிற பராக்கிரமத்திலும் சிறந்த காட்டுமிருகங்கள், ஜலஜந்துக்கள், ஆகிய இவைகளின் சக்திகளை பிரயோஜனமற்றதாக்கி, அவைகளினால், தான் யாதொரு கஷ்டமுமனுபவியாமல் ரக்ஷிக்கப்பட்டு, அவைகளைத் தனக்குக் கீழ்ப்படுத்தி அவைகளின் சக்திகளாலுண்டாகக்கூடிய சுகங்களைத் தனக்கு உபயோகப்படுமாறு செய்து, தான் வாழ்வதற்குக் காரணம் இந்த ஞானத்தினுதவிமாத்திரம்தான்.

ஆனால் பிறஜந்துக்களைவிட எவ்வளவோ மேன்மையை மனிதனிடத்தில் உண்டுபண்ணின இந்த ஞானம் எல்லாமனிதருக்கும் பொதுவாயிருக்க, மனிதரில் அநேகர் மிருகங்களைப்போல் பிறருக்கு அடிமைகளாகி எப்பொழுதும் துக்கப்படவும், வேறு சிலர் மற்றவர்களது உதவியினாலுண்டாகக் கூடிய சுகங்களைத் தாங்களனுபவிப்பதற்கும் காரணம் யாதெனின், இஞ்ஞானம் சிலரிடத்தில் அவசியமானவிஷயங்களில் வேண்டியபடி உபயோகிக்கத்

தக்கவிதம் வளர்ந்திருப்பதாலும், பிறரிடத்தில் அங்ஙனமில்லாததாலுந்தான்.

இந்த ஞானம் என்னென்ன விஷயங்களில் எவ்வெவ்விதம் பூர்த்தியானல் இம்மைச் சுகம் நிறைவு பெறும் என்று ஆலோசிப்போம்.

இம்மையில் நாம் அடையக்கூடிய சுகங்களெல்லாம் புத்தி, ஐம்பொறிகள், அப்பொறிகளாலறியக்கூடிய விஷயங்களாகிய இவற்றைச் சார்ந்திருக்கின்றன. ஆதலினவைகளினியற்கையை அறிந்து அவற்றை பலப்படுத்தும் ஞானமே நமக்கு இன்றியமையாதது.

உடலும், பொறிகளும், இகசுக சாதனங்களும் குறைவற்றிருக்கும் மனிதர்களிலும், ஞானம் பூரணமாயில்லாமலிருந்தால் சுகம் சற்றேனுமுண்டாவதில்லை. மேலும் ஞானம் புத்தியினது சக்தியாதலால் புத்தியினபிவிருத்திமார்க்கத்தை அறிந்து அதில் சிரமஞ் செய்வதுதான் நமக்கு முக்கியமானதென்று வெளியாகின்றது.

ஆக்கிரகம், கோபம், அசூயை, சாபல்யம், முதலியவை, புத்தியைக் கெடுக்கின்றன. ஏனெனில், கோபம் முதலிய மனே நிலைமைகள் நம்மை வாதிக்கும்பொழுது, முன்னடைந்திருக்கக்கூடிய அறிவுங்கூட நாசமடைகிறதாகத் தெரிகிறது.

தயை, சத்தியம், திருப்தி முதலியன புத்தியை வளர்க்கத்தக்கவை. ஏனெனில், இம்மன நிலைமைகளில், புத்திக்குச் சமாதானமும் அதனல் முன்

னிருந்ததைவிட விஷயத்தைக் கிரகிக்கும்படியான சக்தியதிகமாகவும் காணப்படுகின்றது. ஆதலின் புத்தியின் சக்திக்கு துர்ப்பலத்தையுண்டாக்கத்தக்க முன் சொன்ன கெட்ட மனநிலைமைகளையொழித்து, அதன் வளர்ச்சிக்குக் காரணமாகிய பின்சொன்ன மனநிலைமைகளையடைய முயலவேண்டும். இதனால் புத்திநிறைவும், புத்தியின் நிறைவால் ஞானநிறைவும் முடிவிற் சுக நிறைவும், மனிதருக்கு அநாயாசமாய்க் கிடைக்கும்.

இனி, முன்னறியாத விஷயங்களை யெடுத்துக் கொள்ளும் புத்தியினோர்வித சக்திக்கு வியாபக சக்தியென்றும், அறிந்தவைகளை மறக்காது வைத்துக்கொள்ளும் மற்றோர் சக்திக்கு ஞாபகசக்தி யென்றும் சொல்லப்படும்.

இனி மனிதர் புத்தியின் சக்தியை இந்த இரண்டு விதமாய்ப் பிரிக்கக் காரணம் யாதோ? விஷயங்களை மேன்மேலும் அதிவேகமாய் எடுத்துக் கொள்பவர்பால், சற்று முன்னறிந்தவற்றின் ஞாபகம் முழுவதுமிராது போவதும், புதிது புதிதாய் விஷயங்களைத் தெரிந்துகொள்ளத் திறமற்றவர்பால் வெகு காலத்திற்குமுன் தம்மனதிற்பட்டவை அழியாது நிற்றலுங்கண்டு, புத்திக்கு இரண்டுவித வித்தியாசமான சக்தியுளதெனக்கொண்டனர்போலும்.

ஆனால் உற்றுநோக்கினிவ்விரண்டு சக்திகளுமொன்றேயன்றி யிரண்டல்ல. சிலருக்கு அறிந்த விஷயங்களை அடிக்கடி நினைக்க சமயம் வாய்ப்பதாலும், வேறு சிலர்க்கு அவ்விதம் நேராததோடு

புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள அதிக முயற்சி யேற்படுவதாலும், இரண்டு மாறுபட்ட சக்திகளுளவெனப் புலப்படுகின்றன. உதாரணமாக, கல்விப் பயிர்ச்சியற்ற பெண்மக்களிடத்தும், உடற்குற்றங்களால் ஞானமடையச் சௌகரியங் குறைந்த குருடர், செவிடர் முதலானவரிடத்தும் ஞாபக சக்தி பலமாயிருப்பதைக் காண்கிறோம். இவர்கள் புதிது புதிதாயதிக விஷயங்களையறிய சந்தர்ப்பமடையாததாலும், அறிந்த சொற்ப விஷயத்தை மேன்மேலுஞ் சிந்தித்து, தம்மையொத்த பிறரோடு நெட்டுருப் பண்ணுவதுபோல் ஒன்றையே சொல்லிச் சொல்லிக் காலங் கழிக்குங் கதியடைந்துளாராதலாலும், ஞாபகசக்தி பலமாயடைகின்றனர்.

ஆனால் கல்விப்பயிற்சி யதிகமுள்ளாரிடத்தும் புதியவிஷயங்களை யறியவேண்டுமென்னு மவாவிருப்பதாலும், தன்னைப்போன்ற கற்றவரோடுசம்பாஷிப்பதாலும், விஷயங்களை யெடுத்துக்கொள்ளும் சக்தி யதிகமாயும், ஞாபகசக்தி மட்டாயுமிருக்கிறது. ஞாபகத்தையேவதிகம் சார்ந்திருக்கும் வேதாப்பியாசம் முதலியவை செய்யும் மனிதரிடத்து, பெண்மக்களிடத்திற்போல் ஞாபகம் பலமாய்க் காணப்படுகிறது. விஷயத்தை யறிந்துகொள்ளும் சக்தியோ குறைந்துவிடுகிறது. ஆதலால் அவரவர்கள் செய்யும் வழக்கத்தை யொத்து புத்தியின் சக்தி, ஞாபகமெனவும் வியாபகமெனவும் வித்தியாசமுள்ளவை போல் காணப்படுவதேயொழிய இயற்கையில் அவையிரண்டு மொரே சொரூபமுள்ளவைதான்.

ஆதலின் நாம் ஞானம் நிறைய விரும்புவோ மானல் மிருகங்களிலும் காணும் ஞாபகத்தை மட்டும் வளர்ப்பதும், ஞானத்திற்குக் காரணமான சிந்திப்பைக் கெடுப்பதுமான குருட்டுத்தனமாய் நெட்டுருப்பண்ணும் கெட்ட வழக்கத்தை நிறுத்தவேண்டும்.

ஞானம் மனிதனுக்கு பிரதான சக்தியானதால் அதன் முக்கிய அம்சங்கள் பின்னல் தொடரும்.

---

## 9 கல்வி.—Learning.

மக்களாயுதித்தோர் நலம்பெருங் காரணங்களை யறிந்து அதனையடைவற்கும், தீமைவரும் வழிகளைத் தெரிந்து அது வாராது தடுப்பதற்கும், ஏதுவாயுள்ள புத்தியின் சக்தியை ஞானமென்று சொன்னேமல்லவா? எல்லாப் பொருள்களின் தோற்றங்களையும், தன்மைகளையும், உபயோகங்களையும் ஞானத்தின்பாற் படுத்துமாறு விஷயங்களை புத்தியில் சேர்ப்பிக்கச் செய்வது வித்தியாப்பியாசம் அல்லது "**கல்வி**" எனப்படும். கல்வியினுதவியின்றி, பொருள்களின் நுட்பவிஷயங்களையும் புத்தியின் சக்தியால் மட்டுமே அறிந்துகொள்ள சாத்தியந்தான். இவ்விதம் புத்தியின் சுயசக்தியால்மட்டுமே பூர்வீக மகாபுத்திமான்களால் தெரிந்துகொள்ளப் பட்டவைதான் தற்காலத்தி லுலகில் நடைபெறுமெல்லா சாஸ்திரங்களுமே. இந்தப்படி மகாபுத்திமான்களுக்குமட்டும் வித்தியாப்பியாசமின்றிக் கிடை

க்குமறிவு சாமானியமனிதருக்குக் கிடைப்ப தரிது.

சாதாரண மனிதனொருவன் ஓர் பொருளின் நுண்ணிய குணதோஷங்களைப் பிறருதவியின்றி யறி யப்புகின், எவ்வளவு காலத்தில் அஃது கைகூடு மென்று நிச்சயிக்கமுடியாது. வெகுகாலம் கஷ்டப் பட்டாலு மொருசிறிதுங் கூடாதும் போகலாம். மேலுமோர்விஷயத்தை சுயபுத்தியால் இலகுவாய் சொற்பகாலத்தில் அறியவல்ல புத்திமான்களுக்கும் மற்றோர் இலேசான விஷயத்தையதிக காலவுழைப் பாலும் அறிவது அசாத்தியமாகநேரலாம். ஆதலின் சுயபுத்தியால் மாத்திரம் பொருள்களின் ஞானத் தைத் தேடத்தலைப்பட்டால் சொற்பவிஷயங்களின் குறுகிய ஞானந்தான் வெகுகாலம் சிரமப்பட்டும் கிடைக்குமேயன்றி நிறைந்த ஞானம் கிடைப்ப தரிது. பூரணசுகமும் பெறக்கூடியதன்று வாணா ளெல்லாம் குன்றியவறிவோடும் துக்கநிறைவோடும் கழிக்க நேரும்.

இவ்விதமாய் இம்மார்க்கத்திலுள்ள காலதாமத மும் ஞானக்குறைவும் நீக்கவேண்டி ஏற்பட்டவழி தான் வித்தியாப்பியாசம் அல்லது கல்விப் பயிற்சி என்பது. இவ்வித்தியாப்பியாசத்தால் கிடைப்பது யாதெனில் வெகு பண்டைகாலத்து மூதறிஞோர் தம் சுயபுத்தி சக்தியால் கண்டறிந்த பொருள்களின் தோற்றம், ஒடுக்கம், உபயோகம் முதலியவைகளை நம்மனோர் உபதேசத்தால் வெகு சீக்கிரத்தில் சுலப மாயடைவதுதான். இங்ஙனே, விஷயங்களைத்தாமே

கண்டறிய வேண்டிய கஷ்டமின்றி, நம்முன்னோர் சம்பாதித்து வைத்த ஞானத்தை நாமடைந்து அதன் சுகத்தையனுபவிக்கிறோமல்லவா?

கல்விப்பயிற்சி நிறைவதற்குக் கேள்வியும், தாமே கண்டறிதலும் இன்றியமையாதவை. நேரில் கண்டறியாத கேள்விமாத்திரமாவது, கேள்வியற்று நேரில் கண்டறிதலாவது, பொருள்களின் நுண்ணிய ஞானத்தையடைவிக்காது. ஏனெனில், முன்னது (கேள்வி) குருடன் விஷயஞானத்தையும், பின்னது (கண்டறிதல்) மிருகங்களின் பொருட்காட்சி ஞானத்தையு மொத்துளது. இவ்வாறன்றி வேறெவ்விதமிருக்க முடியும்? இதனுண்மையைத் தெளிவிப்பானொருதாரண மிங்கியம்புவோம்:—ஓர் சிற்ப சாஸ்திரியும், சிற்பமரியாத சாதாரண மனிதனொருவனும், ஓர் பசுவும், சிறந்ததோர் சிற்பசாஸ்திரத் தேர்ச்சி முழுமையும் காட்டவல்ல கட்டடத்தையடைந்ததாகக்கொள்வோம். அவண் நிகழற்பாலது சற்று நோக்குவோம். பசு, ஓங்கிய கட்டடத்தின் காட்சியளவிலே மிரண்டோட்டம் பிடிக்க, சிற்பஞானமற்றவன், அக்கட்டடத்தில் வசிப்பவர்களுக்குள்ள சௌகரியங்களைக் கண்டுகளிக்க, சிற்பசாஸ்திரஞானமுள்ளவனோ வம்மாளிகையின் விசித்திரவமைப்பும் தோற்றப்பொலிவுமதை வனைந்தவன் சிற்பத்தொழில் வன்மையும் நோக்கி வியந்து, களிக்கடலிலாழ்ந்து, அம்மாளிகையைப்போல வநேக கட்டடங்களை கட்டும்படியான வறிவையு மடைகிறானல்லவா? இவ்விதம் மூவகை வித்தியாசமான வுண

ர்ச்சிக்குக் காரணம், சாதாரண மனிதனும் பசுவும் இவ்விஷயத்தில் கேள்வி ஞானமடையாததாலும், சிற்பசாஸ்திரி யதை யடைந்துளா னுதலாலு மன்றோ? இதுபோலவே கண்டறியாத கேள்வி ஞானமும் பயனற்றது. ஒருவனது குணம், குற்றம் இவைகளின் பகுத்தறிவு அவனுடைய சரித்திரம் மாத்திரம் படிப்பதினுல், தெளிவாகாது. அவனைப் பற்றி நேரில் கண்டறிந்தால்தான் அஃது செவ்வனே புலப்படும்.

ஆதலின் மூதறிவாளர் நேரில் கண்டறிந்த விஷயஞானத்தைச் செவியின் வாயிலாய்மட்டும் யாம் அறிதலின் நன்மை, நேரிற் கண்டறிய முயலும் வழியிலுள்ள பற்பல தடைகளை யொழிக்குமேயொழிய, நிறைந்த ஞானத்தை ஒருபோதுமடைவிக்காது. இது எல்லாருக்கும் தெரிந்ததானுலும் காரியத்தில் அதைத் தழுவி நடப்பவர் வெகு சொற்பமென்றே சொல்லவேண்டியிருக்கின்றது. செவிப்புலனுய்மட்டும் சம்பாதித்த ஞானத்தோடு நம்மவர் கல்விப் பயிற்சியினின்றுந் திரும்பிவிடுகின்றனர். இதுவுமல்லாமல் தம் கல்வி, கட்புலனுராய்ச்சியில்லாமலே நிறைந்து தாம் வித்துவான்களாய்விட்டதாகவும் நினைக்கின்றனர். அந்தோ! இவர் எப்பெரும் பிழைக்குள்ளாகின்றனர்காண்! ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவுமோ. இவர் கேட்டதைக் கண்ணுரக் கண்டு அவ்வறிவை காரியத்தில் செலுத்தி, அதில் மன நாட்டம் பண்ணினுலொழிய, நற்குணவான்களும் தீக்குணம் போக்கியவருமாவாரோ? ஆகார்.

ஆதலின், நம் தேயத்தில் கற்றுக் கட்புலனுபறிந்த சான்றோர், பொருள்களினுராய்ச்சியை எவ்விடத்து முற்காலத்தில் நிறுத்தினரோ அவ்விடத்தே அது நாளடைவிலடைந்திருக்கவேண்டிய வுயர்ச்சியடையாது நிற்பதையும், சிற்சில விஷயங்களில் தாழ்ந்து பின்னடைந்துவிட்டதையும் காண்கிறோம். உற்று நோக்கின், தொன்றுதொட்டுள்ள விஷயஞானங்கள் பார்வைக்கு நடமாட்டத்திலுள்ளனபோல் காணப்படினும், சவத்தையொத்துளவேயன்றி காரியத்திலுபயோகப்பட்டு நுண்ணிதின் நடைபெறுவதில்லை. மேற்கூறியவையினின்றும் கல்வியினுடலாயுள்ளது கேள்வியென்றும், அதனுயிர், கட்புலனுராய்ச்சியென்றும், நாமறியத்தக்கது.

இனி அநேகர் தற்காலத்தில் கல்வியை வயிற்றுப் பிழைப்புக்குக் காரணமெனக் கொள்கின்றனரேயன்றி, அஃது உயர்ந்த, என்றென்றைக்குமழியாத, குறைவற்ற க்ஷேமத்திற்குக் காரணமென நினைப்பதேயில்லை. வயிறு வளர்த்தல் கேவலம் கல்வியில்லா மனிதரிலும், விலங்குகளிலும் சிறப்பாக நடைபெறவில்லையோ? இத்தனை கற்றும் கல்வியினுலாயபயன், பிழைப்பதற்கு வழியாவதொன்றேயெனக் கொள்ளல் எவ்வளவு ஈனம். ஞானம் வேண்டாது உடலையே வளைத்துச் செய்யவேண்டிய காரியங்களுக்கும், ஞானத்தோடு கூடிய காரியங்களுக்கும், பயனில், வேற்றுமையில்லாதுபோகின், ஞானத்தால் மட்டுமே வேறுபடுகின்ற மனிதருக்கும் விலங்கினத்திற்கும் பேதமில்லாது போகாதோ?

இனி, நம்மவரில், ஆடவர் கல்வி கற்பதுபோல் பெண்டிரும் கற்கவேண்டுமெனவும், வேண்டியதில்லை யெனவும், கற்ருல் பயனற்றதெனவும், தீமை விளை விக்கக்கூடியதெனவும் பற்பல மாறுபட்ட அபிப்பிரா யங்கள் வழங்கா நிற்கின்றன. ஓர் விஷயம் அவ சியமோ அல்லவோவென்பதை, நாம் எல்லாவற் றிற்கும் காரணமான இயற்கை (பிரகிருதி) யின்கண் கண்டறிதல் வேண்டும். நாம் கொள்ளும் நிச்சயம் இயற்கைக்கு விரோதமானுல் அஃது பித்தனுடைய காரியம்போல் பிரயோசனமற்றதாகும். ஏனெனில், இயற்கைக்கு விரோதமாக, நாம், ஆகாயத்திலும் பறந்து செல்லக் குதிரைகளுக்கு சிறகும், மாமிச மிலகுவில் கிடைக்க, சில பறவைகளுக்கு சிறகில் லாமலிருத்தலையும் விரும்புவோமானுல், அவை நம் விருப்பத்திற்கிணங்க அவ்வாருகின்றனவோ? நமது விருப்பங்கள் உண்மையில் அதிகப் பிரயோசனத்தை யுத்தேசித்துண்டானவையானுலும் அவை நிறை வேறுவதில்லை. ஏனெனில் நாமுத்தேசித்தது இயற் கைக்கு விரோதமல்லவா?

இனி பெண்களிடத்தில் கல்விப்பயிற்சிக்கின்றி யமையாத விஷயங்களையறியும்படியான மனேசக்தி இயற்கை (பிரகிருதி) யால் அமைக்கப்பட்டுளதா யின், அவர்களுக்கு கல்விப்பயிற்சி வேண்டுமென்றே இயற்கையுத்தேசித்துள்ளதுபோலும் ஆதலினதை யாம் தடுக்கற்பாலதன்று. மற்றுமிவ்வுலகில் பெண்க ளாலாகவேண்டிய காரியங்களை யாலோசிக்கு மிட த்து, கல்வி யத்தியாவசியமென்றுங் கண்டறியலாம்.

ஓர் பெண் தன்னுயுட்காலத்தில் ஓர் புருஷனுக்குத் தகுந்த மனைவியாயும், பலகுழந்தைளின் தாயாயு மிருக்க நேரிடுகின்றது. உலகில் இவ்விரண்டு கடமை களைவிட அறிவு அதிகம் வேண்டியதான மற்றொன் றிருப்பதாக நாமறியத்தக்கதல்ல: இப்படிப்பட்ட கடமைகளை பெண்மக்கள் கல்விப்பயிற்சியின்றி கழிக்கவல்லவரானல், அவர்கட்குக் கல்வி அனுவசிய மே. அங்ஙனமல்லவெனில் கல்விப்பயிற்சி அவர் களுக்கு மின்றியமையாததெனச் சொல்லவும் வேண் டுமோ?

---

## 10. செய்யுள் வசன ஆராய்ச்சி.

**நா**ம் குழந்தைப் பருவத்தில் விலங்குகளைப் போல் பகுத்தறிவின்றியிருக்கிறோம். வயதாக வாக பாஷைகளினுதவியால் வெளிப்படுத்தப்படு கின்ற ஞானத்தையடைந்து எல்லாவுயிர்கட்கும் மேலான நிலைமையையும், கடவுளின் தன்மை யும் வாய்ந்துளதோ எனச் சந்தேகிக்கத்தக்க உயர் ந்தபதவியையும், பெற நேரிடுகின்றது. ஆதலால் இவ்வித பெருமையுள்ள பாஷையினிருகிளைகளா கிய செய்யுளும், வசனமும் எவ்விதம் ஒன்றுக் கொன்று வித்தியாசப்பட்டுளதென ஆராய்ச்சி செய் வது மிகக் கற்றுணர்ந்த ஆன்றோர்க்கே பெரிய நூலின் வாயிலாய்மட்டுங் கூடியதானுலும், தற் காலத்திலிவ்விதவாராய்ச்சியின் அவசியம் காணப் படுவதால் அதைக் கவனியாது விடவும் கூடவில்லை. ஆதலின் சிற்றறிஞனை நான் எனது குறுகிய வறி

விற்கு எட்டினமட்டும் இவ்வாராய்ச்சித் துறையி லிறங்குகின்றேன்.

இம்மானிடவுடலை ஆபத்தினின்றும் நீக்கிப் போற்றிப் பாதுகாப்பதற்கு நம் இருகைகளும் எவ் விதமமைக்கப்பெற்றிருக்கின்றனவோ, அவ்வாறே நம் மனோதேகத்தை அஞ்ஞான துக்கத்தினின்றும் நீக்கி, அதற்கு ஞானமாகிய வுணவைக் கொடுக்க பாஷையினிரண்டு கைகளாயுள்ளவையே செய்யுளும் வசனமும். இவைகளின் உதவியால்தான் நாம் பிறருக்கறிவு புகட்டவாவது, அறிவைப் பிறரிடத்தி னின்றும் பெறவாவதுவேண்டும்.

செய்யுட்கும் வசனத்திற்குமுள்ள வித்தியாசம் தெளியும்படி ஆராய்ந்தறிதல் வெகு கஷ்டமானாலும், அவை நம்மிரண்டு கைகளுக்கு மொப்பானவையென் றும், எது எந்தக் கைக்கு ஒத்திருக்கிறதென்றும் கண்டறிந்தால், செய்யுள் வசனமாகிய விரண்டில் மேன்மையானது இன்னதென்று நாம் தெரிந்து கொள்ளலாம்.

இனி இதைக் கண்டறிதற்குமுன் இடக்கை வலக்கைகளுக்குள்ள வித்தியாசம் யாதெனப் பார்ப் போம்:—(1) ஒரு கையால் செய்யக்கூடிய காரியங்களை வலக்கை குறைவற செய்யத் திறமுள்ளது. (2) காரி யங்களைக் காலதாமதமின்றியுஞ் செய்யும் (3) காரி யங்களைச் செய்வதில் அதற்குப் பிறருதவியும் வேண் டியதில்லை. (4) அது செய்யும் வேலையில் தவறு களும் ஆபத்துக்களும் நேரிடுவதில்லை. ஆனால் இடக்

கையோ (1) இலேசான காரியத்தையும் சரிவர செய்யத் திறமற்றது. (2) சிறு காரியங்களைச் செய்வதிலும் காலதாமதமுண்டாகின்றது. (3) சுளுவான காரியங்களிலும் பிறசகாயம் வேண்டிவரும். (4) தான் செய்யும் காரியங்களிலிருந்து அவயவங்களுக்குத் தீமை விளைவிக்கும்.

இனி செய்யுள் வசனங்களின் இழிவுசிறப்புகளை நிச்சயிக்க ஓர் பாஷையைக் குறிப்பிட்டுக் கொள்ளவேண்டியதவசியம். ஆதலின், நாமெந்த பாஷையை யெடுத்துக்கொள்வதென்று ஆலோசிப்போமானால், நம்மிந்தியாவைப்பற்றினமட்டில் ஏறக்குறைய எல்லா இந்திய பாஷைகளுக்கும் தாயகமான சமஸ்கிருத பாஷையை எடுத்துக்கொள்ளல் தகுதியெனப் புலப்படுகின்றது.

சமஸ்கிருதபாஷையில் வெகு பழமையான நூல்களாகிய வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், ஜோதிஷநூல்கள், அஷ்டாங்கஹிருதயம் முதலிய வைத்திய நூல்கள், இவையெல்லாம் செய்யுள்ரூபமாய் நடைபெற்று வருகின்றனவல்லவா? வேதங்களில் மனிதனுக்குவேண்டிய எல்லா விஷயங்களும் நிறைவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றனவென்று பலருஞ் சொன்னாலும் நமக்குக் காரியத்திற்கு வேண்டிய மாதிரியாய் சொற்ப விஷயத்தையுமறியக் கூடியதாயில்லை. அவைகள் நமக்கு விளங்காமலேயிருக்கின்றன. ஸ்மிருதிகளும் நமக்கு வெகு அவசியமான பலவிடங்களில் அபிப்பிராய பேதங்களை யுண்

டாக்கி சந்தேகத்தை விளைவிக்கின்றனவேயன்றி தெளிவைக்கொடுக்கின்றதில்லை. பின்னும் பாஹடாசாரியருடைய அஷ்டாங்கஹிருதயத்தை அதிக காலம் ஆராய்ச்சி செய்த வைத்தியர்கள் சொற்ப வியாதிகளையும் வெகுகால சிகிச்சையாலும், பிரயத்தனத்தாலும் சொஸ்தப்படுத்தமுடியாமல் பின்னடைகிறார்கள். தற்காலத்தில் வசன நடையில் எழுதப்பட்ட வைத்தியநூல்களைக்கற்ற நவீன வைத்தியர் எப்படிப்பட்ட வியாதிகளையும் கொஞ்சகாலத்தில் கஷ்டமில்லாமலே நீக்குகின்றனர். இதன் காரணம் பாஹடாசாரியருடைய வைத்திய சாஸ்திரவாராய்ச்சிக் குறைவென்று சொல்லற்பாலதன்று. ஏனெனில், தற்காலத்தில் மேநாட்டு நவீனவைத்திய முறைகளைக் கற்றறிந்தவருங்கூட பாஹடாசாரியரது நூலில் சொல்லிய வியாதிகளையும், ஔஷதங்களையும், மறுக்காததோடு பரிவுடனும் ஆதரிக்கின்றனர். ஆதலின் இவ்விரு திறத்து வைத்தியரும் தம் திறமையில் வித்தியாசப்படக் காரணம், பாஹடர்நூல் செய்யுளாயும், நவீன நூல்கள் வசனமாயுமுள்ளதென்பதே; என அறிய வேண்டும். பாஹடர் வசனமாய் எழுதியிருந்தால் விஷயங்களை தெளிவாயும் சுலபமாயும் கற்றுக் கொள்ளலாம். முன் சொன்ன காரணத்தால் செய்யுளுக்கு, இடக்கையின் முதலாவது இலக்கணமாகிய "ஒரு காரியத்தையும் சரிவர செய்யத் திறமையற்றது" என்பது பொருந்தியுளது. பின்னும் ஒருமணிநேரத்தில் ஒருவர்க்கு நாம் வசன

நடையில் தெரிவிக்கக்கூடிய எளிதான விஷயத்தை யும், செய்யுள்நடையில் பத்து தினங்களிலும் வெளியாக்கக்கூடுமோ கூடாதோவென்பது சந்தேகந்தான். வெகுகாலம் கஷ்டப்பட்டு செய்யுளாய்ச் செய்த நூல், பிறருக்கு அறிந்துகொள்ள அதிக கால தாமதமானாலுமாகலாம். அவ்வாறு காலதாமதப் பட்டும் அறியமுடியாமலும் போகலாம். இக்காரணங்களால், அற்பகாரியங்களிலும் காலதாமதம் நேரிடும் என்கிற இடக்கையினிரண்டாவது இலக்கணமுமிருக்கிறதெனத் தெளிவாகின்றது.

மேலும் சமஸ்கிருத பாஷையில் செய்யுள்ரூபமாயுள்ள ஓர் நூலின் விஷயத்தையறிய உரை யெழுதப்படவேண்டுமானால், அவ்வுரை வசனநடையிலிருந்தாலொழிய வந்நூலின் விஷயம் தெளிவாகிறதில்லை. வசனநடையிலுள்ளவோர் நூலுக்கு செய்யுள்நடையில் ஓருரை அவசியமுமில்லை. அஃதிருப்பினும், அது அந்நூலின் நுட்ப விஷயங்களை விளக்கத்திறமற்றதாயுமிருக்கின்றது. இக்காரணத்தால் ‘அற்பகாரியங்களைச் செய்வதிலும் பிறர் சகாயம் வேண்டியது’ என்ற இடக்கையின் மூன்றுவதிலக்கணம் செய்யுளுக்குண்டென்று தெரிகின்றது. நம்மிந்தியாவில் எல்லாராலும் நன்கு மதிக்கப்படுவதும், எல்லா விஷயங்களடங்கியதுமான சமஸ்கிருதபாஷை ஜனங்களிடத்தினின்றும் விலகி, கொஞ்சமும் நடமாட்டமில்லாமல் பழைய நூல்களோடு மட்டும் நின்று, இறந்த தன்மையை யடைந்துளது.

இதன் காரணம் யாதெனவினவுங்கால் அந்த பாஷையின் சொரூபத்தை நன்ருயறிந்துகொள்ள அதன் இலக்கணநூலைக்கற்றல் அவசியமன்ருே? அவ்விலக்கணம், கரையில்லாததாய் வளர்ந்து, சாதாரண மனிதர் அதிககாலம் கஷ்டப்பட்டும் அறிய வசாத்தியமாயுள்ளது. ஆதலின் மனிதர் அப்பாஷையைக் கற்பதினின்றும் பின்வாங்குகின்றனர்.

இச்சமஸ்கிருத பாஷையின் இலக்கணநூல் இவ்வளவு விரிவாய் வளர்தற்குக் காரணம் அதிலெழுதப்பட்டுள்ள பாக்களின் பெருந்தொகுதியே. ஏனெனில் நூலாசிரியர்கள், தங்கள் பாக்களில் சொற்களை உபயோகிக்க முயலுங்கால், சந்தம் முதலிய யாப்பிலக்கணவிதிகளையனுசரிக்க, விரும்பியபொருளைக்கொடுக்கும் தகுந்த பதங்களை விட்டு, வேறு அருமையான சொற்களை வருந்திப் பொருள் கொள்ளத்தக்கவாறு, உபயோகிக்கின்றனர். இவ்விதம் ஒவ்வோர் கவிஞரும் புதிது புதிதாய் அருமையான புதுப் பொருள்களில் பதங்களை யுபயோகிக்குந் தோறும், சமஸ்கிருத விலக்கணநூல் வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றது. தற்காலத்தில் மனிதரதை கற்ருளமுடியாதபடி அவ்வளவு பெரிதாய் எல்லைக்கடங்காது வளர்ந்திருக்கின்றது. ஆதலின் அது கற்பாரின்றி இறந்ததன்மையை யடைந்துளது. இதினின்றும் செய்யுளே பாஷைக்கு கேடுவிளைத்ததெனத் தெளிவாகின்றது. ஆதலால், 'வேண்டும்போலொருதொழிலைச் செய்ய வசமில்லாததால் தன் கால் முதலிய உருப்புகளுக்கே கேடு

விளைவிக்கும்' என்கிற இடக்கையின் நான்காவது இலட்சணமும் செய்யுள்நடையிலிருக்கிறதென்றும் நன்றாய்த் தெரிகிறது.

இம்மாதிரியாய் வசனத்தின் இலட்சணங்களைக் கவனித்துப் பார்த்தால் அது வலக்கையின் நான்கு இலக்கணங்களும் நன்கு அமையப் பெற்றிருப்பதைக் காணலாம். ஆதலின், அறிவு புகட்டுவதில் செய்யுளைவிட வசனமே சிறந்தவோர் கருவியாகும். இவ்வபிப்பிராயம் நாம் புதிதாய்க் கண்டுபிடித்ததல்ல; இஃது ஆன்றோருக்குஞ் சம்மதமென்றே தெரிகிறது. புராணங்களை யெழுதிய வேதவியாசரிஷி, 'பாகவதம்' என்னும் நூலில் முதல் நான்கு ஸ்கந்தங்களை (=பிரிவுகளை) ச்செய்யுளாய் எழுதி ஐந்தாவதை வசனத்திலெழுதியிருப்பதைப்பற்றி உரையாசிரியர் பின்வருமாறு கூறுகின்றனர். "ஐந்தாவது ஸ்கந்தத்தில் எல்லாமனிதரும் அவசியமாயறியவேண்டிய விஷயங்களடங்கியிருப்பதாலும், அஃது செய்யுளாய் எழுதினல் எளிதில் விஷயங்கள் புலப்படாவென்றும்,வசனமே தெளிவையுண்டாக்குமென்றும், வசன நடையிலெழுதப்பட்டது" என இயம்புகின்றனர். புராணவாசிரியரும், கவிசிரோமணியுமான வியாசரே இவ்விதம் செய்யுளின்தன்மையைப்பற்றித் தாழ்ந்த மதிப்புடையராயிருப்பின், நாம் செய்யுளை இடக்கைக்கு ஏன் ஒப்பிடலாகாது'

இதுவுமன்றி ஒருவனது சம்பாஷணையினின்றும் விஷயங்களை நான்கு வழிகளால் நன்கு அறிதற் கூடும். அதாவது (1) வார்த்தைகளை யுச்சரிட்

பதின் ஸ்வரம். (2) பேசுபவரின் முகத்தோற்றம். (3) அவருபயோகிக்கும் பதங்கள். (4) அப்பதங்களை யமைக்குமிடம் ஆகிய இவையே. ஆதலின் ஓர் மனிதனுடன் நேரில் பேசி விஷயங்களையறியும் நிலைமையில்தான், இந்நான்கு துணைகளும் ஒருங்கு நமக்குக் கிடைக்கின்றன. ஒருவரியற்றிய வசன நூலின் வாயிலாய் விஷயங்களையறியும்வழியில் முகக்குறி, பதங்களை யுச்சரிக்கும் ஸ்வரம், ஆகிய இவ்விரண்டின் துணை நமக்கில்லாமற் போகின்றது. ஆதலால் அந்நூல்கள், விஷயங்களைத் தெரிவிக்கும் நிலைமையில் பாதியுயிரையிழந்தனவாகத்தானிருக்கின்றன.

இனி, வசன நூல்களில் உச்சரிப்பின்முறை முகத்தோற்றம் ஆகிய விரண்டுமில்லாது போனும், சொல்பவரபிப்பிராயத்தை எடுத்துக் காண்பிக்கும் தகுந்த சொற்களை தகுந்த விடத்துபயோகிக்குந்தன்மையுள்ளதால், மேல் சொல்லப்பட்ட நான்கு வழிகளில் இரண்டையே அவை அடைந்திருக்கின்றன. ஆனல் செய்யுள்நடையிலுள்ள நூல்களிலோ, தகுந்த பதங்களைச் சரியான விடங்களிலுபயோகிக்கக் கூடாது போவதால், அவ்விரண்டு வழிகளுமொழிந்துபோகின்றன. ஆகையால் பாஷையாலாகவேண்டிய நன்மைகளை நமக்குச் சேர்ப்பிக்கும் விஷயத்தில், செய்யுள்நடையில் மேற்கூறியுள்ள நான்கு வழிகளுமில்லாததால், அது சவத்தை யொத்ததாகவிருக்கின்றது. உச்சரிப்பின் முறை, முகக்குறி, ஏற்றசொற்கள், அச்சொற்களையமைக்கு

மிடம், என்றவிவைகளால் விஷயத்தையறிவதற்கு ஏற்பட்டுள்ள நால்வகைத் துணையுமற்ற செய்யுளை, மூச்சோடுற்ற புதுமையான பிணமென ஏன் சொல்ல லாகாது.

இனி, இவ்வளவு குறைகளுள்ள செய்யுளைப் பண்டைக்காலத்துக்கற்றறிந்த வான்றோர் ஏன் தங்கள் நூலிலுபயோகித்தனரொன்றுதான் நாம் கண்டறியவேண்டியதாயிருக்கிறது. பண்டைக்காலத்தில் அச்சுமுதலிய எழுத்திற்குதவியான கருவிகளில்லை. அதனால் அநேகநூல்களும், அபிப்பிராயங்களும் எழுதப்படாமல் நாசமடைந்துவந்தன. ஆதலின் நூல்கள் நாசமடையாதிருக்கக் கண்டுபிடித்த சூழ்ச்சிதான் செய்யுள்நடையாகும். செய்யுளில், பிராசம், அந்தாதித்தொடை முதலியவற்றால் விஷயங்களை இலகுவில் ஞாபகப்படுத்திக்கொள்வதற்கு மார்க்கங்கள் உள்ளன. ஆதலின் முற்காலத்தில் ஆன்றோர் தாமியற்றிய பலநூற்களையும் அழியாது காப்பாற்றும் பொருட்டு, அந்நூற்களைத் தமது சீடர்களது மனத்தில் இலகுவாய்ப் பதியவைத்து வெகுகாலம் ஞாபகத்தில் இருக்கும்படி செய்த உபாயமாகும் இச்செய்யுளின் பிரயோகம். ஆனால் மேற்சொன்னவையினின்றும் வான்மீகி முதலிய மகான்களின் செய்யுள்களிலும் இக்குறைகளுள்ளனவென்று சொல்லலாகாது. ஏனெனில், உலகில் எல்லாருக்கும் வலக்கையின் சாமர்த்தியம் இடக்கைக்கு வாராதானாலும், அபூர்வமாக இலட்சத்திலொருவர்க்கு இடக்கை வெகு வசமாயிருப்பதை

நாம் காணுவதில்லையா? மேலும் அவ்வித விடக்கையின்பலம் சாதாரணமனிதரின் வலக்கையின் பலத்தைவிட வதிகமாயிருப்பதையும் காண்கிறோம். ஆதலின் எல்லோர்க்கும் செய்யுள் இடக்கையைப் போல் வசமற்றதாயிருந்தாலும், இலட்சத்திலொருவர்க்கு மாத்திரம் குற்றங்களில்லாது வெகு வசமாயிருக்கும். இங்ஙனம், வசனத்தைவிட தெளிவாயும் பலமாயும் செய்யுள்வாயிலாய் விஷயங்களை யெடுத்துரைப்பதில் இயற்கையாய்த் தேர்ச்சிபெற்றவர்களில் வான்மீகியொருவர்.

இத்துணைக்குற்றங்கள், செய்யுள் நடையிலுள்ளதெனத் தெளிவாய்த் தெரிந்தும் பலருக்கும் வசனத்தைவிட செய்யுளிலதிகப் பிரியமும், அபிமானமுமிருப்பதாகக் காண்கிறோம். இன்னோர், செய்யுள்நடையில் வருங்குற்றங்களை யனுபவியாதவராதலின், இவ்வாறு அபிமானமுள்ளவராயிருக்கின்றனர்போலும். அக்குற்றங்களை அவர் அனுபவிக்க நேர்ந்துவிட்டால், செய்யுள்நடையையும், கவிஞர்களையும் கொலை செய்யவும் துணிவர்.

தற்காலத்தில், நம்தேகம், நாம் தேடிய பொருள் முதலியன பாதுகாப்பு அடையுமாறு நம் இராஜாங்கத்தார் சட்டங்களை வசனரூபமாய் எழுதியுள்ளாரோயன்றி செய்யுளாய் எழுதியிலர். இங்ஙனம் வசனநடையில் தெளிவாயெழுதியும் விவாதங்கள் மூன்று நியாயஸ்தலமேறியும் திருப்தியாய் முடிவு பெறுகிறதில்லை. ஆதலின் இராஜாங்கசட்டங்களும் செய்

யுள்நடையில் எழுதப்பட்டு, நம் வழக்குகளும் செய்யுளிலேயே எழுதிக் கொடுக்கப்பட்டு வருமானல், சொற்களின் பொருள் மாராட்டத்தாலுண்டாகக்கூடிய சந்தேகங்கள் ஒன்றுக்கு நூறாய் மலிந்து, நூறு நியாயஸ்தலமேறினாலும், பல வக்கீல்கள் பேசியும் ஒரு சிறு விஷயங்கூட முடிவுபெறுமற் போகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள்களும் வக்கீல்களின் சந்ததியைச் சேருமென்பதற்கும் ஐயமில்லை. அங்ஙனம் நிகழும் போழ்துதான், செய்யுள் வசனங்களின் தாழ்வும் உயர்வும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளிதிற் புலப்படும்.

---

## 11. வறுமை —Poverty.

புத்தி, ஞானம், உடல், ஐம்பொறிகள், ஆகிய இவைகளின் எல்லாச் சிறப்புகளையும், பயனற்றதாக்கி, உறவினரொல்லாரையும் விரோதிகளாக்கி, உலகத்தார் நம்மிடங்கொண்ட பிரியத்தை யழித்து நம்மைத் துரும்புபோல் சிறுமைப்படுத்துவது **வறுமை.** இவ்வறுமை யென்பது, நமக்கின்றியமையாத பொருள்களையடைய விரும்புங்காலத்து அப்பொருள்கள் சிலர்க்கு குறையில்லாமற் கிடைக்க, நமக்குமட்டும் கிடைக்காமற்போவதால் நேரும் துக்கமே. இது பொருளில்லார்க்கு வரக்கூடியதென சிலர் சொல்லுகின்றனர். ஆனல் தனவான்களுக்கும், தங்கள் நிலைமையால் பெறமுடியாத பற்பல சுகங்களை யனுபவிக்க நேராததால் வறுமை

யுண்டாவதாயும் காண்கிறோம். மேலும், திரவியமே இல்லாத மிருகபக்ஷிகளுக்கு அத்தியாவசியமான பொருள் இலேசிற் கிடைப்பதால் அவைகளிடத்தில் வறுமையின்மையும் காணப்படுகிறது. ஆதலின் பொருளில்லாததினால்மாத்திரம் வறுமை வரத்தக்கதெனவும், பொருள் நிறைவதால் அஃது நீங்கத்தக்கதென்றும், சொல்லற்பாலதன்று.

**இனி,** வறுமையின் உண்மையான உற்பத்திஸ்தானம் யாதென வினவுங்கால், அஃது வித்தியாசமான விரண்டு நிலைமைகளினின்றும் உண்டாவதாகத் தெரிகின்றது. அதாவது (1) பொருளுள்ளாரிடத்து பேராவின் நிமித்தமாய் மேன்மேலும் அதிகப் பொருள் தேடவேண்டுமென்று பிறக்கும் முயற்சி, (2) அவசியமான பொருளுமில்லாரிடத்து அதையடைய வேண்டிய முயற்சி செய்யாமையாகிய மடி அல்லது சோம்பல். தனவான்களிடத்து அனவசியமான அதிகப் பொருளில் பற்றின்மையும், பொருளில்லாரிடத்து அத்தியாவசியமான பொருளையடையும் விஷயத்தில் முயற்சியுமுண்டானால் உலகில் வறுமையில்லாதுபோகும். அவசியமற்ற பொருளில் ஆசையும், அத்தியாவசியமான பொருளில் முயற்சியின்மையும் வறுமையை விளைவிப்பதால், அவிவேகமும் மடியுமே வறுமையின் உற்பத்திஸ்தானங்களென நாமறியவேண்டியது.

தேகபோஷணை குறைவின்றியிருப்பவர், தமக்கு அவசியமாகத் தோன்றும் ஒவ்வொன்றை

யும் ஆராய்ந்து, அவசியமோ அல்லவோவெனக் கவனித்துப் பார்த்து, அவசியமற்றதை நீக்கியும், தேக போஷணைக்குரிய சாதனங்களில்லாதவர், தமக்கவசியமான விஷயத்தில் மடியின்றி முயன்று வந்தால், இப்பூவுலகின்கண் மனிதரால் வறுமை யனுபவிக்க நேராது. ஆதலின், அவயவக்குறை வுடையோர், வியாதிஸ்தர், குருடர் முதலியோரை வறுமை சார்ந்து வருத்துமேயொழிய, அவயவ பல மும், விவேகமும், சுறுசுறுப்புமுள்ள மனிதனை வறுமை எங்ஙனம் வருத்தும். ஏனெனில், மடியில்லாத மிருகபக்ஷிகள்கூட அநாயாசமாய் உணவு பெற்று வறுமைக்குள்ளாகிறதில்லையல்லவா? இங்ஙனம் அவயவபலத்தாலும், விவேகத்தாலும், சுறுசுறுப்பாலும் வறுமையை நீக்கினவர்களினுதவியால், உலகத்தில் மிகவும் சொற்பமாயுள்ள குருடர் முதலியவர்களும் இத்தீய வறுமையினின்றும் நீங்கத் தடையாது?

எந்த ஜனக்கூட்டத்தில் நிறைந்த சுகத்திற்குக் காரணமான உற்சாகம், விவேகம், சுறுசுறுப்பு இவை குன்றியும் நிறைந்த துன்பத்திற்குக் காரணமான மடி, அவிவேகம் இவை நிறம்பியுமுள்ளனவோ அக்கூட்டமென்றென்றைக்கும் வறுமைக் கடிமையாயிருக்கும். அவ்வாறே, பிரதி மனிதனும், அவிவேகம், மடி இவற்றில் சிக்கினல், அவன் மிடியின் நோய் சொல்லிமுடியுமோ?

---

## 12. இந்தியாவின் சாதி வேற்றுமை.
## Caste System in India.

பொன், வெள்ளி முதலிய ஐந்து உலோகங்கள் விளையும்படியானதும், நீர்வளம், நிலவளம் முதலிய பல வளங்களும் நிரம்பியதுமான, இந்த ஜம்புத்வீபத்தில் கோடிக் கணக்கான ஜனங்கள் வசித்து வருகின்றனவென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்பெரும் ஜனத்தொகுதி எண்ணிறந்த வகுப்புகளாகப் பிரிந்து ஒற்றுமை இல்லாததோடு ஒன்றோடொன்று மாறுபட்ட நடையுடை பாவனைகளையுடையதாயிருக்கின்றது. வேறு நாடுகள், நாளுக்குநாள் ஏற்றமடைய, இவ்வளவு செழிப்புள்ள இந்தியாமட்டும், வியாபாரம், கைத்தொழில், செல்வாக்கு முதலியவிஷயங்களில் பின்சென்றிருப்பதற்கு இந்தியர்களின் ஒற்றுமையின்மை முக்கிய காரணங்களிலொன்று என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இவ்வொற்றுமையின்மையின் காரணம், பெரும்பான்மையோர் சாதிக்கட்டுப்பாடு என்று கூறுகின்றனர். இது எவ்வாறு பொருந்துமெனநாம் சற்று ஆராய்வோம்.

ஓர் ஜனத்தொகுதியில் ஒற்றுமையின்மை யேற்படுவதற்குப் பல காரணங்களுண்டென்று சொல்லாமலே விளங்கும். அவைகளில் மதபேதம், சாதிபேதம் ஆகிய இவையும் ஒன்றாயிருக்கலாம். அங்ஙனமிருக்கின், அவைகளின்காரணமாய்த் தோன்றியிருக்கும் ஒற்றுமைக்குறைவு நீக்கவசாத்தியமாகும். சாதி வேற்றுமைபற்றிய ஒற்றுமை

குறைவும் மதபேதம்பற்றிவருவதைவிட நீக்கக் கஷ்டமானதாயிருக்கும்.

இனி இவ்வளவு விரோதத்தையுண்டாக்கும் சாதிவேற்றுமை, இயற்கையோ, செயற்கையோவெனப் பார்க்குமிடத்து, அது பின்னதற்பாலமையும். மனிதக்கூட்டத்தில் வித்தியாசமுண்டாக்க வேண்டுமென்ற இஷ்டம் பிரகிருதிக்கு இருக்குமானால், மிருகபக்ஷிகளுள் ஒன்றுக்கொன்றுள்ள வித்தியாசம்போன்ற அனாயாசமா யறிந்துகொள்ளத் தக்க வித்தியாசம், மனிதர்களுள் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறில்லாததே மனிதவர்க்கம் ஒன்றுபட்டிருக்கவேண்டுமென்பது பிரகிருதியின் கருத்தாகும். இங்ஙனம் இயற்கைக்கு விரோதமாய், மனிதர் சாதிக்கட்டுப்பாடு செய்துகொண்ட காலமும், காரணங்களும், தெளிவாக நுண்ணறிவாளர் எவ்விதமோர்ந்தும் அறியவசாத்தியமாகவிருக்கின்றன. இன்னகாலத்தில்தான் இன்னின்ன காரணங்களை முன்னிட்டு சாதிவேறுபாடுண்டாயிற்றென்று சொல்லமுடியாததலால், அது பல காலங்களில் பற்பல வேறுபட்ட காரணங்களாலுண்டாயிருக்கவேண்டுமென்று நாம் தெளிதல் வேண்டும்.

இச்சாதிவேற்றுமை காலத்துக்குக் காலம் மாறுபட்ட நிலைமையிலிருந்து வருகின்றது. காலத்திய சாதிபேதம், தற்காலத்தியதுபோல் றுமைக் குறைவையுண்டாக்கியதாய்த் தெரியவில்லை. ஏனெனில், க்ஷத்திரிய குலத்திற் பிறந்த ஸ்ரீகிருஷ்

ணன் இளமையில் இடையர்களோடு வளர்ந்தும், க்ஷத்திரியராற் பிற்காலத்திற் போற்றப்பட்டு, க்ஷத்திரியர்களோடும், ஆசாரசீலர்களாகிய குசேலன் முதலிய பிராமணரோடும் சகபோஜனம் (= கூட்டுணவு) கலியாணம் முதலியன செய்து வந்ததோடு, சூத்திரராகிய விதுரரினில்லத்தில் உண்டதாகவும், பாகவத சரித்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சரித்திரத்தை நம்பாதவர்க்கு இஃது நம்பக் கூடியதாயிராது. அன்னோரைச் சரித்திரத்தை நம்புமாறு நாம் கட்டாயப்படுத்துவதும் இங்கு நம் கடமையன்று. ஆனால், அன்னோர் தம் வார்த்தையைச் சரித்திரத்துணையின்றி நியாயத்திற் கீடுபடுத்த முடியாதென்பதை நாம் அறியக்கூடும்; என்றாலும், இவர், கிருஷ்ணனென்றொருவரிருந்ததாயும், விதுரரொன்று ஒருவரிருந்ததாகவும், அவ்விதுரன் வேறு சாதியைச் சேர்ந்தவரொன்றும், பால்யத்தில் கிருஷ்ணன் இடையர்குலத்தில் வளர்ந்ததாயும், பின்பு க்ஷத்திரியப் பெண்களை விவாகம் பண்ணிக்கொண்டானொன்றும், ஆசாரமுள்ள பிராமணர் அவரோடுண்டனரொன்றும், சரித்திரம் முறையிடுவதை நம்பாமற் போகலாம்; ஆனால் எல்லோராலும் வெகுகாலந்தொடங்கி இன்றுவரை அங்கீகரித்து வரப்படுகின்ற அந்நூல், உண்மையில் நடைபெற்று [illegible] வழக்கத்தை யெடுத்துக் கூறியுள்ள[illegible]னல், அஃது உயிர்ப்படைந்தவந்நாளே அதன் [illegible]பாய்யின்காரணமாய் ஜனங்களால் வெறுக்கப்பட்டு நாசமடைந்திருக்கவேண்டுமன்றோ? அங்

நனமின்றி உலகத்தில் அஃது நிலைத்திருப்பதால், பொய்யான வழக்கத்தை அது கூறியதன்று என்பதை நாம் நம்பாமல் தீராதே. ஆதலின், அக்காலத்திய சாதிக்கட்டுப்பாடு, தற்காலத்திற்போல் அவ்வளவு கடினமாயில்லையென்றும், பிராமணக்ஷத்திரிய சூத்திரர்களுக்குள் சகபோஜனம் (= கூட்டுணவு) முதலிய வழக்கங்கள் நடைபெற்று வந்துள்ளதெனவும், நாமறிகிறோம். ஆதலின் அச்சாதிவேற்றுமை, ஒற்றுமையைக் கெடுக்கத் தக்கவாறு இருந்ததில்லை. தற்காலத்தில் ஓரே சாதியைச் சேர்ந்தவர் பலதொழில்களிலமர்ந்திருந்தாலும், கூடியுண்ணல் முதலியன எவ்விதம் நடந்து வருகின்றனவோ, அவ்விதமே அக்காலத்தில் வெவ்வேறு சாதியார்களுக்குள்ளும் நடந்துவந்தன. ஆதலின் 'நாம் தற்காலத்திய சாதிகளை அக்காலத்து நிலைமைக்குக் கொண்டு வருவதில் யாது விரோதமுள்ளது?' என்றும், அப்படிச் செய்தால், ஒருஜாதிக்கோ பல ஜாதிகட்கோ குறைவு நேரிடுமோவென்றும் யோசிக்குங்கால், அவ்விதம் செய்வதில் பல குற்றங்கள் பின்வருங்காரணங்களால், உண்டாகுமென நினைக்கக் கூடியதாயிருக்கின்றது. பூர்வகாலத்தில் நான்கு சாதியாரும் தொழிலால்மட்டும் வித்தியாசப்பட்டிருந்தபொழுது, பிராமணர்க்கு கண்ணுக்குப்புலப்படக்கூடியவும் கூடாதவையுமான விஷயங்களை புத்தி சக்தியால் நுட்பமாயாராய்ந்து அறியவேண்டியதும், உலகத்திற்குக் கட்டுப்பாட்டிலிருந்து விளையும் நன்மை தீமைகளைச் சூட்சுமமாய்க் கண்டறிவதுமான

பல தொழில்களிருந்தன. அவர் மற்ற வர்ணத்தாரைவிட புத்தியின்வேலை யதிகமாயுடையவராதலின் மாமிசமுண்ணுவதாலுண்டாகுங் குற்றங்களை நுட்பமாய்த்தாமறிந்து அவை மனிதரிடத்தினின்றும் நீக்கப்படவேண்டுமென்று பல முயற்சிகளைச் செய்தனர்.

மேலும், பிராமணர், கள், மாமிசங்கள் புத்தியைக் கெடுப்பதைக் கண்டறிந்தவர்களாதலால் தங்கள் காரியத்திற்குக் குறைவையுண்டாக்கக் கூடியவையென்று அவைகளை இலேசில் தள்ளக்கூடியவராயிருந்தனர். ஆனால் மற்றவர்க்கு அவ்விதமான ஞானமும், காரியக்கேடும் சம்பவிக்காதிருந்ததால் மதுமாமிசங்களைக் கைவிடமுடியவில்லை. அப்பொழுது, ஊனைத்தின்னல், மதுபானம்செய்தல் முதலியவற்றைவிடாத மற்ற சாதியாரை தங்களினின்றும் வேறு பிரித்து அவர்களால், தங்களுடைய மதுமாமிசவிலக்குக்குக் குறைவு நேராதவண்ணம் சில கட்டுப்பாடுகளைச் செய்தனர். அதுமுதற்கொண்டு, நாம் ஊகிக்கக்கூடியது யாதெனில், முன்னிருந்த வொற்றுமையும் ஒருவருக்கொருவர் வைத்திருந்தவன்புங் கெட்டு, விரோதம் மேற்கொண்டனர் என்பதே.

ஆனலிவ்விதம் பிராமணர் செய்தது, மற்ற சாதியார்களிடத்து தாம்கொண்ட அறுவெறுப்பின் காரணத்தால் அல்ல. ஏனெனில், தீச்செயல்களைச் செய்யத்தூண்டும் மதுமாமிசங்களை விலக்காத

சிற்சில பிராமணர்களையும் தங்கள் சங்கத்தினின்று விலக்கி வைத்தனர்.

இனி, மதுமாமிசமுட்கொள்வதில் பிராமணர்கள் நினைத்தபடி அவ்வளவு குற்றமுள்ளதாவெனவறிய, பிரகிருதியிலுள்ள திருஷ்டாந்தத்தைக்கண்டு தெளிதல் வேண்டும். நாற்கால் பிராணிகளில், குதிரை, யானை, ஒட்டகம், எருமை முதலியன, வீட்டில் வைத்து வளர்க்கக்கூடியனவாயும், சாந்தமுள்ளவையாயும், எஜமானன் சொற்படி நடக்கக்கூடியனவாயும், கற்பிக்கும் காரியங்களையறிந்து செய்யக்கூடியனவாயுமிருக்கின்றன. ஆனால் புலி, சிங்கம் முதலிய பிராணிகள், இயற்கையில் கொடியனவாயும், மனிதனால் வளர்ப்பதற்குக் கூடாதவையாயும், சொன்னதைக் கேட்டுப் பணியும் தன்மையற்றனவாயும், உயிர்ச்சேதத்தையுஞ்செய்யத்துணியும் சுபாவமுள்ளவையாயுமிருக்கின்றன. மேலும், முன் சொன்னவை, உருவத்தில் பெரியவை; தேககஷ்டங்களைச் சகித்துக்கொள்ளும் சக்தியையும் பலத்தையுமுடையவை. பின் குறிப்பிட்டவையோ, உருவத்தில் சிறியனவாயும், சகிக்குந்தன்மை குறைந்தனவாயும், பார்வைக்குக் கோரமானதாய் இருந்தாலும் உண்மையில் பலங்குறைந்தனவாயும் இருக்கின்றன. இவ்வாறிவை யொன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதற்குக் காரணமாகச் சொல்லக்கூடியது ஒன்றுதான்; அதாவது அப்பிராணிகளினுகாரம். முந்தின பிராணிகள், சாகபக்ஷிணியாயும், பிந்தினவை மாமிசபக்ஷிணியாயுமிருப்பதினாலேயே, முறையே, சாந்த

குணமும், குரூர சுபாவமுமுள்ளனவாயிருக்கின்றன. மேலும், மாமிசமும், மரக்கறி பதார்த்தங்களுமுண்ணும் பிராணிகளுக்கு இவ்விரண்டு தன்மையும் கலந்து இருப்பதைப் பார்க்கின்றோம். நாய் மாமிசமும், மரக்கறி பதார்த்தங்களும் உண்ணத்தக்கது. அதனிடத்தில் குரூரமும், சாந்தமும், புத்திநுட்பமும் கலந்து காணப்படுகின்றன.

ஐம்புலங்களையடக்கிய இருடிகளும் மாமிசமுண்ணுவதால், அரக்கர், துஷ்ட மிருகங்கள் ஆகிய இவைகளின் கொடுமையையும், மதுபானம் செய்வதால், குரங்கின் சபலபுத்தியையுமடைந்து பைத்தியக் காரர்போல் திரிந்துபோக நேரிட்டுள்ளது.

ஆதலின், உண்ணத் தொடங்கி விட்டால் படிப்படியாய் தன்னிடத்திற் பிரியத்தையதிகப்படுத்தியிறுதியில் கிழ்நிலைமையிற் சேர்க்கும் மோகனபதார்த்தங்களான மதுமாமிசங்கள், பலஜன்மங்களிலுழலும் நம்முயிர்க்குத் தீராத்துயரத்தை விளைவிக்குமாதலால், பிராமணர் ஆதியில் அவைகளை வேருடன் நீக்கினர். இப்படிப்பட்ட, தீநெறிக்கட்செலுத்தும் மதுமாமிச முண்ணும் மனிதன், காட்டு மிருகங்களினும் கேடுகெட்டவனாகிறான். ஏனெனில், மாமிசமுண்ணும் பிராணிகளும், மதுபானஞ் செய்வதில்லையன்றோ?

இனி, சாதிவேற்றுமை நீங்கி எல்லாரும் ஒன்றாக வேண்டுமானால், இதுவரையிலும் மாமிசமுண்டு வந்துள்ளவர் அதை நீக்கின பின்னராவது, அல்லது

மாமிசமுண்ணுதவர் பிறரைப்போல உண்ணத்தொடங்கின பிற்பாடாவதுதான் எல்லாரும் ஒன்ருகக் கூடும். இம்மார்க்கங்களில் கூடாமையாகிய கஷ்டமிருப்பதோடு, ஊனைத்தின்று சாதிவேற்றுமையை யகற்றக்கூடிய வழியில் மனிதரனைவரையும் வரவர மிருகத்தன்மையை யடைவிக்கத்தக்க பெருங்கேடும் இருக்கிறது. ஆதலின், தற்கால சொற்ப சுகத்தை யுத்தேசித்து, இலேசான மார்க்கமாகிய மாமிசமுண்ணலை எல்லோரும் கைக்கொள்ளுமாறு செய்தல், மனிதர் புத்தியைக் கெடுத்து அவரை அதோகதிக்குட் செலுத்துவதாகும்.

இவ்விதம், ஆகாரம் ஆசாரம் இவைகளால் இச்சாதிவேற்றுமை யாதியிலுண்டாயிருக்க, நவீன நாகரீகமடைந்த கல்விமான்கள், மூலகாரணத்தைத் தெரிந்துகொள்ளாது, பொதுஜன நன்மைக்கு இச்சாதிவேற்றுமை விரோதமாயிருத்தலின் அதை முழுவதும் தொலைக்கவேண்டுமென்று நினைக்கின்ருர்கள். ஆனுலிவர்கள் தங்களெண்ணம் நிறைவேறத்தக்கதோவெனக் கவனிக்கவில்லை. ஆகாரம் ஒன்ருனலொழிய சாதி ஒன்ருகவழியில்லை. ஏனெனில் மாமிசமுண்ணுதவர், மாமிசமுண்ணும் ஜனங்களின் தேசத்தையடைந்தால் மரணத்திற்கொத்த கஷ்டமடைகின்ருர்கள். அவ்விதமிருக்க, ஊனுண்பவரும், உண்ணுதவரும் எவ்விதம் ஒன்ருகவிருக்கமுடியும்? முடியாது. மேலும் ஆகாரம் ஒன்ருக்குவது வெகுகால சிரமத்தாலும் சாதிக்கக் கூடியதல்ல.

இன்னும் நவீன பரிஷ்காரிகள், எல்லாருமறிய சபைநடுவே நின்று, சாதிவேற்றுமையறவேண்டு மென்று பிரசங்கம் செய்கின்றனரேயன்றி, தம் சொலுக்கிணங்க, தம்மிலுங் கீழ்ப்பட்ட குலத்தா ரோடு கூடியுண்ணப் பின்வாங்குகின்றனர். ஆத லின், அவர் பேசுவதெல்லாம், தங்களினும் மேம் பட்ட சாதியாரோடு தாம் சேரவேண்டிய அவா வின் காரணத்தாலெனப்புலப்படுகின்றது.

இனி, சாதிவேற்றுமையைக் கெடுப்பதற்கு ஆகாரம் ஒன்றுவதவசியமென்றறிந்தோம்; அவ் வாகாரம் வெகுகாலம் கஷ்டப்பட்டும் ஒன்றுகக் கூடியதல்லவென்றும் நாமறிந்தோம். ஆதலின் சாதி வேற்றுமை யொழிக்க முடியாதென்ற காரணத்தால் நம்மவரொற்றுமைப்படுவதற்கு வழியேயில்லையெ ன்று ஏங்குதல் சரியன்று. ஏனெனில், நம்மவரில் ஒற்றுமையுண்டாக்குவதற்கு வேறேதேனும் வழி யுளதோவெனப்பார்த்தால், அஃது பின்வருமாறெ னத்தெரிகின்றது. அன்பு, இயற்கையில் எல்லா வுயிர்களிடத்தும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் சக்தியால் வெவ்வேறு இனத்தைச்சார்ந்த மனித னும், நாயும் நிகரற்ற சிநேகத்தை யடைந்திருக்க, ஒரே இனத்தைச்சார்ந்த மனிதரில் ஒருவர்க்கொரு வர் அன்புபாராட்டிவந்தால், சிநேகம் நம்மவருள் ஏன்பரவாது? அச்சிநேகம் காரணமாய் ஒற்றுமை யேன் நிலைக்காது? அவ்விதமன்பும், சிநேகமும், மனிதரில் ஒருவர்க்கொருவர் உண்டாகாது போமா னல் அவர் நாயினும் கடையரன்றே?

'அன்புடையரென்பவர் பிறர்க்கு என்புமுடையர், என்று' ஆன்றோர் கூறவில்லையோ? அவ்வளவு சக்தியுள்ள அன்பிற்கு சாதிவேற்றுமை யோர்தடையாகுமோ? ஆகாது. வெவ்வேறு சாதியைச் சார்ந்தவர்களும், சகோதரசிநேகமும் ஒற்றுமையுமோங்கி எல்லை கடந்த உபகாரஞ்செய்துகொள்வதற்குக் காரணமுமாகும். இதற்கு நாம் சரித்திரவாயிலாய்ப் பலவுதாரணங்கள் தெரிந்தும் நேரில் பார்த்துமிருக்கிறோம்.

ஆதலின், பொறாமை, அகங்காரம் முதலிய துர்க்குணங்களை நீக்கி, அந்நியோந்நிய சினேகத்தை முழுமனதோடு விருத்திசெய்யும்பட்சத்தில் சாதிவேற்றுமை பேருக்குமட்டுந்தான் இருக்கக்கூடும்.

இறுதியில், நம்மிந்தியாவில், சாதிவேற்றுமையின் காரணமாய் ஒற்றுமையில்லையென்றுசொல்லுவோமானால், ஒரே சாதியாரிடத்து அவ்வொற்றுமை நிறைந்திருக்க வேண்டுமன்றோ? அதோடு வெவ்வேறு சாதியாரிடத்தில் தீராப்பகையும் விடாது நிற்கவேண்டுமன்றோ? அங்ஙனம் நாம் காணுதிருப்பதினால், சாதிவேற்றுமையால் இந்தியாவில் ஒற்றுமைக்குறைவெனச் சொல்வது தவறாகும்.

ஆதலின், சாதிவேரோடழிந்தாலும், ஒற்றுமையின்மை நீங்குமென்று சொல்லத்தக்கதல்ல. ஆனால் இந்தியாவில் ஒற்றுமையின்மைக்குக் காரணம் யாதெனக் கண்டுபிடித்தலவசியம். அதை இப்

பாகத்தில் 'ஐக்கியம்' என்னும் வியாசத்திலும், இரண்டாம் பாகத்தில், 'இந்தியாவில் ஒற்றுமையின்மை', என்னும் வியாசத்திலும், கண்டுகொள்க.

---

## 13. தருமம் (கடமை)—Duty.

வேளாண்மை, கைத்தொழில், வியாபாரம் முதலியன நம்முடலைக் காப்பாற்றவேற்பட்ட மார்க்கங்களேயொழிய, மானிடவுயிராயுதித்ததின் காரியத்தை நிறைவேறச்செய்யா. நாம் குடியிருக்குமில்லம் நிறைவதால் நாம் நிறைவு அடைவோமோ? சிறந்து உயர்ந்த மாளிகையில் பிறவிக்குருடனும், பித்துபிடித்தவனும் வசித்திருப்பதால் அவர்களுடற்குறைவும் ஞானக்குறைவும் நீங்கிப்போமோ? அம்மாளிகையின் சிறப்பையேனும் அனுபவிக்க அவரால் கூடியதுமாமோ? ஆகாது. அதுபோலவே தேகசுகம் நிறைவதால் ஆத்மாவின் ஞானம் நிறைவதில்லை. ஆதலின், மானிடப்பிறப்பின் பயனையடைவிக்குங்காரணமான தருமம் அல்லது நம்கடமை இன்னதென நாம் அறியவேண்டியது அவசியம்.

இத்தருமம் யாதெனத் தெளிவாய் விவரிப்பது கஷ்டமான வேலையே. ஏனெனில், தருமத்தை ஒவ்வொரு சமயத்தாரும் தம்தம்முடையதென்று சொல்லிவாதித்து அது யாருடைய பொருள் என்று நிச்சயியாது விடுத்தனர். ஆதலின் உரியவாற்ற பொருள்போல் அஃது நாசமடைந்துளதுபோலும்.

இவ்வாறுள்ள தருமத்தின் தன்மையை எங்ஙனே யாம் தெள்ளிதினறிதற் கூடும்.

எண்ணிறந்த மனிதர் தாம் தருமத்திற் கீடு பட்டவொன்று சொல்லித் திரிகின்றனரோயொழிய அதன் சொரூபத்தைத் தெளிவாய் விளக்குவதில்லை. பற்பல தகுதியற்ற நியாயங்களைக் கொண்டு சந்தேகங்களையுண்டாக்கி விடுகின்றனர். ஆனாலவர்களங்ஙனஞ் செய்வது நம்மை வஞ்சிக்க வேண்டுமென்றல்ல. அவர் தருமத்தை எவ்விதமுணர்ந்துளாரோ அவ்விதமே அதை நமக்குப் புகட்டுகின்றனர். தருமத்தைப்பற்றின அறிவு அவர்க்குப் பூரணமாகவில்லையென்பதை நன்கு புலப்படுத்துகின்றனரோயன்றி வேறல்ல. ஆதலின் அப்பேர்ப்பட்டவரிடத்தினின்றும், நாம் தருமத்தையறியத் துணிதல் முழுதும் பழுதாம்.

மேலும், ஓர் மதத்தையுண்டாக்கியவரறிந்த தருமத்தை, அம்மதத்தைச் சார்ந்தவரும் சரியாய் உணர்ந்திருக்கவுமில்லை. அங்ஙனம் உணர்ந்திருந்தால், ஒரே மதத்தைச் சேர்ந்தவருள்ளும் விவாதம் வரக்காரணமில்லை

இனி, தருமத்தையறிய வேறு வழியுளதோவெனப் பார்ப்போம். நமக்குப் புறம்பேயுள்ள விஷயங்களை நேரிற்கண்டாவது, பிறர் சொல்லிக் கேட்டாவது அறியலாம். நம்மனதில் நிகழுமகப் பொருள்களின் ஞானம் நாமே நமக்குள் கண்டறிய வேண்டும். உதாரணமாக, ஒருவரிடத்து பொறுமை

யுள்ளதெனப் பிறர் கண்டறியத்தக்கதல்ல. இனி யோர் பொருளின் **தருமமாவது,** அதன் வளர்ச் சிக்கு அனுகூலமான காரியமே. மரம் குறை வின்றிச் செம்மையாய் வளர்வதற்குரிய மார்க்கங்க ளனைத்தும் மரத்தின் தருமமாகும். அம்மார்க் கங்கள் (தருமங்கள்) மரத்திலேயே இயற்கையா யுள்ளவை. ஏனெனில், அவை, முன்சொல் லியபடி பிறருதவியை யெதிர் பாராது, தாமே வளர்ந்துவருகின்றன. அதுபோலவே மிருகங்க ளும் தம்மிலுள்ள இயற்கைச் சக்தியின் சார்பான மார்க்கங்களால் (தருமங்களால்) நிறைந்த பல முள்ளவையாகின்றன. இவ்விதமான தருமம் மனிதனில்மட்டும் இல்லையெனச் சொல்லமுடி யுமோ? ஆதலின் பிறப்புமுதல் இறப்புவரை சிறப்பாய் வாழவும், பிறப்புக்குமுன்னும் இறப் புக்குப்பின்னும் பலஜன்மங்களில் நெடும் பிரயா ணம் செய்துவரும் இவ்வாத்மா இம்மை மறுமைப் பயன்களை முழுவதுமடையவும் ஏதுவாயுள்ள எல்லா மார்க்கங்களும் மனிதனுடைய **தருமம்** எனச் சொல்லவேண்டும். இந்த தருமம் நம்மில் நாம் கண்டறியக்கூடியதே. அஃதெங்ஙனேனெனில் ஒரு பொருள் தான் செம்மையாய் வளரும் வழிகளைச் சேர்ந்தால் மலர்ச்சியடைவதும், பிரதிகூலவழிக ளைச் சேர்ந்தால் வாடுவதும் இயற்கை. இஃது புற்பூண்டு முதல் எல்லாத் தோற்றங்களிலும் நேரில் காணற்பாலது. ஆதலின், ஓர் காரியத்தால் நம்மனது சந்தோஷமடையும்போது அக்காரியம்

தருமத்திற்கீடுபட்டதென்றும் வியசனத்தை யுண்டாக்கும்பொழுது அக்காரியம் அதருமத்திற் கீடுபட்டதெனவும் நாமறியலாம்.

மேற்சொன்ன காரணங்களால் பிறன் யாதாமொரு காரியஞ்செய்து நமக்குத் துக்கத்தை விளைவிக்கின்றுனே அது அதருமமாதலால் அதை நாம் செய்து பிறர்க்கு துக்கம் விளைவிக்கலாகாது. அதுபோலவே, பிறர் நமக்கு ஓர் காரியம்செய்து சந்தோஷத்தை விளைவித்தால், அது தருமமாதலால், அம்மாதிரியான காரியங்களை நாமும் செய்து பிறருக்கு சுகத்தையும் சந்தோஷத்தையு முண்டாக்கவேண்டும்.

இதுதான் மனிதன் தன் வாழ்நாளில் துன்பம் நீக்கி சுகம் பெறவும், இறப்புக்குப்பின் ஆத்மா சுகம்பெறுதற்கும் காரணமாயுள்ளது. ஆதலின், மனிதரின் தருமம் இதுவே. ஆனல் இத்தருமத்திற்குப் பின் கூறப்படும் இரண்டு குற்றங்கள் வாராதிருத்தல்வேண்டும்:—(1) நாம் ஒருவர்க்கு ஒன்று செய்வதால், அவரதனற் சுகம் பெறுவதானலும், அவருக்கோ பிறருக்கோ அதனல் பீடை தற்காலத்திலோ பிற்காலத்திலோ உண்டாகக் கூடுமானல் அஃது தருமமாகாது; ஆனல் தருமத்தின் போலியாகும். (2) அவ்வாறே ஓர் காரியம் பார்வைக்கு அல்லது சொற்ப காலத்திற்குச் சற்று கஷ்டம் விளைவிக்கக்கூடியதானலும், அதனலக்காரியமடைந்தவர்க்கும், பிறருக்கும், தற்காலத்திலோ பிற்காலத்திலோ பெருத்தநன்மை விளையக்கூடியதானல்

அஃது அதர்மமன்று; ஆனால் அதருமத்தின் போலியே.

இனி, இப்படிப்பட்ட தருமத்தைக் கைப்பற்றி அதருமத்தைக் கைவிடல், சாதாரண மனிதருக்கு தற்கால சுயநயம் காரணமாய், அசாத்தியமாகும்.

ஆதலின், ஆன்றோர் அவ்வக்காலத்து மனிதர் மனதின் பக்குவத்திற்கேற்றபடி சிறிதுசிறிதாய் அவர் ஏற்றுக்கொள்ளத்தக்கவளவில் தருமத்தை தம்மதத்தின் வாயிலாய்ப் புகட்டியுள்ளனர். இங்ஙனம் தம் தம் மனத்திட்பத்திற்கு ஒத்தவாறு மனிதர் படிப்படியாய் தருமத்தைக் கைப்பற்றுவதிலுயர்ந்து தருமத்தினாலாகவேண்டிய ஆத்மாவின் நிறைந்த சுகத்தையடையுமாறு பன்மதங்களும் இவ்வுலகிலுண்டாயிருக்கின்றன. இதுபற்றியே, மதங்கள் ஒன்றோடொன்று மாறுபட்ட கோட்பாடுகளுடையவையாயிருக்கின்றன. ஏனெனில், பல வேறுகாலங்களில் உண்டான இம்மதங்கள் அவ்வக் காலத்து மனிதரியல்பு, மனத்திட்பம் முதலியவற்றையொட்டி சமயாசாரியர்கள் வெவ்வேறு ஏற்பாடுகளையும் கோட்பாடுகளையும் நியமிக்கலாயினர்.

ஆனால் எல்லா மதாசாரியர்களுக்கும், மதங்களுக்கும் இலக்கு ஒன்றேயாதலின், அவைகளைப் பற்றின வாதங்களெல்லாம் வீணேயாகும்.

ஒவ்வோர் மனிதனும் தன் சுபாவத்திற்கும், மனத்தேர்ச்சிக்கும் தக்கபடி எந்த சமயம் தனக்குப்

பொருத்தமாயுள்ளதென நினைக்கின்றனோ, அதிலேயே அவனிருந்து மேன்மையை நாடவேண்டும். குறிப்பிட்ட மதத்தில் பிரவேசித்தால்தான் மேன்மையடையலாமென்ற அவசியமில்லையாதலின் மதவிவாதம் முற்றிலும் பிரயோஜனமற்றது.

---

## 14. வாய்மை (சத்தியம்.)—Truthfulness.

வாய்மையென்பது தருமத்தின் பாதமெனவும், அஃதின்றி தருமம் முடவனைப்போல் நிற்காதெனவும், தருமம் மனிதனுடைய பரிபூரணத்திற்குக் காரணமாதலால், அவ்வாய்மையில்லாவிடத்து மனிதன் பூரணமாகாது துன்பத்தில் சேருவானெனவும், தருமத்தினுண்மையான தன்மையை யறிந்தவான்றோர் கூறுகின்றனர்.

சான்றோர், சத்தியத்தை மனிதருயர்வின் காரணங்களிலொன்றாக வெடுக்காமல், தருமம் முக்கிய காரணமென்றும், சத்தியம் அதன் உறுப்புகளிலொன்றென்றும் கூறியுள்ளதின் நியாயத்தைச் சற்று கவனிப்போம்:—இங்கு ஓருருவத்திற்கும் அதன் அங்கங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை யறித லவசியம். உருவமென்பது அங்கங்களின் கூட்டம். அங்கங்களை நீக்கி உருவத்தைத் தனியாய்ப் பார்த்தலாவது, உருவத்தினின்றும் அங்கங்களை வேறாக நினைப்பதாவது தகுதியற்றதாகும். உறுப்புகளற்ற வுடலும், உடலோடு எண்ணப்படாத உறுப்புமில்லை. எல்லா உறுப்பு

களின் தொகுதியைப்பற்றிக் கூறும்பொழுது உட லெனவும், அத்தொகுதியினேர்பாகத்தைமட்டும் குறிக்கும்பொழுது உறுப்பெனவும் கொள்ளற் பாலது.

சத்தியம், தயை, பொறுமை ஆகியவிவற்றின் சேர்க்கையே தருமமாகும். இவையில்லாதவிடத்து தருமமெனத் தனியானவோர் விஷயம் கிடையாது. இது எங்ஙனேயெனின் உடலினின்றும் வேருக்கப் பட்டவோர்கை, உருவமுள்ளதாயினும் உடலோடு கூடியுள்ள கையைப்போல் வேலைக்குதவாதாகை யால் அஃது கையெனச் சொல்லமுடியாது. ஆத லின், ஆன்றோர் சத்தியத்தைத் தருமத்தினின்றும் வேருக்கக்கூடாத அவயவமாகக் கூறுகின்றனர்.

கற்றறிந்த பெரியோர், சத்தியத்தைத் தெளி வாகக் கூறியும், இவ்வுலகத்தில் பலர் அதனுண்மை யான இலக்கணத்தைச் சரியாக அறியவில்லை. அவர்கள் உள்ளதை யுரைப்பதும், இல்லாததைக் கூருதுவிடுவதும் சத்தியமெனக் கூறுகின்றனர். ஆனல் இவ்விதம் கூறுவதில் தருமத்திற்குக் கேடு விளைந்தாலும் அன்னோர் கவனிக்கிறதில்லை. உள் ளதை யுரைத்து தருமத்திற்கு விரோதமான நிகழ்ச் சியையுண்டாக்கினல் அஃது ஆன்றோர் சம்மதப் படி சத்தியமாகவே ஆகாது. தேகத்தினின்றும் வெட்டி வேருக்கப்பட்ட கை, அத்தேகத்திற்கு எவ்விதத்திலாவது உதவி செய்யத்தக்கதாயிருக் குமோ? இராது. இவ்விதம்தான் தருமத்திற்கிடு படாத சத்தியமும்.

ஒருவன் பிறப்புமுதல் இறப்புவரையில் கடல் நீர் உப்புள்ளதெனச் சொல்லிக்கொண்டேயிருப்ப தால் உண்மையையே யுரைப்பவனானாலும், அஃது எவ்விதம் தருமத்திற்கு உதவிபுரிந்ததாகும்? இவ்விதமான உண்மையால் தருமத்தை நிலைநிறுத்த வாவது அதற்கு வரும் கேட்டை நீக்கவாவது முடியாது.

இனி, ஆன்றோர்கூறும் இலக்கணமுள்ளசத் தியம் எவ்விதம் தருமத்தை நிலைநிறுத்துகிறதென் பதைச் சற்று கவனிப்போம். மனிதர் இவ்வுலகத்தில் மத நியமங்களாலும் ( சமயக்கோட்பாடுகளாலும்) இராஜாங்கவிதிகளாலும், சிற்சில விஷயங்களைமட் டும் அனுபவிக்குமாறு விதிக்கப்பெற்றிருக்கின்றனர். இவ்வெல்லைக்குப் புறம்பேயுள்ள விஷயங்களை ஒரு வன் அடைய முயற்சிகொண்டால் அவன் சத்தியத் தினின்றும் தவற நேரிடுகின்றது. ஏனெனில், மேற் கூறிய நியமங்களுக்கு விரோதமாக மனிதன் யாதே னும் ஓர் சுகத்தையடைய முயன்றால் இராஜ தண் டனை முதலிய கஷ்டங்கள் நேரிடும். அக்காலத்து செய்யாததொன்றைச் செய்ததாகவும் செய்ததொன் றைச் செய்யவில்லையெனவும் பொய் பேச நேரிடும். இவ்விதம் பேசுதல் அசத்தியமே. ஏனெனில் இஃது அதர்மத்தில் சேர்ப்பிக்கும். ஆதலின், இவ்விதமான அசத்தியத்தை நாம் முழுதுங் கைவிடவேண்டும். அங்ஙனம் செய்தாலொழிய நாம் அதர்மத்தினின் றும் நீங்கமுடியாது.

இனியுள்ளதையுரைப்பதால் பிறர்க்கு பெருங் கேடுவிளையக்கூடியதானால், அஃது உரைக்கலாகாது. இல்லாததொன்றை இருக்கிறதெனச் சொல்லுவதால் பிறர்க்கு நன்மை பயக்குமானால், அப் பொய் பொய்யாகாது! அஃது சத்தியமே. ஏனெனில் பலர்க்குமதனால் தருமத்தின் பயனாகிய பேருதவி விளைகிறதன்றோ?

மேற்கூறிய இலக்கணமுள்ள சத்தியம் தற்காலத்து மனிதரால் எவ்விதம் அனுசரிக்கப்படுகின்றதென்பதைப் பார்ப்போம். பொதுவாய், பல மனிதர் ஒன்றை உள்ளபடியுரைப்பதால் தமக்கு நன்மையும் வருகிறதில்லை, பிறர்க்குத் தீமையும் வருகிறதில்லை, பொய்யுரைத்தாலும் பொருந்துவதில்லை என்கிற நிலைமையில் தான் உண்மை பேசுகின்றனர்; அன்னோர் பேசும் சத்தியம் யாதெனில், "தீ சுடுகிறது, விளக்கு வெளிச்சம் கொடுக்கிறது." என்பதுமான, பொய் சொன்னால் ஏற்றுக்கொள்ளப் படாதன போன்றவையே. ஆதலின், தமக்கு, அசத்தியம் சொன்னால் பலிக்காது என்று தெரிகிற விடத்தில் உண்மை பேசுவதும், பலிக்குமென்று தெரிகிறவிடத்து பொய்யைவிடாது கூறுவதும் தற்காலத்திய மனிதருடைய இயற்கையாயிருக்கின்றது. அந்தோ! ஆன்றோர் கூறியவாறு பிறர்க்கு நன்மை உண்டாக்கக்கூடியபேச்சை உரைக்காது, தம் சொந்த சுகத்தைக் கவனித்துப் பொய்யையும், தருமத்திற் கீடுபடாத உண்மையையும் கூறி அதரும மார்க்கத்

தில் சென்று மனிதர் பலர் தம் வாணளை வீணு ளாக்குகின்றனர்.

---

## 15. தயவு.—Universal Love,

இம்மை மறுமைப் பயன்களை முழுதுமடைய வேண்டுமானல் மனிதன் இவ்வுலகின்கண், தர்மத்தை நாடவேண்டுமென்று முன்னெரு வியாசத்திற் கூறியிருக்கிறேம். தருமம் என்பது பிறர்க்கு நன்மை செய்வதும் தீமை வாராது தடுப்பதுமே யெனவுங் கூறியிருக்கிறேம்.

இத்தன்மையான தருமத்தை நாம் தழுவியதன் நிறைவால் அழிவற்ற சுகத்தையடைய விரும்புதல், முடவன் கொம்புத்தேனுக் கிச்சை கொள்வதோ டொக்குமெனச் சிலர் ஏங்குகின்றனர். ஏனெனில், சுயநயத்திலேயே ஊன்றியுள்ள மனிதனுக்கு எங்ஙனே, தன்னுடைய சொந்த நன்மையையுங் கருதாது பிறர்நன்மையை உயர்த்தவும் தீமையைக் குறைக்கவும் கூடும்.

ஆயினும், சுயநயத்தைக் கவனியாது நன்மை செய்யவேண்டுமானல் அவருடைய வின்பதுன்பங்களை நம்முடையனவைபோல் கருத வேண்டும். இவ்வாறு கருதுவதற்கு பிறரிடமன்பும் நம்மவரொன்னு மபிமானமு முண்டாகவேண்டும். உதாரணமாக, தம் சொந்த சுகத்தையுங் கவனியாது மனைவிமக்க

ளிடத்தில் மனிதன் அன்பு செலுத்தி அவர்களின் நன்மையையே தேடுகின்றானல்லவா?

ஆதலின், தருமம் நம்மிடத்தில் நிறைந்து அழிவில்லாப் பேரின்பத்தை யடைய, மனைவி மக்களின்கண் அன்புபாராட்டுவதுபோல், பிறவெல்லாம் நம்முடையவென்று கருதி அவர்கண் அன்புபாராட்ட வேண்டும். இவ்விதஞ் செய்வதுதான் தயை (தயவு) யென்று சொல்லப்படும்.

ஆனால் மனைவிமக்களிடத்துக் காட்டுமன்பு தன் பெற்றோரிடமும் காண்பிக்கமுடியாததாக இருக்க, எங்ஙனே எல்லா மனிதரிடத்தும் அதைச் செலுத்த முடியுமென்ற வினவிற்கு விடைகூறுவ தவசியமாதலாலதைப் பின்வருமாறு கூறுவாம்.

மனிதன், மனைவி மக்களிடத்தில் செலுத்துமன்பு கைம்மாறு கருதாததன்று; ஆனால் அவரினின்றுந் தானடையவிரும்பும் சுகத்தை நோக்கியே. இச்சுகம் இம்மையைப்பற்றித்தான் நிற்பது. இம்மைச் சுகத்தின் காரணமாய் இவ்வளவன்புசெலுத்த முடியுமானால், இம்மையோடு மறுமைப்பயன்களையுங் கொடுக்கவல்ல தொன்றுளதானால், அதற்காக எத்துணையன்புதான் செலுத்தமாட்டார்? ஆதலின், அவ்விதப் பேரின்பத்திற்குக் காரணமான, தருமத்தை நிறைவிக்கும்படியான, எல்லா ஜீவர்களிடத்துங் காட்டும் காருண்யம், மனிதர் தழுவுத லசாத்தியமன்று.

மனிதன் புத்தி பூரணமடைந்து, இவ்வுலக வின்பம் நிலையற்றதென்றும், அழிவிலாப் பேரின்பம் மறுமையிலேயேயென்றும் நிச்சயமாயறிந்து, அதையடைய மனத்திட்பம் போதுமானவளவு அவனுக்கு வருங்கால், எல்லா உயிர்களிடத்திலும், நம்மனோர் மனைவி மக்களிடத்திற்கொண்டுள்ள, யான் எனதென்கின்ற அபிமானத்தை (பற்றை)ப் போன்ற உறுதியான அன்பு தானே புறப்படும். இவ்விதமான தயை நிறம்பப்பெற்றவர், நண்பர் பகைவரென்ற வேறுபாடின்றி அத்திமுதல் எறும் பீராயுள்ள வத்தனை யுயிர்களிடத்தும், மற்றொருவராலும் விடமுடியாத இம்மைச் சுகங்களை மதியாது அடங்கா ஆர்வங்கொண்டு, அவர் பொருட்டு பயங்கரமான பெருந்துக்கங்களையும் வலுவில் நாடி தம் சுகங்களை வீசியுமெறிவர்.

தயாளுவின் அருமை பெருமைகள் கணக்கிடத் தக்கவையல்ல. பிறர் கேட்டமாத்திரத்தில் நடுங்கத்தக்க தீமைகளை விளையாட்டுக் கருவிபோல் கையாடுதலும், ஒருபொழுதும் விடமுடியாத பெருஞ் சுகங்களை அலட்சியமாய்த் தள்ளிவிடுதலும், அன்னோர்க்கு இயற்கையாய் அமைந்துவிடும். இவ்விதம் பிறர்க்கரியகாரியங்களை இலேசில் செய்வதற்கு, அருமையான பெரிய சாரமுள்ள மற்றோர் பெருத்த நன்மையின் கவர்ச்சியின்றி முடியுமோ? முடியாது. அவ்விதப் பெரும் பொருள் யாதெனின், பிறர் ஒருவராலும் ஒருசிறிதும் கனவிலுமனுபவிக்க முடியாத உள்ளங்கவர்ந்தெழும் தோங்கு

மகிழ்ச்சியே. இவ்வித மகிழ்ச்சியை முன்னிட்டுத் தான் எல்லா ஜீவரிடத்தும் தயை ஏற்படுகின்றது. இங்ஙனம் தயையினாரம்பகாலத்திலேயே இவ்வளவு பெருஞ்சுக முதிக்குமானால், இறுதியில் அதன் பயன் இத்தனையென அளவிடத்தக்கதோ?

ஆதலின், இப்பேரின்பத்தையடைவிக்கக்கூடிய வரிதான மானிடப்பிறப்பையடைந்தவர், அவ்வொப் பற்றவின்பத்தில் சேர்ப்பிக்கத்தக்க தயையென்னும் பெருங்குணத்தை நாடக்கடவர்.

அவ்விதம் நாடாராயின் பகுத்தறிவற்ற நாற்காற் பிராணியினும் கீழோரன்றோ! ஏனெனின், பகுத் தறிவில்லாக்குறைவால் விலங்குகள் தயையற்றிருக் கின்றன தயையில்லாதமனிதனோ, பகுத்தறிவிருந் தும் அதைத் தக்கபடியுபயோகித்து அதன்பலனாகிய தயையடையாது, தற்சுகத்திலேயேயுழன்று வீணே காலம் போக்குகிறானல்லவா?

---

## 16. ஒற்றுமை.—Union.

மனிதன் சுகமடைய அநேக சந்தர்ப்பங்களைப் பெற்றும் சுகமற்றவனாதல் ஒற்றுமையின்மையா லெனக்கூறலாம். ஏனெனில், இவ்வுலக வாழ்க் கைக்கு இன்றியமையாதவநேக பொருள்கள் நாம டைந்திருந்தும், பலருமொன்றுகூடி அப்பொருள் களை நமக்கு வேண்டியவாறு நம்வயத்து ஆக்கிக்கொ ண்டாலல்லது அவை பயன்படுவதில்லை. பலரு

மொன்றுகூடல் ஒற்றுமையின்றி நடக்கற்பாலதோ? தனித்தனி ஒவ்வொருவர் முயற்சியாலும், ஒற்றுமையில்லாப்பலர் சேர்க்கையாலும் ஆகாததொன்றை, ஐக்கியமுள்ளவரின் கூட்டத்தால் தான், சாதிக்கக்கூடும். ஒவ்வொருவரும் பொதுநன்மைக்காக பெரும்பாலார் மனதையொத்து நடவாது தம் மனதிற்கேற்றவாறு விரோதமாய் நடப்பாராயின் தனிமுயற்சியாலாவது, தொடர்முயற்சியாலாவது ஆகக்கூடிய சுகங்களைச் சற்றேனுமடையமாட்டார்.

மேலும், ஒற்றுமையில்லாதவிடத்து எல்லா சுகங்களுங் கெடுவதோடு எல்லாவித துன்பங்களும் இலகுவாயுண்டாகும். ஏனெனில், ஒரே தேசத்தில் சமீபமாயுள்ள ஜனங்களுள் ஒருவர்க்கொருவர் அன்போடாவது, விரோதமாயாவதுதானிருக்கமுடியும். அங்ஙனமில்லாது அலட்சியமாயிருக்கமுடியாது. தூரமான வேறு தேசத்திய ஜனங்களோடு அவ்வாறு அலட்சியமாய் இருக்கக்கூடுமானாலும், ஒரே தேசத்தாருளவ்விதம் அலட்சியமாயிருப்பது அசாத்தியம். அமெரிக்கா கண்டத்திலுள்ள ஒருவனுடைய சுகதுக்கங்களை இந்தியாவிலுள்ள ஒருவன் அறிந்தும், முறையே அவைகளில் சந்தோஷ வியசனங்கொள்ளாது அலட்சியமாயிருக்கலாம். அலட்சியமாயிருப்பதால் அமெரிக்காவிலுள்ளவனுக்கு யாதொரு தீமையும் நேராது. ஆனால் நம் பக்கத்தில் வசிக்கும் ஒருவனுக்கு நன்மை தீமைகள் நேரிடும்பக்ஷத்தில், நாம் அவைகளைக் கொண்டாடாதிருக்க முடியாது. அவ்வா



அ

திருப்போமாயின் அவ்வயலான் விரோதத்திற்குப் பாத்திரமாவோம். அண்டைவீடு பற்றி எரியும் போது தன்வீட்டில். அமெரிக்காவாசியைப்போல், அலட்சியமாயிருக்கமுடியுமா? அண்டைவீட்டுக்கார னிடத்தில் அமெரிக்காவாசியைப்போல் நாம் அலட்சியமாயிருந்தால் தற்சமயத்தில் அண்டை வீட்டுக்காரனுக்கு அமெரிக்காவாசியிடம் பிரியமோ துவேஷமோ உண்டாகாவிட்டாலும், தன்னிடத்தில் அலட்சியமாயிருந்த ஒரு காரணத்தாலேயே பலமான விரோதமுண்டாகின்றது. ஆதலின் பக்கத்திலிருக்கும் ஜனங்களோடு சிநேகமோ பகையோ கொள்ளாதிருப்பதற்கு முடியாது. பகையில்லாவிடத்து சிநேகமும், சிநேகமில்லாவிடத்துப் பகையும் தானே வந்துநிற்கும். இக்காரணம் பற்றியே ஓர் தேயத்திய ஜனக்கூட்டத்தில் சிநேகமும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையும் இல்லாதவிடத்து, பகை யவருள்தானே தலையெடுக்கும். அதன் காரணத்தால் அவர் பெருந்தீமை யடைவார்.

ஒவ்வோர் நிமிஷமும் நாம் ஒற்றுமையின் நன்மையை நம் தேகத்திலேயே கண்டறியலாம். நம் முடல் பாதுகாப்பிற்கு அநேக மார்க்கங்களைக் கண்டறிய ஐந்து ஞானேந்திரியங்களும், கண்டறிந்தவற்றை காரியத்தால் சாதிக்க ஐந்து கர்மேந்திரியங்களும், இன்னகாலத்தில் இன்னகாரியத்தை இவ்வாறு செய்யவேண்டுமென்று கட்டளையிட ஒரு மனதும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித

மான ஏற்பாட்டால்தான் நம் தேகம் ஊட்டப் பட்டு வளர்ந்து வருகின்றது. ஒவ்வோரிந்திரியமும் தனித்தனியே தன் தன் சுகத்தை நாடுவதைக் காண்கிறோம். இவ்விதம் ஓரே சமயத்தில் எ லா இந்திரியங்களும் தத்தம் சுகத்தை நாடும்பொழுது, பலகாரியங்கள் ஒரே காலத்தில் செய்யவேண்டிய அவசியம் நேரும். இவ்வித அவசியம் வரும்பொழுது மனது அப் பல காரியங்களில் எது முதலிற் செய்யப் படவேண்டுமென்பதை உத்தேசித்து அதைச் செய்ய இந்திரியங்களுக்கு உத்தரவு அளிக்கின் றது. அவ்வாணையைப், பிறவிந்திரியங்களும் தம் தற்கால சுகத்திற்கு விரோதமாயினும், சிரமேற் கொண்டு காரியத்திற் புகுகின்றன. இவ்விதம் ஓரே மனதிற்குக் கீழடங்கி காரியங்களில் ஒற்றுமையா யிருப்பதால்தான் எல்லா இந்திரியங்களும், தேக மும் சுகமடைகின்றன.

இங்ஙனே நடவாதுபோனல் நம் தேகம் எவ் வித நிலைமையிலிருக்குமென்பதைச் சற்று கவனித் துப் பார்ப்போம். இவ்வித மியற்கைக்கு விரோத மான விஷயத்தை யுள்ளதாகக் கவனிப்பதால் ஒவ் வோரிந்திரியத்திற்கும் தனித்தனி மனதிருப்பதாக எடுத்துக்கொள்வோம். ஆதலின், பத்து இந்திரியங் களுக்கும் பத்து மனதிருப்பதாகும். ஓரே காலத்தில் இவ்விந்திரியங்களுக்கு தனித்தனி வெவ்வேமுன இச் சையுண்டாகி, அதனதன் மனது தத்தம்காரியம் முன் னதாய் ஆகவேண்டுமென வாதம் பண்ணத்தொடங் கும். இவ்வாதம் போராய் முடியும். போரில்

எது பலமுள்ளதாகின்றதோ வஃது வெற்றி பெறும். இவ்வாறு வாதமும் போரும் நடைபெறுவதால் காரியங்களின் சமயம் தவறி, வெற்றி பெற்ற இந்திரியமும் அதன் பலனை யடையாது. தோல்வியடைந்த பிற இந்திரியஙகளின் உதவி அதற்குக் கிடைக்காதாகையால் அவ்வுதவியின்றி அதன் காரியம் சித்திக்காது. தோல்வியடைந்த விந்திரியங்களும் மனதும் தம் காரியத்தால் வீண் கஷ்டத்தை தேகத்திற்கு உண்டுபண்ணும் உதாரணமாக, போரில் வெற்றி பெற்றது வாக்கு இந்திரியமென நினைத்துக்கொள்வோம். அஃது ஒருவருடன் பேசத் தீர்மானம் பண்ணினதாகவும் வைத்துக்கொள்வோம். அவருள்ளவிடம் சென்று பேச வேண்டுவதால், போகும்படியான காரியத்தைச் செய்வதற்குரிய இந்திரியம் சம்மதிக்காவிட்டால் எங்ஙனே அதன் தீர்மானம் நிறைவேறும். ஆதலின் வெற்றி பெற்றதும் பெறாததும் தத்தம் காரியங்களில் சித்தியடைகின்றதில்லை. இவ்வாறு இந்திரியங்களுக்கும் மனதிற்கும் ஒற்றுமையில்லாத விடத்து மனிதன் பிறந்தவளவிலே உயிர் துறக்க நேரும். பிற்காலத்திய பிழைக்கும் வழிக்குக் காரணமான வொற்றுமையைப் பற்றியோ கவலையே வேண்டியதில்லை! ஏனெனில், மனிதரிருந்தன்றோ, அவருள் ஒற்றுமை யிருக்கவேண்டும்.

இதுபோலவே, ஓர் மனித வர்க்கத்தின் அவயவமாகின்ற தனித்தனி மனிதர், தம் சொந்த நன்மையைக் கருதாது, பொதுஜன நன்மையைக் கைக்கொண்டு ஒற்றுமையடைந்தால் அவ்வர்க்கமாகிய

தேகம், மனதிற்கடங்கிய இந்திரியங்களால் பாது காக்கப்பட்ட உடலைப்போல், க்ஷேமமடையும். இல்லாவிடின் அது, முரணுன இந்திரியங்களால் தேகம் நாசமடைவதுபோல் ஓர் கணத்தி லழியும்.

இவ்வளவு நன்மைக்குக் காரணமான ஒற்றுமை நம் தேயத்தில் வெகு பரிதாபமான நிலைமையிலிருப்பதாகக் காண்கிறேம். எங்குபார்த்தாலும் அரங்கமேறிப்பலரும் இந்தியாவில் ஐக்கியமில்லையென முறையிடுகின்றனர். ஐக்கியம் வேண்டுமென்ற கூக்குரல் எண்டிசையினின்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இதனுல் இந்தியரில் உடனே ஒற்றுமை வந்துவிடப் போகிறதென்று நினைக்கற்பாலதன்று. ஏனெனில், சபைகளைக் கூட்டி ஐக்கியமின்மைக்கிதுகாரணமென்றும், அதல்லவென்றும் கைகொட்டி கால்தட்டி விஷய விஸ்தாரம் செய்யும் பிரசங்கிகள் மனதில், ஐக்கியத்தின் பொருட்டு உண்மையான தாபமும் ஐக்கியத்தின் யதார்த்த குணவறிவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில், இந்தியாவில் சாதிவேற்றுமை மதவேற்றுமைகளின் காரணமாய், சுதேசிகள் சகோதரர் போல் ஒற்றுமையுள்ளவராயில்லை யென்றும், அதைத்தேடி அடையவேண்டியதவசிய மென்றும், அரங்கமேறிக் கதறுகிறவர்களில் எத்தனைபேர் பெற்றேர்க்கும் உடன்பிறந்தார்க்கும் நியாயஸ்தலமேறுது முறையே அன்னவஸ்திரமும் தாயபாகமும் கொடுத்து வருகின்றனர்? இவர்கள் வழக்குத் தீர்க்க

எண்ணிறந்த நியாயாதிபதிகளிருந்தும் சரிவர முடிவதில்லை. பெற்ற தாய்தந்தையரும், சகோதரரும், வேறு சாதி மதத்தினரல்லவே. ஒற்றுமையினுண்மையான தன்மையை யறிந்திருந்தால் இவரிவ்வாறிருப்பரோ? இரார். ஆதலின் ஒற்றுமையின்மை மலிந்திருப்பதற்கு உண்மையான காரணமின்னதென்று பிரசங்கிகள் கண்டறியவில்லையென வெளியாகிறது. நம்மிந்தியாவில் இவ்வித மிருப்பதற்குண்மையானகாரணம் மேல் கூறப்படும்.

---

## 17. நம்பிக்கை.—Faith.

ஒருவன் தான் நேரில் கண்டறியாதவற்றை பிறர் வாய்ச்சொல்லாலாவது தன் சொந்த ஊகத்தாலாவது நேரில் கண்டாற்போல் உறுதியாய் நினைப்பது **நம்பிக்கையாகும்.**

இந்நம்பிக்கைக்குச் சிறப்பான ஓர் தன்மையுண்டு. அஃது யாதெனின், அதன் கண் ஜனங்கள் கொண்டுள்ள வெவ்வேறான அபிப்பிராயமே. பொறுமை குரோதம் முதலியன மனத்தின் கெட்ட தன்மைகளென்றும், சத்தியம் தயைமுதலியன அதன் நல்ல தன்மைகளென்றும் எல்லோரும் ஒன்றுபட்ட அபிப்பிராயமுள்ளவராயிருக்க, இதன்கண்மட்டும் நேர் விரோதமான இருவகை எண்ணமுள்ளவராயிருக்கின்றனர். சிலர், அது மனிதருக்கு அவசியமான சிறந்த குணமென்றும், வேறு சிலர்

அதனால் மனிதர்க்கு பெருங்கேடு வருமெனவும் கூறுகின்றனர். இதன் காரணம், நம்பிக்கை மூலமாய்ச் சில சமயங்களில் நன்மையும், வேறு சந்தர்ப்பங்களில் தீமையும் உண்டாவதோடு, தற்காலத்தில் நம்பிக்கை பொதுவாய் அபாயத்திற்குள்ளாக்குகின்றதென்பதே. ஆனால், நம்பிக்கை சுயமாகவே தீமையை விளைவிக்கத்தக்கதல்ல. நம்பப்பட்ட விஷயத்தின் உண்மை பொய்மையையொட்டி அது நன்மையும் தீமையும் செய்வதாயிருக்கின்றது.

குற்றமற்ற நம்பிக்கையினுபயோகம் யாதெனில், தானறியாத விஷயத்தினின்றுங்கூட நம்பிக்கையினால் பேரின்பத்தைப் பெறலாம் : துன்பங்களையும் விலக்கிக்கொள்ளலாம். நம்பப்பட்ட விஷயம் பொய்யானால் துன்பமனுபவிக்கவும் நேரும். சொந்த வறிவையொட்டிக் காரியம் செய்தால், நம் சுகம் அதோடு நிற்கும். பிறர் மொழியை நம்பிக் காரியம் செய்தால் அஃதுண்மையானால் நன்மையும், பொய்யானால் தீமையும் அனுபவிக்கநேரும்.

பண்டைக் காலத்தோர், நம்பிக்கையென்பது மனதினோர் முக்கியமான குணமென்றும், அஃதில்லையானால் எல்லாக் குணங்களுமில்லையாகுமென்றும் சொல்லியிருக்கின்றனர். ஆனால் தற்காலத்தியவர், நம்பிக்கையினால் பெருந் தீமைகளுண்டாகின்றனவென்று அதை வெறுக்கின்றனர். இவ்விரண்டு வித்தியாசமான அபிப்பிராயங்கள், அவ்வக்காலத்து மனிதரியல்பைக் காட்டுகின்றனவாதலால், பண்டைக்

காலத்தோர் உண்மையை யதிகம் தழுவியுள்ளா ரென்றும், தற்காலத்தில் அஃது மிகவும் குறைந் துளதென்றும் நாமறியத் தக்கதாயிருக்கிறது. ஏனெனில், அக்காலத்தினர் உண்மையே பேசும் சுபாவமுள்ளவராயிருந்ததினால், அவர் மொழியை நம்புவதால் யாதொரு குற்றமும் நேரிடத்தக்கதா யில்லை. ஆதலின், உண்மையான விஷயங்களை நம்பு வதால் கிடைக்கும் நன்மையை எல்லாருமடையும் பொருட்டு, நம்பிக்கை எல்லாருக்கும் அவசியமான தென்று, அவர் தாமியற்றிய நூல்களின் வாயிலாய்த் தெரிவித்தனர். தற்காலத்தினர் உண்மை மிகக் குறைவாயுள்ளவராதலால், அவரை நம்பினால் கேடு விளையும். ஆதலின், நம்பிக்கை தற்காலத்தில் கூடா தெனக் கூறப்படுகிறது. இஃது தற்காலத்தியரது பொய்மையையும், முற்காலத்தியரது மெய்யின் சிறப்பையும் வெளிப்படுத்துகிறது. ஏனெனில், தற் காலத்தில் உண்மை பேசும் சுபாவமுள்ளவர் பொய் யையும் நம்பிவிடுகின்றனர். பொய்யர் உண்மை பேசுபவரையும் நம்புவதில்லை. உண்மையுள்ள விடத்து நம்பிக்கையும், பொய்யுள்ளவிடத்து நம் பாமலிருத்தலும் இயற்கையன்றோ?

தற்காலத்தில் பொய் மிகுதியாயுள்ளதென்று ஒன்றை நம்பாமலிருக்கவும் முடியவில்லை. தன் புத்தி சக்தியால் அடைய முடியாததை, நம்பிக்கையால் தானடைய வேண்டியிருக்கிறது. ஆதலின் குற்ற மற்ற நம்பிக்கையை நாம் அடையும்படியான வழியைத் தேடலவசியம்.

இனி நமது நம்பிக்கையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. நேரில் கண்டறியக்கூடிய விஷயங்களில் நமக்குத் தெரியாத வொன்றைப் பிறர் வார்த்தையைக் கேட்டறிதல்.

2. தவறுதல் வரக்கூடியதான விஷயங்களில் தவறுதல் வராதென்றோ, வருமென்றோ நம்பி விடல்.

3. ஐம்பொறிகளால் கண்டறிய முடியாத பொருள்களை ஊகித்தலாலோ பிறர் வார்த்தையாலோ இன்னவிதமென்று உறுதியாய் மனதிற் கொள்வது.

இவை மூன்றனுள் முதலாவதில் நாம் நேரில் கண்டறியலாமென்கிற சந்தர்ப்பமிருப்பதால் பிறர் நம்மை மோசம் செய்யமுடியாததோடு, ஒருவேளை மோசம் நேரிடினும், அதிக தோஷமுண்டாவதற்கு மிடமில்லை. ஏனெனில், இவ்விதமான விஷயங்களில் ஒருவர் பெரும் பொய்யுரைக்கமுடியாது.

இரண்டாவதான மாறுதலடையக் கூடிய விஷயங்களில் மாறுதல் வருமென்றுவது வராதென்றுவது நிச்சயமாய் நம்பிவிடல் மிகவும் மோசத்துக்குள்ளாக்கும். இவ்விதமான நம்பிக்கையை மனிதர்களுக்குள் ஒருவர்க்கொருவர் பாராட்டி வருகின்றனர். ஒரு மனிதனை, நாம் கண்ட சிற்சில சமயங்க

ளில் உண்மை பேசினதால், எப்பொழுதும் மெய்யுரைப்பானென்று சொல்லல் இவ்விரண்டாவதின் பாற்படும். மனிதரின் மனது சமயங்களுக்குத் தக்கபடி உண்மையில் ஏற்றத்தாழ்ச்சியுள்ளதாயிருக்கும். இதுபோலவே, கோபம், தைரியம், சாந்தம் முதலிய குணங்களிலும் மாறுபாடுகள் மனிதரின் மனதிலுண்டாகக் கூடியது. ஆதலின் ஓர் சமயம் நாம் எவ்விதம் ஓர் மனிதனைக் காணுகின்றோமோ அவ்விதம்தான் அவனெப்பொழுதுமுள்ளவனெனத் தீர்மானிப்பது பிசகாய் முடியும்.

பொறிகளுக்குப் புலப்படாத விஷயங்களை இல்லையென்றோ அல்லது இருக்கிறதென்றோ நிச்சயிப்பது இரண்டாவது நம்பிக்கையைவிட மிகவும் மோசத்துக்குள்ளாக்கும். தெய்வமுளதெனவோ, இல்லையெனவோ ஆராயும் விஷயம் இதன் கீழடங்கும். பிறர்க்கு இவ்வித விஷயங்களில் உண்மையான ஞானமுளதெனவோ இல்லையெனவோ நிச்சயிப்பது வருத்தமாதலால் நாம் சாக்கிரதையாயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட விஷயங்களில், பிறர் தம்கொள்கைக்குச் சார்பாய்ச் சொல்லும் காரணங்களையும் ஆதாரங்களையும் கவனித்துக் கொண்டு நடுநிலைமையையடைந்த மனதுடையராய், பிறர் சொல்லும் காரணங்கள் எவ்வளவுதூரம் சரியென்று கவனித்து குணமுள்ளதானால் அதை மட்டும் கைக்கொள்ளல் வேண்டும். இது தான் இம்மாதிரியான விஷயங்களில் உண்மையறிய வழி. இம்மார்க்கம் சாத்தியமானதுதான் என்

பதை நியாயாதிபதியின் வேலையினின்றும் தெரிந்து கொள்ளலாம். எப்படியெனில், நீதிபதியின்முன் வாதம்பண்ணுபவனும் அதற்கு பிரதியுத்தரம் பண்ணுபவனும் மெய்யும் பொய்யும் கலந்து கூறுங்காலே, அவர் தனித்தனி சொல்லும் வார்த்தைகளில் உண்மை எவ்வளவென்றும், பொய் எவ்வளவென்றும் கண்டறிந்து நடுவு நிலைமையில் நின்று வழக்குகளைத் தீர்க்கின்றான். இங்ஙனமில்லாது ஓர் கட்சியில் சொல்லப்பட்ட விஷயமே சரியெனவும், மற்றது பொய்யெனவும், ஓரே நிச்சயமாயிருப்பானாகில் அந்நீதிபன் நியாயமெடுத்துரைக்க முடியுமா ?

ஆனால் இவ்விதமிருப்பினும் எல்லா நீதிபரும் எல்லா வழக்குகளின் உண்மையைக் கண்டறிய முடிவதில்லையே, என்ற கேள்வியுண்டாகலாம். இதற்குக் காரணம், நியாயாதிபதியின் வழக்குகளைத் தீர்க்கும் மார்க்கப்பிசகல்ல; ஆனால் நீதிபருள் அவரவருக்கு அவ்வச்சமயங்களிலுண்டாகும் மனக்கோட்டங்களேயாகும். எங்ஙனேயெனின், சிற்சில நீதிபருக்கு நடுவு நிலைமையில் நிற்கும் குணம் சிறிதாயும், அப்படியிருந்தாலும் காரியம் நிறைவாகிற வரையிலும் அக்குணம் சலியாது நிற்கும் தன்மையில்லாமலும், தான் செய்யும் தவறுதலால் விளையக்கூடிய தீமைகளை வாதிப் பிரதிவாதிகளே அநுபவிக்கவேண்டியதொழிய தனக்கு யாதொரு தீங்குஞ் சம்பவியாததாலும், ஓரே விதமான வேலையையெப்பொழுதும் செய்து சலித்திருப்பதாலும், குறித்த காலத்தில் எடுத்த காரியத்தை முடிக்க

வேண்டியதாலும், சொந்த நன்மையைக்கருதி காரிய காரணங்களைக் கவனியாதுவிட நேரிடுவதாலும், நீதிபன் உண்மையினின்றும் நீங்கிப் பொய்யில் படுகிறான். பிறர் காரியம், பிறர் கட்டாயம் ஆகியஇவைகளின் காரணமாய் இவ்வித சத்தியப் பிறழ்வு உண்டாகின்றது.

ஆனால் மனிதர் யாவரும் தத்தம் சுகத்தைத் தேட மேற்கூறிய மார்க்கத்தைத் தழுவுவதில் நியாயாதிபதியடையக்கூடிய தடைகள் பெறக்காரணமில்லை. ஆதலாலுண்மையையெவ்விதத்திலுமடையலாம்.

இனி, ஊகித்தறியக் கடினமான நம்பிக்கையை, இயற்கையென்கிற நமதன்னை, கைப்பற்றச் சொல்லுகிறதா, தள்ளச் சொல்லுகிறதாவெனப்பார்ப்போம். பின் கூறப்படுபவையினின்றும், இயற்கை, நம்பிக்கையை அலட்சியம் செய்யக்கூடாதென்று தெரிவிப்பதோடு, அதனாலேயே ஞானம் மனிதர்க்கு வரவேண்டியதென்றுங் கூறுகிறதாகத் தெரிவிக்கிறது. குழந்தைப் பருவத்தில் நாம் பிறர் கூறும் மெய்யையும் பொய்யையும் ஓரே மாதிரியாய் நம்பிவிடுகிறோம். இவ்விதம் நம்புவதால் நம் ஞானம் குன்றுதலோடு, பிற்காலத்தில் தான் கேட்ட பொய்களையும் மெய்களையும் ஆராய்ந்தறியும் சக்தியடைந்து உண்மையைக் கைப்பற்றவும் நேரிடுகின்றது. நம்பிக்கையில்லாதுபோமானால் பொய்யையும் மெய்யையும் வேறுபடுத்தி அறியக்கூடிய சக்தியில

ராவார். இதுநிற்க, இன்னின்னவை தெரிந்துகொள்ளவேண்டியதென்பதையுமறியார். மேலும் கிழப்பருவம் வரும்போது வயது முதிர்ந்தவுடலும், குழந்தைப்பருவமுள்ள ஞானமுமுடையவராயிருப்பார்.

ஆதலின், இயற்கையன்னே ஞானத்திற்கும் நம்பிக்கையே ஆதாரமெனத்தெரிவிக்கின்றது. ஆனல் நம்பிக்கையவசியமில்லையென்று சொல்லுபவர் எடுத்துக்காட்டும் நியாயம் யாதெனின், 'இயற்கை நமக்கு ஞானேந்திரியங்களும் மனதும் படைத்திருக்க, அவைகளால் நாமே கண்டறியாத விஷயங்கள் உலகத்திலிருக்க முடியா; அவ்வாறிருப்பின், மனதிற்கும் ஐம்பொறிகளுக்கும் அவசியம் புலப்பட இயற்கை தகுந்த சக்திகளையுண்டாக்கியிருக்கும்; அங்ஙனமுண்டாக்கவில்லையென்பது நம்மிந்திரியங்களுக்கும் மனதிற்குமெட்டாத விஷயங்கள் உலகத்திலில்லையென்பதற்குச் சாலுங்கரி, எனவுங் கூறுகின்றனர். இது முழுதும் பிசகு. ஏனெனில், மிருகங்களுக்கும் நம்மைப்போலவே ஞானேந்திரியங்களிருக்கின்றன. ஆனல் நம்மைப்போல் விஷயங்களையறிகிறதில்லை. மனிதர்க்குத் தெரிந்ததில் நூற்றிலொரு பங்காவது அவையறிந்தில. இதனலவைகளுக்குத் தெரியாத விஷயங்கள் உலகத்திலில்லையெனக் கூறப்படுமோ? நமக்குப்புலப்படாத விஷயங்கள் உலகத்திலில்லையெனச் சொல்லுவது, மிருகங்கள் தமக்குத் தெரியாத விஷயங்கள் உலகத்திலில்லையெனக் கூறுவதை யொக்குமன்றே?

இதுவுமன்றி, ஒவ்வொரு மனிதருக்கும் மனத்தின் சக்தி வெவ்வேருயிருப்பதாயுங் காண்கிரும். சிலர்க்குத்தாமே இலேசில் கண்டுபிடிக்கக்கூடிய விஷயம், மற்ருெருவருக்கு வெகுகாலமதைக் கற்றுக்கொடுத்தும் தெரிந்துகொள்ள முடிகிறதில்லை. இன்னும், ஒரே மனிதனுக்கு ஓர் காலத்திய மனத்தின் தெளிவு பிறிதொரு காலத்திலிருப்பதில்லை. மனதின் வளர்ச்சி இவ்விதம் கணக்கற்றிருக்கிறது. நாம் அறியாத விஷயத்தைப் பிறர் அறிந்திருக்கக்கூடுமாதலால், நம்பிக்கையை மேற்கூறியவாறு உபயோகித்து ஞானத்தையடைய முயலவேண்டும். வளர்ச்சி பூரணமாகாத மனதைக்கொண்டு இவ்வளவுதானுலகத்திலுள்ள விஷயங்களென அளவிடுதல் முழுதும் பழுதாகும். இதனின்றும் நம்பிக்கை அனுவசியமென்பது குற்றமெனத்தான் தெளியும்.

ஆகையால் மேற்கூறிய காரணங்களைக்கொண்டு மனிதன் அறிவினுற் சிறப்படையவேண்டுமானுல், பிரகிருதியால் அவ்விதவறிவைப் பெறுதற்கு ஆதாரமாக்கப்பட்ட நம்பிக்கையைக் கைவிடாமலும், நம்பிக்கையால் யாதொரு குற்றங்கள் நேராவண்ணம் முன்சொன்ன நியமங்களையனுசரித்தும் அதை எல்லாரும் கைக்கொள்ளல்வேண்டும்.

## 18. இலாகிரி வஸ்துக்கள்.—Intoxicants.

எங்கெந்த விஷயங்களில் மனிதன் விலங்குகளை விட மேம்பட்டிருக்கிருனே அவ்வவ் விஷயங்களின் மேன்மைக்குக் காரணம் அவனிடத்துள்ள உற்சாக சக்திதான். உற்சாகமில்லாத மனிதன் தாவரங் களைப்போல் அசைவற்றிருப்பான். யாதொரு சிறப்புமடைய முடியாது. உடலுக்கு எவ்விதம் பலமவசியமோ அங்ஙனமே மனதிற்கு உற்சாகமின் றியமையாதது.

சந்தோஷமும் சமாதானமும் மனதிற்கு உற் சாகத்தினலேதான் கிடைக்கவேண்டும். இச்சக்தி மனதிற்கு இயற்கையாய் எப்பொழுதும் உள்ளது. அதாவது மனதிற்கு வேருென்றினின்றும் கிடைத் ததல்ல. ஆனல் மனதோடு பிறந்து அதனின்றும் வேருகாது மனே நாசத்தில்மட்டுமழியக்கூடியது. குழந்தைப் பருவத்தில் யாதொரு சக்தியும் மலர்ச்சி யடைவதில்லை. அப்படிப்பட்ட காலத்தும் இவ்வுற் சாக சக்திமாத்திரம்தான் காணப்படுகிறது. இச் சக்தியால்தான் குழந்தைகள் ஞானமே அற்ற அப் பருவ முதற்கொண்டு மேன்மேலும் படிப்படியாய் முன்னுக்கு வருகின்றன. குழந்தைப் பருவத்தில் தாவரத்தைப்போல் கிடத்தினவிடத்தை விட்டகல முடியாத நாம், அழுதல், சிரித்தல், பிறழல், உருளல், இருத்தல், நிற்றல், நடத்தல் ஓடல் முதலிய சக்தி களைக் கிரமமாய் அடைந்து, நம்மிந்திரியங்களால் பற்பல விஷயங்களையறிந்தும் பிறர் போலவே

அவைகளையனுபவிக்க முயன்றும், அவை கிட்டாத போதழுதும், கிட்டினபோது சந்தோஷித்து ஆரவாரஞ் செய்தும் முன்னுக்கு வருதல் இவ்வுற்சாக சக்தியாலேதான். மேலும், இதனாலேயே வயதேற வேற விஷய ஞானமதிகமுண்டாகி சாரமுள்ளவைகளை யெடுத்து கோதானவற்றைத் தள்ளுவதும், நடைபெறும். இங்ஙனம் மற்றப் பிராணிகளுக்கில்லாச் சிறந்த தன்மைகளை மனிதன் இச்சக்தியாலடைகிறான். ஆனால் இச்சக்தி பாலியமுதல் வளர்ந்து நடுவில் இறந்ததன்மையையடைகிறதாகப் பார்க்கிறோம். ஆதலின் மனிதர் பலருள் சந்தோஷமின்மையும், துக்க நிறைவும் காணப்படுகின்றன. இதன் காரணம் யாதெனவறிவதவசியம்.

மனிதன் அனுபவிக்கக்கூடிய சுகங்களிரண்டு விதம். 1. திருஷ்ட சுகம் 2. அதிருஷ்ட சுகம். திருஷ்டசுகமாவது பொறிகளால் நுகரப்படும் சுகம்; இஃது சீக்கிரமழியத்தக்கது. பொறிகளாலடைய முடியாததும், நாசமடையாததுமானது அதிருஷ்ட சுகம். இவைகளில் முன்னது உபயோகமற்றது.; பின்னது மிக முக்கியமானது. குழந்தை முதல் நம்மனது நாளடைவில் திருஷ்ட சுகங்களில் விருத்தியடைந்து அவற்றுளுயர்ந்தவற்றைக் கைப்பற்றி கடைசியில் மனைவி மக்களாகிய அவற்றினுச்சியை யடைகின்றது. உற்சாகசக்தியால் இவ்விதம் ஓர்வகைச் சுகத்தினிறுதியை யடைந்த மனது அதனினும் மேம்பட்டதையடைய

விரும்புகின்றது. ஆனால் அடுத்தபடி அதிருஷ்ட சுகத்தின்பாற்பட்டதாகையாலும், அதையடைய மனதிற்குத் தகுந்த மலர்ச்சியில்லாததாலும் அஃது கிட்டுகிறதில்லை. இவ்வாறு உற்சாகசக்திக்குத் தடையேற்பட்டு, இதுவரையில் அதனால் கிடைத்த சுகங்களினும் மேலான மற்றோர் சுகம்பெற வழியில்லாததாலும், ஏற்கனவே கிடைத்த சுகங்களை விருப்பின்றி அனுபவிக்க நேரிடுவதாலும், மனந்தளர்ந்து உற்சாகசக்தியிருந்துமில்லாத நிலைமைக்குக் கிரமமாய் வந்துவிடுகிறது. இவ்விதம் இந்திரியசுகங்கள் நம்மிஷ்டப்படி வேண்டியவளவு அடையமுடியாததாலும், ஒரு வேளை யடைந்தாலும் சீக்கிரமழிந்துபோவதாலும் அதை அடிக்கடி மனிதன் முன்னுக்குக் கொண்டுவர முயலுதல் இயற்கையே.

காவலிலிருப்பவன் எவ்வளவு பலவானாயும் செல்வவானாயும் தைரியமுள்ளவனாயுமிருந்தாலும் அவைகளாலவனுக்கு யாதொரு உபயோகமுமில்லை. அவை அவனிடம் அழியாதிருந்தும், பயனற்றதாய் முடிகின்றன. அதுபோலவே உடல், ஐம்பொறிகளால் சிறைப்படுத்தப்பட்ட மனது, எவ்வளவு உற்சாகமுள்ளதாயினும், அதனால் யாதொரு உபயோகமும் அடைவதில்லை.

இனி, சிறைச்சாலையின் துன்பங்களை நீக்க இரண்டே மார்க்கங்களுள:—அவை முறையே சிறையினின்று நீங்குதலும், சிறையிலிருத்தலை மறத்தலுமே. ஏனெனில், சிறையிலிருந்தும் தூக்கத்தால்

அதைமறந்திருக்கிறவன், சிறையிலிருந்து நீங்கின வனைப்போல் அத்தூக்கத்தால் சுகமடைந்திருக்கக் கூடுமன்றோ? இதுபோலவே பொறிகளாலாகிய காவலிலிருப்பவன், உலகத்தைத் துறந்து விஷய சுகங்களைச் செயித்து அவைகளினின்றும் விடு படவேண்டும்; அல்லது அவைகளிலிருந்துகொண் டே அவற்றின் பால் மறதியடைந்திருக்கவேண்டும். ஆனாலுலகவாசையை முழுதும் நீக்குதல் முற்றிலும் கூடாத காரியம். ஆதலின், மறதியையடைய உல கம் கண்டுபிடித்த மார்க்கம் போலும் போதையைத் தரும் வஸ்துக்களினுபயோகம்.

இப்போதைவஸ்துக்கள் விஷவஸ்துக்களைச் சேர்ந்தனவெனக்கொள்ளலாம். ஏனெனில் விஷ பதார்த்தங்கள் தேகத்திலுள்ள நீரைச்சுருக்கி உடற்கூறுகளைத் தளர்த்தி மரணத்தையுண்டாக்கு கின்றன. இலாகிரி பதார்த்தங்களோ, உடனே மர ணத்தையுண்டாக்காவிட்டாலும், தேகத்தில் மறதி யையுண்டாக்கித் தளர்ச்சியைக் கொடுக்கின்றன. ஆதலின், விஷத்தன்மை அவைகளிலிருப்பதால் அவைகளை விஷவஸ்துக்களெனக் கூறுவதில் குற்ற மில்லை. ஆனாலிவ்வித தோஷங்கள் தேகேந்திரியங் ளுக்கு வராமலும், உடல் ஐம்பொறிகளாலுண்டாகத் தக்க துக்கங்களை மறந்திருப்பதற்கும், அதிருஷ்ட சுகங்களை யடையுமாறு உதவக்கூடியதுமான மார்க் கம் ஏதேனும் உளதோவெனப் பார்ப்போமாகில், அஃது மேற்கூறிய இலாகிரி வஸ்துக்களின் மட்டான உபயோகத்தால்தான் கூடுமென முனிவர் கண்டுபிடித்

திருக்கின்றனர். மேலும் இப்போதை வஸ்துக்கள், அவைகளை உபயோகிப்பவர் மனதின் போக்கை யனுசரித்து அவரவரை அவ்வவ்வழியில் உறுதிப் படுத்திவிடுகின்றன. ஆதலின் பண்டைக்காலத் தில், முனிவர் பேரின்பவாரியில் மூழ்கிய நெஞ்சுடை யராய் போதைவஸ்துக்களை மட்டாயெடுத்துக் கொண்டு தேகேந்திரியங்களால் வரும் கஷ்டங்களை மறந்து தாமெண்ணிய பெருஞ்சுகத்தையடைந்து வந்தனர் ஆனல், இவ்வாறு தேகசுகத்தையும் மனத்தினின்பங்களையுமுண்டாக்க மார்க்கமாயுள்ள இலாகிரிவஸ்துக்களை, எங்ஙனே ஆன்ரோர் தள்ளத் தக்கவைகளெனக் கூறியிருக்கின்றனரென்கிற கேள்வி உண்டாகலாம்.

இலாகிரிபதார்த்தங்களினின்றும் மற்றப் பதா ர்த்தங்களாலுண்டாக்கமுடியாத தேகசுகமும் மனச் சுகமும் வரத்தக்கதாயிருந்தும், அச்சுகங்களை விட பெருந்தீமைகளும் வரக்கூடியதாயிருக்கின் றன. ஏனெனில், இப்பதார்த்தங்களின் தன்மை அக்கினியைப்போன்றது. ஓர் சிறு தீப்பொறி விற குக்கட்டில் விழுந்தால் அதினிலேசான பாகங்கள் மட்டும் எரிந்து அத்தீயுடனழியும்; கட்டைகள் எஞ்சி நிற்கும். பெருந்தீயானல் அக்கட்டைகள் முழுவதும் எரிந்துபோம். அங்ஙனமே போதை வஸ்துக்களை பேரின்பவாசையோடு குறித்தவள வாய் எடுத்துக்கொண்டால், உண்டவனுக்கு சாதா ரணவுணவின் காரணமாயுண்டாயிருக்கும் நீக்கப்பட வேண்டிய பாகங்கள் மட்டுமழிந்து நன்மை விளை

யும். அளவுக்குமிஞ்சினல் சாரமானதும், உடலோ டொட்டவேண்டியதுமான வஸ்துக்கள் நசித்து, தேகசுகத்தைக் கெடுப்பதோடு உலகப் பற்றி லுழலுமிப்பாழ் மனத்தைத் தீநெறிக்குட் செலுத் தும். மேலும், உலகப்பற்றருத நாம் அவை களைக் கைக்கொண்டால், எத்தன்மையதான வாசை யோடு உட்கொள்கிறேமோ அவ்வித வின்பங்களில் உற்சாகமதிகமாக்கி, சாரமற்ற அவ்வுலக வின்பத்தில் அவை நம்மையமிழ்த்தி விடும். ஏனெனில், கள்ளனுக் குற்சாகம் வந்தால் மற்ற விஷயங்களை மறந்து களவிலும், போர்வீரனுக்குச் சண்டையிலும், வேடனுக்கு உயிர்களை வதைப்பதிலும், உலகபற்றற்ற வனுக்கு மன்னுயிரைத் தன்னுயிரைப்போல் பாது காப்பதிலும் மனது செல்லுமன்றே? ஆதலின், சுயநயத்தில் கண்ணுங் கருத்துமாயிருக்கும் மனி தன் இலாகிரி பதார்த்தங்களை யெடுத்துக்கொள்ள ஆரம்பித்தால் எல்லாவித நல்வழிகளையும் நியாயங் களையும் மறந்து, தன் சுயநன்மையையே முக்கிய மாய்க்கொண்டு அநீதியான வழியில் சென்று விலங் கின் தன்மையை அடைய நேரிடும். இவ்விதம் விஷயங்களின் பற்றைச் சற்றேனும் விட நேராத மனிதன், இலாகிரி பதார்த்தங்களை ஆரம்பத்தில் கொஞ்சமாயுண்டு நாளடைவில் அதிலுள்ள வாசை யால் அதிகமாயுண்ணத் தலைப்பட்டு, தேகமும் மன தும் ஒருங்கு கெட்டு உய்வில்லாத் தீநெறிக்குட்படா வண்ணந்தான், ஆன்றோர் அவைகளை நம்மனோர் கைக்கொள்ளக் கூடாதென விலக்கினர்.

முற்றுந் துறந்த முனிவர்க்கே மிதமாயெடுத்துக் கொள்வதால், ஐம்புலன்களின் சேட்டைகளை யடக்கி பிறரால் கனவிலும் கருதமுடியாத பேரானந்தத்தையடையக் கூடுமானாலும், பொறிகளை யடக்கமுடியாத சாதாரண மனிதருக்கு அவைகளால் மிருகத்தன்மையான மனதும், உடற்சோர்வுந்தான் எஞ்சுமாதலின் நாமதை விலக்க வேண்டும்.

## 19. நட்பு.—Friendship.

ஆடு மேயுங் காட்டில் செடிகள் எவ்வளவு காலமானாலும் எவ்வாறு செழித்து வளர்வதில்லையோ, அங்ஙனே சுயநயம் குடிகொண்ட மனதிலுண்டாகும் எல்லா சுகச் செடிகளும் நாளடைவில் தேய்ந்து நாசமடையுமேயொழிய செழித்தோங்க ஏதுவில்லை. சுயநயக்காரன் தற்கால சுகத்தைப் பெரிதாய் நினைத்து மேல்வரும் பெருஞ் சுகத்தைப் பாழாக்கிக் கொள்ளுகிறான். பதினாயிரம் யானைகட்கும் போதுமானவுணவை யளிக்கத்தக்க ஒரு பெருங்காடும், ஆடு மேயக் காண்போமானால், அவ்வாட்டின் வயிற்றையும் நிரப்பப் போதாமற் போகிறதன்றோ? ஆட்டின் சுபாவமாகிய 'எல்லாம் எனக்கு வேண்டும்' என்ற வெண்ணமுள்ள சுயநயக்காரன், தன் மனதிலுண்டாகக்கூடிய எல்லாசுகங்களையும் வளர விடுவதில்லை. தற்சுகத்தில் எவ்வளவு பிரியமுண்டோ அவ்வளவு பிறர்சுகநாசத்தில் எண்ணமுண்டாகையால் அவனுக்கு யாதொரு சுகமுங் கிடைக்காது.

இவ்வுலகில் மனிதனுக்கு சுகமுண்டாகக்கூடிய வழிகள் மூன்று. 1 பிறர்தயவினலுண்டாகக்கூடியவை, 2 சொந்த முயற்சியாலுண்டாகக்கூடியவை, 3 சிநேகிப்பதினல் பிறரிடமிருந்து கிடைக்கக்கூடியவை.

இவற்றுள் முதலாவதைக் கைக்கொண்டு சுகம் பேணுதல் முழுதும் பழுதாய் முடியும். ஏனெனில், உலகத்தில் தயை மிகச் சொற்பமாயும் ஒருவனிடத்தில் வெகுகாலம் நில்லாமலுமிருக்கிறது. ஏதோ வெகு அருமையாய் நம் வாழ்நாளில் சிற்சில சமயங்களில் பிறர் தயவின் காரணமாய்ச்சொற்ப சுகமடைய நேரிடுமேயன்றி அது பூரணமாய்க் கிடைப்பதரிது.

(2) தன் சொந்த முயற்சியால் மட்டும் சுகமடையும் மார்க்கம் முந்தினதைவிடச் சிறந்ததேயாயினும் குற்றமற்றதெனக் கூறமுடியாது. ஏனெனில், தன் சொந்த முயற்சி சிறிது குறையுங்கால் சுகமும் குறைந்துவிடும். பிறர் அன்புக்குப் பாத்திரனுகாமல் தன்னையே ஒருவன் சார்ந்திருந்தால் அநேக கஷ்டங்களுக்காளாக நேரிடும். வறுமை, பசி, பிணி, மூப்புத்துன்பங்கள் நிறைந்த குறுகிய நம்வாழ்நாளைப் பிறருதவியின்றி எங்ஙனே சுகமாய்க் கழிக்கமுடியும். நம் பூரண சுகத்திற்கு சொந்த முயற்சிமட்டுமே போதாது.

(3) இனி சுகநிறைவிற்கு அன்பின் காரணமாயுண்டாகும் உதவி எவ்வாறவசியமெனப் பார்க்க வேண்டும். இவ்வுறுதியான மார்க்கமொன்றினலே

தான் எல்லாவித சுகங்களும் மனிதருக்குச் சித்திக்கக்கூடியவை.

அன்பின் காரணமாய் நாம் பிறரிடம் அடையவல்ல சுகங்களுக் கெல்லையில்லை. உண்மையான நண்பர் கைம்மாறு கருதாததோடு நம் சுகத்தையே தம் சுகமாயுங் கொள்ளுகின்றனர். தம்மன்பிற்குப் பாத்திரமானவர் காலஞ்சென்றாலும், அவர் மனைவிமக்களுக்குப் பேருதவி செய்து அதனால் தாமும் திருப்தியடைகின்றனர். அன்பின் பெருமையைக் கவனிக்குங்கால் சுகமடைய மார்க்கம் மூன்றெனக் கூறியது தவறெனத் தோன்றுகின்றது. ஏனெனில், அன்பினாலாகும் சுகத்தின் நூற்றிலோர் பகுதியேனும் மற்ற இரண்டு மார்க்கங்களாலுண்டாவதைக் கண்டிலோம்.

ஒருவன் பிணி, மூப்புமுதலியனவடைந்து பிறர் தம்பக்கம் வரமுடியாவண்ணம் நாற்றமடைந்திருக்குங் காலத்தும், உண்மையான வன்பு செலுத்துபவரோ அவர்பக்க மேகுவதைக் காண்கிறோம். அன்பில்லாவிடின் அவர் துர்க்கந்தத்தைச் சகித்து யாரோ அவர்க்குதவி புரிவர். இதனால் மேற்சொன்னவாறு சுகங்கள் கிடைப்பதோடு, நம்மை அதோகதிக்குட் செலுத்தும் பெருந்துர்க்குணங்களும் நம்மைவிட்டு விலகுகின்றன. எவ்வாறெனில், மனிதனில் காணும் தீக்குணங்களில் பெரிதான சுயநயம்பாராட்டல், பொறாமை முதலியன, நமதன்பிற்கிடமாயிருப்பவர் விஷயத்தில், அவை எவ்வளவு பலமாய் வேரூன்றியிருந்தாலும், அழிந்து போகின்றனவல்லவா? நம்

முண்மையான வன்பிற்குப் பாத்திரமான வோர் நண்பன் நலம் பெற்ருல், பொருமை நமக்கு வருவ தில்லே. அவன் செய்யுங் குற்றத்தில் நாம் கோபமுங் கொள்ளுகிறதில்லே. அவனுக்குத் தாழ்மையான வோர் தொண்டுசெய்ய நேரிடும்போது, கௌரவம் பாராட்டாமல் அதைச் செய்து அன்பின் காரணமாய் அகங்காரத்தையும் விடுகிரும்.

இவ்விதம் தோழன் விஷயத்திலன்புபாராட்ட, அநேக துர்க்குணங்கள் நம்மை விட்டு விலகுமாத லால், இவ்வன்பு உலகத்திலெல்லாரிடத்தும் பரவுந் தோறும் மேற்சொன்ன தீக்குணங்கள் உபயோகப் படுத்தவிடமில்லாமல் தலைகாட்டாது நம்மை விட்டு ஒழிந்தேபோம். இவ்விதம் முனிவர்கள் இந்திரி யங்களே யடக்கி வெகு சிரமப்பட்டு அடையவிரும் பும் பதவியை, அன்பின் மிகுதியால் நாமிலேசாக அடையமுடியும்.

இனி, யாதொரு பந்தமுமற்று வெவ்வேருன இரண்டையொன்ருக்கும் சக்தியுள்ள தன்மைக்குத் தான் **அன்பு** எனப்பெயர். மனிதனே, ஆத்மாவினின் றும் வேறுபட்ட விந்திரியங்களி லுழலச்செய்யும் மனேவியாபாரத்திற்குக் காரணம் இவ்வன்புதான். இவ்வன்பு எல்லா உயிர்களிடத்தும், தன்னிடத்திற் போற், பரவும்பொழுது பூரணமாகின்றது.

இவ்வன்பை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். 1 தன்னிச்சையை நிறைவேற்றப் பிறரிடத்துக் கொள்ளும் அன்பு. 2. கைம்மாறு கருதாது தன்

னுயிரைப்போல் மன்னுயிரைப் பாராட்டு மன்பு. முந்தியது மனதின் பூரணத்தை யடைவிக்காது. ஏனெனில், தம் மிச்சைக்குத் தக்கபடி அன்பு ஓரே வழி நில்லாது மாறிக்கொண்டேயிருக்கும். ஆதலின், அஃது அன்பின்போலியேயன்றி மெய்யன்பாகாது. உலகத்திற் சாதாரணமாய்க் காணப்படுவது இத்தகைய வன்புதான். பிந்தினதோ, மேற்சொல்லப்பட்ட வெல்லாவித நன்மைகளைப் பயக்கி, மனத்தின் பூரணத்தை யுண்டுபண்ணத்தக்க வுண்மையான வன்பாகும். இத்துணை சிறந்த குணங்களதன்கண்ணிருந்தும் முனிவர்களதை மனைவி மக்களிடத்துப் பாராட்டி வருதல் பெருந்தீமையைப் பயக்குமெனச் சொல்லியுள்ளார். அதன் காரணம் யாதென நாம் பார்ப்போம்.

மனைவி மக்களிடத்துப் பாராட்டு மன்பு உண்மையான வன்பல்ல. அஃது முதலில் சொல்லப்பட்ட போலியன்பேயாகும். அஃது மேலும் தீமைக்குட்படுத்துமேயன்றி மனிதனுயர்வுக்குக் காரணமாகாது. ஆனால் யதார்த்தவன்பு மனிதரிடத்து இலேசில் வரத்தக்கதல்ல. மனைவிமக்களிடத்துப் பாராட்டுமன்போ, உலகப் பயனுண்டாக்கத்தக்கதாயிருக்கின்றது. ஆதலினஃது இலேசாக வரத்தக்கது. இத்தகைய வன்பால் மனைவி மக்களைத் திருப்தி செய்யும் வண்ணம் அவர்களுக்கிஷ்டமான விஷயங்களை யவர்க்குச் சேர்ப்பிக்க, சரியோ, தவறோ வென்று கவனிக்காது காரியங்களில் தலைப்பட்டு உய்வில்லாப் பெருங்குற்றங்களுக்கு மனிதனாளாவான்.

ஆனால் உண்மையான அன்பு எல்லாப் பிராணிகளிடத்தும் பரவுதல், யாதொரு குற்றமுமில்லாததோடு பெருஞ்சுகத்திற்குங் காரணமென்பது ஆன்றோர் சம்மதம். ஆதலின், அத்தகைய யதார்த்தவன்பை மனைவி மக்களிடத்தோ, குரூர சுபாவமுள்ள அரக்கர்களிடத்தோ, மிருகங்களிடத்தோ காண்பிப்பதில் நன்மையேயன்றித் தீமை யாதொன்று முண்டாகாது.

கைம்மாறு எதிர்பாராதவன்பு, பாமரனை மனிதனிடத்து முதலில் உண்டாவது பிரயாசமாதலால், ஆரம்பத்தில் பிரதியுபகாரங் காரணமாய் அன்பு ஜனிக்கவேண்டியது அவசியம். அது, அறிவு அதிகமாகவாக யதார்த்த வன்பாக மாறும். பிரதியுபகாரம், மனைவி மக்களிடத்தினின்றும் அதிகமாய் வரக்கூடுமாதலின், மனிதன் இயற்கையாய் அவரிடத்து அன்பு செலுத்துவது அவசியம். ஆதலின் மனைவிமக்களில்லாரிடத்து அன்பினுற்பத்திக்குக் காரணமில்லை. இதுபற்றியே, ஆன்றோர், மனைவிமக்களில்லாதவர் இம்மை மறுமைகளின் மேன்மைக்குத் தகுந்தவரல்லரெனக் கூறியிருக்கின்றார்.

இனி, அன்புதான் எல்லாவுயிர்களின் சுகநிறைவிற்கும் முக்கிய காரணமெனப் பிரகிருதியுத்தேசத்திருப்பதாகவுந் தெரிகிறது. எப்படியெனில் விலங்கு, பறவை முதலியவற்றில் பிறவுதவியின்றி உயிர் வாழ்வுக்கு வேண்டிய நன்மைகள் கிடைக்கும்படி செய்திருக்க, கீழ்க்கடைப் பிராணிகளைவிட

எவ்வளவோமடங்கு சிறந்த மனிதனிடத்தில் மட்டும் பிறவுதவி, அவன் போஷணைக்கு இன்றியமையாததாய்ப் பிரகிருதி யேற்படுத்தியிருக்கிறது.

இவ்விதம் இயற்கையன்னை செய்துளதின் உத்தேசம், மனிதருள் ஒருவர்க்கொருவர் சிநேகமுண்டாகி, அன்பு நாளடைவில் விருத்தியாகி, அதன் யதார்த்த சொரூபத்துடன் இவ்வுலகில் நடமாடவேண்டுமென்பதேயாகும்.

இவ்வுண்மையானவன்பின் காரணமாய், இம்மை மறுமைப் பயன்கள், அதைக் கைக்கொள்பவருக்கு என்றைக்குஞ் சித்திக்குமென்பதற்கு ஐயமேயில்லை.

---

## 20. விவாக முறை.—How to Marry.

மனிதருக்கு விவாகம், பிரமசரியத்தைவிட நன்மை பயக்கத்தக்கது. ஆதலின் தீமையில்லாது நன்மையே உண்டாகுமாறு நாம் எவ்விதம் மணம் புரிய வேண்டுமென்பதைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

மனைவியின் துணை கணவனுக்கும், கணவனுதரவு மனைவிக்கும் நிறையவேண்டுமானல், அவரிருவரும் ஒருவர்க்கொருவர் பிரியமுள்ளவராயிருத்தலவசியம். உலகத்தில் தம் சொந்த நன்மையைக் கருதாது வருத்தம் மேற்கொண்டு அயலான் நன்மையைக் கவனிக்கும் மனிதரொருவருமிலர். அன்னைதந்தையர்மட்டுமே தம்கான்முளைகளிடத்து அவ்விதம் நடக்கின்றனர். வேறு எவ்விதவுறவின

சிடத்தும் இவ்வெண்ணமும் நிகழ்ச்சியும் காணப் படுவதில்லை. இதன் காரணம், பெற்ரோர்க்குப் பிள்ளைகளிடத்திலுள்ள அடங்காதவன்பே. இதனால், ஒருவர்க்கொருவருதவி செய்துகொள் ளல், அவர் தமக்குள்கொண்ட அன்பின் வலிமையை யொத்துளதென நாமறியலாம். ஆதலின் இல்லக் கிழவனும் கிழவியும் தீமையகற்றி, நலம்பூரித்து, மனமொத்து வாழவேண்டுமானல் அவரொருவர்க் கொருவர் அன்பு நிறைந்தவராதலவசியம்.

இனி, பெற்ரோரிடத்து தம் குழந்தைகளை நேசிக்கும் சுபாவ மியற்கையாயமைந்துளதுபோல், இல்லத்துக் குறியாரிருவரிடத்தும் ஒருவர்க்கொரு வர் நேசிக்கும் சுபாவத்தை இயற்கையன்னை யமைத் திராவிட்டாலும், ஒவ்வொரு புருஷனுக்கு பெண் ணினத்திலன்பும், ஒவ்வொரு பெண்ணுக்கு ஆணி னத்திலன்பும் பொதுவாய் யமைத்திருக்கிறது. ஆத லின், நாம் செய்யவேண்டிய முயற்சி யாதெனில், ஆண்பிள்ளைக்கு பெண்ணினத்திலுள்ளவன்பைத் தனக்கு மனைவியாகுமோர் பெண்ணிடத்திலும், பெண்பிள்ளைக்கு ஆணினத்திலுள்ளவன்பைத் தனக் குக்கணவனுகுமோர் ஆண்பிள்ளையிடத்தும், சலி யாது நிலைநிற்கச் செய்யவேண்டிய காரியமொன்றே. இக்காரியம் கைகூடுதல் எவ்வாறெனில், எவ்வித காரணங்களையொட்டி மனையாளுக்கு ஆணினத்தில் அன்பு பரவுமோ அவ்வித காரணங்களைத் தழுவி அவளுக்கேற்ற புருஷனையும், பெண் பாலாரிடத்து

எந்தெந்தக் காரணங்களைக்கொண்டு ஓர் புருஷனன்பு செலுத்துவானோ அவ்வித காரணங்களையொட்டி அவனுக்கேற்ற பெண்ணையும் ஒன்றுசேர்த்து விவாகம் செய்வித்தல் வேண்டும். இங்ஙனம் செய்தால், புருஷனுக்கு பெண்வர்க்கம் முழுவதிலும் செல்லும்படியான அன்பு தன் மனைவியான ஒரே பெண்ணினிடத்திலும், பெண்ணுக்கு ஆண்வர்க்கம் முழுவதிலும்செல்லத்தக்க அன்பு தனக்குக் கணவனான ஒரே புருஷனிடத்திலும் சலியாமல் நிலைநின்று, தம்பதிகளொருவர்க்கொருவர் அன்புபாராட்டி இம்மை மறுமைப் பயன்களையடைவர். ஆனால் இவ்விதம் தேர்ந்தெடுத்தல் அசாத்தியமாகும். ஏனெனில், ஓர் புருஷன் எவ்வளவு காலம் தேடினும் தன் மனதிற்கொத்த பெண்ணையடைவதில்லை. அங்ஙனமே ஓர் பெண் ஆண்வர்க்கமனைத்தும் தேடினும் தன் மனதிற்கிசைந்த புருஷனையடைவதில்லை. சிருஷ்டியின் வேறுபாடு இவ்வளவு கணக்கில்லாதபடி மலிந்திருக்கின்றது இவ்வாறு ஒத்தமனத்தினராகாத இல்லானும் இல்லாளும் நாளடைவில் தத்தமிச்சைக் கிசைந்த குணங்களைப் பெற்றுள்ள மற்றவர்களை நாடிநிற்குங்கால், தம்பதிகள் ஒருவர்க்கொருவர் மனச்சீர்குலைந்து ஒற்றுமையில்லாது சுகமற்றவராகின்றனர்.

ஆகையால், இவ்விதமான தடுமாற்றத்தினின்றுமுய்ய மார்க்கமேதேனு முளதோவெனப் பார்க்க வேண்டும். இதற்குச் சுயநயவெண்ணம் எள்ளத்தனையு மில்லாதவரும் உத்தம விலக்கணங்கள் குறைவறப் பெற்றவருமான வான்றோர் சொல்லியுள்ள

மார்க்கம் ஒன்றேதான். அது யாதெனின், ஆடவ னையும் பெண்டீனையும் தத்த மெதிர்வர்க்கத்தில் பலரிடத்தும் பல காரணங்களால் சலிக்கச்செய்யும் யௌவன பருவம் வருமுன்னமே, விவாகம் செய்ய வேண்டுமென்பதே.

இனி, இவ்விளமைவிவாகம், மேற்கூறப்பட்ட ஒத்தமனதில்லாக் காரணத்தால் விளையும் தீமை களை யகற்றுமோ வென்பதை யோசிக்கவேண்டும். அத்தீமைகள் பாலியவிவாகத்தால் நீங்குமென்ப தைப் பின்வருங் காரணங்களால் உறுதிப்படுத் தலாம். செல்வம், அழகு, நன்னடக்கை முதலிய குணங்களுள்ள தந்தையிடத்தில் மகனுக்கு எவ்வித மன்பு இருக்கிறதோ, அவ்வாறே, வறுமை, அவலட் சணம், தீயொழுக்கம், அங்கஹீனம் முதலியனவுள்ள தந்தையிடத்தும் மகனுக்கு அன்பு இருப்பதாகக் காண்கிறோம். மேலும், வெறுக்கத்தக்க பிந்திய இலக்கணமுள்ள தந்தையிடத்தில் மகனுக்கு அன்பு குறையாததோடு, அதிகமாயும் காணப்படு கிறது. இதன் காரணம், குழந்தைப் பருவமுதல் 'என் தகப்பன்' என்கிற அபிமானங்கொண்டு குற் றங்கள் கவனியாதுவந்த பழக்கத்தின் பலத்தால், பிற்காலத்தில் அவைகளைப்பற்றின சிந்தையும் வரா மல், ஒரேமாதிரியாய் அன்பு பாராட்ட நேருகிறது. இதேமாதிரியாய், தாயார், உடன்பிறந்தார், பாலிய சிநேகிதர் முதலியவரிடத்தும், பிற்காலத்தில் எவ் வளவு குற்றங்களைக் கண்டாலும் அவர் கண் அன் பிற்குக் குறை நேராததோடு, அன்பின் மிகுதியால்

அக்குற்றங்கள் அவர்களிடம் இருப்பதாகவும் மனி தனறிகிறதில்லே. ஆதலின், இளமையிலேயே விவா கம் செய்தால், ஸ்திரீ புருஷர் யௌவனத்தா லறியக்கூடிய குணதோஷங்களைத் தெரிந்துகொள்ள சந்தர்ப்பமில்லாதவராய் ஒருவர்க்கொருவரன்பு பாராட்டித் தன்னுடையதென்கிற வபிமானம் பிற்கா லத்தில் உண்டாவதால் குற்றங்களைக் காணுமலும், கண்டாலும் கவனிக்காமலுமிருக்க அவர்களுக்கு நேரிடுகின்றது. இதனுல் தம்பதிகள் ஒன்றுபட்ட மனதுடையராய், இல்வாழ்க்கையின் பயன்களத் தனையும் அடைகின்றனர்.

இப்பாலிய விவாகத்தைத் தவிர இல்வாழ்கைப் பயனையுண்டாக்கத்தக்கதும், பெரியோர்களால் கூறப்பட்டுள்ளதுமான மற்ருேர் வழி இருப்பதாக வும் தெரியவில்லே. ஏனெனில், சினேகம் முளைத் துப் படரக்கூடிய பருவம் பாலியமேயாகும். அப் பருவத்தில் பழகும் உயிரற்ற பொருள்களிலும் அன்பு மரணம் வரையிலும் விடுவதில்லே. குழந் தைப் பருவத்தில் பழகிய பாழுங்கிணற்றை மூப்ப டைந்த காலத்துப் பார்க்கவோ நினைக்கவோ நேர்ந் தால், அது தன் புத்திரனைக் கண்ட சந்தோஷத்தை யுண்டாக்குகின்றது.

ஆனுல், யௌவன பருவத்தில் சுயநயம் பல மடைந்து, அதற்கொத்தவாறு ஓரோ வஸ்துவில் விருப்பும் வெறுப்பும் மாறி மாறி வந்துகொண்டிருக் குமேயல்லாமல், நிலேபெற்றவன்பு ஒன்றன்கண்

ணுண்டாகாது. சுயநயமில்லாமலும், நிலைபெற்றது மான அன்பு பாலியத்தில்மட்டும் உண்டாகக்கூடிய தாதலால், இளமையில்விவாகந்தான் இல்வாழ்க் கைச் சுகத்தை நிறைவித்து இம்மை மறுமைப் பயன் களை விளைவிக்கக்கூடியது.

இனி, சிலர் யௌவனமும் பகுத்தறிவின் முதிர் ச்சியும் உண்டானபின்னர் விவாகம் செய்தால் ஸ்திரீ புருஷர்கள் ஒருவர்க்கொருவர் அன்பைப் பரிசோ தித்து விவாகம் செய்துகொள்ளக் கூடுமென்றும், அவ்விதம் செய்தால்தான் அன்பும் சுகமும் பூரண மாய்க் கிடைக்குமென்றுங் கூறுகின்றனர். இவ்வபிப் பிராயம் முழுதும் பிசகு. இதனுண்மையைப் பரிசோதிக்கப்புகின் பெருகுமாதலால் அதைத் தனியே எடுத்தாளுவோம்.

முற்றிற்று.

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *